BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 04 Issue - 74 06 Friday July 2007 விற்பனைக்கல்ல


- நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
- வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
- உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

**Forward Consultants**
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052




## அறுக்கத் தொடங்கி ஆண்டு மூன்று!


**TODATON - SRILANKAN GARAGE**
- MOT
- CAR SERVICES
- MECHANICAL REPAIR
- BODY WORK (FREE ESSENTIALS -INSURANCES UNDERTAKE)
- TYRES
- PRE OWNED CARS FOR SALE

SPECIAL DISCOUNT 25% FOR UK SRI LANKAN COMMUNITY

முந்துங்கள்....!

CHECK OUR PRICE FIRST FRIENDLY SERVICES
CONTACT- SANTH/ WASANA
020 8882 3777 / 07903 831 130 (EVE & SUNDAY)
CHASE SIDE WORKS, CHELMSFORD ROAD, SOUTH GATE N14 4JN

வீடு சிறப்பின் வாழ்வு சிறக்கும்!!!
Want to be a landlord?
020 8470 1500
Select
.gb.com

சுவையான உணவுக்கு ஒரே இடம்
**Ceylon Nights**
Sri Lankan, South Indian Food
Tandoori Cuisine



Free Home Delivery (With in 3 miles radius for orders over £15 (6pm - 11pm)
Tel: 020 8848 8893
128 Uxbridge Road, Hayes, Middlesex UB4 0JH



**ABBEY TRAINING. NET**
- OFF Licence/ Restaurant ... Personal Licence ...
- NCPLH CERTIFICATE COURSE.
- Supervisor Course For OFF Licence and Restaurants (DPS).
- ... off licence / restaurant premises licence.
- LIFE IN THE UK - ...
- ... Course ...

38 London Road, Tooting SW17 9HP
தொடர்புகொள்ள: Thavanessan
020 8640 9900 / 07956 913 164 / 07950 665 575

**RAJA& CO SOLICITORS**
10 Upper Tooting Road, Tooting Bec
London SW17 7PG
Tel: 020 8772 4900 Fax: 020 8682 9425
We provide following Legal Services:
Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration



We hold Legal Aid Franchise in Immigration & Crime

**SIVA BUSINESS TRAINING**
எங்களிடம் வாருங்கள்
வென்று தருகின்றோம்
Citizenship Course (Life in UK வகுப்புகள்)
Personal Licence
(For OFF Licence and On Licence)
National Certificate for Personal Licence Holders (NCPLH)
New Supervisor Course (NDDPS)
* New Premises Licence * Transfer of Licence
* Change of DPS * Night Cafe Licence
* Award in under age sales prevention
Siva 020 8683 6544, 079 0480 6371
Challenge House 616, Mitcham Road, Croydon CR0 3AA

**Mortgagelink**
The National Mortgage Network
எந்தவிதமான Deposit இல்லாமல் வீடு வாங்கவேண்டுமா?

இலண்டனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் புதிதாக கட்டப்படும் வீடுகள் வாங்க விரும்பினால், 5% Deposit + Stamp Duty £2000 அளவில் வீடுகட்டுபவர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்போம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

Mob: 07930 626 585 | Tel: 020 8946 5566
Your home is at risk if you do not keep up repayments on a mortgage or other loans secure on it

**LONDON ACCIDENT CLAIMS LIMITED**
70 Windmill Road, Croydon, CR0 2XP
Had an accident - Not your fault
Driver / Passenger - within last 3 years
- Personal Injury Compensation (eg. back, neck & Shoulder pain etc)
- Repair / Total Loss Value of your vehicle
- Loss of Earnings
- Hire Care for Mini Cab Drivers
- Replacement Car = Credit Hire (terms & Conditions apply)

Your Premium will not be affected
NO WIN - NO FEE
Tel: 020 8665 7667 Fax: 020 8684 7177
Mob: 07950 953 510 Call Free: 0800 032 6798



தமிழ் PARTY SERVICES BEST DECORATIONS
பிறந்த நாள் விழாவிற்க்கு Balloon Decorations செய்து தரப்படும்.
We are specialist in Manavara & Hall Decorations.
Chair for Hire, Photos & Video, ..., DJ for all occassions
Next Day Delivery
Contact: RAHU
Tel: 020 8552 9336 | Mob: 07957 632 656
342 High Street North, Eastham, London.


## ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## HSMP – UK – VISA

The Highly Skilled Migrant Programme

நீங்கள் பிரித்தானியாவிலோ வேறு நாடு ஒன்றிலோ உயர்கல்வி *(Bachelors Degree or above)* கற்றவராயின் நாம் உங்களுக்குரிய HSMP Visaவை பெற்றுத் தருகிறோம்.

- 100% Succees
- Money Back Guarantee

வேலை செய்யாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு

**07932 925 437**

## POS TECH LTD
## EPOS SOLUTION

Limited Offers

Touch Screen Till **£1600**

IBM PC Base Till **£900**

NISA OCS LINK / C CARD LINK
PAY POINT / PAYZONE LINKS



- Touch Screen
- Stock Control
- Promotions & Offers
- Shelf Labels
- Special 'Z' Report
- Account Customers
- Access from Home
- Free 50,000 Item List
- Staff Security
- Link with SAGE Line 50

**020 8873 1710**

Retails Tills
Restaurant Kit News Round

Free Support | Free Barcode Printer | Interest Free Payments Options | Free Laser Printer

## "காருக்கு டயர் அழகு"

புதிய பழைய டயர்கள் மாற்றிக் கொடுக்கப்படும் மற்றும் கார் சேர்விஸ் உட்பட சகல கார் திருத்த வேலைகளுக்கும் எங்களை நாடுங்கள்

- Wheel Balancing
- Wheel Alignment
- New & Second Hand Rims
- Shock Absorbers
- Batteries
- Exhaust
- Brakes
- Services
- MOT Work

Open 7 Days a Week
Mon - Sat 8.30am - 7pm
Sun 9.00am - 6pm

New & Part - Worn Tyres, Sold and Fitted
Punctures Repaired while you wait

British & Foreign Cars

Continental GOODYEAR MICHELIN PIRELLI DUNLOP

**TYRE CHECK**
*Auto Spares- Accessories*

308 High Street North, East Ham, E12 6PH
Tel: 0208 586 08 86 Fax: 0208 470 47 45
Mob: 07956 353 774, T.Suresh@tiscali.co.uk

# Matrix Properties Services LTD

Sales | Lettings | Mortgages | Insurance | Commercial Loans

www.matrixproperties.co.uk



**House Mortgages up to 95%**
**Commercial loan up to 90%**
**Insurance 100 % cash back Guarantee**

வீடுகள் வாங்க, விற்க்க, வாடகைக்குவிட, மற்றும் அனைத்துவித வீட்டுக்கடன் வசதிகளுக்கும் உடனெ நாடுங்கள்.

**Address:**
159, London Road,
Mitcham, Surrey,
CR4 2JB

Telephone Numbers : 020 8687 1700 or 020 8687 1001
Fax Number : 020 8687 1441
Mobile Number : 07585 27830

மிச்சம் பகுதியில் தமிழரால் நடாத்தப்படும் நிறுவனம்

# பூமழை

## சினிமாப் பத்திரிகையா?

வரவர ஒரு பேப்பர்'ரின் தரம் குறைந்து கொண்டே வருகிறது.

இதுவும் ஒரு சினிமாப் பத்திரிகையோ என்று எண்ணும் விதமாக சென்ற இதழில் கிட்டத்தட்ட ஐந்து பக்கங்கள் சினிமா விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டு இருந்தது.

ஐயா சினிமாவைப் பற்றியும் சினிமா நடிக நடிகையரின் அந்தரங் கங்களைப் பற்றிப் பேசுவதற்கும் எத்தனையோ பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இருக்கின்றன

எனவே நீங்களும் அந்தச் சாக்கடைக்குள் விழுந்து விடாமல் தரமான ஆக்கங்களைப் பிரசுரிக்க வேண்டும் என்பதே என் போன்றா வர்களின் அவா.

*— ராஜன்*

## ஆக்கங்கள் இல்லையா?

அட கறுமம் அவனவன் MSN இலை கதைக்கிற விடுப்புக்களையெல்லாம் உங்கடை பேப்பரிலை போடுற அளவுக்கு உங்களுக்கு ஆக்கங்க ளுக்குப் பஞ்சம் வந்திட்டுதா?

*— மகிந்தினி*

## இங்கையும் சிவாஜி(ராவ்)க்காக நேர்த்திக்கடன்

சிவாஜி படத்தை நீங்கள் புறக் கணிக்க சொல்ல மக்களெல்லாம் திரண்டு எழுந்து சினிமாக்களை மொய்க்க அது லண்டனிலை ரொப் ரென்க்குள் வந்திட்டுது.

சிவாஜி வெற்றி பெறவேணுமெண்டு தமிழ் நாட்டிலை நேர்த்திக்கடன்கள் எல்லாம் வைச்சதாலை கடவுளும் படத் தயாரிப்பாளர்களை கைவிட வில்லை.

அங்கைதான் படியாத சனம் சினிமா மோகத்திலை அலையுதெண்டால் லண்டனிலையும் ஒருவர் அந்தபடம் வெற்றி பெறவேண்டுமெண்டு பிரார்த் தனை செய்தவராம் பலிச்சிட்டுதாம்.

ஆனால் அவர் ஒண்டும் படிக்காத ஆள் இல்லை கண்டியளோ. சிறி லங்கா நிர்வாகசேவையிலை உயர் அதிகாரியாய் பணிபுரிந்தவராம். அப்பிடியிருக்குது நம்ம சனம்.

*— நாகேந்திரன்*

## தப்பு கண்ணா தப்பு

யோவ்! உங்களுக்கு என்னப்பா அச்சு. முகப்பிலை அழகான சாந்தமான ஒரு குழந்தையின்ரை படத்தைப் போட்டிட்டு மரியாதையா வெளியை கூட்டிப் போகச் சொல்லி வெருட்டிற மாதிரி வசனம் போட்டிருக்கிறயள். முகப்பக்கு வசனம் எழுதிறவரின்ரை ரசனையை நினைக்க எரிச்சல் எரிச்சலா வருது

*— காந்தன்*

## உள்ளங்களை வென்றார்

உள்ளங்களை வெல்வோம் உறவை வளர்ப்போம் என்ற தலைப்பில் அரு மையான தொடர் ஒன்றினை எழுதி திரு. இராம. கே. நாதன் வாசகர் பலரின் உள்ளங்களை வென்று விட்டார்.

அவர் தொடர்நதும் இது போன்ற பயனுள்ள கட்டுரைகளைத் தர வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*— சாந்தி*

## களைகட்டிய தேர்தல்

லண்டன் ஈலிங் அம்மன் கோவில் நிர்வாக சபைத் தேர்தல் கடந்த சனிக் கிழமை நடைபெற்று அம்பாள் திருவருளால் நன்கு நடந்து முடிந்திருக்கிறது.

இது பிரித்தானிய பாராளுமன்ற தேர்தல் அளவுக்கு சூடுபிடித் திருந்தது. வேட்பாளர்கள் இரண்டு அணியாக போட்டியிட்டதும். வீடு வீடாய் பிரச்சாரங்கள், கூட்டங்கள் என்று தூள் கிளப்பிவிட்டினம்.

ஒரு கோஸ்டி மற்றதை பற்றி இங்கையுள்ள தமிழ் தேசியத்துக்கு எதிரான பத்திரிகையிலை போட அதைக் காட்டி பார் அவையள் ஆரோடை சேர்ந்திருக்கிறாங்கள் என்று எதிர்க் கோசம் போட்டு மற்ற கோஸ்டி வென்றுவிட்டது.

மொத்தத்திலை எல்லாக் கூத்தும் தமிழ் தேசியத்தையும் அம்மாளாச் சியையும் சொல்லி நடக்குது.

*— சிவதாசன்*

## விளையாட்டுச் செய்தி

பல வாசகர்கள் விளையாட்டச் செய்திகளுக்கு ஒரு பக்கத்தை ஒதுக்குங்கள் என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

ஆனால் நீங்கள் அதைக் காதில் போட்டுக் கொள்வதாகவே காண வில்லை. உங்களுக்குவிளையாட்டுத் துறையின் மீது ஏதாவது வெறுப்பா அல்லது விளையாட்டுத் துறை தொடர்பான அறிவு கொண்ட எவரும் உங்கள் பத்திரிகையில் இல்லையா?

*— கௌரிபாலன்*

## மகாவம்சம் அறிந்தோம்

மகாவம்சம் என்றால் என்ன? அதில் என்ன கூறப்பட்டுள்ளது? என்று கேள்விகள் என் மனதில் பல காலமாக இருந்தன.

ஒரு பேப்பர்'ரின் வாயிலாக மகாவம்சம் தொடர்பான பல விடயங்களை அறியக் கூடியதாக இருக்கின்றது.

கட்டுரையாளருக்கும் கட்டுரையைப் பிரசுரிக்கும் ஒரு பேப்பர் காரருக்கும் நன்றிகள்

*— ரஜீவன்*

## பக்கங்களை அதிகரிக்காதீர்கள்

52 பக்கங்களாக அதிகரித்ததுக்கு கோடி நன்றி. முழுப்பேப்பரையும் வாசிச்சு முடிக்க இரண்டு கிழமை பிடிக்குது. இதுக்குமேலை பக்கங் களை கூட்டினால் அரியர்ஸ் வந்திடும். பிறகு வக்கேசன் எடுத்துத்தான் வாசிக்க வேணும்.

*— குமாரன்*

## மகிழ்ச்சி

பல குடும்பங்களில் இப்படித்தான் இந்த வெல்பெயர் எடுக்கிறதுக்கு சனம் தங்கடை பெத்தவையளைப் படுத்திற பாடு கொஞ்ச நஞ்சமே

அதை தத்ருபமாக அழகான கதை மூலம் நளினி மகேந்திரன் கூறியுள்ளார்.

இப்படியான விழிப்புணர்வைத் தூண்டுகிற கதை உங்களுடைய பத்திரிகையில் தொடர்ந்து வரா வேணும்

*— அபிநயா*

## கனவு பலிக்கட்டும்

ஒரு பேப்பரில் பல மருத்துவ ஆலோசனைகள் தொடர்நது பிரசுரிக்கப்பட்டு வருகிறது.

இதுபோல நோய்களை வராமல் தவிர்க்கக்கூடிய யோகாசனம் தியா னம் போன்றவை தொடர்பான கட்டு ரைகளையும் இணைத்தால் என்ன?

வந்தபின் பரிகாரம் தேடுவதை விட வரமுன் காப்பது நல்லதல்லவா?

*— செல்வராஜா*

## மரத்துப் போய் விட்டதா?

சிவாஜி படத்தைப் புறக்கணிப்பதைப் பற்றி பல ஆர்வலர்கள் பல ஊடகங்கள் வாயிலாகக் கூறிய போதிலும் அது தோல்வியில் முடிந்து விட்டதே?

இதற்கு இந்தப் பிரச்சாரம் சரியான முறையில் உரியவர்களிடம் செல்ல வில்லையா அல்லது தமிழ் மக்கள் இன்னும் தமிழுணர்வில்லாத மரத்துப் போன இனக் கூட்டமாக மாறிவிட்டதா என்பதே இன்றுள்ள கேள்வி

*— சிந்துஜன்*

## தமிழிலும் வேணும்

Kids பேப்பரிலை பல நல்ல விடயங் களைப் பிள்ளைகள் எழுதுகினம். எண்டாலும் ஆங்கில ஆக்கங்களே கூடுதலாக வருகிறது.

இதைக் குறைத்து தமிழிலும் குறிப்பி டத்தக்க அளவு ஆக்கங்களைப் பிரசுரித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்

*— கபிலன்*

# லா சப்பலில் லைலா

வணக்கம் எல்லாருக்கும்

'என்ன சும்மா அதிருதில்ல' இது சிவாஜி படத்திலை ரஜனி பேசுகிற ஏதோ சொல்லுவாங்களே ஆ!. பஞ்சு டயலாக். ஆனால் பாரீசிலை சிவாஜி படம் ஓடின தியேட்டரே அதிர்ந்திட்டுது.

காரணம் என்ன தெரியுமா? அந்த படத்தை பாத்த சிலர் ரஜனியாலை மட்டும்தான் அதிர வைக்க முடியுமா? எங்களாலை முடியாதா? என்று நினைத்து தியேட்டர் கண்ணாடியை அடிச்சுடைக்க பிறகென்ன வழைமை போல அங்கு வந்த காவல்துறை மாலை மற்றும் இரவு நேர காட்சிகளிற்கான அனுமதி இல்லையென்று சொல்லிவிட்டார்கள்.

பின்னர் காலை நேர காட்சிகள் மட்டும்தான் ஓடியது.. இனி இவர்களிற்காக ரஜனி ஏ.ஆர் ரகுமானின் பின்னணி இசையில் ஸ்ரைலாக நடந்து வந்து அனுமதி மறுத்த பிறெஞ்சு காவல்துறையின ரை கால் நிலத்தில் படாமல் சுத்தி சுத்தி அடிச்சிட்டு சும்மா அதிருதில்லை படத்தை ஓடவிடுறா என்றா சொல்ல முடியும். பாவம் ரஜனி ரசிகர்கள்.

இங்கை கண்ணாடி உடைஞ்சதெண்டா லா சப்பலிலை வெறும் பியர் போத்தல்கள் உடைஞ்சிது ஏனென்றால் கடந்த 22ந் திகதி பிரான்சில் இசைத் திருவிழா நடைபெற்றது இந்த திருவிழா பிரான்சிலை உள்ள பெரிய நகரங்கள் தொடக்கம் சிறிய குக்கிராமங்கள் வரை நடை பெறுகிற ஒரு திருவிழா.

புதுவருட நிகழ்விற்கு அடுத்ததாக பிரான்சில் பெரியளவில் கொண்டாட்டமாக நடைபெறுகின்ற திருவிழா இதுதான் என்று சொல்லலாம் அன்று இரவிரவாய் பிரான்ஸ் நகர வீதிகளெங்கும் ஒரே இசை கச்சேரிகளாய் இருக்கும் நீங்களும் இரவிரவாய் கத்தலாம் கூத்தாடலாம் யாரும் கேட்க மாட்டார்கள்.

அதேபோல பாரிசிலும் தமிழ்வர்த்தக நிறுவனங்கள் அதிகமாக இருக்கிற லாசப்பலிலும் (என்ரை இடம்) வருசா வருசம் தமிழ் இசை குழுக்கள் இசை நிகழ்ச்சி செய்யிறவை. பிரபல பாடகர்களின் இசை நிகழ்ச்சிகளிற்கு மட்டும் போக்குவரத்து ஒழுங்குகளிற்காக விசேட அனுமதி பெறவேண்டும் அதற்கடுத்ததாய் நாங்கள் மட்டும் இசை நிகழ்ச்சி நடத்த அனுமதி பெறவேணும் காரணம் நாங்களும் பிரபலம்தான் எதிலையெண்டால் சண்டை பிடிச்சு குழப்பியடிச்சு பொது மக்களிற்கு இடைஞ்சல் குடுத்து சட்டங்களை மீறுகிறதிலை. அதனாலை கட்டாயம் அனுமதி பெறவேண்டும்.

சரி அன்று அனுமதி பெற்று தமிழ் இசை குழுவின் இசையும் தொடங்கியது ஒரே தமிழர் கூட்டம் அதிலை ஒருத்தர் தான் குடிச்ச பியர் போத்திலை சும்மா குப்பையிலை போடாமல் ஒரு வித்தியாசமா ஆகாயத்தை நோக்கி எறிய அது நிலத்திலை விழுந்து டமால் என்று உடைய அதை பாத்து கொண்டு நின்ற இன்னொருத்தர் என்ன இவருக்கு மட்டும்தான் எறிய தெரியுமா எனக்கு எறிய தெரியாதா என்று தன்ரை கையிலை இருந்த போத்திலையும் மேலை எறிய அது ஒருத்தரின்ரை மண்டையிலை விழ ....

பிறகென்ன நாங்கள் வீரம் நிறைந்த தமிழரல்லவா சண்டை தொடங்க இப்பிடி ஏதாவது நடக்கும் என்று எதிர்பார்த்து காத்திருந்த காவல்துறை அவசரமாக வந்து சிலரை பிடிச்சு வாகனத்திலை போட்டிட்டு நீங்கள் நடத்தின இசை நிகழ்ச்சி காணும் மைக் மேள தாளம் எல்லாத்தையும் கழட்டி கொண்டு நடையை கட்டுங்கோ... என்று சொல்லி போட்டு போய்விட்டார்கள்.

மீண்டும் அடுத்த பேப்பரில் சில பிரச்சினைகளுடன் சந்திக்கிறேன்

*அன்புடன் லைலா*

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.

ஒரு பேப்பர்




MONEY IN MINUTES TO SRI LANKA

இலங்கைக்கான பணமாற்றுச் சேவை

நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை

குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.

HSBC | COMMERCIAL BANK | HNB | PEOPLE'S BANK | SEYLAN BANK | SampathBank | BOC

Head Office : 125 - 127 Bramley Road, Oakwood, London N14 4UT

Transfer Hotline
020 8886 4488
www.cecfastcash.com

PAY AT
BARCLAYS

நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பணத்தை பாதுகாப்புடனும் விரைவுடனும் அனுப்ப அருகில் உள்ள BARCLAYS இல் பணத்தை வைப்புச் செய்த பின் எம்மை அழையுங்கள்

| | | |
|---|---|---|
| A/C NAME | : | C.E.C.LTD |
| A/C NO | : | 70713945 |
| SORT CODE | : | 20-36-47 |
| BRANCH | : | HANOVER SQ. |

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, JULY 06, 2007, ISSUE 74

## அரசியல் செயற்பாடுகள் புதுவடிவம் எடுக்க வேண்டும்!

மாறி வருகின்ற உலக ஒழுங்கில் விடுதலைப் போராட்டங்களின் நியாயத்தன்மை மறுக்கப்பட்டு வருகிறது. இன்று விடுதலைப் போராளி என்ற சொல்லே தகாத வார்த்தையாக கருதப்படும் நிலை தோன்றியுள்ளது. எது விடுதலை இயக்கம் எது பயங்கரவாத இயக்கம் என்று பிரித்துப் பார்க்கிற நிலையில் ஆதிக்க வல்லரசுகள் இல்லை. இந்நிலை தொடருகின்றபோது ஒடுக்கப்படட மக்களே அவலத்துக்கு உள்ளாகி வருகிறார்கள். இங்கு ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் விதிவிலக்காக அமைய முடியாது. அதனையிட்டு மேற்குலக அரசுகள் சந்தேகங் கொள்வதும், எச்சரிக்கை அடைவதும் தவிர்க்க முடியாதது ஆகிவிடுகிறது.

சனநாயக விழுமியங்களை மதிக்கும் மேற்கு நாடுகளில் அந்தந்த நாடுகளில் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அரசியல் ரீதியாக செயற்படுவதில் தடையெதுவும் விதிக்கப்படவில்லை. இருப்பினும் அரசியல் போராட்டங்களினை பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தி அதனை முன்னெடுப்பவர்கள் விசாரணைக்கு உள்ளாவது, தடுத்து வைக்கப்படுவது தொடர்ந்து வருகின்றது. இதுவிடயத்தில் சிறிலங்கா அரசாலும் அதன் ஏவல் மனிதர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் விசமத்தனமான பிரச்சாரங்கள் முக்கிய பங்கெடுத்து வருகின்றன.

சனநாயக வழியில் ஆரம்பித்த தமிழ் மக்களின் போராட்டம் எவ்விதம் அரச பயங்கரவாதத்தை பாவித்து மழுங்கடிக்கப்பட்டதோ, அதுபோன்று தீவுக்கு வெளியில் வாழும் ஈழத்தமிழ் மக்களின் குரலையும் பயங்கரவாத முத்திரை குத்தி ஒடுக்கிவிடலாம் என முனைப்புடன் இவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இந்த நாசகாரத் திட்டத்துக்கு சில சோரம் போன தமிழர்களும் துணை போவது வேதனைக்குரியது. ஆனால் இதுபோன்ற புறநடைகள் எல்லா இனத்திலும் இருப்பார்கள் என்பதால் அது பற்றி பெரிதும் அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை எனினும் இதுவிடயத்தில் விழிப்புடன் செயற்படுவது அவசியமானது.

இவ்வாறான சாதகமற்ற நிலமை உள்ளபோதும் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் கலவரம்டையாமல் அரசியல் ரீதியான செயற்பாடுகளையும் தாயக மக்களுக்கு உதவும் பணிகளையும் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பை சுமந்தபடி உள்ளோம். தமிழீழ விடுதலைப் போராட்டம் பெருவளர்ச்சி கொண்டுள்ள நிலையில், இனமும் உணர்சிகளை கிளறி கொடி தூக்கி கோசம் போட்டு விட்டு கலைந்து போகும் நிலையிலேயே நாங்கள் உள்ளோம். மாறாக சிறிலங்கா அரசை பொருளாதார ரீதியில் பலமடையச் செய்யும் நடவடிக்கைகளை தொடர்ந்து செய்து வருகிறோம்.

மாறும் சூழ்நிலைக்கேற்ப அறிவுபூர்வமாக சிந்தித்து எமது அரசியல் செயற்பாடுகளுக்கு புதுவடிவம் கொடுப்போம். செயற்படுவோம்.

## ஒரு பேப்பர் . . .

*வணக்கம்!*

*ஒரு பேப்பர் நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இத்தருணத்தில் எம்மை திட்டித்தீர்த்து கொண்டிருக்கும் ஒரு சிலரை நினைக்கிறோம். அவர்களுக்கு நன்றி சொல்லுகிறோம். நீங்கள் இல்லாட்டா நாங்கள் சோரந்து போயிருப்போம். பேப்பரும் ஏனோ தானோ எண்டு வந்திருக்கும். ஐம்பத்திரண்டு பக்கங்கள் கொண்டதாக, ஐந்து நாடுகளிலை வெளிவருவதும் நடந்திருக்காது. ஆகையால் தொடர்ந்து திட்டுங்கோ.*

*நெல்லுக்கிறைச்ச நீர் புல்லுக்கும் ஆங்கே பொசியிறமாதிரி சிலரின் கொலஸ்ரோலை கட்டுபடுத்தவும் (பொரியல் எண்ணையை உறிஞ்சி), மாவரிக்கவும், வாசிப்பது தவிர்ந்த மற்றய விசயங்களுக்கும் ஒரு பேப்பர் உதவிறதிலையும் எங்களுக்கு மகிழ்ச்சி.*

*இலகு தமிழிலைதான் எழுதிறம் அதுவும் விளங்காததுகளை விடுவம். ஆனா உங்கட பயன்பாடு முடிந்த உடனே பேப்பரை Recycling Bin க்குள்ள போடுங்கோ காலநிலை மாற்றத்தை கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டு வாறதிலையாவது நீங்கள் உதவினதாய் இருக்கும்.*

*நாலுவருசமானாலும் இந்த பேப்பர் விநியோகம் எண்ட விவகாரம்தான் வழிக்கு வாறதாய் தெரியேல்லை. 'ஒரு பேப்பர் ரை ஒரு இடமும் காணேல்ல இப்ப அடிக்கிறதை நிப்பாட்டிப் போட்டியளோ' எண்டு சிலர் கேட்கினம். சில கடைக்காரார் என்னெண்டால் 'தம்பி கொஞ்சமாய் வையுங்கோ, மிஞ்சினால் காசுகுடுத்துத்தான் எறிவிக்க வேணும்' எண்டினம். எங்களுக்கு ஒண்டுமாய் விளங்குதிலலை. ஒண்டு செய்யுங்கோ எங்கை எப்ப எப்ப கிடைக்கேல்லை எண்டதை தெரியப்படுத்துங்கோ. எங்களாலை முடிஞ்சளவுக்கு விநியோகத்தை சரிப்படுத்திறம்.*

*முன்னர் சொன்னதுதான், திரும்பவும் சொல்லிறம் உங்களது ஆக்கங்களை நீண்டதாக அதிக பக்கங்கள் கொண்டதாக அனுப்பினால் அவை சுருக்கப்படாமல் பிரசுரிக்கும் வாய்ப்புகள் இருக்காது. அவை சுருக்கப்பட முடியாது போயின் பிரசுரித்துக்கு எடுத்து கொள்ளப்படா. ஆகவே உங்கள் ஆக்கங்களை முடிந்தவரை சுருக்கமாக எழுதி (ரைப் பண்ணி) அனுப்புங்கள்.*

*நீங்கள் நடாத்தும் நிகழ்சிகளை நடக்கவிருக்கும் நிகழ்வுகள் பகுதியில் பிரசுரிக்க விரும்பினால், அவை பற்றிய விபரங்களை நான்கைந்து வரிகளில் எழுதி எங்களுக்கு அனுப்பி வையுங்கள். குறுஞ்செய்தி (SMS) ஆகவும் அனுப்பலாம்.*

*நாங்கள் ஒரு பேப்பர் மூலமாய் அத்திலாந்திக் சமுத்திரத்தின் இரண்டு அந்தங்களிலையும் இருக்கிற தமிழர்களுக்கிடையில் ஊடகபாலம் அமைத்திருக்கிறம் எண்டால் எங்கட ஒரு பேப்பர் காரர் ஒருவர் உறவுபாலம் அமைத்திருக்கிறார். அடுத்த கிழமை கரங்கோர்க்கும் அந்த மணமக்களுக்கு உங்கட சார்பிலையும் ஒரு பேப்பர் குடும்பத்தின் சார்பிலையும் வாழ்த்துக் கூறி விடைபெற்றுக் கொள்கிறோம்.*

*மீண்டும் சந்திப்போம்*

*ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்*

EDITORIAL

# Homeland and Homes

Most of us are aware of the attempted terrorist attacks in the UK last week. Two potential car bombs were left in central London and one burning car was driven into Glasgow International Airport, all with the aim to maim and kill.

Prime Minister Gordon Brown issued a statement that Britain faces "a serious and continuous threat" and that the public "need to be alert" at all times, but there were none of the efforts to pump up the threat, the declarations that civilization itself was under attack, that were standard issue when Tony Blair was running the show.

Most major European countries had already been through some sort of terrorist crisis well before the current fashion for "Islamist" terrorism: the IRA in Britain, the OAS in France, ETA in Spain, the Baader-Meinhof Gang in Germany, the Red Brigades and their neo-fascist counterparts in Italy.

The Indians are positively heroic in their refusal (most of the time) to be panicked by terrorist attacks that have taken more lives there than all the attacks in the West since terrorist techniques first became widespread in the 1960s.

Most European cities have also been heavily bombed in a real war within living memory, which definitely puts terrorist attacks into a less impressive category. So most Europeans, while they dislike terrorist attacks, do not obsess about them. They know that they are likelier to win the lottery than to be hurt by terrorists.

But despite this knowledge we all know that terrorism is a serious problem that affects us all.

At this juncture as Tamil Expatriates we need to have a serious and intelligent debate about our standing on these issues.

The majority of us were driven out of our homeland in Northeast Sri Lanka during the last thirty years or so. Direct and indirect discrimination, political and military oppression, denial of our basic human rights, institutional racism etc., made us to abandon our homeland and reluctantly to seek sanctuaries in Europe, North America and Australasia.

Since arriving in our adopted countries, as a community, we have done and continue to do splendidly well.

Freedom, opportunities and most importantly the rule of law are given to us so we could thrive. Training and educational opportunities in every possible field are given to us. Financial assistance, accommodation and healthcare are provided in order for us to make a brand new start. Religious, political and press freedoms which were denied by our own government in Sri Lanka are given to us without any preconditions.

The majority of us have grabbed these given opportunities with both hands and pushed ourselves and our community in a positive way. We run businesses. We are part of many educational establishments, some very prestigious ones. We run law firms. We are part of healthcare institutions. We are part of think tanks and media institutions. In short, the majority of us are part of our adopted cultural pots melting very nicely.

Few weeks ago the British media brought out a story of organised credit card fraud in the UK. Sri Lankan diplomats tried their best to make this law and order offence into a political one by accusing us, the hard working Tamil expatriate community and the Tamil Tigers as part of an organised crime of terrorism.

We all know that we do have our own villains among us, as every other community has. The common thieves, murderers, ruthless gangsters and so on, do hide among us and present themselves as Tamils to the general public.

The Italians have their mafia, the Japanese have their Yakuza and the Chinese have their Snake Heads. And we have our credit card fraudsters. Denying this fact is a self defeating exercise. The majority of us agreed that some members of our hard working community break the law but we agree that this is a law and order problem and the authorities in our adopted countries will deal with it appropriately. We offered our assistance to the authorities.

Likewise we need to introspect and take sides in the current terrorist threat to our adopted homes.

We may not agree with what our governments doing in Sri Lanka. We may feel bitter about the diplomatic, political, economic and military support given to the murderous Sri Lankan regime by our elected governments. We may feel angry when our family members get killed by the undisciplined Sri Lankan armed forces and our governments are silent to these atrocities.

Disagreements, bitterness and anger are normal human emotions. Majority of white people feel the same when they see white farmers getting injured, tortured and killed and their young evicted from their homes in places like Robert Mugabe's Zimbabwe. The constructive, progressive and the only way forward is to channel our disagreements, bitterness and anger through peaceful means.

Lobbying, taking part in debates, communicating with our elected representatives etc are the only way forward. Anything else is and will be counter productive.

Our host communities are feeling scared and paranoid at the moment. Majority of them do not agree with the neo-conservative foreign policies. At the same time they will not be cowed by these terrorist attacks either.

Unfortunately one of the consequences of these terrorist attacks is the mistrust of all the ethnic minority communities. And that is what the terrorists want too.

As a community we need to come out strong against terrorism and support and reassure our adopted communities. We need to communicate clearly to them that even though we support our people's resistance against a murderous regime as bad as Robert Mugabe's and their fight for self determination like in Darfur we are against terrorism.

If we fail in this, the cynical Sri Lankan diplomats and their agents among us will use this climate of paranoid, mistrust and hurt in order to vilify our community in our host nations. They will brand us as terrorists and terrorist sympathisers. We will be made to be seen as ungrateful and unfaithful barbarians.

If we fail in this we will find ourselves where the Muslim communities are at the moment.

# கிழக்கில் சிறிலங்கா அரசு எதனை சாதிக்கிறது? விளக்குகிறார் இளந்திரையன்

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் அளித்த நேர்காணலிலிருந்து சில பகுதிகள்.

## மணலாறு, திருமலை

மணலாறைப் பொறுத்தவரையில் பாரிய சிங்களச் சதியின் பின்னணி உள்ளது. ஜே.ஆர். ஜெயவர்த்தன கொடுங்கோலாட்சியின் 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 ஆம் நாள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் 42 கிராமங்களைச் சேர்ந்த 13,228 தமிழ்க் குடும்பங்கள் வெளியேற்ற உத்தரவிடப்பட்டது.

அந்த வர்த்தமானி அறிவித்தலின்படி பச்சை தமிழ்க் கிராமங்களான செம்மலை, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், தென்னமரவாடி உள்ளிட்ட 42 கிராமங்கள் அனுராதபுரம் மாவட்டத்தின் நிர்வாக ஒழுங்குமுறையில் இணைக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம், தமிழர் தாயகத்தின் தொடர்நிலப்பரப்பில் வடக்கையும் கிழக்கையும் துண்டாடிவிட்டு சிங்களக் குடியேற்றத்தை நிரந்தரமாக அமைப்பதே. அங்கு சிங்கள ஆக்கிரமிப்பு தொடர்ந்து நடத்தப்பட முடியாவிட்டாலும் படை ஆக்கிரமிப்பு என்பது இன்னமும் உள்ளது. காடுகள் அதிகமாகவும் ஒன்றிரண்டு நீர்நிலைகளும் கொண்ட அரணாக உள்ளது. இதனைப் பயன்படுத்தி சில நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடும். இருந்தாலும் அது எங்களின் இதயபூமி. அங்கு சிறிலங்கா இராணுவத்தினருக்கு நாம் தரப்போகும் பதில் என்பது மிகக் காத்திரமானதாக இருக்கும்.

திருகோணமலை எமது தொன்மத் தமிழர் நிலம். திருமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையே ஒரு சிங்களச் சொருகலை ஏற்படுத்த முயற்ச்க்கிறது சிங்களம். குறிப்பாக இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க சிங்களம் முயற்சிகிறது. மகாவலித் திட்டத்தை அமுல்படுத்தினால் வாகரை வரை சிங்களக் குடியேற்றம் நீளும் அபாயம் உள்ளது. சேனநாயக்க, ஜயவர்த்தனாவைபோல் சம்பூர் பகுதியை மகிந்த ராஜபக்ச சட்டம் மூலம் சிங்களக் குடியேற்றமாக்க முயற்சிக்கிறார்.

## மட்டக்களப்பு - அம்பாறை

கிழக்குப் பகுதி என்பது ஒரு வித்தியாசமான தரையமைப்பைக் கொண்ட தனித்துவமான நிலம். அந்த நிலம், கெரில்லா வகை போராளிகளின் தாய்மடியாகும். கடந்த 25 வருடகாலமாக அங்கு எங்களுடைய படைகள் பல நடவடிக்கைகளைக் கரந்தடிப் படையாக மேற்கொண்டு வருகின்றனர். குடும்பிமலை உள்ளிட்ட கிழக்குப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் செறிவாக- பரவலாக இருப்பது உண்மைதான். அவர்களுடைய நடமாட்டம் அதிகம்தான். ஆனால் யார் கட்டுப்பாட்டை இழக்கிறார்கள்- கட்டுப்பாட்டுக்குள் எடுக்கிறார்கள் என்கிற விடயத்துக்குள் இவை சிக்குப்பட்டுவிட முடியாது.

கிழக்கில் யாருடைய செயற்படும் திறனைக் கட்டுப்படுத்த முடிகிறதோ அவரது செயற்படும் திறன்தான் உண்மையானதாக இருக்க முடியும். கடந்த வாரம் அம்பாறைப் பகுதியில் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவ முயன்ற சிறிலங்கா அதிரடிப்படையினரைத் தாக்கி எம்மவர்கள், படைச்சிப்பாயின் உடலையும் ஆயுதங்களையும் கைப்பற்றியிருக்கின்றனர்.

சிறிலங்கா அரசாங்கத்தின் செய்திகளின் அடிப்படையிலும் கிழக்கில் நாங்கள் மேற்கொள்கிற தந்திரோபாய நடவடிக்கைகளை அவ்வப்போது சொல்லாத நிலையிலும் மக்களின் மனதில் ஒருவித அச்சம் ஏற்படுவது வழமைதான். ஆனால் ஒருவிடயம்.. கிழக்கில் இப்போதுள்ள படையணிகளின் எண்ணிக்கையைவிட நாம் குறைவாக இருந்த காலத்திலும் எமது செயற்பாடுகள் இருந்தன. இப்போது ஒரு முழு ஒழுங்குபடுத்துதல் காலகட்டம் என்கிற அளவில்தான் நாம் தெரிவிக்க இயலும். ஆனால் சிறிலங்கா அரசாங்கமும் இராணுவமும் கிழக்கிலே சாதிப்பதாகச் சொல்லுகிற விடயம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதை பொறுத்திருந்துதான் பார்ப்போம்.

## கோத்தபாயவுக்கு வரலாறு தெரியாது

இந்திய அமைதிப்படை செய்ய இயலாததை சிறிலங்கா இராணுவம் செய்துள்ளது என்று கூறியிருக்கும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவுக்கு வரலாறும் தெரியவில்லை- படைத்துறை வரலாறும் தெரியவில்லை. இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் தொப்பிக்கல என்று சிங்களப் பெயர் மூலம் அழைக்கப்படுகின்ற தூய தமிழ்ப் பகுதியான குடும்பிமலை பகுதியில் இந்தியப் படையினர் முகாம் அமைத்திருந்தனர். இன்று வரை சிறிலங்கா இராணுவத்தால் அந்த இடத்துக்குச் செல்ல முடியவில்லை. அவர் எதைச் சொல்ல வருகிறார் என்று புரியவில்லை. கிழக்கில் சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்துள்ள குழுவினர் ஒன்றும் முதலாவது துரோகிகள் அல்ல. இதற்கும் முன்னர் துரோகிகள் அங்கிருந்தனர். அவர்கள் எதனைச் சாதித்தார்கள்? தமிழின உணர்வாளர்களை இவர்களால் காட்டிக்கொடுக்க முடியும் அவ்வளவுதான். படைப்பிரிவு ரீதியாக அக்குழுவினர் சாதிப்பார்கள் என சிங்களம் நினைத்தால் ஏமாந்துதான் போவார்கள். அவர்கள் துரோகிகள்- காட்டிக் கொடுப்பவர்கள் அவ்வளவுதான்.

நியாயங்கள்

எப்பொழுதும்

நித்திரையில்

இருப்பதில்லை

# When Justice Fails, Political dissent turns violent

By: Ameen Izzadeen
KHALEEJ TIMES

IT IS difficult to believe that Sri Lankan authorities did not know who Justice PN Bhagwati was when they invited him to head the panel of International Independent Group of Eminent Persons (IIGEP), which is tasked with monitoring investigations by a presidential commission into grave human rights abuses and extrajudicial killings.

But at the time of extending this invitation — mind you Bhagwati was Sri Lankan President Mahinda Rajapaksa's choice, not India's nominee — the government's immediate goal was to placate the international community and silence the outcry over the killing of 17 aid workers of the French aid group Action Contre La Faim, or Action Against Hunger.

The fact that Justice Bhagwati was a member of the United Nations Human Rights Committee did not deter us from inviting him. None of the Rajapaksa advisers objected to the invitation. They did object, however, to the French nominee, Bernard Kouchner, founder of the Medicins Sans Frontiers, advocate of the doctrine of humanitarian intervention and human rights champion. But saner counsel prevailed and the opposition to Kouchner's nomination was not conveyed to the French. The news that Sri Lanka had reservations about Kouchner only surfaced after he became foreign minister in the Nicolas Sarkozy administration.

The fact that the international panel includes Justice Bhagwati, Dr Kouchner, Prof Nigel Rodley, who is a former UN rapporteur on torture, and other eminent persons, showed that the international community took the Sri Lankan government's move to investigate human rights abuses seriously.

But today questions are being asked as to how serious the government is with regard to the investigations into human rights abuses because the country's chief legal officer — the Attorney General — is involved in a word of war Justice Bhagwati.

The former Indian Chief Justice is known for his judicial activism world over. One cannot talk of judicial activism in India without mentioning the name of justices like Bhagwati and VR Krishna Iyer. When they adorned the highest bench of the Indian judiciary, judicial activism assumed a human face with the mechanism of public interest litigation being resorted to find justice and relief to the marginalised and the oppressed.

The presidential advisers knew who Justice Bhagwati was but they would not have expected him to release a damning indictment on the investigation process.

Justice Bhagwati said the process did not satisfy international norms and standards and charged that the Attorney-General's Department was partial in its conduct in cases coming before the commission. He pointed out instances where the AG's conduct compromised a conflict of interests. The 84-year-old judge expressed concern over the lack of witness protection system to make the investigative process meaningful. Pointing out that the commission was beholden to the President's Office for its finances, he called upon the government to appoint a robust international human rights monitoring mission that would have wider powers than the IIGEP.

Attorney General CR de Silva hit back saying the IIGEP insulted the members of the presidential commission and engaged in improper interference with the judicial system of Sri Lanka.

While President Rajapaksa has pledged to look into the shortcomings pointed out in the Bhagwati report, the Attorney General has locked horns with the IIGEP. The situation smacks of certain degree of skullduggery and may precipitate another crisis — with the possibility of members of the international panel quitting looming large.

There are two main issues involved in the current crisis:

The inadequacy of the Sri Lanka judicial system to effectively deal with human rights abuses. Bringing to justice the killers of 17 aid workers and others who are responsible for extrajudicial killing.

It is because of the inadequacy of the local judicial system and the international community's lack of confidence in it that Sri Lanka had to invite foreign observers. If only our judiciary had demonstrated its vibrancy and progressivism in such a way to earn worldwide reputation, the international community would not have pressurised the government. The United States and Britain may also be committing gross human rights violations but the judicial systems in these countries are adequately empowered to bring the culprits to justice.

The recent ruling by British law lords in a case where British soldiers were accused of killing Baha Mousa, an Iraqi civilian is a classic example. The law lords dismissed the British government's argument that the European Convention on Human Rights applied only in Europe and not applicable to British troops in Iraq. They said there must be a full independent inquiry whenever detainees such as Mousa suffer inhuman treatment, torture or death whilst detained in UK military establishments anywhere in the world. It is when justice fails that political dissent turns violent. Terrorism manifests itself as a political voice when avenues for justice are shut and people lose hope that their grievances could be addressed in a just manner.

The second issue involves the investigative process: Will the culprits be punished? We still do not know who killed the 17 aid workers. It could be soldiers, the Tamil Tigers or even a third force. But the manner in which the Attorney General's Department finds fault with the IIGEP and the authorities' failure to extend cooperation to Australian forensic experts create a wrong impression that the state is trying to protect the culprits. Unconfirmed reports say vital evidence collected by investigators has either gone missing or not submitted.

The burden is on Sri Lanka to prove that it is a state where justice is done.

ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

*ஆசிரியர் குழு:*

*லண்டன்*
சேயோன் - சுவேதிகா
மணி - சுஜீத்

*கனடா*
தயா - பொன்.விவேகானந்தன்
இளந்திரையன்

*பாரிஸ்*
சிறி - வண்ணை

*ஜேர்மனி*
சபேசன் - சுதந்திரா

*சுவிஸ்*
ரேமன் - சந்துரு

*பொறுப்பாசிரியர்*
- கோபி -

*விளம்பரம்*
கௌரி - நிதி - சிந்து

*அச்சு*
சுகி - நிதி

*வடிவமைப்பு*
jasmine studio

*முகப்பு வடிவமைப்பு*
seven zero graphics

*விளம்பர வடிவமைப்பு*
ரஜீவன் - கிரி

*இணையத்தள வடிவமைப்பு*
ரஜீவன்

*தமிழ் எழுத்துரு உதவி*
சுரதா யாழ்வாணன்

*நிதி – நிர்வாகம்*
உஷா - முருகானந்தன்

*வழங்கல்*
உதயகுமார்-ராஜு-கரன்



உங்கள் தொடர்புகட்கு:

*தொலைபேசி* (Tel)
லண்டன் 020 8640 4604
020 8286 9327
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277

*தொலைநகல்* (Fax)
020 8640 6972

*ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:*
பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey

*மின்னஞ்சல்:*
info@orupaper.com

*இணையம்:*
www.orupaper.com


*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

*சற்று மாறுதலுக்காக.*

# கம்பனின் பன்னாடைகளுக்குப் பொன்னாடை

**சேயோன்**
*(ஒரு பேப்பர்)*

வெள்ளையாக வெயில் எறிக்கிறது. இடையிடை மழைவந்து இந்த கோடைநாளைக் குழப்புகிறது. ஆயினும் கோடைநாள் வழமையாகக் குதூகலம் தான்.

இந்தக் கோடைநாள்களுக்கு வழமையாக நடக்கிற விழாக்கள் ஒன்றும் குழம்பவில்லை. மாறுகரை வேட்டியுடன், பட்டுச் சேலையுடன் அந்த விழாக்கள் இனிதே நிறைவுறுகின்றன. நிறைவுறட்டும்.

நான் சொல்ல வந்தது அதுவல்ல. கோயில் திருவிழாக்களையோ, கும்மாளம் கொட்டுதலையோ அல்ல. தங்கள் அரிப்பை சொறிஞ்சு தீர்க்க ஒரு கும்பல் புறப்பட்டிருக்கிறது. அக்கும்பலின் கும்மாளம்பற்றி அக்கும்பலின் கோடைத் திருவிழா பற்றியே என் விசனம். இந்த விளம்பரப்பிரியர்கள் பற்றிய கோபம் தான் இந்தப் பத்தி. இந்தப் பன்னாடைகள் பற்றிய ஆத்திரம் தான் இந்த எழுத்து.

முன்னர் யாழ்ப்பாணத்தில் பின்னர் கொழும்பில் 'கம்பன் விழா' என்று ஒரு விழா சில கழிசடைகளால் நடாத்தப்படும். கம்பன் தமிழுக்கு கிடைத்த ஒப்பற்ற கவிச்சக்கரவர்த்தி. கம்பன் போல்கவி வல்லமை பெற்றோர் கம்பனுக்கு முன்னரும் கம்பனுக்குப் பின்னரும் தோன்றியதில்லை. தமிழ்க் கவிதையின் உச்சம் கம்பன்.

ஆனால் இந்தக் கம்பன் விழாக் கழிசடைகள் கம்பனை அப்படி ஆராய்வதில்லை. நோக்குவதில்லை. 'உனக்கு நான் முதுகு சொறியிறன் எனக்கு நீ முதுகு சொறி' என்று மாறி மாறி முதுகு சொறிந்து கொண்டிருப்பதும், மாறி மாறி பொன்னாடை போர்த்துவதும் தான் இந்தப் பன்னாடைகளின் பணி. அப்படி ஒரு முதுகு சொறிதலே, இலண்டனிலும், கனடாவிலும் நிகழ்கிறது.

நான் ஏதோ பொறாமையில் தான் இதை எழுதுகிறேன் என்று யாரும் நினைத்தால் I don't care. இந்த காக்கைக் கூட்டங்களிடம் பொறாமைப் பட என்ன இருக்கிறது? உயரப்பறக்கையில் நான் பருந்து. ஒழுங்கா இருக்கையில் நான் கிளி. அழகாகக் கூவுகையில் நான் குயில். ஓர்மமாய் வீரமாய் இருக்கையில் நான் புலி. இந்தக் கலைக் காகங்களைக் கண்டு நான் ஏன் பொறாமைப்பட வேண்டும்?'

'கற்பிற் சிறந்தவர் கண்ணகியா மாதவியா?' இந்த வகையான பட்டிமன்றங்கள். கேட்கிற சனங்கள் முட்டாள்கள், ஒன்றும் விளங்காதவர்கள் என்று நினைத்து ஒரு வரியை திரும்பத் திரும்ப ஒப்பிக்கிறது கவியரங்கம். அதில் கவிதை இருக்காது.

'வண் என்பார் ரூ என்பார்
வட் இஸ் த மற்றர் என்பார்'

என்று அர்த்தமும் கவிதையும் இல்லாத வரியை கவிதை மாதிரி திருப்பிச் சொல்வார்கள்.

இந்தக் கவியரங்கங்களையும் பட்டிமன்றங்களையும் வழக்காடும் மன்றங்களையும் எதற்கு வைக்கிறார்கள்? தமிழ் வளர்க்கவா, தங்களை வளர்க்கவா? இரண்டுமேயல்ல. அரிப்பெடுக்கிறது. அதனால் சொறிகிறார்கள் ஒருவர் மாறி ஒருவர் சொறிகிறார்கள் இது சின்னத்தனமான புகழ் தேடும் விளையாட்டு.

ஒன்றுமே இல்லாத வெறும் கிடாரங்கள் தடதட என்று தங்களை தட்டி 'இந்தா நாங்கள் தமிழறிஞர் தமிழ் வளர்க்க வந்திருக்கிறோம். ஓடி வா ஓடி வா' என்று வியாபாரக் கூச்சல் போடுகிறார்கள். சங்கீதத் தலையாட்டிப் பொம்மைகளின் ஆய்க்கினைகள் ஒரு புறமென்றால், இந்தத் தமிழ் தறுதலைகளின் ஆய்க்கினைகள் மறுபுறம்.

ஒருவருக்கொருவர் பட்டங்கள் சூட்டிப் பண்ணுகிற அடாவடி இருக்கே அது மகா கொடுமை. நண்பர் ஒருவர் **ஒரு பேப்பர்**ரில் எழுதியதுபோல கலைக்கிளி, கலைக்குயில், கலைக்காகம், கலைப்பருந்து, என்று பட்டங்கள். இலக்கியச் செம்மல், இதயத்துக்கம்மல், சிவநெறிப்புலவர், அறநெறிக்கிழவர் என்றெல்லாம் பட்டங்கள். புதுமைப்பித்தன் சொன்னது போல

ஒற்றை சிதையினில் உம்மெல்லாரையும்
வைத்து எரிச்சலாலும்
வயித்தெரிச்சல் தீராது'

என்ற வரியைத்தான் இங்கு சொல்ல வேண்டும்.

கவியரங்கம், பட்டிமன்றம், நடனம், பட்டமளிப்பு என்று அரைத்த மாவையே அரைக்கிற இந்த விழாக்களில் கொஞ்சம் இரசிக்கத் தக்கது என்றால் அவைக்காற்றுக் கலைக் கழகத்தின் (பாலேந்திராவின்) நாடகங்களைச் சொல்லலாம்.

ஆனால் பாலேந்திராவும் அரைச்ச மாவையே அரைச்சுக் கொண்டிருக்கிறார். 'சர்ச்சை' 'அவசரக்காரர்கள்' என்று நாலைந்து நாடகங்கள் அதுதான் எல்லா நிகழ்ச்சிகளிலும். புதிதாக நாடகம் செய்யமாட்டாரா பாலேந்திரா?

இத்தனை கோபமும் ஆத்திரமும் ஏன் வருகிறது? இந்தப் பன்னாடைகள் சீரழிந்த சின்னத்தனமான நடத்தைகளை நம் தமிழ்ச் சமூகத்துக்குள் புகுத்துகின்றனர். அரசியல் வியாபாரியான முதல்வர் கருணாநிதி அவர்கள் கூட 'இனி பொன்னாடை போர்த்த வேண்டாம் அதற்கு பதிலாக ஒரு புத்தகத்தைக் கொடுங்கள்' என்று சட்டம் இயற்றுகிறார். இங்கு நாங்கள் என்ன செய்கிறோம்? சமூகத்தை வழிநடத்த வேண்டிய போராளிகளாக இருக்க வேண்டியவர்களே பொன்னாடை போர்த்தி, புன்னகை வீசி கமெராவுக்கு 'போஸ்' கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பொன்னாடை போர்த்துதல் தமிழ்ப் பண்பாடு அல்ல. அது தறுதலைகளின் பண்பாடு. நம் தமிழ்ச் சமூகத்தை உயர்வுபடுத்துகிற காரியங்களில் இறங்குவோம் காவியம் படைப்போம். அதுவே எம்முன் உள்ள ஒரே பணி.

# பயம்! ஏன்? எதற்கு? எப்படி?

பயம் என்றால் என்ன? பயம் எதைப் பற்றியது? பலவிதமான பயங்கள் இருக்கின்றன. நம்முடைய உறவைச் சரியானபடி புரிந்து கொள்ள முடியாத போது, பயம் ஏற்படுகிறது என்பது உண்மை.

உறவு என்பது இரண்டு மனிதர்களுக்கு இடையே மட்டும் இருப்பதல்ல, நமக்கும் இயற்கைக்கும், நமக்கும் சொத்துக்கும், நமக்கும் கொள்கைக்கும் இடையே இருப்பதும் உறவு தான். இந்த உறவை முழுமையாகப் புரிந்து கொள்ளாதவரை பயம் இருந்தே தீரும்.

சரிஎப்படி இந்தப் பயத்தைப்போக்குவது? பயத்தை முழுதுமாகப் புரிந்து கொண்டு அதனுள் படிப்படியாகச் சென்று அதன் முழு உள்ளடக்கத்தையும் ஆராய்ந்தால், பிறகு பயம் எந்த உருவத்திலும் எப்போதும் வராது.

நாம் முன்னமே சொன்னபடி பயம் வெறும் கருத்துருவாய் இருக்கவில்லை. அது உறவில் தான் இருக்கிறது. பயம் என்றால் என்ன? நாம் இருப்போமா என்பதுபற்றியும் ஏதோ ஒன்று ஆகவில்லை என்பது பற்றியும் தான் பயப்படுகிறோம், அல்லவா?

இருக்கமாட்டோம் என்ற பயமும், முன்னேற மாட்டோம் என்ற பயமும் எதிர்பாராததைப் பற்றிய பயமும், மரணபயமும், உறுதியாலும், தீர்மானத்தாலும், தேர்வுசெய்வதாலும் முடிவுக்குக் கொண்டு வரக்கூடியதா? இல்லை என்பது தெளிவு.

பயத்தை எந்தக் கட்டுப்பாட்டிலும் எந்தவித அடக்குதலாலும் வெல்ல முடியாது. இந்த உண்மையைத் தெளிவாகப் பார்த்து, உணர்ந்து, அனுபவமாக்க வேண்டும். பயத்தை எந்த விதத் தற்காப்பாலும், அடக்குதலாலும் தீர்த்துவிட முடியாது. அல்லது அதற்கான விடையைத் தேடுவதாலோ, அறிவாற்றல் கொண்டு, சொல்லாற்றல் கொண்டு விளக்குவதாலோ, பயத்திலிருந்து விடுதலை பெற்றுவிட முடியாது.

நாம் எதைப் பற்றிப் பயப்படுகிறோம்? ஒரு நடப்பு பற்றிப் பயப்படுகிறோமோ? அல்லது அதைப் பற்றிய கருத்தைக் கொண்டு பயப்படுகிறோமா? ஒரு பொருள் பற்றிப் பயப்படுகிறோமா?

மரணத்தையே உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். நாம் பயப்படுவது, மரணம் என்ற நடப்பு பற்றியா? அல்லது மரணம் என்ற எண்ணத்தைப் பற்றியா? நடப்பு உண்மை என்பது ஒன்று, அதைப் பற்றிய கருத்து வேறு ஒன்று. மரணம் என்ற சொல் எனக்குப் பயம் உண்டாக்குகிறதா? அல்லது மரணம் என்ற நடப்பு உண்மை பயம் உண்டாக்குகிறதா?

சொல்லையும், கருத்தையும் கண்டு பயப்படுவதால் நடப்பு உண்மையை நான் ஒரு போதும் விளங்கிக் கொள்வதில்லை அதை நான் பார்ப்பதில்லை அத்துடன் ஒருபோதும் நேரடித் தொடர்பு கொள்வதில்லை. நடப்பு உண்மையோடு எமக்கு ஒன்று கலந்த தொடர்பு ஏற்படும் போது தான், பயம் இல்லாமல் போகும். அப்படி நான் ஒன்று கலந்த தொடர்பில் இல்லாவிட்டால் பயம் இருந்து கொண்டே இருக்கும்.

நடப்பு உண்மையை நான் முகத்திற்கு முகம் நேராக எதிர்கொண்டால் அதில் விளங்கிக் கொள்வதற்கு ஒன்றுமே இல்லை. நடப்பு உண்மை இருக்கிறது. அதை நான் என் கைக்குள் கொண்டு வரமுடியும். ஆனால் சொல்லைக் கண்டு நான் பயந்தால் பிறகு நான் அந்தச் சொல்லை விளங்கிக் கொள்ள வேண்டும். அந்தச் சொல்லின் முழு நடைமுறையையும், அதன் உள்ளடக்கத்தையும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

சான்றாக, தனிமை பற்றி ஒருவர் பயப்படுகிறார். அது தரும் வேதனை, வலி பற்றிப் பயப்படுகிறார். தனிமையை உண்மையாகப் பார்க்காததாலும், அத்துடன் ஒன்று கலந்த தொடர்பு கொள்ளாததாலும் தான் அந்த பயம் ஏற்படுகிறது. தனிமை என்ற நடப்பு உண்மைக்கு முழுதுமாய் மனம் திறந்த நிலையில் இருக்கும்போது அதை என்ன என்று புரிந்து கொள்ளலாம்.

தனிமை என்பது பற்றி எனக்கு ஒரு மறு செயல்பாடு இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதாவது நான் வெறுமையுடன் இருப்பதைக் கண்டுபயப்படுவதாகச் சொல்கிறேன். நான் நடப்பு உண்மையைப் பார்த்து பயங் கொள்கிறேனா, அல்லது அது சொல்லாக, சின்னமாக, கற்பனைத் தோற்றமாக உள்ள அறிவு, அதாவது நடப்பு உண்மையைப் பற்றி எனக்கு முன்னமே உள்ள அறிவு, எழுப்பிய பயமா? நடப்பு உண்மை பற்றி பயம் எப்படி இருக்க முடியும்?

நான் உண்மையோடு எதிர் எதிரே நிற்கும்போது, நேரடித் தொடர்பு கொள்ளும்போது, அதை நான் பார்க்க முடியும், கூர்ந்து நோக்க முடியும். ஆகவே உண்மை பற்றிய என்னுடைய தடுமாற்றம், அது என்னவோ, அது என்ன விளைவுக்குமோ என்பது தான் பயத்தைத் தோற்றுவிக்கிறது.

ஆக மனம்தான் பயத்தை உண்டாக்குகிறது. அதாவது சிந்திக்கும் நடைமுறை, சிந்தித்தல் என்பது சொல்லாக்குவது. சொல் இன்றி, சின்னங்கள், கற்பனை உருவங்கள் இன்றி சிந்திக்க முடியாது. மனத்தின் தடுமாற்றங்கள், முந்தைய அறிவு, முன்கூட்டிய தீர்மானங்கள் என்பவற்றாலான இந்தக் கற்பனைத் தோற்றங்கள் உண்மையின் மீது விழச் செய்யப்படுகிறது.

இதிலிருந்து தான் பயம் உண்டாகிறது. மனம், பெயர்த்துச் சொல்வதல்லாமல், பெயர் கொடுக்காமல், அடையாளம் குறிப்பிடாமல், உண்மையைப் பார்க்கும் ஆற்றல் பெறும்போது தான் பயத்திலிருந்து விடுதலை கிடைக்க முடியும்.

இது கடினம் தான். ஏனென்றால், உணர்ச்சிகள், மறுசெயல்பாடுகள், மனக்கலக்கங்கள் ஆகியவற்றை மனம் உடனடியாக வகைப்படுத்திப் பெயர் கொடுத்து விடுகிறது.

பயம் என்று சொல்லி நீங்கள் பெயர் கொடுத்த மாத்திரத்திலேயே அதற்கு வலிமை ஊட்டுகிறது. பெயரிடாமல் நீங்கள் அதைப் பார்க்கும்போது, அது உதிர்ந்து போகிறது. ஆகவே முழுமையாக பயத்திலிருந்து விடுபட வேண்டுமென்றால், உண்மைக்குப் பெயர் கொடுப்பது, கற்பனை உருவங்கள், சின்னங்களைத் தோற்றுவிப்பது, குறியீடு செய்வது ஆகிய முழு நடைமுறைகயையும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

தன்னை அறிவது நிகழும்போது தான் பயத்திலிருந்து விடுதலை. தன்னை அறிவது தான் பேரறிவின் தொடக்கம், அது தான் பயத்தின் முடிவு.

*-ஜே.கிருஸ்ணமூர்த்தி*

# கரும்புலிகள் - ஒரு பார்வை

வி. சபேசன்
(ஒரு பேப்பருக்காக)

ஜூலை 5 தமிழீழத்தில் கரும்புலிகள் தினம் நினைவுகூரப்பட்டது. அதே நேரம் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் தெற்கில் பெரும் தாக்குதலை நடத்தக்கூடும் என்ற அச்சத்தில் சிறிலங்கா முழுவதும் படையினர் உச்சபட்ச உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

விரைவில் கருப்பு ஜூலையும் வருவதால் சிறிலங்காப் படைகள் தொடர்ந்தும் பீதியிலேயே இருக்கப்போகின்றன.

முதலாவது கரும்புலித் தாக்குதல் நடைபெற்று இந்த ஜூலையுடன் இருபது ஆண்டுகள் முடிவுற்றுள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டம் நெருக்கடிகளை சந்திக்கின்ற காலங்களில், அந்த நெருக்கடியில் இருந்து போராட்டத்தை மீட்பவர்கள் பெரும்பாலும் கரும்புலிகளாகவே இருக்கின்றனர்.

ஜூலை 5 1987ஆம் ஆண்டு நெல்லியடியில் முதலாவது கரும்புலித் தாக்குதலை கப்டன் மில்லர் நடத்தினார். அன்றைக்கு யாழ் குடா பெரும் நெருக்கடியில் சிக்கியிருந்தது. சிங்களப் படைகள் 'ஒபரேசன் லிபரேசன்' நடவடிக்கை மூலம் வடமராட்சியின் பெரும்பகுதியை கைப்பற்றியிருந்தன.

வடமராட்சியை கைப்பற்றியிருந்த சிங்களப் படைகள் யாழ்குடாவின் மற்றைய பகுதிகளையும் கைப்பற்றுவதற்கு ஆயத்த நிலையில் இருந்தன. யாழ்-குடா மக்களை அச்சம் சூழ்ந்திருந்த காலம் அது.

**படைவலுச் சமநிலை ஏற்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கும் முக்கிய காரணியாக கட்டுநாயக்க தாக்குதல் அமைந்தது.**

அவ்வாறான ஒரு நேரத்தில்தான் ஜூலை 5 1987 அன்று விடுதலைப் புலிகள் நெல்லியடியில் அமைந்திருந்த படை முகாம் மீது தாக்குதல் நடத்தினர். அந்தத் தாக்குதலின் போது கப்டன் மில்லர் வெடிமருந்து நிரப்பிய வாகனத்தோடு படைமுகாம் மீது மோதி வெடித்தார். சண்டை முடிவுக்கு வந்தது.

அந்தத் தாக்குதலில் கரும்புலி கப்டன் மில்லரோடு மேலும் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர். ஏறக்குறைய நூறு சிங்களப் படையினர் பலியாகினர். இந்தத் தாக்குதல் சிங்கள அரசை அதிரச் செய்தது. யாழ் குடாவை கைப்பற்றும் திட்டத்தை கைவிடச் செய்தது.

இரண்டாம்ஈழப் போரின் போது தொலைநோக்கு சிந்தனையோடு வன்னியை மீட்கும் பணியை விடுதலைப் புலிகள் ஆரம்பித்தனர். கொக்காவில், மாங்குளம் போன்று முக்கிய முகாம்கள் கைப்பற்றப்பட்டன.

அப்பொழுது வன்னியின் மிகப் பெரிய தளங்களில் ஒன்றாக மாங்குளம் விளங்கியது. மாங்குள முகாமை கைப்பற்றினால்தான் வன்னியின் மையப்பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வரும் என்ற நிலை இருந்தது. இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் இரண்டாவது கரும்புலித் தாக்குதல் நடந்தது.

நவம்பர் மாதம் 23ஆம் நாள் 1990ஆம் ஆண்டு மாங்குள முகாம் மீது கரும்புலி லெப். கேணல் போர்க் வெடிமருந்து வாகனத்தை செலுத்தி வீரச்சாவை தழுவினார். தொடர்ந்து பல நாட்களாக நடந்து வந்த மாங்குளச் சமர் முடிவுக்கு வந்தது. வன்னியின் பெரும்பகுதியும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

தரைக் கரும்புலிகளை அடுத்து கடற் கரும்புலிகளும் தோற்றம் பெற்றனர். சிங்களக் கடற்படைக்கு எதிராக கடற்புலிகள் நடத்திய முதலாவது பெரும் தாக்குதல் கடற்கரும்புலித் தாக்குதலே ஆகும். இதை விட யாழ் குடாவை சிங்களப் படைகளின் இறுக்கமான முற்றுகையில் இருந்து மீட்டு கிளாலிப் பதையை திறந்து வைத்தவர்களும் கடற்கரும்புலிகள்தான்.

வெடிகுண்டு நிரப்பிய ஊர்தியோடு சென்று மோதி வெடிக்கின்ற தரை மற்றும் கடற் கரும் புலிகளோடு கொமாண்டோ பாணியிலான அதிரடித் தாக்குதலை நடத்தக்கூடிய கரும்புலிகள் அணிகளையும் விடுதலைப் புலிகள் உருவாக்கினர். இவ்வாறான ஒரு கரும்புலி அணிகள் எதிரிக்கு மிகப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தின.

**கொல்லப்பட்டால் முகவரி இன்றி புதைக்கப்படுவோம் என்று தெரிந்தும் பல நாடுகளின் புலனாய்வுத் துறையை சேர்ந்தவர்கள் தாய் நாட்டிற்காக உலகின் பலபாகங்களிலும் பணிபுரிந்து வருகிறார்கள்.**

ஓயாத அலைகள் மூன்றில் ஆனையிறவுச் சமரின் போது, ஆனையிறவைச் சுற்றியுள்ள ஆட்லறித் தளங்கள் மீது கரும்புலிகளின் அணிகள் அதிரடித் தாக்குதலை நடத்தி ஆட்லறிகளை அழித்து, ஆனையிறவு கைப்பற்றப்படுவதற்கு உறுதுணையாக இருந்தனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக கரும்புலிகளின் அதிரடித் தாக்குதல் அணி கட்டுநாயக்க விமானத் தளம் மீதான தாக்குதல் சிறிலங்கா அரசையே முற்றுமுழுதாக நிலைகுயைய வைத்தது. படைவலுச் சமநிலை ஏற்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கும் முக்கிய காரணியாக கட்டுநாயக்க தாக்குதல் அமைந்தது.

தரை மற்றும் கடற் கரும்புலிகளோடு விடுதலைப் புலிகள் வான்கரும்புலிகளையும் உருவாக்குவார்கள் என்ற ஊகம் சில மட்டங்களில் இருந்தது. விடுதலைப் புலிகள் விமானங்களை வைத்திருப்பது தெரிய வந்தபோது, விடுதலைப் புலிகள் விமானங்களைக் கொண்டு தற்கொடைத் தாக்குதல்களையே நடத்துவார்கள் என்று எதிர்வு கூறப்பட்டது.

ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. விடுதலைப் புலிகள் கரும்புலித் தாக்குதல்களுக்கு வான்புலிகளை பயன்படுத்த மாட்டார்கள். ஒரு விமானத்தை பெற்றுக் கொள்வதும், ஒரு விமானியை உருவாக்குவதும் மிகப் பெரும் செலவு பிடிக்கும் விடயங்கள். ஆகவே வான்புலிகளை தற்கொடைத் தாக்குதலுக்கு பயன்படுத்துவதை விடுதலைப் புலிகள் தவிர்த்துக் கொள்ளவே விரும்புவர்.

**அமெரிக்காவின் புலனாய்வுப் பிரிவினர் பலர் வெளிநாடுகளில் தமது தாய்நாட்டிற்காக பணியாற்றுகின்ற நேரத்தில் எதிரிகளால் கொல்லப் பட்டிருக்கிறார்கள்.அவர்களை அமெரிக்க அரசு பொறுப்பெடுப்பதில்லை.**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இதுவரை 322 கரும்புலி வீரர்கள் வீரச் சாவடைந்துள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் கடற் கரும் புலிகள் ஆவார்கள். கரும்புலிகளில் குறிப்பிட்ட எண்ணிக்கை உள்ளவர்கள் முகம் தெரியாமலேயே தம்மை தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஈந்துள்ளார்கள்.

அமெரிக்காவின் புலனாய்வுப் பிரிவினர் பலர் வெளிநாடுகளில் தமது தாய்நாட்டிற்காக பணியாற்றுகின்ற நேரத்தில் எதிரிகளால் கொல்லப் பட்டிருக்கிறார்கள். அவர்களை அமெரிக்க அரசு பொறுப்பெடுப்பதில்லை. சில வேளைகளில் அவர்கள் அமெரிக்கர்கள் என்று கூடத் தெரிய வருவதில்லை.

கொல்லப்பட்டால் முகவரி இன்றி புதைக்கப் படுவோம் என்று தெரிந்தும் இது போன்று பல நாடுகளின் புலனாய்வுத்துறையை சேர்ந்தவர்கள் தாய் நாட்டிற்காக உலகின் பல பாகங்களிலும் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களின் தாய் நாட்டைப் பொறுத்தவரை இவர்களின் தியாகம் மிகப் பெரியதாக பார்க்கப்படுகிறது.

இன்றைக்கும் சில வேளைகளில் என்றைக்கும் வெளிப்படையாக பெயர் சொல்லி திருவுருவப் படத்திற்கு மாலை போட்டு வீரவணக்கம் செய்ய முடியாதபடி வீரச்சாவடைந்த பல கரும்புலிகள் உள்ளனர். இவர்கள் தமிழீழ தேசத்தை மிகப் பெரும் அச்சுறுத்தலில் இருந்து காத்தவர்கள் என்று புகழாரம் சூட்டி விடுதலைப் புலிகள் ஒரு பொதுவான வடிவத்திற்கு வீரவணக்கம் செலுத்துவார்கள்.

இவ்வாறு தமிழீழப் போராட்டத்தை நெருக்கடிகளில் இருந்து மீட்டவர்களும் மிகப் பெரும் அச்சுறுத்தல்களில் இருந்து காத்தவர்களுமாகிய கரும்புலிகளையும் அவர்களின் தற்கொலைத் தாக்குதல்களையும் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகவே மேற்குலக நாடுகள் பார்க்கின்றன.

கரும்புலிகளின் தாக்குதலை தற்கொலைத் தாக்குதல் என்று பலர் வர்ணித்தாலும், தம்மையே கொடையாகக் கொடுப்பதால் தற்கொடைத் தாக்குதல் என்று சொல்வதே சரியாக இருக்கும் என்ற கருத்தும் பலர் மத்தியில் இருக்கின்றது.

ஒரு காலத்தில் வியந்து பார்க்கப்பட்ட தற்கொடைத் தாக்குதல்கள் இன்றைக்கு பல நாடுகளினால் அச்சத்தோடு பார்க்கப்படுகின்றன. இதற்கு முக்கிய காரணமாக பொதுமக்களை இலக்கு வைத்து அல்கைதா போன்ற தீவிரவாத இயக்கங்கள் நடத்துகின்ற தாக்குதல்கள் ஆகும்.

பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப் படுகின்ற தற்கொடைத் தாக்குதல்கள் அந்தத் தற்கொடைத் தாக்குதலுக்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்திவிடுகின்றன.

ஆனால் விடுதலைப் புலிகள் பொதுமக்களை இலக்கு வைத்து ஒருபோதும் தற்கொடைத் தாக்குதல்களை நடத்தவதில்லை. பொதுமக்களின் குடியிருப்புகளுக்கு மத்தியில் அமைந்துள்ள இலக்குகளை தாக்கும் போது கூட பொதுமக்களின் பாதிப்பை தவிர்ப்பதில் கூடிய கவனம் செலுத்துவார்கள்.

**இன்றைக்கு விடுதலைப் புலிகள் பெற்று வருகின்ற படைக்கல வளர்ச்சி உயிராயுதத்திற்கு மாற்றீடாக அமைகின்றது.**

ஆயினும் உலகின் மிக அதிகமான தற்கொடைத் தாக்குதல்களை நடத்தியவர்கள் விடுதலைப் புலிகள் என்பதும் விடுதலைப் புலிகளின் தற்கொடைப் படையணி நவீனமானதும், நெறிப்படுத்தப்பட்டதும், கடும் பயிற்சி பெற்றதும் ஆகும் என்பதும் மேற்குலக நாடுகளுக்கு ஒரு பிரச்சனையாகவே இருக்கின்றது.

விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கப் பட்டியலில் இருந்து நீக்குவதற்கு முக்கிய நிபந்தனையாக கரும்புலிகள் அணியை கலைக்க வேண்டும் என்ற நிபந்தனையை அமெரிக்கா முன்வைத்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழீழ மக்களின் மிகப் பெரும் பலமாக கரும்புலிகள் விளங்குவதாலேயே மேற்குலக நாடுகள் இவ்வாறு நடந்து கொள்கின்றன. கரும்புலிகள் குறித்து மேற்குலக நாடுகள் கவலை கொள்ளத் தேவை இல்லை.

இன்றைக்கு விடுதலைப் புலிகள் பெற்று வருகின்ற படைக்கல வளர்ச்சி உயிராயுதத்திற்கு மாற்றீடாக அமைகின்றது.

தரைச் சண்டைகளில் கரும்புலிகளை பயன் படுத்துவது பெருமளவு குறைந்து போயுள்ளது. கடற்சமர்களில் கடற்கரும்புலிகளின் தாக்குதல் இல்லாமலேயே போராப் படகுகளை கடற்புலிகள் மூழ்கடிக்கத் தொடங்கி உள்ளார்கள். கொழும்பில் கரும்புலிகளின் அதரடித் தாக்குதல் அணி நடத்த வேண்டிய தாக்குதல்களை வான்புலிகள் நடத்துகின்றனர்.

உயிராயுதத்திற்கு மாற்றீடான படைக் கலங்களை தமிழீழப் போராட்டம் பெறுகின்ற போது, தற்கொடைத் தாக்குதல்களை நடத்த வேண்டிய தேவை தமிழீழப் போராட்டத்தில் இல்லாது போகும்.

*வித்துகள்*

*வீழ்வது*

*முளைப்பதற்கே*

# இலங்கை மீது திரும்பும் சர்வதேச கவனம்

**உமா மகாலிங்கம்**
*( ஒரு பேப்பருக்காக )*

அடுத்த வீட்டில் நடக்கும் அசம்பாவிதங்களுக்கே எட்டிப் பார்க்காத இயல்பைக் கொண்ட நாடுகள், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அக்கறை காட்டத்தொடங்கியிருப்பது ஒரு சாதகமான முன்னேற்றமாகும்.

குறிப்பாக, நியுயோர்க் தலைநகரில் இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பு மையமும் அகில உலக மன்னிப்புச் சபையும் (Amnesty International) இதில் அதிக அக்கறை செலுத்துவது, இலங்கைக்கு தலையிடியைக் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில், ஜேர்மனி, பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் அவர்கள் வழங்கும் நிதியுதவிகளில் சிலவற்றை நிறுத்தியுள்ள தீர்மானம் இலங்கை அரசாங்கத்துக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு எச்சரிக்கையாகக் கருத இடமுண்டு.

இலங்கையில் மீறப்படும் மனித உரிமைகளை தடுத்து நிறுத்த முடியாமல் போனால் இலங்கைக்கு உதவி வழங்கும் சகல நாடுகளையும் அவர்கள் வழங்கும் உதவிகளை நிறுத்தக் கோரப் போவதாக, மனித உரிமைகள் கண்காணிப்பு மையம் இலங்கைக்கு விடுத்துள்ள எச்சரிக்கையை எளிதில் தூக்கி எறிந்துவிட முடியாது.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட இக்கண்காணிப்பு மையம் எந்தவொரு நாட்டின் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டதொன்றல்ல.

இந்த அமைப்புக்கள் ஒரு பிரசாரத்தை ஆரம்பித்துவிட்டால் அதன் இலக்கை அடையும் வரை ஓய்வு பெறாது என்பதே உலகறிந்த உண்மை.

இலங்கைமீது அக்கறை கொண்ட நாடுகள் வரிசையில், இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, யப்பான், சீனா, பாகிஸ்தான் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளையும், நோர்டிக் நாடுகளையும் சேர்க்கலாம்.

இந்நாடுகளின் அக்கறை வெவ்வேறாக இருப்பினும், பொதுவாக இந்நாடுகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்களின் அயராத தூண்டுதல்களால் ஈழத்தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டம் இந்நாடுகளின் அரசுகளின் கவனத்தை ஈர்ந்துள்ளது.

### பலத்தையும் பலவீனத்தையும் வைத்தே சர்வதேசப்பிரச்சினைகளை உலக நாடுகள் அணுகி வருவதும் அது தொடர்பான கருத்துக்களை முன்வைப்பதும் கண்கூடு.

மூன்று இலட்சத்துக்கு அதிகமான தமிழ்மக்களை புலம்பெயரச் செய்த இலங்கையின் இனப்பிரச்சனையை இனிமேலும் தட்டிக்கழிக்க முடியாத நிலைக்கு பல நாடுகள் தள்ளப்பட்டுள்ளன. எனினும் இதற்கு வேறு ஒரு காரணமுமுண்டு.

பலங்கூடிய பக்கம் சாய்வதே, உலக நாடுகளின் பரிச்சயமான ஒரு பழக்கம். பலத்தையும் பலவீனத்தையும் வைத்தே பிரச்சனைகள் அணுகப்படுவதே உலகத்தின் நியதி.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழ் மக்களில் அதிக தொகையினரை உள்வாங்கிய இந்தியா, அயல் நாடாக மட்டுமன்றி, இலங்கையின் பூர்விகக் குடிகளான சிங்கள, தமிழ் இனங்களுக்கு நதிமூலமாக இருந்துள்ளமை வரலாறு.

### இலங்கையின் சிங்கள பேரினவாத அரசு வெளிநாட்டு மத்தியஸ்தையும் வெளிநாடுகளின் கருத்துக்களையும் கருத்தில் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை

எனவேதான், இலங்கை இனப்பிரச்சினையின் தீர்வுக்கு இந்தியா தலையிட வேண்டுமென அனைத்து நாடுகளும் விரும்புகின்றன.

மகிந்தாவின் அரசு பதவியேற்றபின் இந்தியாவின் அக்கறை சரிந்துள்ளதை அரசியல் நோக்கர்கள் சுட்டுகிறார்கள்.

ஈழத்தமிழருக்காக தமிழக மக்கள் எழுப்பும் குரல் ஓயுமானால், இலங்கைத் தமிழர் பிரச்சனையில் இந்தியா நழுவிவிடவும் தயங்கமாட்டாது.

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தார்மீகப் பொறுப்பை ஏற்கவேண்டிய கடப்பாடு பிரித்தானியாவுக்குண்டு. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையை நன்றாக அறிந்த பிரித்தானிய அரசாங்கம் தான்விட்ட தவறை உணர்ந்தாவது தமிழ் மக்களின் விமோசனத்திற்கு வழி வகுத்திருக்கலாம்.

மாறாக, தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தமிழ்ஈழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்த, ஒருபக்கச்சார்பான முடிவே, தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கையை நிராகரித்தமைக்குச் சான்றாகும்.

பிரித்தானிய ஐக்கிய இராச்சியத்துக்குள், வேல்ஸ், ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, வட அயர்லாந்து ஆகிய பிரதேசங்களுக்கு அதிகாரப் பரபவலாக்கல் மூலம் சமரசம் கண்ட பிரித்தானிய அரசாங்கம் இலங்கையில் தமிழ் மன்னர்களின் ஆட்சியின் கீழ் வாழ்ந்த தமிழ் மக்களை சிங்கள ஆட்சியின்கீழ் அடிபணிய வைத்த ஆட்சி மாற்றத்தை தமிழ்மக்கள் மறந்துவிடவில்லை.

30 வருடங்களுக்கு மேலாக வட அயர்லாந்து மக்கள் தொடுத்த ஆயுதப்புரட்சியை,சமாதானமாகத் தீர்த்துவைக்க முடிந்த பிரித்தானிய அரசினால், இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடப் போதிய நியாயம் உண்டு.

இலங்கையில் இன்று நிலவும் அரசியல் சூழ்நிலையில் சிங்கள் பேரினவாத அரசு வெளிநாட்டு மத்தியஸ்தையும் வெளிநாடுகளின் கருத்துக்களையும் கருத்தில் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை என்பது தெளிவாகவே தெரிகிறது.

பிறநாடுகளின் தலையீட்டையோ, அனுசரணைப்பணிகளையோ நிராகரிக்கும் மனப்பாங்கு மாறாத வரை வெளிநாடுகளின் பிரயத்தனங்கள் 'விழலுக்கு இறைத்த நீராகவே' பயனில்லாமல் போகும்.

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு, கௌரவமான நிரந்தரத் தீர்வைக் காணவேண்டுமென அக்கறை கொண்ட வெளிநாடுகள் இதயசுத்தியுடன் விரும்பினால், ஈழத்தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தமிழ்ஈழ விடுதலைப் புலிகளை அங்கீகரிக்க வேண்டியது அவசியமாகின்றது.


இவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள் சுவாசிக்கும் சுதந்திரக் காற்றை, ஏனைய தமிழ்மக்களும் அனுபவிக்க வழிசெய்யவேண்டும்.

தடைசெய்யப்பட்ட தமிழ்ஈழ விடுதலைப் புலிகளை மீதான தடையை சம்பந்தப்பட்ட நாடுகள் நீக்கி, இலங்கை அரசாங்கத்தின் அத்து மீறல்களை அடக்க வழிவிடப்படுமானால், உலகத்து மக்கள் மனிதநேயத்துக்கு மதிப்பளித்தவராகப் போற்றப்படுவர்.



வாசகர் கடிதம்

# "தெய்வ மறுப்பா பகுத்தறிவா"



அன்பு ஆசிரியர் அவர்கட்கு, நாரதர் என்னும் அன்பரால் எழுதப்பெற்ற தெய்வ மறுப்பா, பகுத்தறிவா பகுதியை வாசிக்க பெற்றேன் விமர்சனம் செய்வதற்கு சகலருக்கும் உரிமையுண்டு, ஆனால் அது ஒரு வரையறைக்கு உட்பட்டதாயின் சாலச்சிறந்தது. எனது கை மற்றும் ஒருவரை நோக்கி நீள உரிமை உண்டு. ஆனால் அது அவர் மூக்கை தொடக்கூடாது. மூக்கிலிருந்து குறிப்பிட்ட தூரம் விலகி இருப்பது நன்மை பயக்கும் ஆகும்.

கடவுளைப் பற்றிய விவாதம் கோழியா முட்டையா? முதல் தோன்றியது போன்ற விவாதத்திற்கு ஒப்பானது. காரணம் இன்றுவரை பகுத்தறிவு சிந்தனையாளர் பலரும் பல வடிவங்களில் இதனை ஆராய்ந்து, அவர்கள் கண்டது என்ன? நான் கடவுளை கேவலப்படுத்த விரும்பவுமில்லை, பழுத்த சிந்தனையாளர்களை கேலி பண்ணவும் இல்லை. ஆனால் நானும் ஓர் மனிதநேயம் கொண்ட பிறவி.

இந்து மதத்தில் அன்பே சிவம் என்று கூறப்படுகிறது. அதே இந்த சமயம் இறைவனை அதாவது இந்த பிரபஞ்சத்தை செயல்படுத்துவதை? அருவம் உருவம் அருவுருவம் என்று பகுத்து காட்டுகிறது. இதில் "அன்பே" என்பது அன்பு. அந்த அன்புதான் மனிதநேயம். எல்லோராலும் எல்லாவற்றையும் விளங்கி கொள்வது அவ்வளவு சுலபமல்ல. பறவை மிருகங்கள் எல்லாவற்றிற்கும் ஓர் விதமான ஓசை எழும் விதம் இருந்தால் என்ன? ஏன் இல்லாமல் போயிற்று? அவற்றை இனம் கண்டு கொள்ளவும் அதற் கேற்ப நடக்கவும் தான். அதுபோன்று மானிடராகிய நாம் உருவத்தால் (அமைப்பில்) வேறுபடுவது போல் மனதாலும் அறிவாலும் மாறுபட்டுள்ளோம். ஆகவே அவரவர் அறிவுக்கேற்ப அணுகினால்த்தான் எதை அடைய நினைக்கின்றோமோ அதை அடையமுடியும்.

அன்பிற்கும் உருவம் கிடையாது. ஆனால் அதன் பயன்பாடு எல்லையற்றது. எவ்வாறு நீர் சேரும் இடத்திற்கேற்ப மாறுபடுகிறதோ அப்படி தான் அன்பு. மாசு படிந்த நீரையும் நன்னீராக மாற்றமுடியும் தானே அப்படியே அன்பும். உதாரணமாக ஓர் குழந்தைக்கு நாம் கணக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதாக வைத்து கொள்வோம். ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று சொல்லும் பொழுது குழந்தை புரியாமல் விழிப்பதை அதன் விழிகளிலே காணமுடியும்.

ஆனால் அதையே எமது இரண்டு கைகளையும் தூக்கி ஒவ்வொருகைகளிலும் ஒருவிரலை காட்டி விளக்கினால் புரிய கூடும் அல்லது ஓர் கடதாசியில் 1+2 என்று ஓர் வடிவம் போட்டு காட்டினால் புரியக் கூடும் அது போன்றே அன்பிற்கு சிவம் என்று பெயரிட்டு அருவம், உருவம், அருவுரு கொடுத்தார்கள் புரிந்தவர்களுக்கு. அருவுருமாகவும், புரியாதவர்களுக்கு உருவமாகவும் காட்டினார்கள். அதில் நேசிக்கும் மனப்பக்குவத்தை கொண்டு வர உலக வரைமுறைக்கு ஏற்றவாறு சில நடைமுறை சடங்குகளை பயன்படுத்தினார்கள்.

எப்படி பாடசாலையில் நேர அட்டவணை தயாரித்து. பாடங்கள் நடத்தப்பட்டு, மாணவர்கள், ஆசிரியர்களுக்கும் ஒழுங்கு முறையை கடைபிடித்து காரியங்கள் நடைபெறுகின்றதோ, அதுபோல தான். ஐயா நாரதரே தங்களை நோகடிப்பதாக எண்ணவேண்டாம். தங்களை ஈன்றெடுத்த பெண்ணை தாய் என்கின்றீர்கள். அதற்கு காரணமானவரை தந்தை என்கின்றீர்கள் தாய் என்று காரணம் பெயர் கொண்டு எம் தந்தை என்று காரியப் பெயர் செயல்பட்டது. இது நியதி. அதாவது ஓர் உயிரை உற்பத்தி செய்யும் கர்த்தாக்கள். காதல் என்னும் அன்புவழிப்பட்டு காமம் என்னும் காரியம் செயல்பட்டமை நியதி.

எல்லோருக்கும் எல்லாம் புரிந்துவிடமாட்டாது. அதனால் தான் பாடசாலைகளில் தேர்வில் புள்ளிகள் போட்டு தரம் பிரிக்கின்றார்கள். அதேபோல் மனிதநேயம் வளரவேண்டின் மதம் ஓர் வடிகால். அறிவு, அன்பு என்னும் நீரை சும்மா இறைத்தால் எந்த பயனும் இல்லை. வாய்க்கால் என்னும் (மதம்) வடிகாலால் செல்ல விட்டால் இலக்கை அடையும். நீங்கள் பகுத்தறிவாளர், சிந்தனையாளர், உங்களால் மனித நேயத்தை சீராக வாழவைக்க முடியும். என் போன்ற பகுப்பாய்வு குறைய பெற்றவர்கள் என்ன செய்வது? வெள்ளை நிறம் என்கின்றீர்கள், காட்டமுடியுமா வெள்ளை நிறத்தை, அதன் தூய்மையை ஓர் கிண்ணத்தில் பாலையோ, வெள்ளை தாளையோ இப்படி ஏதாவது ஒன்றை காட்டி இது தான் வெள்ளை நிறம் என்கிறீர்கள் அப்படி தான் மனிதநேயமும் மதமும்.

மதம் என்பதன் மூலம் மக்களுக்கு மனித நேயத்தை புரியவைத்தார்கள். தண்ணீர் பந்தல், மகேசுவர பூசை, தான, தர்மம் இவைகள் மதத்தினால் காட்டப்படும் மனித நேயத்தின் மறுபடிவங்கள். உழுந்தில் தோசை சுடலாம். ஓட்டை வடை, தட்டை என பல உருவாக்கலாம். ஆங்கே மூலப்பொருள் உழுந்து என்னும் மனித நேயமான அன்பு மதம் தோசை, வடை என உருவகம் பெறுகின்றது. உருவகம் பெற்றவை பலரை அடைகின்றது. அதே போல் தான் கடவுளும் நம்பிக்கையும்.

அதைவிட்டு இப்படி பல கேள்விகளை கேட்பதும், கடைசில் யாரும் தவறாகக் கொள்ள வேண்டாம் என்பதும் பகுத்தறிவாளருக்கு உகந்ததாகவும் தெரியவில்லை இருப்பினும் ஐயா நாரதரே தங்கள் வாத, பிரதிவாதங்களுக்கு நன்றி. காரணம் என்னையும் எழுத தூண்டியது அல்லவா! நன்றி வணக்கம் அன்புடன்

*- பாலா*

# "ஓய்வூதியம் பெறுபவர்களிடம் இருந்து"

கடந்த காலங்கள் உங்கள் பசுமையான பொன்னான காலங்கள். இவைகள் அனைத்தும் உங்கள் மனதில் ஆடிக்கொண்டிருப்பது எமக்கு தெரிகிறது. ஓய்வூதியம் பெறுபவர்களில் ஒரு சிலர் கண்டம் விட்டு கண்டம் வந்துள்ளார்கள். இங்கும் அவர்களுக்கு பசுமையான காலங்கள் தான். உணவு, உடை, உறையுள் போன்ற அனைத்தும் ஓய்வூதியம் பெறுபவர்களாகிய உங்களுக்கு இங்கு இலவசம் என்பது மகத்தானது. அது மட்டுமின்றி உங்கள் போராட்ட உணர்வுகள் தற்போது மேலோங்கிக் காணப்படுவது மேலும் வரவேற்கப் பட வேண்டியதாகும்.

எங்கட பெடியள் கெட்டிக் காரன்கள், விடான்கள், அரசாங்கத்திற்கு அடி போட்டுத் தான் நாட்டைப் பெற்றாக வேண்டு என்று உணர்ச்சி வசப்படுவதும் எமக்குத் தெரிகிறது. இப்படி உங்கள் மனதில் போராட்ட உணர்வுகள் பொங்கி யெழுவதால் உங்களால் தமிழீழத்திற்கு எதையும் செய்யவில்லை என்ற கவலையும் உங்குளுக்கு உருவாகும். என்பதும் எமக்குத் தெரிகிறது.

ஆகவே ஒரு சில செய்ய முடிந்தவைகளை செய்வதற்கு முன்வாருங்கள். அதாவது இயற்கையின் அனர்த்தங்களாலும் இலங்கை அரசின் கொடுரச் செயல்களாலும் பாதிக்கப்பட்டு அங்கவீனர்களாகவும், விதவைகளாககவும், அனாதைகளாகவும் அனாதைச் சிறுவர், சிறுமிகளாகவும், ஏழைகளாகவும் எம் தாயகத்தில் வாழ்ந்து வரும் அவர்களுக்கு உங்கள் ஓய்வூதியத்தை மாதா மாதம் தலா இரண்டு குடும்பங்களையோ அல்லது மூன்று தனி நபர்களையோ நீங்கள் ஒவ்வொருத்தரும் பொறுப்பேற்று, உங்கள் ஓய்வூதியத்தை அவர்களுக்கு சென்றடைய வைத்தால் உங்கள் ஆத்மாவும் சாந்தியடையும், அவர்களது ஆத்மாக்களும் வாழும். ஊங்களுக்கு உதவும் கரங்களாக இங்கே உங்கள் பேரப்பிள்ளைகள், பிள்ளைகள், அரசாங்கம் ஆகியவர்கள் உள்ளார்கள். ஆதனால் தாயகத்தில் பெறும் ஓய்வூதியத்தை தயங்காமல் கொடுப்பீர்கள் என எதிர்ப் பார்கிறோம் நன்றியுடன்

*- புத்திரன்*

# விழா நடத்துவோர்

தேர்வரும், பின் பார்ப்பனர்கள்
வரிசையுறச் செங்கைகள்
கோத்த வண்ணம்,

நீர்வருங்கால் கத்துகின்ற
நெடுந்தவளைக் கூட்டமெனக்
கூச்ச லிட்டு

நேர்வருவார் அன்னவர்கள்
நிகழ்த்துவதன் பொருளென்ன?
இனிமை உண்டா!

ஊர் வருந்தும் படி இதை ஏன்,
விழாத்தலைவர் உடன்சேர்த்தார்?
ஒழிக்க வேண்டும்!

எல்லாரும் கயிறிழுக்க
இயங்குமொரு தேர்மீதில்
ஆரியத்தைச்
சொல்லிடுமோர் சொரிபிடித்த
பார்ப்பானைக் குந்தவைத்தல்
தூய்மை தானோ!

அவாள் இவாள் என்றுரைக்கும்
பார்ப்பனரின் அடிதொடர்தல்
மடமை யன்றோ?

உவகைபெறத் தமிழ்மணம்
உயிர்பெறுங்கால் உயிரற்ற
வடசொற் கூச்சல்

ஆனதென அறியீரோ?
பார்ப்பனன் போய் அடிவைத்த
வீட்டி லெல்லாம்

ஊனந்தான் அல்லாமல்
உயர்வென்ன கண்டுவிட்டார்
இந்நாள் மட்டும்?

மணமக்கள் தமைத் தமிழர்
வாழ்க என வாழ்த்து மொரு
வண் தமிழ்க்கே

இணையாகப் பார்ப்பான் சொல்
வடமொழியா, தமிழர் செவிக்
கின்பம் ஊட்டும்!

பணமிக்க தலைவர்களே,
பழியேற்க வேண்டாம் நீர்!
திருமணத்தில்

மணமக்கள், இல்லறத்தை
மாத்தமிழால் தொடங்கிடுக்
மல்கும் இன்பம்!

*- பாரதிதாசன்*

சகல விதமான மோட்டார் வாகன திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்

ON ALL MAKES OF VEHICLES

* Service
* Repairs
* Tyres
* Exhaust
* Private Cars
* Taxis.
* Commercials
* Accident & Bodywork

TR Autos
111-113 Elephant Road, London SE17 1LB
Elephant & Castle

தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

Breaks
Steerings
Welding
Clutches
Suspension
Electrical

MOT Contact: Tharma
Class 4 (car) £44.15 (£5 off) &
Class 7 (Commercial Vehicle) £47.20 (£5 off)

Tel: 020 7252 4438 / Fax: 020 7277 2524

# ஒரு பேப்பருக்கு வயசு போட்டுது (3)



மூண்டு வருசத்துக்கு முன்னால வேலைய முடிச்சிட்டு, பஸ்ஸில ஏறுவதுக்கு விழுந்தடிச்சு ஓடிப் போய் பஸ்ஸத் தவறு விட்டு, பிறகு மற்ற பஸ்சுக்காகக் காத்துக் கிடக்கேக்க, பத்தின இந்த ***ஒரு பேப்பர்*** ஐடியா. இண்டைக்கு பனை யப்போல வளர்ந்து பலாவாப் பரந்து கிடக்கிறத நினைக்கேக்க, புல்லரிக்காட்டியும் அதுக்குக் கிட்ட வந்து நிண்டு ஏதோ செய்யுது.

இப்ப நீங்கள் வாசிச்சது ஒரு வசனம். நீண்ட வசனம். அது மாதிரித்தான் எங்கடையும். ***ஒரு பேப்பர்*** ஆனால் நாலு வருசமா நீண்டு வந்து நிக்கிற நீளமான ***ஒரு பேப்பர்***! இதைக் கேட்டவுடன நாங்கள் எல்லாம் இதவிடக் கன காலம் நடத்தினாங்கள் எண்டு வந்து யாரும் வீரம் பேசப்படாது.

ஏனெண்டா உங்களோட எங்களை இங்க ஒப்பிட வரேல்ல. நீங்கள் பெரீ...ய ஆக்கள். விசயம் தெரிஞ்ச ஆக்கள். எங்கள விடுங்கோ நாங்கள் ஒரு ஓரமாய் இருந்து அடிச்சிட்டுப் போறம். அடிக்கிறது எண்டு சொன்னது பிறின்டிங்கை. சரி அதை விடுங்கோ.

இந்த மூண்டு வருசத்தில எத்தனையோ அனுபவங்கள். நல்லது கெட்டது எண்டு ரெண்டும்தான். நாங்கள் அடிவாங்கினது எங்களுக்கு ஆக்கள் அடிச்சது எண்டு ரெண்டு பக்கமாய் (?) நடந்தது. அதையெல்லாம் தாண்டி இந்த இதமோட மூண்டு வருசம் பறந் தோடிப் போச்சுது.

திருப்பி இந்த நாலு வருசத்தைத் திரும்பிப் பாக்கிறபோது எத்தனபேர் வந்தவையள். எத்தனை பேர் போனவையள். எத்தனை பேர் இண்டை வரைக்கும் நிண்டுபிடிக்கினம். இப்பிடி ஆயிரம் கதை சொல்லாட்டியும் குறைஞ்சது அம்பது கதையையாவது சொல்லி விடலாம்.

ஏனெண்டா தொடங்கேக்க 32 பக்கத்தில தொடங்கி பிறகு 42 பக்கத்துக்குப் போய் இப்ப 52 பக்கத்தில வந்து நிக்கிறம் எண்டா அதுக்குள்ளளே அடுக்குச் சொல்லுறதுக்குக் கன கதை இருக்கும்தானே. நீங்கள் பக்கத்தக் கூட்டினதுக்கு நாங்கள் என்ன செய்யிறது எண்டு கேட்பியள்.

முக்கியமா வாசிக்கலாம் அல்லது இன்ன பிற வேலை எண்டு சொல்லுவினம் அதை செய்யலாம். அதான் இந்த பொரிச்ச மீன் வைக்கிறதில இருந்து மாவரைக்கிற வரைக்கும் எண்டு சொல்லலாம். சரி மூண்டாவது வருசத்து நிறைவில உதுகளைக் கதைச்சுக் கொண்டு நிக்கிறதே...

ஆரம்பத்தில லண்டனுக்கு எண்டு மட்டும் தான் தொடங்கினம். பிறகு எங்கட விலாசத்தை எட்டிக் கனடாவுக்கும் காட்ட வேணும் எண்ட ஆசை வந்தவுடன அங்கயும் அடிக்கிறம் ***ஒரு பேப்பர்***! திட்டம் போட்டுக் கொண்டு வெளிக்கிடுறம்.

நலன் விரும்பி ஒருவர் சொன்னார் அங்க கனடாவில தடக்குப்படுற இடமெல்லாம் பேப்பர் எண்டு. சரி. எங்கட பேப்பரிலயும் தடக்குப்படட்டும் சனம், எண்டு. கனடாவில யும் தொடர்புகளை எடுத்துக் கொண்டு அங்கையும் தொடங்கினம்.

எங்களுக்கு அங்க இருக்கிற சிலர் ஏற்கனவே எழுதிக் கொண்டு இருந்தவையள். பாலச் சந்திரன் அண்ணை, பொன் விவேகானந்தன் அண்ணை, இளந்திரையன் அண்ணை இருந் திட்டு கருணா அண்ணை இப்படிச் சிலர்.

இப்பிடிக் கொஞ்சக் காலம் ஓடிக் கொண்டு இருந்திச்சு இந்தக் காலகட்டங்களில இங்க உள்ளுருக்குள்ள கிறேஸ் அக்கா, மட்டைக் களப்பான், அஞ்சலா அக்கா, பாலேந்திரா அண்ணை, ஜெயபாலன் ஐயா எண்ட சிலரும் ஐரோப்பாப் பக்கித்தில சாத்திரி, சபேசன், சாந்தி எண்ட சிலரும் எங்களுக்காக எழுதத் தொடங்கி இப்பவும் எழுதிக் கொண்டு வருகினம்.( ஐயோ ஆற்றயாவது பேரை விட்டுப் போட்டம் எண்டா மன்னிச்சுக் கொள்ளுங்கோ)

கொஞ்சக் காலம் ஒடுது. பிறகு ஐரோப் பாவுக்கும் பேப்பர் அடிப்பமோ எண்டு பாத்தம். அதாவது பிரான்ஸ் ஜேர்மனி சுவிஸ் போன்ற மூன்று நாடுகளும்தான் எங்கட மெயின் ராக்கட்! (என்ன காம்ப் அடிக்கிற கணக்கில கதைக்கிறம் எண்டு நினைக்கிறியளோ?)

அடிச்சம். அடிச்சுக் கொண்டும் இருக்கிறம். இது நாங்க எங்கெங்க ***ஒரு பேப்பர்*** அடிக்கிறம் எண்ட விபரம். யார் எங்களோட வேலை செய்யினம் எங்களுக்காக வேலை செய்யினம் எண்டெல்லாம் விபரம் இருக்கு. ஆனால் இப்பிடி ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு கதையா சொல்ல வெளிக்கிட்டா விடியும்.

சும்மா பாருங்கோ முகப்புப் பக்கத்துப் படத்தில இருந்து முடிவுப் பக்கம் வரைக்கும் ஒவ்வொருத்தரின்ர பங்களிப்பையும் சொல்ல வெளிக்கிட்டா இந்தப் பேப்பர் காணுமே?

உண்மையச் சொல்லப் போனால் மூண்டு வருசம் உருண்டு ஓடிப் போட்டுது. ஆனால் நாங்கள் உந்தப் பத்திரிகை விசயம் அதின்ர இலக்கணம் வரைவிலக்கணம் எண்டு ஒரு மண்ணும் தெரியாமத்தான் ஓடிக் கொண்டு இருக்கிறம். அதைவிட சத்தியமா அந்த விசயங் களில அக்கறையும் இல்லை எமக்கு!

அஞ்சு நாட்டுக்குப் ***ஒரு பேப்பர்*** அடிக்கிறம் 52 பக்கத்தில அடிக்கிறம் இதுக்காண்டி நாங்கள் பத்திரிகையாளர் எண்டு வெள்ளை வேட்டியோடயோ அல்லது கோட்டு சூட்டு போட்டுக் கொண்டோ திரியிற ஆக்கள் இல்ல. காற்சட்டையோ களிசானோடயோ திரிவம். சுருங்கச் சொன்னால் கிடைக்கிறதக் கொழுவிக் கொண்டு திரிவம். அதான் நாங்கள்.

அதுக்காண்டி எம் வழி தனி வழி எண்டு சொல்லேல. ஏதோ எங்களுக்குச் சரி எண்டு படுறதச் செய்யிறம். எழுதிறம். அவ்வளவு தான். அது சிலருக்குப் பிடிக்கும் சிலருக்குப் பிடிக்காது. இதுக்கு நாங்கள் என்ன செய்யிறது. சிலநேரத்தில எங்களுக்கே பிடிக்காட்டியும் போடுறம்! ஏனெண்டா இது வெளியில தெரிய வேண்டும். வாசகர்கள் அறிய வேண்டும் என்ற எங்கட நல்ல குணம்! நம்புங்கோ! ஏன், எங்களைப் பற்றியே குறைவாக எழுதி வந்தாலும் நாம் பிரசுரித்திருக்கிறோம்.

ஆக ஏதோ ஒரு வகைப் பயன் வாசிப்ப வர்களுக்கு கிடைக்கும் என்று நாம் எண்ணும் போது அது ***ஒரு பேப்பர்*** ரில வரும். எழுதுங்கோ அனுப்புங்கோ நாங்கள் போடுறம். அதுக்காக கண்டதையும் எழுதி அனுப்பி தயவு செய்து ஏமாறாதேயுங்கோ. நாங்கள் உங்களுக் காகத்தான் ***ஒரு பேப்பர்*** நடத்திறம் உங்கட் விசயங்களைத்தான் போட நினைக்கிறம்.

அறுக்கத் தொடங்கினோம்

ஆண்டு மூன்றாயிற்று

பொறுத்துக் கொண்டீர்கள்

போங்கள்

மகா பெரிய வாள் நீங்கள்.


**உன்னை அறியும் கல்வி உன் பாதைக்கு வழி காட்டும்!!**

**On Track Academy (UK)**

தலைசிறந்த பயிற்சி இப்பொழுது உங்கள் அருகில்

**Children's Care, Learning & Development**

NVQ Level 2 & 3 Training and Introductory Courses

***An Opportunity***

It is intended to recruit those who wish to gain knowledge and experience of children's care within a realistic work environment either through their existing jobs or by finding placement opportunities.

On Track Academy (UK) will deliver introductory courses for example 'NCFE National Award Level 1 Working with children' and NVQ Level 2 and 3 in Children's Care, Learning and Development (CCLD).

| | |
|---|---|
| **Target Group** | Ideal for a wide range of people who are seeking a general introduction and training for NVQ Level 2 & 3. Training for Mature Students (or Members of Minority Culture Groups) with English as second language. Also, to Secondary School pupils. |
| **Minimum Entry Age** | 14Years |
| **Entry Guidance** | No formal prior qualifications are required, although candidates should have the minimum level of literacy required for them to comply with safety aspects of the award. No previous experience of working with children is required. The centre must check with the local Social Services the legal requirements regarding working with children and provide evidence to the External Verifier that these have been implemented. |



மாலை, மற்றும் வாரக்கடைசி நாட்களில் இலண்டன் நகரில் பல்வேறு இடங்களில் நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து பயன டையலாம்.

Nearest Tube: Kentish Town /Sangam Association in Edgware

மேலதிக தொடர்புகளுக்கு

**திருமதி சந்திரபாலன்**

**020 8952 1191 / 07957 307 296**

www.ontrackacademy.co.uk

info@ontrackacademy.co.uk

வகுப்புகள் யாவும், தகுதி சான்றிதழ் வழங்கும் EDEXCEL மற்றும் NCFE நிறுவனங்களால் அங்கீக ரிக்கப்பட்டவை.

ONTRACK ACADEMY (UK) LTD - நிறுவனம் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. No: 5662819.

Founder / Director Mrs. T. Chandrapalan

# தமிழ்க் கல்விக் கூடக் கலை விழா





மிடில்செக்ஸ் தமிழ் கல்விக்கூடத்தின் 5வது ஆண்டு விழா ஜுன் 30 சனியன்று மாலையில் Harrow High Scool மண்டபத்தில் நடைபெற்றது. இப்பாடசாலையின் செயலாளர் திரு. ரெஜி அன்சலம் அவர்கள் மங்கல விளக்கேற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தார். பாடசாலையின் அதிபர் திருமதி அரவிந்தா ஜனநாயகம் அவர்களது வரவேற்புரையினைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இக்கலைநிகழ்சிகளில் பெரும்பாலும் ஆரம்பநிலை மாணவர்களே பங்கெடுத்து கொண்டிருந்த போதும் அவை சலிப்பின்றி ரசிக்கக் கூடியதாக அமைந்திருந்தன. பரீட்சைகளில் சிறப்புச் சித்திகளைப்பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

# கென்டன் தமிழ்ப் பாடசாலையின் விளையாட்டு விழா





கென்டன் தமிழ்ப்பாடசாலையின் 3வது வருடாந்த விளையாட்டு விழா கடந்த 23.06.2007 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நூ;ற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவியருடன் பெற்றோர்கள் நண்பர்கள் நலன்விரும்பிகள் பாடசாலையின் பழைய மாணவர்கள் எனப்பலரும் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

தந்தை செல்வா இல்லம் பாரதி இல்லம் கம்பன் இல்லம் என விளையாட்டு வீரர்கள் மூன்று இல்லங்களாக பிரிக்கப்பட்டு அவற்றிக்கிடையே ஓட்டப்போட்டிகள் கயிறு அடித்தல் கயிறு இழுத்தல் உருளைக் கிழங்கு பொறுக்குதல் சாக்கு ஓட்டம் எனப்பல விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன.

இந்த விழாவிற்கு பிரதமவிருந்தினராக மேற்கு லண்டன் தமிழ்ப்பாடசாலையின் அதிபர் எம் ரீ. செல்வராஜா அவர்களும் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி நேமிநாதன் அவர்களும் கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீர வீராங்கணைகளுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தனர்.

வெற்றி பெற்றோர் விபரம்:

6 வயதுக்குட்பட்டோர்: செல்வி சிறிகவி சுசிதரன், செல்வன் சிவசுதன் சிவஞானம்

6-8 வயது: செல்வி சிந்தியா அமிர்தலிங்கம் செல்வன் நிரோசன் இராயேந்திரம்

8-10 வயது: செல்வி தரணியா அமிர்தலிங்கம், செல்வன் யதுரசன் கணேசமூர்த்தி

10-12 வயது: செல்வி நிரோஜினி சண்முகராஜன், செல்வன் ரஜித் முருக மூர்த்தி

12-14 வயது: செல்வி கீர்த்தனி கணேசமூர்த்தி, செல்வன் விஜியன் ஜீவதயாளன்

14 வயதுக்கு மேற்பட?டார்: செல்வி அகல்யா இந்திரகுமார், செல்வன் லக்மன் சிவராஜா

பெற்றோர்கள்: திருமதி வதனி நற்குணநாதன்,திரு சண்முகவடிவேல் சிவகுமார்

எப்பவுமே ஊரில நாலு விசயம் நடந்து கொண்டு தான் இருக்குது ஆனால் அது எங்க நடக்குது எப்பிடி நடக்குது எண்டு நீங்கள் சொல்லாமல் எங்களுக்குத் தெரியாது.

அதானால உங்கட நிகழ்வுகள் ஒருபேப்பரில வாறேல்ல எண்டு தயவு செய்து குறை கூற சொல்லாமல் நீங்கள் நடத்திற பொது நிகழ்வுகளை எங்களுக்கு அறியத்தாருங்கோ! முடிஞ்சால் நாங்க வருவம் இல்லை ஆக்களை அனுப்பி வைப்பம். அப்படியும் இயலாட்டி என்ன நடந்தது எண்டு நீங்கள் எங்களுக்கு படங்களோட எழுதி அனுப்புங்கோ போடுறம்!!!

# ஈலிங் அம்மன் ஆலய புதிய நிர்வாகிகள்

மேற்கு லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் நிர்வாகசபைத் தேர்தல் கடந்த சனி (ஜுன் 30) நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என ஆலய நிர்வாக சபை அறியத்தந்துள்ளது.

தலைவர்: திரு. தாமோதரம்பிள்ளை யோகநாதன்

உபதலைவர்: திருமதி. சாரதாதேவி கணேசராசா

பொதுச்செயலாளர்: திரு. குமாரசாமி பாஸ்கரன்

இணைச்செயலாளர்: திருமதி சாரதாதேவி சங்கரலிங்கம்

பொருளாளர்: திரு. செல்லப்பா இராமச்சந்திரன்

உதவிப்பொருளாளர்: திரு. ஆறுமுகம் சின்னய்யா காங்கேயச்சந்திரன்

நிர்வாகசபை உறுப்பினர்: திருமதி. சுகந்தமாலா இராதாக்கிருஸ்ணன்

# பிறன்ற் தமிழ் பாடசாலை கலைவிழா 2007

பிறன்ற்பாடசாலை 01.07.07 ஞாயிற்றுக்கிழமை மேற்கு இலண்டனில் உள்ள Winston Churchill Hall நடாத்திய கலைவிழாவுக்குச் சென்றிருந்தேன்.


இவ்விழாவில் பாடசாலையின் நாடக ஆசிரியர் அம்பிகை சீவரத்தினம் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஞானப்பழம் என்னும் நாட்டிய நாடகம் சபையோரின் அமோக வரவேற்பைப் பெற்றது.

அதைத் தொடர்ந்து பாடசாலை தமிழ் ஆசிரியர் திருமதி குமுதினி செல்வரட்ணம் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஒற்றுமை என்னும் சிறுவர் நாடகம் காலத்துக்குத் தேவையான கருத்துள்ள நாடகமாக இருந்தது.

இருபது வருடங்களுக்கு மேலாக பிறன்ற் தமிழ் பாடசாலையில் சங்கீத வாய்ப்பாட்டு ஆசிரியராகக் கடமையாற்றிய அமரர் நாகேஸ்வரி பிரேமானந்தா அவர்களின் ஞாபகார்த்தமாக அவரின் மாணவிகளான சயிந்தவி சிவபாலன் சிவந்தி சிவராசா அளித்த சங்கீத சமர்ப்பணம் விழாவிற்குப் பொருத்தமாக இருந்தது.

அமரர் நாகேஸ்வரி பிரேமானந்தா அவர்களின் மகள் வரதா பிரேமானந்தா பிரதம விருந்தினராக வந்து பரிசளிப்பு விழாவில் பங்கு பற்றி விழா முடியும் வரை இருந்து விழாவைச் சிறப்பித்தார்.

# அதிசயமில்லை மன்னவனே!



உயிரோடு இருந்தபோது
உணர்வுகளின் மீதும்
உடலின் மீதும்
கட்டி எழுப்பி நிறுவியதை
மறந்து மறைத்து விட்டதால்தான்
செத்த உடலின் மேல்
எழுப்பப்பட்ட தாஜ்மகால்

அதிசயமென
சொல்லிப் போகின்றாய்

இன்னமும் தொடர்கின்றன
ஒவ்வொரு பெண்ணின்
உயிர்ப்புள்ள உடலின் மீதும்
கட்டி விட முயலுகின்ற
காணமுடியாது
உணரமுடிந்த
தாஜ்மகால்கள்

இடிக்கத் துவங்குகின்றேன்
நீ என் மேல் கட்டத் துவங்கும்
தாஜ்மகாலின்
ஒவ்வொரு செங்கல்லையும்
என் வெப்ப சுவாசக் காற்றை
தாண்டிப் போகவைத்து.

*ம. திலகபாமா*

கல்வியே கண்
Reg Charity No: 10099723
**Canons High School**
**Shaldon Road (Off Camrose Ave), Harrow HA8 6AN**

**School Time: 9am to 1.30pm (Saturdays)**

**Tamil School Hendon**

**பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா**
21.07.2007 மாலை 4 மணி தொடக்கம் 10 மணி வரை
பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

அடுத்த வருட அனுமதிக்கான விண்ணப்படிவங்களை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

*Correspondence Address:*
25 Poolsford Road, Colindale, London NW9 6HP
Tel: **020 8200 8962 / 020 8205 0621** | Mob: **07799 142 759 / 07740 468 051**
Fax: 020 8200 8918

# Sri Lankan government blocks Tamil website



By S. Jayanth

In another act of media censorship, the Sri Lankan government has blocked Internet access to tamilnet.com since June 15. The website makes no secret of its sympathy for the separatist Liberation Tigers of Tamil Eelam (LTTE), but covers a range of topics, including reports on the escalating war and the Sri Lankan military abuse of democratic rights, including hundreds of "disappearances" and murders.

The government media and websites are a marked contrast. All news of the war is heavily vetted by the Media Centre for National Security, which deliberately plays down military losses, denies any abuse of democratic rights by the security forces and promotes the "war on terrorism". Since restarting the civil war after coming to power in November 2005, President Mahinda Rajapakse has repeatedly insisted that the rest of the media toe the government's propaganda line in the name of "national security".

As it has come under increasing criticism, internationally and at home, over its human rights record, the Rajapakse government has resorted to increasingly heavy-handed methods of censorship to silence any alternative news sources. When asked at a press briefing whether the government was blocking the Tamilnet website, defence spokesman Keheliya Rambukwella said it was "news" to him. In the same breath, however, he hinted at the government's intentions, adding: "I would love to hire some hackers."

Media Minister Anura Priyadharshana Yapa also denied any government move to block Tamilnet. Speaking at a weekly press briefing on June 20, he declared: "It is unreasonable to level charges against the government. We have nothing to do with this."

Internet service providers in Sri Lanka have, however, exposed these statements as lies. The help desk at Sri Lanka Telecom (SLT), the country's largest Internet service provider, confirmed that the government had asked it to prevent access to Tamilnet. SLT employees explained: "Except Tamilnet you can access any other website." A spokesman for Dialog Telekom, a privately owned service, told Reuters: "We have blocked it as per a government directive". Fearing reprisals, he requested his name be withheld.

TamilNet

As it has escalated its war against the LTTE, the military and associated Tamil paramilitaries have increasingly targeted the Tamil media. In April 2005, Tamilnet editor and Daily Mirror columnist, Dharmaratnam Sivaram was abducted in central Colombo and murdered. His body was found inside the High Security Zone (HSZ) of the parliamentary complex, strongly suggesting the involvement of the security forces. Over the past 18 months, nine media workers, including five journalists, mostly Tamils, have been killed. Others have been detained without trial under the country's draconian anti-terror laws.

Intimidation and violence against the media is continuing. On June 28, K. P. Mohan, a journalist with the Tamil language Thinakaral was severely assaulted by air force personnel at a checkpoint in the central Colombo after attending a media conference. He was injured and hospitalised at the Colombo National Hospital. Mohan told the media that he was sworn at for being a Tamil.

Representatives of 11 international media rights groups, including the International Federation of Journalists (IFJ), International Press Institute (IPI), Reporters without Borders (RSF) and Sri Lanka's Free Media Movement (FMM), recently conducted a probe into the Sri Lankan government's abuse of media rights.

At a press conference on June 22, IFJ director Jacqueline Park expressed the group's concern over the "continued targetted killing of media workers". She added: "What's most worrying is the impunity, the fact that none of these cases are being investigated and being brought to court... Our message is very clear. The responsibility for creating a secure working environment lies with the government and it needs to do this by not tolerating any attacks or killings of journalists and media workers."

RSP representative Vincent Brossel said: "What we found is in the government-controlled areas there is a general feeling of fear and it has a huge impact on the way the people living in the Jaffna region can get access to information". While also critical of the LTTE, he blamed the government for not having the "political will to investigate such crimes" against media workers.

The Rajapakse government and the military will not investigate the killing of journalists and media employees, or hundreds of "disappearances" and murders, because they are intimately involved in this brutal repression. Defence spokesman Rambukwella's comment that he would be willing to hire "hackers," presumably not just to block but to sabotage the Tamilnet website, is just one more indication of the Colombo government's lawlessness.

In the guise of waging a "war on terror," President Mahinda Rajapakse has restarted the country's vicious communal war and is seeking to stamp out any, even limited, criticisms of its actions by any and all available means.

Courtesy: wsws.org

# Military solution would hold economy hostage

By Arthur Wamanan

*It is always a misery where the Sri Lankan economy stands with the ever increasing defence expenditure, war and unstable political climate. We reproduce the Morning Leader interview with a Sri Lankan economist Dr. Harsha de Silva, for the benefit of our readers.*

**Q. How do you assess the present economic situation in the country?**

A. As I have been saying in the recent past, the government is now facing difficulties. The situation looks bad in terms of the government's money situation. It is running short of money. It is unable to pay the salaries of certain sectors due to the shortage of money. Adding to that, the government has received criticism from the international community with regard to human rights violations in the country. This has also affected the country's economy.

**Q. How has the human rights violations and the condemnation of the international community affected the country's economy?**

A. Well, take a look at the tourism industry of our country. It has been severely affected due to the human rights violations prevailing in the country.

**Q. The prices of many essential items such as fuel, gas and milk powder are on the rise almost everyday. The government is however putting it on the world market. What do you think of this situation?**

A. Well, the people have to understand the situation. You might expect a different answer on this. I wish to state that the government is doing the right thing on this issue. For example, the price of a barrel of fuel is not the same as it was two weeks ago. It keeps on increasing. Therefore, the government is forced to increase the prices of these items with the increase in the world market. The problem would get aggravated if the government does not do so. It's no point blaming the government for everything. I say that the government is doing the right thing here.

**Q. It is also being said that the government is printing money. How do you think this would impact on our economy?**

A. The government has dramatically slowed down printing money since January this year. This was due to pressure exerted by economists due to the rise in inflation. The inflation was around 20% in January. The government had paid subsidies especially for fuel. Now inflation is 13%. This is mainly due to the fact that the government has reduced printing money.

**Q. What do you thing the Central Bank should do? Where do you think the Central Bank is going wrong?**

A. The Central Bank is pressurised to do the right thing. It has done the right thing by stopping the money printing. In fact it should have been done a year ago. The slow down in printing money is also a reason for this. It does not have enough money to pay the salaries to certain sectors. Earlier, the Central Bank had money to give the treasury to pay the salaries and other payments. But now, the Central Bank will not be in a position to give money to the treasury as before.

**Q. How does the military strategy adopted by the government affect the economy of the country?**

A. I do not want to comment on the strategies adopted by the government on this issue. All I can say is the government should prioritise its work. If its priority is fighting and if it believes that the problem could be solved militarily, then it would be holding the economy hostage. It would be difficult to carry out the plans stated in the Mahinda Chinthana if that is the case. The government has also shut down PERC when it needs to go for reforms. It is ironical.

**Q. The government has stated that the growth rate is seven percent and would be eight percent next year. Is this a realistic reflection of our economy?**

A. Actually, the growth rate slowed down to 6.1 during the first quarter of this year as opposed to eight during the same period last year. It is not seven. However, the Central Bank does not show the growth rate now. It stopped it only recently, probably as it does not want to reveal certain things to the public.




Sri ShivaShankar Astrological Centre

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட விஜயகுமார் சாஸ்திரி அவர்கள் கைரேகை, சாமுத்திரிகா இலக்ஷணம், ஜாதகம், பிறப்பியல், நாமநஷ்த்திரம், வருங்காலம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகியவற்றை மிகத் துல்லியமாகக் கணித்து வழங்குவார்.

Pandit Vijaykumar Shastry

You will come to know about your past, present & future by hand prediction,horoscope intending persons may contact for job, family matters, husband &wife relationship,love, Education,business, martiege,sickness,promotions,children problems, going abroad, money & any personal problem & removing all black magic and bad evil things Doing lakshmi Poojas,prayers and protections from enemies. (Spoken languages Hindi, English & Tamil)

Contact Mob: 07947779918

Himaliya shoping centre, 1st floor unit 14, 65-67 the Broadway, Southhall UB1 1LD

Opening Hours;10.30am-7.30pm 7 Days a week. E-Mail: vijayvarma9909@yahoo.com

# The Freedom struggle of the Tamil people as viewed

Charles Somasundrum
FOR ORUPAPER

Many young Tamils today, are barely aware of a brilliant Tamil who lived during the last few years of the Donoughmore Constitution, through the Soulbury Constitution and into final independence. This was Professor C Suntheralingam. Having obtained his MA at Oxford and a BSc from London and qualified as a Barrister-at-Law, Suntheralingam sat and passed the colonial Indian civil service examination. He however decided to transfer to the colonial Eastern civil service, which was a service that covered Ceylon, Hong Kong and Malaysia. This was because he preferred to serve in Ceylon (Sri Lanka). This was when Ceylon was still a crown colony and long before independence.

Prof. Suntheralingam was always a rebel at heart as will be seen from his varied career. He soon tired of the routine of civil service life, like another famous English civil servant in colonial Ceylon, Leonard Woolf, and like Woolf, he resigned from the civil service. Having resigned, he joined the emerging University of Ceylon as its first Professor of Mathematics. He soon resigned from this position to enter politics and became a member of the first parliament that was elected under the Soulbury constitution. This was before Ceylon became independent and while Ceylon was still a crown colony. It was while he was a member of this first parliament that the Prime Minister D S Senanayake persuaded him to become a minister in his first cabinet. He was a member of this cabinet when it 'negotiated' independence.

Suntheralingam was always proud of his Tamil ancestry and heritage. He will always be remembered by Tamils as the first high profile Tamil to use the name Eelam (he spelt it Eylom) to describe the Tamil nation. In his letter to his fellow Tamils on the 18th November 1955 he said *'No proud, cultured people ever obtained freedom or retained their self respect, except through suffering and sacrifice and the Tamils have before them and their progeny for the immediate future, only toil and tears. I have no doubt with Providential help, in a truly righteous cause, the Tamils must attain their goal of a free, self respecting, prosperous, Tamil Ilankai'*. It should be noted that Suntheralingam had no illusions about the path to freedom, of the Tamil nation.

## 'Sinhala Only Official Language Bill' in Parliament in June 1956

He himself took part in the first Sathyagraha that was organised by the Federal Party on Galle Face Green, during the introduction of the 'Sinhala Only Official Language Bill' in Parliament in June 1956 – behind closed doors. This was a Sathyagraha which all Tamil members of Parliament, at that time, joined in. In so doing, they knew they were at considerable risk to their lives. Thugs imported into Galle Face Green in coaches, attacked the MPs and their supporters, sitting peacefully on the Green, by stoning them and physically assaulting them, while the police just stood by. Suntheralingam received a blow to his neck that necessitated hospital treatment as with others. As he entered Parliament, after this incident along with fellow wounded MPs, the Prime Minister S W R D Bandaranayake retorted, *'Honourable wounds of war'*.

Mr Suntheralingam had, in his retirement, published a collection of a dozen documents that comprise his letters to various persons like Prime Minister S W R D Bandaranayake, Minister C P de Silva, S J V Chelvanayakam Leader of the Federal Party, along with various letters he had addressed over a period, to the Tamil nation.

He has also sent this collection of documents, for his comments, to Lord Soulbury who after independence, had returned briefly to head the government of Ceylon as its Governor General. In a postscript, Mr Sutheralingam has included in the publication, the response of Lord Soulbury. Lord Soulbury says, in his letter to Mr Suntheralingam dated 30th April 1964, *'....you are quite right when you say that the cause must be laid at the door of Sir John Kotelawala and his government. But if he chastised the Tamils with Whips, the late Mr Bandaranayake (i.e. Mr S W R D Bandaranayake) chastised them with scorpions* (my emphasis). *The Singhalese behaviour to the Tamils has been excessively short sighted and foolish. When, as Chairman of the Commission on the reform of the constitution of Ceylon in 1945, I studied the relations of the two communities, I was very much impressed by the important contribution that the Tamils had made and were making to the economy of Ceylon and I was aware that the Ceylon Tamils were better educated than the Sinhalese.....'*

The above opinion of Lord Soulbury of two Prime Ministers who followed the first Prime Minister D S Senanayake, is of importance to Tamils, particularly his opinion of S W R D Bandaranayake. S W R D Bandaranayake who was assassinated by a Buddhist monk, was followed as Prime Minister by his wife and later, by his daughter, first as Prime Minister and later as Executive President. Of greater significance, is the virtual admission of Lord Soulbury that he had erred in the safeguards that he had provided in his constitution. He says, *'In the constitution which I recommended, there seemed to me at the time, to be ample safeguards for minorities – but section 29 has not been as efficacious as I had hoped and I now wish that I had recommended a 'human rights' clause as in the constitution of India* (my emphasis). Most readers are aware that the Indian Constitution was drafted by an Indian, Dr Ambedkar, a Dalit, and has stood the test of time. Lord Soulbury's constitution, on the other hand, has lent itself to drastic changes despite the 'provisions' made for the protection of what Lord Soulbury called the 'minorities'. What we now have, is a ramshackle, makeshift constitution that various Sinhala governments have since, added to or altered whenever they had a sufficient parliamentary majority to do so. The story goes, that under the Presidency of J R Jayawardene, the constitution was changed so often that when a person entered a bookshop to buy a copy of the Sri Lankan Constitution, the salesperson told him 'Sorry, we don't do periodicals'.

*(To be continued.)*

Editorial, Eelam Nation

# Tamils Chased Out To Be Kept Out

Hot on the heels of the forced evacuation of the Tamil people from Colombo to their homes in the north and the east of Sri Lanka comes the nightmarish dilemma of the Tamil speaking people both Muslims and Hindus being forced out of their homes in the Sampur and the Mutur areas in the eastern province in the Trincomalee district by a special gazette order making these areas of their traditional homes a high security zone.

Around 50,000 Tamil speaking Hindus and Muslims had to flee these areas in July 2006 when these areas were bombed on the pretext of freeing the people from the hold of the LTTE, triggered by the Manal Aru incident where the LTTE was accused of denying water to the Sinhala cultivators.

By this special gazette order it would now be a criminal offence for those displaced people to go back to their traditional homes where they and their past generations had lived for thousands of years. Their lands never belonged to the state.

As if telling a bunch of peahens dropped on their heads at the early stages of their development, in his characteristic puerile defence of such drastic government action, spokesperson Keheliya Rambukwella says with callous disregard, that it is being done "both for their own security and the security of the vital establishments to come up there." Just like that. He has further stated to the Hindustan Times: "Economic development schemes sometimes require the resettlement of populations. Earlier, the Mahaweli irrigation scheme in south Sri Lanka had displaced thousands, but no one objected to that!" Yes indeed. No one objected to that because they were going to be benefited by the irrigation scheme and were offered attractive incentives or they were squatting on lands belonging to the State.

With the Tamil people forcibly chased out, now living as refugees, it presents an excellent opportunity to keep them out and pursue the agenda of distorting the ethnic demography of the Trincomalee district with all kinds of excuses such as that the high security zone is to be a Special Economic Zone with large local and foreign investments, one of the projects the government being a 300 MW coal fired power plant in Sampur, to be set up with Indian help etc.

Even with the recommendations of the Colebrook -Cameron Commission in 1832 to the British colonial regime for the political and administrative unification of the country, the colonial government ensured that the administrative divisions of the traditional homelands of the Tamils within the northern province, the eastern province and in parts of the Puttalam district were by and large contiguous with those that it determined as being the administrative divisions in these areas, administered through the traditional Maniagars. This also applied to the Kandyan Sinhala areas and the low country Sinhala areas with the Ratemahatmayas and the Mudaliyars later to become Divisional Revenue Officers.

**The following table shows the progressive artificial increase in percentage of Sinhala people in the Trincomalee district between 1921 and 1971:**

| | Sinhalese | Tamils | Muslim | Others |
|---|---|---|---|---|
| 1946 | 20.6 | 44.5 | 32.0 | 1.0 |
| 1971: | 28.8 | 38.2 | 32.0 | 1.0 |

*from: Collective Identities ed. Micheal Roberts.*

The Sampur episode is not a one off thing but the continuation of a diabolical trend. The Sinhala population in traditional Tamil areas was increased not by a process of natural progression but by artificial machination. Percentage wise, in 1921 the population of the Trincomalee district comprised 3.0% Sinhalese, 55.2% Tamils, 38.1% Muslims and the others constituted 3.5%.

The usurpation of the traditional homes of the Tamil people of Sampur and Mutur is another instance of the tyranny and the injustice exercised by the Rajapakse government over the Tamil people. Rajapakse gets two birds with one stone: chasing a substantial number of Tamils out of Trincomalee and committing a crime against them.



INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய LIFE IN THE UK பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை. தமிழில் உதவிக் குறிப்புக்கள். ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும் அத்தியாய முடிவினிலும் பயிற்சிப் பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும் ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: 07940 406 007

# KINGSTONS SOLICITORS

**251A HAYDONS ROAD, WIMBLEDON, LONDON SW19 8TY Tel: 020 8540 0468 Fax: 020 8540 7504**

***நீங்கள் இங்கிலாந்தில் வசிக்கும் உரிமை நிராகரிக்கப்பட்டுவிட்டதா?***

***திருப்பி அனுப்பபடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா?***


***இங்கிலாந்தில் தொடர்ந்தும் சட்டப்படி வசிக்க நீங்கள் விரும்புகிறீர்களா?***

**அப்படியாயின் தற்போதைய சூழ்நிலையில் சில வழி உண்டு.**

**உடன் தொடர்பு கொள்ளுங்கள்:**

- உங்கள் உறவினர் வெளிநாட்டிலோ அல்லது
- இலங்கையில் இருந்து இங்கிலாந்துக்கு கல்வி கற்பதற்க்கு வரவேண்டுமா?
- உங்களுக்கு இங்கிலாந்தில் Work Permit பெறவேண்டுமா? அல்லது
- உங்கள் குடும்பத்தினரை விடுமுறையில் அழைக்க வேண்டுமா? மற்றும்
- உங்களைத் தடுப்புக்காவலில் வைத்து இலங்கைக்கு அனுப்புவதற்க்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றதா? அல்லது
- அனுப்பப்படுவீர்களென அச்சப்படுகிறீர்களா?

**சகலவற்றுக்கும் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் 24 மணிநேர சேவை வழங்கப்படும்.**



உங்களது அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு நீண்ட காலம் வேலை செய்திருப்பீர்காயின் வீசா எடுப்பதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும். புதிதாக UK வந்தவர்களை பதிவு செய்வதற்கான சகல சேவைகளும் வழங்கப்படும் Entry Clearance / Sponsorship / Refusal வெற்றிகரமான செய்வதற்கு எம்மை தொடர்பு கொள்ளவும் EEC Applications, Fresh Asylum / Human Rights.

## Criminal Matters

**பொலிஷ் நிலைய பிரதிநிதித்துவம் உட்பட சகல குற்றவியல் வழக்குகளுக்கும் சட்ட உதவி எங்களால் வழங்கப்படும்**
Road traffic Offences, Police Station advice and Assistance Given (Magistrate Court+ County Court) Appearance, Police Bail, Court Bail **வெற்றிகரமாக செய்து தருவோம்.**

Contact:

**Chrishanthi Vincent** LLB (Hons) London.
**0777 577 7188**

**Fahmy Mohamed** LLB (Hons), LLM.
**0782 566 1737**

**எங்கள் நேர்மையான நம்பிக்கையான சேவையை விரும்பிய வாடிக்கையாளர்கள் ஏற்கனவே பலர் இருக்கின்றனர்.**

இரவி அருணாசலம் **எழுதிக் கொள்வது என்னவெனில்...**

## எட்டி நட...

ரஜினிகாந்தின் சிவாஜி சக்கைபோடு போடுகிற களத்தில், காலத்தில் நம் ஈழத்தமிழ்ச்சனத்தை நினைத்தால் கோபம் வருகிறது. வேதனை, செப்பியரம் எல்லாம் வருகிறது. இங்கிலாந்தில் சிவாஜி திரைப்படத்தை அறுபதினாயிரம் பேர் வரையில் பார்த்து விட்டார்கள் என ஒரு கணக்கெடுப்பு சொல்கிறது.

நிச்சயமாக இதில் ஜம்பதினாயிரம் பேர் ஈழத்தமிழர். ஒரு நுழைவுச்சீட்டை ஜந்து பவுண்ட் என்று கணக்குப் போட்டால் வருவது 250000 பவுண்ட். இதனை இலங்கை ரூபாவுக்குப் பார்தால் ஜந்தரைக்கோடி ரூபாவுக்கு மேல் ஆகும்.

இவற்றைக் குறைந்த கணக்கில் தான் சொல்கிறேன். இன்னும் சிவாஜியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். இந்த இடத்தில் இன்னும் ஒன்றையும் கவனத்தில் கொள்கிறேன்.

இலண்டனில் மாவீரர் நாள் என்று அறியப்பட்ட நினைவெழுச்சி நாளுக்கு வணக்கம் செலுத்த வருவோர் தொகை சுமார் இருபதினாயிரம் பேர்தான். நெஞ்சு சுடுது. வயிறு எரிகிறது. நம் ஈழத்தமிழர் ஈனப்பிறவிகளா? இவ்வளவு சீரழிவுக்கலாச்சாரம் கொண்டவர்களா? சின்னத்தனம் எண்ணம் உடையவர்களா?

சிவாஜி படம் என்ன சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்தி விட்டதா? ரஜினிகாந்த் என்ன ஈழத்தமிழரை மீட்க வந்த இரட்சகரா? ஈழத்தமிழர் சிங்கள அரசால் கொல்லப்பட்டபோது அய்யோ அய்யோ என்று அழுது குழறியவரா? ஈழத்தமிழர் நல் வாழ்வுக்காக கூடை கூடையாகப் பணத்தைக் கொட்டினாரா?

சிவாஜி திரைப்படத்துக்காக ரஜினிகாந்த் பெற்ற ஊதியம் நாற்பது போடி ரூபா என்று சொல்லப் படுகிறது. அப்படியெனின் அது இலங்கைப் பணத்தில் எண்பது கோடி ரூபா. அதில் ஒரு ரூபாவையாது ரஜினிகாந்த் ஈழத்தமிழருக்கு கொடுப்பாரா?

தமிழ் நாட்டுத் தமிழருக்கே கொடுக்க மாட்டார் அவ்வளவும் கன்னடத்துக்குப் போய்விடும். ஒன்றையும் நாம் கிஞ்சித்தும் யோசிப்பதில்லை. மரமண்டைகளாக இருக்கிறோம்.

### இலண்டனில் நினைவெழுச்சி நாளுக்கு வணக்கம் செலுத்த வருவோர் தொகை சுமார் இருபதினாயிரம் பேர்தான்.

இலண்டன் தமிழர் ஒருவர் (அவர் ஈழத்தமிழராக இருப்பதற்கான சந்தர்ப்பம் மிக அதிகம்). சிவாஜி திரைப்பட வசனகர்த்தா சுஜாத்தாவுக்கு எழுதுகிறார் தனது குழந்தை எந்தத் திரைப்படத்தைப் பார்த்தாலும் அழுது ஆரிப்பாட்டம் செய்யுமாம்.

ஆனால் சிவாஜி திரைப்படத்தைப் பார்த்த பொழுது அழுகை ஒன்றுமில்லாமல் ரஜினிகாந்தையே பார்த்துக் கொண்டிருந்ததாம் இதை அந்த நபர் பெருமிதமாக எழுதியிருக்கிறார் இந்த நாய்ச்சாதியை சவுக்கால் விளாச வேண்டாமா?

நாங்களெல்லோரும் ஈழத்தமிழரின் பிரேதங்களை ஏறி மிதித்துத் தான் இங்கு வந்தோம். போரைக் காட்டித்தான் புகலிடம் கேட்டோம். பத்தை கீறின காயத்தை செல்சிராய்த்த காயமாக கதை பண்ணினோம். குடல் புண்ணுக்கு செய்த அறுவைச் சிகிச்சையை செல் பிளந்த காயமாக மாற்றிக் காட்டினோம், யாருடையதோ சிதைந்த விட்டை நம் விட்டாக்கி புகைப்படம் காட்டினோம்.

நம் தேசத்தின் புவியமைப்புத் தெரியாமல் கீரிமலையிலை இருந்து திருகோணமலைக்குச் சைக்கிளிலை போகைக்கை என்று கதை விட்டோம். எப்படியோ போரைக்காட்டி புகலிடம் கேட்டோம்.

கடும் உழைப்பு. இல்லையென்றல்ல. ஆனால் பயம் இல்லா வாழ்வு. எடுக்கக் கூடிய எங்கள் உறவினர்களை எல்லாம் எடுத்து விட்டோம். ஆனால் எங்கள் ஈழத்தமிழ் உறவுகளை கைவிட்டோம். அவர்கள் பற்றி எந்த அக்கறையும் எங்களுக்கு இல்லை உணர்வு இல்லை,

உண்ண உணவில்லை உறக்கத்திற்கு இடம் இல்லை அட, அதைத்தான் விடுங்களேன், அவலமாய் உயிர் போகிறதே. எம் சனம் உயிர்பயத்துடன் ஓடி ஓடித்திரிகிறதே, அகதியாகி தமிழகத்துக்கு கடல் காவு கொள்ளக் கொள்ள ஓடுகிறதே அவைபற்றியெல்லாம் ஒடு துளி நினைத்தோமா?

### அந்த நபர் பெருமிதமாக எழுதியிருக்கிறார் இந்த நாய்ச்சாதியை சவுக்கால் விளாச வேண்டாமா?

எங்கள் தேசத்தை மீட்க, அடையாளத்தை மீட்க, உணர்வை, மீட்க, மொழியை மீட்க, எங்களை மீட்க, ஈழத்தமிழர் என்று பெருமிதமாய் நாம் வாழ, எங்கள் போராளிக்குழு போராடுகிறதே,

பதினெண்ணாயிரக் கணக்கில் வித்தாகி அவர்கள் வீழ்ந்தார்களே,- அவர்களுக்கு வருசத்தில் ஒரு நாள் வணக்கம் செலுத்த நாம் செல்ல மாட்டோம்.

ஒரு இந்தியக்கன்னடக் காரனுக்கு பூப்போட்டுக் கும்பிட நாம் போகிறோம். ஈனச்சாதி நாம். இல்லையா?


### இங்கிலாந்தில் சிவாஜி திரைப்படத்தை அறுபதினாயிரம் பேர் வரையில் பார்த்து விட்டார்கள் எனக் கணக்கெடுப்பு சொல்கிறது.

இங்கு ஒருவன் இருந்தான். எங்கள் போராளி அமைப்பின் பிரித்தானியப் பிரதியாய் தன் ஆற்றலையும் உழைப்பையும் அள்ளிக் கொட்டி அவன் செயல் புரிந்தான், உன்னதமான சேவை அவனது. அவன் இப்போ உள்ளே போய் விட்டான்.

இனி வேலை புரிவதில் மிக இடர் என இருக்கிறோம் அதனால் ஏற்பட்ட துக்கம் மிக அதிகம். என்றாலும் வீழ முடியாதல்லவா. வெல்லத்தானே வேண்டும். இப்படியெல்லாம் சிக்கல்கள் ஒரு புறம் இருக்கிறது அது பற்றிக் கிஞ்சித்தும் யோசிப்பார் இல்லை. எங்கள் தளைகளை நாங்கள் தானே அறுக்க வேண்டும்.

எனவே நண்பர்களே, சின்னத்தனமான சிந்தனைகளை செயல்களைப் புறந்தள்ளி விட்டு அடுத்த அடி எடுத்துவைப்போம். எட்டி நடப்போம்.

# தங்கத் தலைவா!



வாஜி வாஜி வாஜி இன்றெங்கும் சிவாஜி! தமிழ் சினிமா வரலாற்றில் இது ஒரு சாதனைத் திரைப்படம். சி... வா... ஜி...! இதுவரை காலமும் இப்படியொரு திரைப்படத்தினை தமிழ் சினிமா ஏன் இந்தியச்சினிமா கூடத் தந்ததில்லை. அத்தனைக்கும் காரணம் எங்கள் தங்கத்தலைவன், சுப்பர் ஸ்ரார், ஆன்மிகவாதி ரஜினிக்காந்த்...

தங்கத்தலைவா நீ ஆணையிடு தட்டாது தமிழ்நாடு! தமிழ்நாடு இல்லை தலைவா தட்டமாட்டோம், நாங்களும்தான். இதை நான் சொல்லவில்லை தலைவா! எம்மக்கள் சொல்கிறார்கள். இதுவரை காலமும் எந்த ஒரு தமிழ்த் திரைப்படம் லண்டன் ரொப்ரென் கணிப்பீட்டுக்குள் வந்ததிருக்கிறது. உன் திரைப்படம் மட்டும்தான் தலைவா. வெள்ளயர் நாட்டில் ஒரு கறுப்பு வைரம் மின்னுகிறது யாரால்? எங்களால்த்தான் தலைவா! உன் அன்புகள் எங்களால்த்தான். உடல் மண்ணுக்கு உயிர் தலைவனுக்கு. உனக்குத்தான்! நீ வாழ்க!! நீடுடி வாழ்க!!!

இத்தனை வெற்றிகளையும் நீ அடைந்துவிடக் கூடதென்று சிலர் முயற்சிக்கிறார்கள் தலைவா. உனக்கு முன் எந்தத்தமிழனும் நிக்க முடியாது உன்னை எதிர்க்கவும் முடியாது

நீ அந்தத்த தமிழ்நாடு தத்தெடுத்த சிங்கம்
தமிழரின் குடும்பத்தில் நீயும் ஓர் அங்கம்
உன்னால் ஏதாடா தமிழுக்குப் பங்கம்
அமைப்போம் அடிமை நாம் உனக்கோர் சங்கம்

அன்று ஆனையிறவு அற்றாக்கை விட சிவாஜி பார்த்த நான் இன்னும் இன்ப அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை. 57வயதில் அதே இளமையுடனும் அதே அழகுடனும் அதே ஸ்டைலுடனும் நடைபோடுகிற உனது வெற்றியை யாரால் எடைபோட முடியும். கிளைமாக்சில் நீ கெலியில் வந்து இறங்கும்போது எனக்கு கட்டுநாயக்காவில் குண்டு போட்டதுதான் தலைவா ஞாபகம் வந்தது! பாபாவில் தடுமாறி விழுந்தபோது உன்னை எள்ளி நகையாடிய உன் எதிரிகள், நீ யானை அல்ல குதிரை என்று சந்திரமுகியில் பாய்ந்தோடியபோது கொஞ்சம் தடுமாறித்தான் போனார்கள். நீ காட்டாறு உனக்குத் தடை போட இங்கு யாராலும் முடியாது! உன்னை முடக்க நினைத்தவர்களின் கதைகளை நாங்கள் யாரும் கேட்கவில்லை. நீ வெற்றியோடு ஓடுகிறாய் இனியும் ஓடுவாய். உனக்காய் ஆயிரமாயிரம் தமிழர் நாம் சினிமா சென்று வந்திருக்கிறோம். உன்னை யாருரென்று உலகுக்குக் காட்டி இருக்கிறோம். இது தொடரும்! நீயல்லவோ எங்கள் தன்மானத் தமிழ்ச்சிங்கம்!

நீ இன்னும் பல திரைப்படங்கள் தரவேண்டும் இங்கே வந்து நீ கலை நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும். உனது கால் இப்புலம்பெயர் மண்ணில்ப் படவேண்டும். உனது பார்வை எமக்கும் கிடைக்கவேண்டும். உன் ஆசிகளை நாம் பெறவேண்டும். நீ எந்தப்பக்கமும் சாயாத பாபா! நீ வீரனல்ல மாவீரன். சோம்பேறி அல்ல உழைப்பாளி, சாதாரணமானவன் அல்ல மன்னன், நாட்டுக்கோர் நல்லவன், நல்லவனுக்கு நல்லவன், முரட்டுக்காளை, உன்னிடம் பலிக்காது எவரதும் பாச்சா எனெனில் நீதான் மாணிக் பாட்சா. உன் பெயரை இங்கு கேக்கயில சும்மா அதிருதில்ல! யார் நீ? சிவாஜி!!

*- பாபா*

"இது உங்களுடையது தானா? ஸ்பெல்லிங் மிஸ்டேக் இருக்கா?"

உங்கள் விபரங்களை நீங்களே சரி பார்த்துக் கொள்ளவும்

www.orudirectory.com

# உணர்வுள்ளவர்களுக்கு மட்டும் இந்தப் பத்தி!



அன்று ஒரு நாள் நான் ஓர் உணவு விடுதியில் அமர்ந்து இருக்கிறேன். அருகில் 'சிங்களவர்' பத்திரிகை ஒன்று இருக்க, ஏனோ மரண அறிவித்தல்களையும் நினைவு அஞ்சலிகளையும் எடுத்துத் தட்டியபடி இருக்கிறேன், எனக்கு முன்னால் ஒரு வெள்ளையர் அந்த 'சிங்களவர்' பத்திரிகையிலை வாசித்துக் கொண்டிருந்தார்.

அப்பத்திரிகையில் தேசியத் தலைவரது பிறந்த நாள் குறித்து ஒரு 'இந்தியர்' எழுதி இருக்கிறார். வாசித்துப் பார்க்க அது எப்படியோ தேசியத் தலைவரைத் தாக்கி எழுதவேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்டு இருந்ததை அவதானித்தேன்.

இதனை எங்கிருந்து வாசிக்கிறேன்? ஒரு தமிழருடைய கடையில்!.. என்ன சொல்ல வருகிறேன்? எங்கள் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து அக்கறை கொள்ளாத ஒரு இனத்தின் பத்திரிகை விளங்கச் சொல்வதாயின் இலங்கை தேசத்தில் தமிழருக்கு ஒரு பிரச்சனை இருக்கிறது 'என்றே' எந்தவொரு சாராராலும் ஏற்றுக் கொள்ளப்படாத ஒரு இனத்தின் பத்திரிகை அதுவும் நேரடியாக எங்களைத் தாக்கி எழுதிய பின்னும்! அழகிய தமிழில் சொல்வதாயின் தமிழ்க் கடைகளில் தவழ்ந்து கொண்டு இருக்கிறது என்றால் எங்களை என்ன செய்வது?

**இன்று அத்தியாகிளது நாளில் இரத்தம் கொடுப்பேன் அவர் தியாகத்தைச் சொல்லித்தான் கொடுப்பேன் என்கிறான்.**

'சிங்களவர்' பத்திரிகையினை தமிழ்க் கடைகளில் வைத்திருக்கக் கூடாது என்ற விவாதத்திற்கு நான் இங்கு வரவில்லை. எங்களையும் எங்கள் பிரச்சனைகளையும் உலகிற்கு, எமக்கு எதிராகத் தாம் விரும்பும் வகையில் காட்ட நினைக்கும் பத்திரிகைக்கு நாங்கள் நல்வரவு கொடுப்பது எந்த அளவிற்கு நியாயமானது? என்பதே என் பிரச்சனை.

ஒரு பேப்பர்ஐ 'ஓசிப்பேப்பர்' என்று எழுதியதற்கு வெகுண்டெழுந்த அந்தந் தன் மானச் சிங்கங்கள் இப்போ எங்கே? சிகை சிரைக்கச் சென்று விட்டனவோ? தமிழினத்தை ஒட்டு மொத்தமாக இழிந்து தள்ளுகிறார்களே, அந்த பத்திரிகையினை தமிழ்க் கடைகளில் வைத்து இருக்கிறார்களே! ஓசியெண்டால் மட்டும்தான் கோபம் வருமா?

இது ஒன்றும் நகைச்சுவை இல்லை! முடிந்தால்! எந்த ஒரு தமிழ் பத்திரிகையினை யாவது சிங்களவர் அவர்கள் கடையில் வைக்க அனுமதிப்பார்களா கேட்டுப் பாருங்கள்! ஒருபோதும் அவர்கள் அதை அனுமதிக்கமாட்டார்கள். அது அவர்களுடைய பார்வையில் சரிதானாம்! எங்கள் கடைகளில் அவர்கள் பத்திரிகைகள் இருப்பது! எங்கள் பார்வையில் !?.

**நாம் ஒரு தமிழ் தேசத்திற்காய் மொத்தத் தமிழினமே சேர்ந்து நிற்கிறது என்பதனை உலகறியச் செய்யவேண்டும். எப்படிச் செய்யலாம்?**

இதனைவிட எனக்கு முன்னால் அந்தக் கடையில் ஒரு வெள்ளையர் இருந்து இந்தப் பத்திரிகையினை வாசித்துக் கொண்டு இருக்கிறார். அவருக்கு எங்கள் பிரச்சனை குறித்து பெரிதாக ஒன்றும் தெரிந்திருக்காது.

அவருக்குத் தெரிந்ததெல்லாம் 'கொற்று' (கொத்து ரொட்டி) மட்டும்தான். அவர் அந்தப் பத்திரிகையில் இருக்கிற விடயத்தினை வாசித்துவிட்டு எப்படியான ஒரு முடிவிற்கு வருவார்.

இது சிறீலங்கன் கடை! இவர்களுக்கும் தீவிரவாத இயக்கத்திற்கும் இடைளே ஏதோ பிரச்சனை. இது கடையில் நான் கண்ட அந்த ஒரு மனிதரின் கருத்தாக இருக்கும். இப்படி ஒரு மாதத்தில் லண்டன் நகரில் ஆயிரம் பேர்கள் இதை வாசித்தால் அவர்களின் கருத்து எப்படி இருக்கும்.

**ஒரு பேப்பர்ஐ ஓசிப்பேப்பர் என்று எழுதியதற்கு வெகுண்டெழுந்த அந்தந் தன் மானச் சிங்கங்கள் இப்போ எங்கே? சிகை சிரைக்கச் சென்று விட்டனவோ?**

நேரடியாகச் சொன்னால் எங்கள் கடைகளில் ஒரு மாதத்திற்கு மட்டும்தான் வெள்ளையர்கள் வருவார்கள் என்பதும் இல்லை. இப்போது இங்குள்ள லட்சக்கணக்கானோரின் 'கருத்து உருவாக்கம்' எவ்வளவு வலுவானதாக, எங்களுக்கு எதிரானதாக இருக்கும். இப்படியான ஒரு நிலையினை ஏற்படுத்தி எங்கள் போராட்டத்துக்கும் களங்கம் விளைவித்துக் கொண்டிருப்பது யார்?

நாங்கள் தானே!

தமிழுக்கு என்று ஒரு தேசத்தினைக் கட்டி எழுப்புவதற்காக அங்கே அவர்கள் முயன்று கொண்டு உள்ளபோது நாங்கள் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறோம்?

'நினைவெழுச்சி நாளுக்குப் போகிறோம்' என்பீர்கள். நிச்சயமாய்ப் போக வேண்டும். ஆனால் எங்கள் கடைகளில் கொள்கைக்கு எதிரான பத்திரிகையினை வைத்துக் கொண்டு மாவீரருக்கு மலரஞ்சலி செலுத்துவதில் என்ன பயன்?

சிங்கள அரசு தமிழருக்கும் போராட்டத்துக்கும் சம்பந்தம் இல்லை இது தீவிரவாதிகளுடனான சமர் என்று சர்வதேசத்துக்குக் காண்பிக்கவே இப்பத்திரிகைகளை இங்கே நடத்துகின்றன.

ஆகவே நாம் ஒரு தமிழ் தேசத்திற்காய் மொத்தத் தமிழினமே சேர்ந்து நிற்கிறது என்பதனை உலகறியச் செய்யவேண்டும். எப்படிச் செய்யலாம்?

என் நண்பன் வைத்தியசாலையில் இரத்தம் கொடுத்துவிட்டு வந்து நிற்கிறான். இது உலகிற்கு நான் வழங்கும் "அடையாளம்" என்கிறான். எப்படி என்றேன் நான். இன்று அத்தியாகிளது நாளில் இரத்தம் கொடுப்பேன் அவர் தியாகத்தைச் சொல்லித்தான் கொடுப்பேன் என்கிறான்.

உலகிற்கு எங்களைப் பற்றித் தெரிய வேண்டும் என்கிறான். சரி உலகறியப் பண்ணத் தான் முடியவில்லை. எங்களுக்கு எதிரானவர்களை ஆதரிக்காதாவது விடுவோம். 'தயவு செய்து வைக்கவேண்டாம்' என்பதற்கு எவ்வளவு நேரம் ஆகும்.

இது உணர்வுள்ளவருக்கு மட்டும்.

*- உடையான்*


## 31ம் நாள் நினைவு கூர்தலும் அந்தியேட்டி ஆத்மசாந்தி பூசை!



அமரர்
அமிர்தலிங்கம் துரைசிங்கம்

தமிழ் மண்ணில் உதயம்
24.11.1925

புலம் பெயர் மண்ணில் அஸ்தமம்
03.06.2007

யாழ் வண்ணார் பண்ணை சிவன் வடக்கு வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் 30 வருடங்களுக்கு மேல் துரைசிங்க கிளார்க்கர் என்று எல்லோரின் நன்மதிப்பையும் பெற்ற அமிர்தலிங்கம் துரைசிங்கம் தற்போது லண்டனில் (London) வதிவிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகையில் கடந்த 03.06.2007இல் தனது 82வது வயதில் மாரடைப்பால் 210, Sencetiece Road, Hainualt (Chigwell) தனது இல்லத்தில் காலமானார்.

அவரின் துயரத்தில் பங்கு கொண்டு இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். எதிர் வரும் 03.07.2007இல் 31ம் நாள் அந்தியேட்டி கிரிகைகளும் அதைத் தொடர்ந்து 08.07.2007 ஞாயிற்றுக்கிழமை East Ham (Manor Park) முருகன் கோவிலில் நடைபெற இருக்கும் விசேட ஆத்மசாந்தி பூசையிலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் வாடும் மனைவி! பிள்ளைகள்! மருமக்கள்! பேரப்பிள்ளைகள்!

தகவல் தொடர்பு

***T.Sivakumar (Clay Hall, Ilford, UK)***
**02082 629 179 or 07777 1676 483**

***T.Ramkumar (Hillington, UK)***
**01895 850 449 | 07886 368 916**

## நெஞ்சு பொறுக்குதில்லையே...

எழுதுபவர் வித்தகன்

# சிவாஜி புறக்கணிப்பும் புரியாத புதிர்களும்



கடந்த சில நாட்களாக இணையத் தளங்கள் வாயிலாகவும் பத்திரிகைகள் வாயிலாகவும் சிவாஜி திரைப்படத்தைப் புறக்கணிக்கவேண்டுமா தேவையில்லையா என்ற வாதப் பிரதிவாதங்கள் எழுந்த வண்ணமேயுள்ளன.

ஈழத் தமிழருடைய கலை கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்களுக்குப் புறம்பான காட்சி அமைப்பு, அரைகுறை ஆடைகளுடன் தோன்றும் நடிகையர், வாயால் உச்சரிக்கவே முடியாத ஆபாசமும் விரசமும் கலந்த வார்த்தைகளுடன் கூடிய பாடல்கள் என்று எம்மால் ஜீரணிக்க முடியாத பல அம்சங்களின் கலவையாகவே இன்றைய தென்னிந்திய சினிமா இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையே.

## தமிழருக்காகக் குரல் கொடுக்கத் தயங்கும் 'ஈழத்து மருமகன்' விஜய் உள்ளிட்ட தமிழ் நடிகர்கள் மீதல்லவா முதலில் கோபம் கொள்ள வேண்டும்.

ஆனாலும் இந்தப் புலம் பெயர் நாடுகளிலே பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்ற, மிகக் கடுமையாக உழைக்கின்ற, தம் உறவுகளைப் பிரிந்து தனிமையில் வாடுகின்ற பலருக்குமான பொழுதுபோக்கு ஊடகமாக இருப்பது இந்தத் திரைப்படங்களே.

இதற்கு மாற்றீடான, எம் வாழ்க்கைமுறைக்கு இசைவான சினிமாக்களை எம்மவர்கள் தயாரிப்பதுமில்லை (மிகக் குறைவு). மாறாக இங்கு படத் தயாரிப்பில் ஈடுபடுபவர்களும் 'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுபோலப் பாவித்து ஆடியதைப் போல' தென்னிந்தியப் பாணியை பின்பற்ற முயல்வதையே காணக் கூடியதாக இருக்கிறது.

எனவே மாற்றீடான ஒரு பொழுதுபோக்கு வசதி இல்லாத நிலையில் தென்னிந்தியத் திரைப்படங்களைப் புறக்கணிக்குமாறு கோருவது சரியானதா என்ற கேள்வியில் சிறிய நியாயமும் இருக்கிறது.

அடுத்ததாக இங்கு மிகவும் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டிய இன்னொரு விடயம் இந்தப் புறக்கணிப்புக் கோசம் பெரிதும் ரஜனிகாந்தின் திரைப்படங்களை மையப்படுத்தி வருவது சரியானதா என்பதே.

ரஜனிகாந் மையப்படுத்தப்படுவதற்கு அவர் கர்நாடகத்தைச் சேர்ந்தவர் என்பதே பிரதான காரணமாக முன்வைக்கப்படுகிறது. கர்நாடகத்தைச் சேர்ந்தவரான ரஜனிகாந்திற்குத் தமிழுணர்வு இல்லை, அவர் ஈழத்திலே அல்லல் படும் தமிழர்கள் நலனில் அக்கறை செலுத்தவில்லை என்றும் கூறப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் சீதை இட்ட சாபத்தால் தான் இலங்கை இன்னமும் எரிந்து கொண்டிருக்கிறது என்பதான தவறான விளக்கத்தை வைத்தார் என்பதான குற்றச்சாட்டும் சுமத்தப்படுகிறது.

ரஜனிக்கு ஈழத்தமிழர் மேல் அக்கறை இல்லை அவர்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை என்பது நூற்றுக்கு நூறு வீதம் உண்மை. ஆனால் 'தமிழர்களான' திரைப்படக் கதாநாயகர்கள் எல்லாம் எமக்காக என்ன செய்திருக்கிறார்கள்?

திரைப்பட இயக்குனர் சீமான், இயக்குனர் தங்கர்பச்சான், நடிகர் சத்தியராஜ், கவிஞர் அறிவுமதி, கவிஞர் வைரமுத்து என்று விரல் விட்டு எண்ணக் கூடிய சினிமாத்துறை சார்ந்தவர்கள் தவிர வேறு எவரும் எந்த ஒரு ஈழத் தமிழர் ஆதரவு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டதில்லை.

நானறிந்த வரையில் தென்னிந்தியத் திரைப்பட சங்கத்தினரோ அல்லது வேறெந்த தென்னிந்திய சினிமா சார்பு அமைப்புக்களோ எந்த ஒரு அறிக்கையும் விட்டதாக இல்லை.

தமிழர் விடயத்தில் வாய்மூடி மௌனியாகி விட்டவர்களில் 'உலக நாயகன்' கமலஹாசன், 'ஈழத்து மருமகன்' விஜய், விக்கிரம், சூர்யா என்ற நட்சத்திரப் பட்டாளமே அடக்கம். அப்படியானால் எங்கள் போராட்டம் இவர்களுக்கு எதிராகவும் இருக்க வேண்டாமா?

நான் துன்பப்படும் போது என்னைச் சார்ந்தவன், என் வீட்டிலிருப்பவன், என் இனத்தவன் எனக்கு உதவ வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியா? அல்லது எங்கிருந்தோ பிழைப்புக்காக என் வீட்டருகே வந்து குடியிருப்பவன் உதவ வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியா?

இவர்களில் என் வீட்டிலிருப்பவன், என் இனத்தவன் எனக்கு உதவவில்லை என்றால் தானே ஆத்திரமும் கோபமும் வர வேண்டும்? அப்படியென்றால் 'ஈழத்து மருமகன்' விஜய் உள்ளிட்ட தமிழ் சினிமா நடிகர்கள் மீதல்லவா நாம் முதலில் கோபம் கொள்ள வேண்டும்.

எனவே இந்தப் புறக்கணிப்புக் கோசம் ஏனைய தமிழ்த் திரைப்படங்களுக்கும் (தசாவதாரம் உள்ளிட்ட) தொடரப் போகிறதா அல்லது அடுத்த ரஜனி படம் வரும் வரை ஒத்திப் போடப்படப் போகிறதா என்பது நியாயமான கேள்வியல்லவா?

அடுத்ததாக ஒரு திரைப்படம் புலத்திலே திரையிடப்படுவதற்கு பல நாட்களுக்கு முன்னதாகவே அதன் வெளியீட்டு உரிமை எம்மவர்களால் வாங்கப்பட்டு விடுகிறது. எனவே ஒரு திரைப்படத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்ற கோசம் படம் தயாரிக்கப்படும் போதே ஆரம்பிக்கப்பட்டு விட வேண்டும்.

அப்போது தான் அந்த வெளியீட்டு உரிமத்தை வாங்குவதற்கு எம்மவர்கள் பின்னிற்பார்கள். அல்லாவிட்டால் இதனால் நட்டமடையப் போவது எம்மைப் பற்றி எந்த அக்கறையும் கொள்ளாத தென்னிந்தியச் சினிமாத் துறை சார்ந்தவர்கள் அல்ல. மாறாக எம்மவர்களே என்பதையும் உரியவர்கள் கவனத்தில் கொள்வார்களா?

# குறும்பட வெளியீட்டு விழா





பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளில் தயாரான மூன்று குறும் படங்களின் தொகுப்பு வெளியீட்டு விழா சென்ற (24.6.07) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, ஸ்கார்பரோ செல்லச்சந்நிதி முருகன் திருமண மண்டபத்தில் இவ்விழா வெகு சிறப்பாக நடந்தேறியது.

இத்தொகுப்பில் பிரான்ஸ் பராவின் 'பேரன் பேத்தி' , பிரான்ஸ் ஜனா வதனனின் 'எது மட்டும்', கனடா கே. எஸ். பாலச்சந்திரனின் 'வாழ்வெனும் வட்டம்' ஆகிய குறுந்திரைப்படங்கள் இடம் பெற்றிருந்தன.

இவ்விழாவில் கலந்துகொள்ளவென பிரான்சிலிருந்து வருகை தந்த கலைஞர் ஏ. ரகுநாதன் வரவேற்புரை நிகழ்த்தியதோடு, அவர் நடித்த 'பேரன் பேத்தி' குறுந்திரைப்படத்தின் இயக்குனர் பராவின் பன்முகத்திறமை பற்றியும், 'எது மட்டும்' குறுந்திரைப்படத்தின் இயக்குனரான இளைஞர் ஜனா வதனனின் கலை ஆர்வத்தையும் பாராட்டிப் பேசினார்.

தொடர்ந்து செல்லச்சந்நிதி ஆலய பூசகர் பொன். புவனேந்திர ஐயர் ஆசியுரை வழங்கினார்

பத்திரிகையாளரான 'உதயன்' ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் தனது ஆசியுரையில், தாயகத்தில் தான் பார்த்து ரசித்த 'காத்திருப்பேன் உனக்காக', 'வாடைக்காற்று' முதலிய நம்மவர்களின் நல்ல திரைப்படங்களை குறிப்பிட்டு அந்த முயற்சிகள் தொடர்ந்திருந்தால் எமக்கென ஒரு சினிமாத்துறை உருவாகி வலுப்பெற்றிருக்கும் என்றும், இத்தகைய குறும்படங்களின் வெளியீடு வரவேற்புக்கு உரியதென்றும் குறிப்பிட்டார்.

அதிபர் பொ. கனகசபாபதி தனது வெளியீட்டுரையில், எங்கள் குழந்தைகளுக்கு தாய் மொழியான தமிழ் மொழியை கற்பிக்க வேண்டும் என்ற கருத்தை 'பேரன் பேத்தி' மிக எளிதாக ஆனால் மனதில் பதியும் வண்ணம் சொல்லியிருக்கிறது என்று கூறினார்.

பாரதி புரொடக்சன்ஸ் நடத்திய இவ்விழாவிற்கு, சமூக சேவையாளரும், எழுத்தாளரும், கலை ஆர்வலருமான கதிர் துரைசிங்கம் தலைமை வகித்தார்.

முன்னாள் ரூபவாகினி தமிழ்நிகழ்ச்சிப் பொறுப்பாளரும். தற்போது கனடா ரிவிஜ தொலைக்காட்சி நிறுவனத்தில் நிறைவேற்றுத் தயாரிப்பாளராக கடமையாற்றுபவருமான பி. விக்னேஸ்வரன் ஆய்வுரை நிகழ்த்தினார்.

முடிவில் பாரதி புரொடக்ன்ஸ் அதிபரும், 'வாழ்வெனும் வட்டம்' தயாரிப்பாளரும், நடிகருமான எஸ். மதிவாசன் நன்றியுரை வழங்கியதோடு விழா இனிதே நிறைவெய்தியது.

ஏற்கெனவே பிரான்ஸ் நாட்டிலும், தற்போது கனடாவிலும் வெளியிடப்பட்ட இந்த குறும்படத்தொகுப்பு யூலை மாதம் 29ந்திகதியன்று லண்டனில் நாடகர் தாசிசியஸ் தலைமையில் நடைபெறும் விழாவில் வெளியிடப்பட இருக்கின்றது.

இவ்விழாவில் பத்மநாத ஐயர், பால. சுகுமார், கே. பாலேந்திரா, கி. பி. அரவிந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

இவ்விழாவில் பால. சுகுமார், கே. பாலேந்திரா இருவரும் நாடகத்துறைக்கு ஆற்றிய சேவைக்காக கலையரசு சொர்ணலிங்கம் விருது வழங்கி கௌரவிக்கப்பட இருக்கிறார்கள். இதற்கான ஏற்பாடுகளை கலை ஆர்வலர் ஜோசப் ஒழுங்கு செய்கிறார்.

### கொஞ்சமாச் சிரிக்க...

நோயாளி ரெண்டு நாளாப் பயங்கரத் தலைவலி டொக்டர். என்னாலை பொறுக்க ஏலாமல் இருக்குது

வைத்தியர் தலைவலி எண்டால் வீட்டிலை இருந்து ஓய்வெடுக்க வேண்டியது தானே. நீங்கள் ஏன் பொறுக்கப் போறியள்?

"இதுக்கும் ஆரும் போய் காசு வாங்குவானா?"
(கேட்டாலும் தரவா போறியள்?)

இது முற்றிலும் இலவசமான சேவை

www.orudirectory.com

# ஆண் - பெண் நட்பு



ஆண்களும் பெண்களும் மிகவும் நெருக்கமாக (நண்பர்களாகப்) பழகுவது புலம்பெயர் நாடுகளில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான ஒரு போராட்டம் என்று கூடச் சொல்லலாம்.

முக்கியமாகப் பெண் பிள்ளைகள். இவர்கள் கலாசாரம், பண்பாடு என்ற விடயங்களால் பெற்றோருடனும் ஒட்ட முடியாமல், ஐரோப்பிய வாழ்க்கையுடனும் ஒட்ட முடியாமல் ஒரு வித மன உளைச்சலுடன் வாழ்கிறார்கள்.

இதே நேரம், பிள்ளைகள் பால் வேற்றுமையின்றி நட்புடன் பழகுவதை, நட்பு என்ற கண் கொண்டு பார்க்காமல் எங்கே பிள்ளைகள் தவறி விடுவார்களோ.. என்று அச்சப்பட்டு அச்சப்பட்டே பெற்றோர்களும் தமக்குத் தாமே மன உளைச்சலை ஏற்படுத்திக் கொண்டு வாழ்கிறார்கள்.

இது தப்பு என்பதுதான் எனது கருத்து.

நான்கு சுவர்களுக்குள் வளர்க்கப்படும் பிள்ளைகள் காதல் வலையில் விழவில்லையா? தவறுகள் அங்கு நடக்கவில்லையா? என்பதைப் பெற்றோர் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வீட்டுக்குள் வளர்க்கப்படும் பெண் பிள்ளைகள், வெளி உலகத்தை நன்கு தெரியாமல் வளர்கின்ற போதுதான் தவறுகள் கூடுதலாக அரங்கேறுகின்றன என்பதை, ஏனோ பெற்றோர்கள் சிந்திக்க மறந்து விடுகிறார்கள்.

உதாரணமாக, வீடு மட்டுமே உலகமாக்கப்பட்டு வளரும் பெண் பிள்ளைகள் வீட்டுக்கு வந்து போகும் அண்ணனின் நண்பனையோ அல்லது பக்கத்து வீட்டு யன்னலில் தெரியும் வாலிபனையோ காதலிக்கத் தொடங்கி விடுகிறார்கள்.

இதிலிருந்தாவது பெற்றோர்கள், பிள்ளைகளைக் கட்டி வைப்பதால், அவர்கள் மனதையோ உணர்வுகளையோ கட்டி வைக்க முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அத்தோடு இப்படி வளர்க்கப்படும் பெண்பிள்ளைகள் உலகத்தைக் காணத் தவறிவிடுகிறார்கள். மனிதர்களின் நியமான குணங்களைப் புரிந்து கொள்ள முடியாமற் போய் விடுகிறார்கள். தமது வட்டத்துக்குள் தாம் சந்திக்கும் யாராவது ஒரு ஆண்மகனை (அவன் அண்ணனின் நண்பனோ, அல்லது பக்கத்து வீட்டு யன்னலில் தெரிபவனாகவோ இருக்கலாம்) அவன் நல்லவனா, கெட்டவனா, தனக்குப் பொருத்தமானவனா என்று தெரியாமலே கண் மூடித்தனமாய் காதலிக்கத் தொடங்கி விடுகிறார்கள்.

எந்த வித முன் யோசனையுமின்றி கல்யாணத்துக்குத் தயாராகியும் விடுகிறார்கள். ஆனால் வெளியில் போய் ஆண், பெண் என்ற பேதமின்றி எல்லோருடனும் நட்புடன் பழகும் ஒரு பெண், யாராவது ஒருவனைக் கண்டவுடன் காதலிக்க மாட்டாள். நட்புடன்தான் பழகுவாள்.

இப்படிப் பலருடன் நட்புடன் பழகும் போது யாராவது ஒருவரின் குண இயல்புகள், பழக்க வழக்கங்கள் அவளுக்குப் பிடிக்கும் போது, அங்கு அது காதலாகவும் மலரலாம். இந்தக் காதல் தப்பு என்று கருதவேண்டிய அவசியம் இல்லை. இந்தக் காதல் ஒருவகையில் நல்லதும் கூட.

ஒருவரையொருவர் ஓரளவு முதலே தெரிந்து கொண்ட இவர்களின் மணவாழ்வு பெரும்பாலும் புரிந்துணர்வும், ஒற்றுமையும் மிகுந்ததாகவே இருக்கும்.

## நான்கு சுவர்களுக்குள் வளர்க்கப்படும் பிள்ளைகள் காதல் வலையில் விழவில்லையா? தவறுகள் அங்கு நடக்கவில்லையா?

'எங்கடை பெடியள் சரியில்லை.' இது பெண்ணைப் பெற்றவர்கள் பலரின் வாய்ப்பாடமும் மனக்கருத்தும். இது மிக மிகத் தப்பானதொரு கருத்து.

ஆண்கள் கெட்டவர்கள், பெண்கள் நல்லவர்கள் என்றில்லை. நல்லவர்களும் கெட்டவர்களும் இருபகுதியிலும் உள்ளார்கள். அந்தக் கெட்டவர்கள் ஏன் உருவானார்கள் என்பதைத்தான் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இங்கு நாம் எடுத்துக் கொண்ட விடயத்துடன் பார்த்தால், ஆண் பெண் என்ற பாகுபாடின்றி வளரும் போது பெண் பிள்ளைகளுடன் கதைப்பதை, ஒரு சாதனையாக ஆண் பிள்ளைகள் கருதவே மாட்டார்கள். கதைப்பதற்கென்றே அலையவும் மாட்டார்கள். எமது வாழ்க்கை முறையின் தவறினால்தான் இந்தத் தப்புகள் எல்லாம்.

சின்ன வயதிலிருந்தே பால் பாகுபாடின்றி ஒன்றாக நட்புடன் வளரும் பிள்ளைகள் மத்தியில் ஏற்படும் தவறுகளைவிட, 'நீ ஆண், நீ பெண்' என்று பிரித்து தனிமைப் படுத்தப்பட்டு வளர்க்கப்படும் பிள்ளைகளின் மத்தியில்தான் தவறுகள் அதிகமாக ஏற்படுகின்றன.

12, 13 வயதுகளின் பின், ஒரு பெண் பிள்ளைக்கு பெண் நண்பிகளைத் தவிர, வேறு ஆண் நண்பர்களே இல்லாத போது அவளுக்கு யாராவது ஒரு ஆணுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டால், உடனேயே அவனில் ஒரு ஈர்ப்பு அல்லது காதல் ஏற்பட்டு விடுகிறது.

இப்படியான காதலின் போது, இவனுடனான என் வாழ்வு இனிமையாக அமையுமா? இவன் போக்கும் என் போக்கும் பொருந்திப் போகுமா....?, என்பது போன்ற பல விடயங்களைச் சிந்தித்துப் பார்க்கும் மனப்பக்குவம் இல்லாது போய் விடுகிறது. இதே போலத்தான் ஆண் பிள்ளைகளின் நிலையும்.

ஆனால் ஆண் பெண் என்ற பாகு பாடின்றி நட்புடன் பழகும் பிள்ளைகளிடம், இவன் அல்லது இவள் எனக்குப் பொருத்தமானவளா? இவன் அல்லது இவளுடன் காலம் பூராக வாழ முடியுமா..?, என்பது போன்ற பல விடயங்களைச் சிந்தித்துப் பார்க்கும் மனப்பக்குவம் தாராளமாக இருப்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது.

ஆதலால் ஆண்-பெண் பால் பாகுபாடின்றிய நட்பு அவசியம். பெண் பிள்ளைகளும் உலகத்தைப் பார்க்க பெற்றோர்கள் அனுமதிக்க வேண்டும்.

தவறுகள் நடவாதிருக்க உரிய வயதிலேயே உடல் ரீதியான, உணர்வுகள் சம்பந்தமான சில முக்கிய விடயங்களை பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்து அவர்கள் மனதில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

அதைவிடுத்து பெண் பிள்ளைகளை ஆண்களுடன் பழகவிடாது வீட்டுக்குள் வைத்து வளர்ப்பதுதான் சரியென நினைத்து பிள்ளைகளையும் மனரீதியாக வதைத்து, பெற்றோர்கள் தம்மையும் தாமே வதைத்துக் கொண்டு, ஏதோ 'நெருப்பைக் கட்டிக்கொண்டு வாழ்கின்றோம்.' என்று சொல்வது அனாவசியச் செயலே.

*நன்றி* : www.pennkal.blogspot.com

**Residential Mortgages & Commercial Loans for Business**

RS Finance

Loans will be arranged for lease hold and free hold businessess

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fulfil your business loan requirements.

Mortgages
Re-Mortgages
(Raising Funds to Start Own Business and Other Needs)
Secured Loans

Commercial Loans
Shops
Petrol Stations
Restaurants
Care Homes Etc.

Contact:
Sri
297 High Street North,
Manor Park,
London E12 6SL
Tel: 020 8475 0755
Fax: 020 8470 4755
Mob: 07803 600 543

Please contact on these no's
whatever your needs, Regarding Your Mortgages or Commercial Loans

# ஆடி பிறந்தால்...

## கடந்தது நடந்தது

எழுதுவது: கே.எஸ்.பாலச்சந்திரன்

'ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும்' என்று ஊரில் சொல்வார்கள். நான் அதை பெரிதாக நம்பவில்லை. எங்கள் குசினியின் மண்திண்ணை மெழுகப்படும் காலத்தில் 'கொஞ்சம் அம்மியை அரக்கி வை' என்று அம்மா சொல்ல நான் பட்ட கஷ்டம் எனக்கல்லவா தெரியும். காற்றாவது அம்மியைத் தூக்கிறதாவது என்று சொல்லிக் கொண்டிருந்த நான், இங்கு வட அமெரிக்க கண்டத்தில் அடிக்கடி வரும் tornado என்ற சுழல் காற்று அம்மி, ஆட்டுக்கல் இத்யாதிகளோடு வீடுகளையே அடுத்த ஊரில் கொண்டு போய் போட்டு விடுகிறது என்று அறிந்த பின் என் முடிவை மாற்றிக் கொண்டேன் என்பது தனிக்கதை.

ஆடியென்றவுடன் காற்றைத் தவிர எங்களுக்கு ஞாபகம் வருவது, எங்கள் பகுதிகளில் அனேகமாக கோயில் களின் கொடியேற்றந்தான். கொழும்பு போன்ற இதர மாவட்டங்களில் வேலைகளின் நிமித்தம் தங்கியிருக்கும் அண்ணாமார் நாக்கைச் சுழற்றி, சப்புக் கொட்டிக் கொண்டு றெயின் எடுத்து ஊருக்கு வருவார்கள். பனை களில் கொடியேறும் காலமும் அதுவாக இருப்பதால் தான் இந்த சப்புக் கொட்டுதல். (இதையே பொச்சடித்தல் என்று கிராமிய வழக்கில் சொல்வதுண்டு).

எங்களைப் போன்ற சிறுவயதினருக்கு எல்லாம் சேர்ந்து ஒரே குதூகலந்தான். மேற்குறிப்பிட்டவர்கள் அண்ணா, சித்தப்பா, மாமா என்ற நேரடிச் சொந்தக்காரராய் இருந்தாலும், சொந்தக்காரராய் வரும் எண்ணம் உள்ளவர்களாய் (எங்களுக்கு அக்காமார், சித்திமார் கலியாண வயதில் இருப்பதினால்) இருந்தாலும், அவர்கள் கொண்டு வரும் 'மினுங்கல்' பேப்பரில் சுற்றிய சொக்கலேற், இனிப்பு வகைகள் - 'நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்' என்ற பாணியில் எங்களுக்கும் கொஞ்சம் கிடைக்கும்.

**வெளியின் தொடக்கத்தில் பனைக்கூடலை அண்மிக்கவே பின் கரியரில் இருந்த மூவரும் 'தொப்.. தொப்..' என்று குதித்தார்கள்.**

சாதகத்தில் குருபார்வை நன்றாக இருந்தால் அவர்கள் போட்டு, அடிக்கடி கழுவியதினால் சிறிதாகிப் போய் விட்ட அக்கால நாகரீக சின்னமான 'டெரிலின்' சேர்ட்டே எங்களுக்கு கிடைக்கும். அதை வயல் கிணற்றில் கல்லில் போட்டு, அடித்துத் துவைக்காமல், 'லக்ஸ்' சோப் போட்டு அலம்பி விரித்து, காய்ந்ததும், குளித்த வெறும் மேனியில் அணிந்து கொண்டு ஒருமுறை ஊரை வலம் வந்தால் காணும். அலம்பல் வேலிகளின் இடுக்குகளின் ஊடே பல கண்கள் எங்களை விழுங்குவன போலப் பார்க்கும்.

இதுவே கோயில்களின் திருவிழாக்காலமாதலால் எங்களைப் போன்றவர்களுக்கு ஓய்வு, ஒழிச்சலே இருக்காது. எங்கள் கோயில் அலங்காரத் திருவிழா முடிந்து விட்டால் அடுத்த ஊர்க்கோயில், அதற்கும் அடுத்த ஊர் என்று கொடியேறி நடந்து கொண்டிருக்கும்.

நாங்களும் இன்றைக்கு இத்தனை கூட்டம் மேளம் வருகிறது, இன்ன செற் சின்னமேளம் வருகிறது, இந்தக்கோஸ்டி (இசைக்குழு) இங்கே வருகிறது என்ற புள்ளி விபரங்களை விரல்நுனியில் வைத்துக் கொண்டு அலைவோம். எல்லாம் சரி. அண்டை, அயலூரை விட்டு சற்று தள்ளியிருக்கும் ஊர்த் திருவிழாக்களுக்கு போவதிற்கு அனுமதி வாங்குவதுதான் சிரமமான அலுவல். சரியாகச் சொன்னால் அனுமதி கிடைக்கவே கிடைக்காது.

**முதலாவது சுடலையைக் கடக்கும் போதுதான் 'பாரில்' இருந்த ஒரு புண்ணியவான் நாங்கள் எப்பவோ பார்த்து மறந்து போன ஒரு ஆங்கிலப் படத்தை ஞாபகப்படுத்தினான்.**

இத்தனைக்கும் எங்கள் ஊரிலிருந்து ஏழு, எட்டு மைல் தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில் இருக்கும் கோயில்களில், திருவிழாக்கள் அந்த மாதிரி நடக்கும். எங்கள் அபிமானத்துக்குரிய கோஸ்டி (இசைக்குழு தான்) இந்த இடத்தில் வாசிக்கப் போகிறார்கள் என்று செய்தியும் கிடைத்து விட்டது. அதிலும் அந்த குழுவின் தலைவர் பியானோ அக்கோடியனை கழுத்தில் மாட்டி, ஒரு கையால் பட்டன்களை அமுத்தி, மற்றக்கையால் துருத்தி போல இருக்கும் மடிப்புகளை விரித்து, மூடி எழுப்பும் இசை எங்களுக்கு தேனாக இனிக்கும். இசை வராவிட்டால் கூட அவர் அக்கோடியனை விரித்து மடக்குவதைப் பார்த்துக் கொண்டு இருக்கலாம் என்று எங்களுக்கு தோன்றும்.

எப்படியாவது போவது என்று நாங்கள் ஆறு நண்பர்கள் தீர்மானம் எடுத்தோம். எங்கள் சைக்கிள் ரயர்களில் காற்று போதுமானதாக இருக்கிறதா, கரியர்கள் ஆடாமல், அசையாமல் இருக்கிறதா (டபிள் போக வேண்டி இருப்ப தால்) என்று பார்த்துக் கொண்டோம். 'என்ன.. இன்றைக்கு பொடியன் வலு ஒழுக்கமாய்த் திரியிறான்..' என்று வீட்டில் உள்ள பெரியவர்கள் சொல்லும் வண்ணம், செய்ய வேண்டிய வேலைகளை கவனித்துக் கொண்டோம். ஆடுகளுக்கு முருங்கைக்குழை தாராளமாகவே ஒடித்துப் போட்டோம். அம்மா மறந்து போன சாமான்கள் வாங்கி வர சங்கக்கடைக்கு ஒருதரத்துக்கு இரண்டு தரம் சினக்கா மல் போய் வந்தோம். தம்பிக்கு நுள்ளாமல், யாரும் பார்க்காத நேரம் பார்த்து எட்டிக் குட்டாமல் சிரித்த முகத்தடன் திரிந்தோம். சைக்கிளை மாத்திரம் கேற்றுக்கு கிட்டவாக, வேலியோடோ, மதிலோடோ சாத்திவிட்டு வெள்ளெணவாக நித்திரைக்கு போவதாக பாவனை செய்தோம்.

பத்து, பதினொரு மணிக்கு மேல் ஒவ்வொருவராக அவரவர் வீடுகளில் இருந்து சின்ன சத்தம் கூட எழுப்பாமல் தகரப் படலைகளை திறந்து, சாத்தி வெளியே வந்து தார் றோட்டில் ஏறி, சைக்கிள்களை உழக்கத் தொடங்கிய பின்னர்தான் முதன் முதலாக சிரித்தோம். கொஞ்சநேரம் சிரிப்பும், கும்மாளமுமாக வந்த நாங்கள் திடீரென்று ஒரு விடயம் ஞாபகத்திற்கு வர, எல்லோருமே திகைத்து சற்று நின்று விட்டோம்.

அதாவது எங்கள் ஊருக்கும் நாங்கள் போகவேண்டிய ஊருக்கும் இடையே நீண்டதொரு வெளிப்பிரதேசம் இருந்தது. அதை ஊடறுத்துத்தான் நாங்கள் செல்ல வேண்டிய பாதை இருந்தது. அந்த வெளியின் தொடக்கத் திலும், முடிவிலும் அடர்த்தியான பனைக்கூடல்கள் இருந்தன. போதும் போதாதற்கு இரண்டு சுடலைகள் வேறு தள்ளித்தள்ளி அந்த வெளியில் அதுவும் நாங்கள் போகப்போகும் றோட்டிற்கு அருகாகவே இருந்தன. அதாவது ஒரு பயங்கரப்படம் எடுப்பதற்கான சகல காட்சி யமைப்புகளும் இயற்கையாகவே இருந்தன.

இரவு பன்னிரண்டு மணி. வெளியின் தொடக்கத்தில் பனைக்கூடலை அண்மிக்கவே பின் கரியரில் இருந்த மூவரும் 'தொப்.. தொப்..' என்று குதித்தார்கள். என்ன ஏதென்று கேட்பதிற்கு முன்னரே, சைக்கிள் 'பார்' களில் தொற்றிக் கொண்டார்கள். பின்னுக்கு இருந்தால் வரப் போகும் 'பேயோ.. பிசாசோ.. முனியோ' அவர்களைத்தான் முதலில் பிடிக்கும் என்று நினைத்து விட்டார்கள். சைக்கிள் ஓடிக் கொண்டிருந்த நாங்களும்தான் மன்றாடிப் பார்த்தோம். அவர்கள் அசையவில்லை. பனைக்கூடலின் பனைகள் வெவ்வேறு உருவங்களாகத் தோன்றின. ஆடிக்காற்றில் ஒலைகளின் சரசரப்பு வேறு.

சற்று நிற்பதும், மீண்டும் முன்னே கொஞ்சத் தூரம் செல்வதுமாக பயணம் தொடர்ந்தது. முதலாவது சுடலையைக் கடக்கும் போதுதான் 'பாரில்' இருந்த ஒரு புண்ணியவான் நாங்கள் எப்பவோ பார்த்து மறந்து போன ஒரு ஆங்கிலப் படத்தை ஞாபகப்படுத்தினான். அந்த Draculaப் படத்தில், ஒரு Dracula நடுச்சாமத்தில் மயானத்திற்கு வந்து, வாவென்று அழைக்க, புதைக்கப் பட்டவர்கள் ஒவ்வொன்றாக எழுந்து வருவார்கள்.

இதைச் சொன்னதும் றோட்டுக் கரையைக் கவன மாகப் பார்க்கத் தொடங்கினோம். காற்றில் ஆடும் செடிகளே, எழுந்து வரும் கைகளைப் போலத் தெரிந்தன. திடீரென்று பாரம் கூடியதுபோல சைக்கிளை உழக்குவதே கஸ்டமானதாகப்பட்டது. யாராவது (யாராவது என்ன யாராவது - ஏதாவது) பின் காரியரில் ஏறி உட்கார்ந்து கொண்டது மாதிரி இருந்தது. ஓடிக் கொண்டே காரியரை தடவிப் பார்த்துக் கொண்டோம்.

சில்லையூர் செல்வராசன் சொன்னது மாதிரி, தமிழன் பாட்டொடு பிறந்து (தாலாட்டு) பாட்டொடு இறப்பான் (ஒப்பாரி) என்ற வரிசையில் பயத்துக்கும் தமிழன் பாடுவான் என்று நிரூபிப்பதற்காக பாடத் தொடங்கினோம். பாட்டென்றால் அந்த மாதிரி பாட்டு. கிட்டப்பா கிட்டவே வர முடியாத உச்சஸ்தாயி. நாங்கள் பாடிய கோஸ்டி கானம், அந்த அந்தகார இரவில், வெளியில் பரவி, அதன் அடுத்த முனையில் உள்ள வீடுகளில் முற்றங்களில் ஹாயாக பாய் விரித்துப் படுத்திருந்தவர்களை, எழுந்து வீடுகளுக்குள் ஓடப் பண்ணியிருக்கும்.

இத்தனையும் தாண்டி ஒருவாறு நாங்கள் போக வேண்டிய கோயிலடிக்குப் போய்ச் சேர்ந்தோம். சிகரம், மின்விளக்குகள், அலங்காரம் எதுவும் இல்லாமல் கோயில் - பெற்றோமாக்ஸ் ஒளியில் யாரோ ஒரு முதியவர் சமயப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். பியானோ அக்கோடியன் வரும் சாயலே தெரியவில்லை. பொறுத்து அலுத்து, பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவரைக் கேட்டோம்.

அவர் எங்களை ஏற, இறங்கப் பார்த்துச் சொன்னார். 'அலங்காரத் திருவிழாவா.. அது நேற்றல்லோ நடந்து முடிஞ்சுது' விடியும் வரை அந்த கோயில் வீதியிலேயே உறங்கினோம்.

**Digital Photo Albums**
**Ready in less than 10 days!**
call us to view a sample albums!
Are you tred of waiting months for your wedding or birthday album delivered?
call M: 07760208999
Details on http://www.dreamdigital.co.uk/
Special prices for Photographers.


"online spices store
we deliver to your door"
Get a free item by registering at online shop



www.SpicesToYou.com
UK enquiries : 020 8338 8338
இலங்கை இந்திய உணவுப் பொருட்களுக்கு ஒரு இன்ரநெற் கடை

VISION
"Building your business dream"
T: 020 8772 7991
020 8772 7992
F: 020 8772 7993
890 Garratt Lane
London SW17 0NR
Buying or Selling your Business?
Business Transfer & Commercial Financial Specialists
Finance arranged for any type of business
NACFB


A J ACCOUNTANCY
Auditors & Accountants
Over 25 years in public practise

43 Anerley Road, London SE19 2AS
Accounts Preparation, Self Assessment, VAT & PAYE Returns
An Efficient, Practical Service for small to Medium Size Companies, Partnerships & Sole Traders
Tel: 020 8778 8666
Fax: 020 8778 8999
Email: info@ajaccountancy.co.uk
Web: www.ajaccountancy.co.uk


அனைத்து தமிழ் தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பான தொழில் நுட்பத்துடன் பொருத்திக்கொள்ள, திருத்த வேலை சகல அறைகளிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்து ரசிக்கலாம்.
Ram: 07861 371 837 / Thas: 07885 987 857



# பஸ்ஸா? ட்ரேயினா?



## பஸ்..

இதுல நாம ஏறுவது வாழ்க்கையில ஒரு பங்கு.

இது நம்ம மேலே ஏறுனா ஊதிடுவாங்க சங்கு.

வாழ்க்கையில ஏதாவது ஒரு சமயத்துல யாவது நாம பஸ்ஸுல ஏறியிருப்போம்.. சின்ன வயசுல நம்மளை நம்ம அம்மா அப்பா தூக்கிட்டு ஏறியிருப்பாங்க.. ஸ்கூல் படிக்கும்போது புத்தக மூட்டையை தோளில் சுமந்துட்டு தட்டு தடுமாறி ஏறியிருப்போம். அப்புறம் காலேஜு படிக்கிறப்ப, அப்பா பைக் அல்லது கார் வாங்கி கொடுத்திருந்தாலும், அது ஒரு ஓரத்துல பார்க் பண்ணிட்டு பஸ்ஸுல ஏறியிருப்போம். வேலை செய்யுறப்போ கம்பேனி பஸ்ல ஏறின அனுபவமாவது இருந்திருக்கும். இல்லன்னா, டூர் போறதுக்காவது நண்பர்களோட பஸ் பிடிச்சுட்டு போயிருப்போம்.

பஸ்.. அல்லது பேருந்து.. இதில் ஏறுவதிலும் நன்மைஸ் கொடுமைஸ்ன்னு ரெண்டு இருக்கு. நன்மைன்னு பார்த்தா (எப்படி பார்க்கிறதுன்னு யாருப்பா அங்கே கேட்குறது?) இப்படி பஸ்ஸுலதான் பல காதல் கதைகள் ஆரம்பிச்சிருக்கு.. கண்டதும் காதல், இடிச்சதும் காதல், டிக்கெட் வாங்கி கொடுத்தவுடன் காதல், கீழே விழ இருந்தவளை தாங்கி பிடிச்சதும் காதல்ன்னு லிஸ்ட்டு பெருசா கிட்டே போகுது. ஆனால், கொஞ்சம் தப்பா ஹேண்ட்ல் பண்ணியிருந்தீங்கன்னா இது கொடுமையா மாறி உங்களை 'மாமியார்' வீட்டுல சேர்த்திருப்பாங்க. இல்லையா?

அடுத்து, பஸ் எல்லா சந்து பொந்துலேயும் போகும். இங்கே ஆட்டோதான் எல்லா சந்து பொந்துலேயும் போகும்ன்னு நீங்க சொல்லுவீங்க. ஆனால், இங்கே நாம் காம்பேர் பண்றது ரயிலுடந்தான். ரயில் தண்டவாளத்து மேலேதான் போகும். ஆனால், பஸ் ரோட்டு மேலேயே போகும்! (என்ன தத்துவம்:மை ஃபிரண்ட்::. ஆஹா! ஆஹா!) இதனால் என்ன சொல்ல வர்றேனா, நீங்க உங்க வீட்டு முன்னுக்கே நின்னு பஸ் ஏறலாம். இல்லைன்னா ஒரு பத்து அடி தள்ளி நடந்தீங்கன்னா ஒரு பஸ் ஸ்டாப் இருக்கும். வீதிக்கு வீதி இப்போ பஸ் ஸ்டாப் இருக்கே! ஆனா, இதுல என்ன கொடுமைன்னா எந்த பஸ்ஸும் ப்ஸ்ஸும் பஸ் ஸ்டாப்ல நிக்குறதே இல்ல!

இப்போ நாம பஸ்ஸோடு ஒப்பிட போவது ட்ரேயினைத்தான்.

வண்டி வண்டி ரயிலு வண்டி!

இந்த வண்டியில ஏறியிருக்கீங்களா ஆண்டி..

ரயில் வண்டியும் இப்போ எல்லா ஊரிலும் ஃபேமஸ்தான். கட்ட வண்டி (ஸ்லோவா போற ரயில்) -யில இருந்து எக்ஸ்ப்ரஸ், புல்லட் ட்ரேயின் வரைக்கும் இதுல சேர்த்துக்கலாம். ரோட்டு ஓரத்துல உள்ள தண்டவாலத்திலிருந்து, மண்ணுக்கு அடியிலும் ஓடுது! தலைக்கு மேலேயும் ஓடுது இந்த ரயிலு!

தண்டவாளத்துல ட்ராபிக் ஜேம் இல்ல. ஓடுது ஓடுது ரயிலு! அந்த ரயிலுக்கு முன்ன இல்ல இன்னொரு முயலு! சாரி ரயிலு! சோ, (நாகேஷை எல்லாம் கூப்பிட முடியாது! ஆன்லி சோ) ட்ராபிக்ல மாட்டிக்கிட்டேன்னு ஆபிஸ்ல நீங்க சாக்கு சொல்றதுக்கு சான்சே இல்ல.. சொன்ன டைமுக்கு ரயிலு ஸ்டேஷன்ல நிக்கும்.. அதைவிட முக்கியமான பாய்ண்ட் என்னன்னா, ட்ரேயின், ட்ரேயின் ஸ்டேஷன்லதான் நிக்கும்.. ஆனா பஸ், ப்ஸ் ஸ்டேஷன்ல நிக்குமா? இதுல பஸ் சூப்பர் ஸ்டார் ரேஞ்சுக்கு எப்போ வரும் எப்படி வரும்ன்னு தெரியாது! ஆன வர வேண்டிய நேரத்துக்கு கரெக்ட்டா வராதுன்னு சொல்வாங்க.. அதானே!

*- மைபிரண்ட்*

## சலிப்பூட்டும் வேலைகள்...

தேவைகள் தீர்ந்த வேளையில்
முன்னெப்போதோ
தேடப்பட்டவைகள் கிடைக்கின்றன!

இறுக மூடிய உள்ளங்கையாய்
திகைப்பூட்டுகிறது வாழ்க்கை
அவிழ்க்கப்படாத முடிச்சுகளுடன்...

நிராசைகளால் நிரம்பிய
மனதின் அறை ஒன்று
திறக்கப்படாமலே இருக்கிறது
வெகுநாட்களாய்...

கரைமீறல்களை அறிந்திராத
குளமாய் இருக்கிறேன்

சலனப்படுத்திய கற்களையெல்லாம்
ஆழத்தில் பாதுகாத்தபடி!

## உன்னைப் பின் தொடர்தல்!

இருவேறு துருவங்களில்
இயங்குகிறது நம் உலகம்..

முரண்பாடுகளுக்கிடையே
முகிழ்த்திருக்கின்றன
நம் பிரியங்கள்
கள்ளிப் பூக்களாய்...

கடந்துவிட முடியாத
எல்லைகளை எல்லாம்
எளிதாய்த் தகர்த்தெறிகின்றன
நினைவுகள்...

என் சொற்களுக்கு
எதிர்ப்பதமாய் இருப்பதையே
வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறாய் நீ!

அதனாலென்ன?

உயிர்த்தலுக்கான அத்தியாவசியக்
காரணங்களுள் ஒன்றாய்
நீ இருக்கும்வரையில்...

வாழ்க்கை சலித்து விடாது எனக்கு!

## வீட்டு விடுதலையாகி...

காலத்தின் அடர்கிளையிலிருந்து
விடைபெற்ற இலை ஒன்று
நிதானமாய் தரையிறங்கிக் கொண்டிருக்கிறது
மரத்திடம் நன்றி சொல்லியபடி..

இருத்தலின் உணர்வையும்
விடுபடலின் களிப்பையும்
தன் அசைவால் உரைத்தபடி
அது இறங்குகிறது கீழே....

காலம் தன் கடைசி வர்ணத்தை
அதன் உடலில் பூசியிருக்கிறது...

அனுபவத்தின் நீட்சியாய்
புடைத்திருக்கின்றன அதன் நரம்புகள்...

அவசர அவசியங்கள் ஏதுமின்றி..
காரணகாரியங்களுக்கு அப்பாற்பட்டு..
வெறுமனே
தரையிறங்கிக் கொண்டிருக்கிறது அது
கற்பித்தலுக்கான பிரக்ஞை ஏதுமின்றி!

காயத்ரி
கவிதைகள்


# MARKANDAN & UDDIN SOLICITORS

Solicitors & Administrators for Oath

M Markandan LLB A Uddin ( Hons ) MA LLB Phd-RFL

Tamil House, 720 Romford Rd, London E12 6BT

**We specialise in ..**

For all your needs in immigration ( All aspects upto house of lords ),
Commercial & Residential Conveyencing, Employment,
Civil Litigation, Consumer Problems, Last will, Power of Attorney,
Spnsorship Declaration, HSMP, Workpermits

### விவாக விண்ணப்பம்

**01.02.2005** முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்தநாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைப்பின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

### அகதி விண்ணப்பம்

**14** வருட **10** வருட அல்லது **7** வருட வதிவிடதகமை விண்ணப்பங்கள் பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்காக ஆங்கில மற்றும் வாழ்க்கை முறை தேர்ச்சி சம்மந்தமான ஆலோசனைகள்

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடையங்கள் No win no fee அடிப்படையில்

**tel 020 8514 8300 / 07830 285 634 | fax 020 8514 8381**
**email info@msssolicitors.com**
**Markandan : 07956 386 576 | Uddin : 07957 455 670**

Markandan & Uddin Solicitors

# ஈழத் தமிழர்களை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ள கைதுகள்

எழுபரிதி
( ஒருபேப்பர் )



அண்மைக்காலமாக இலங்கை தீவின் அரசியல் விவகாரங்களில் பிரித்தானியா அரசு அதிக அக்கறை காட்டிவருவது தெரிந்ததே. செஞ்சோலை வளாகத்தின் மீது குண்டுத் தாக்குதல்களை நடாத்தி தமிழ் மாணவிகளை பலிகொண்ட சம்பவத்தின் பின்னர் மகிந்த ராஜபக்ச பிரித்தானியாவுக்கு பயணம் செய்து அப்போதைய பிரதமர் ரோனி பிளேயரை சந்தித்து உயைாடினார். திரு. பிளேயர் தனது விடுமுறைகாலத்தில் வெளிநாட்டு தலைவர் ஒருவரை சந்தித்தது ஒரு முக்கியம்வாய்ந்த நிகழ்வாக இருந்தபோதும் அங்கு பேசப்பட்ட விடயங்கள் வெளியிடப்படவில்லை. இந்த நிகழ்வுகளின் தொடர்ச்சியாக அண்மையில் பிரித்தானிய பாராளுமன்றத்தில் நடாத்தப்பட்ட இலங்கைதீவு தொடர்பான விவாதம், சுனாமி நிதியுதவியை தற்காலிகமாக நிறுத்தியமை போன்றவற்றை எடுத்துக் கொள்ளலாம். விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை சில பாராளு மன்ற உறுப்பினர்கள் இன்னமும் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் இவை எல்லாம் சரியான திசையில் சென்று கொண்டிருக் கின்றன என தமிழர்கள் யாராவது நினைத் திருந்தால் அவர்களது நினைப்பில் மண்ணை போடுவது மாதிரி அந்தச் சம்பவம் நடை பெற்றது.

சாந்தன் அல்லது சாந்தன் அண்ணா என தமிழர்களால் அழைக்கப்பட்ட பிரித்தானிய தமிழர் ஒன்றியத்தின் பொறுப்பாளர் திரு. அருணாசலம் கிருசாந்தகுமார், தமிழ் இளையோர் அமைப்பைச் சேர்ந்த திரு. கோல்ட்மன் லம்பேட் ஆகிய இருவரும் கடந்த மாதம் 21ம்திகதி வியாழக்கிழமை மாலை லண்டனில் நியுஸ்கொடலண்டயார்ட்ஐசேர்ந்த விசேடபொலிசாரால் கைது செய்யப்பட்டு மத்திய லண்டனிலுள்ள Paddington Green என்ற இடத்தில் பயங்கரவாதச் சந்தேக நபர்களை தடுத்து வைக்கும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வழமையாக பயங்கரவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டால் பரபரப்பாகச் செய்தி களை வெளியிடும் பிரித்தானிய ஊடகங்கள் இவ்விடயத்தில் எந்த ஆர்வமும் காட்டவில்லை. இது ஒன்றே இககைதுகள் வெறுமனே ஒரு அரசியல் நகர்வு என்பதனை வெளிக்காட்டி நிற்கின்றது.

மாறாக சிறிலங்கா தூதாராலயத்திற்கு நெருக்கமான அல்லது அவர்களினால் இயக்கப்படும் இணையத்தளங்களோ இக் கைதுகள் நடைபெற்ற ஒருமணி நேரத்துக் கிடையில் இச்செய்தியை பகிரங்கப்படுத்தின. லண்டனில் வாழும் சிறிலங்கா புலனாய்வுப் பிரிவை சேர்ந்த சிங்களவர் ஒருவர் இக் கைதுகள் நடந்த சில மணி நேரத்திலேயே அதற்கான காரணங்களை தனது வழமையான சோடனைகளுடன் எழுதினார். அதில் கடந்த வருடம் லண்டன் ஹைட் பார்க் திடலில் நடைபெற்ற கறுப்பு ஜூலை நினைவுக் கூட்டத்தை கைது செய்யப்பட்டவர்கள ஒழுங்கு செய்திருந்ததாகவும் அதற்காகவே இக்கைது கள் நடைபெற்றதாகவும் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அதற்கு மறுநாள் கூட பிபிசி ஊடகங் கள் இக்கைதுக்கான காரணத்தை பொலிசார் வெளியிடடவில்லை என தெரிவித்திருந்தன.

ஐந்து தினங்கள் கழித்து ஜூன் 27ம் திகதியே பிரித்தானிய காவல்துறை ஒரு பத்திரிகை குறிப்பை அனுப்பினார்கள் அதில் திரு. சாந்தன் அவர்களுக்கு எதிராக ஐந்து குற்றச்சாட்டுக் களும், திரு. லம்பேட் அவர்களுக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டும் தெரிவிக்கப்பட்டிருந்தது. பொதுவில் பிரித்தானியாவில் தடை செய்யப் பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டதாகவே இவ்விருவர் மீதும் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

திரு. சாந்தனுக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள்:

1) 2006 யூன் 1ம் திகதியிலிருந்து 2006 யூலை 26ம் திகதி வரையிலான காலப் பகுதியில் லண்டன் பிராந்தியத்தில் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செயவதற்கு, அக்கூட்டம் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்குத்துக்கு ஆதரவானது எனத் தெரிந்திருந்தும் உதவி செய்தமை.

2) 2006 யூலை 26ம் திகதி நடைபெற்ற அக்கூட்டத்தில் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்குத்துக்கான ஆதரவை ஊக்கப்படுத்தும் வகையில் உரையாற்றியமை.

3) 2005 ஜனவரி 24ம் திகதி லண்டன் பிராந்தியத்தில் வைத்து 1500 பவுண்ஸ் பணத்தை பெற்றுக் கொண்டமை. இப்பணம் பயங்கரவாதச் செயல்களுக்கு பயன்படுத்தப் படும் என்ற நியாயபூர்வமாக சந்தேகிக்கப் படுகிறது.

4) 2006 ஜனவரி 17ம் திகதியிலிருந்து - 2007 யூன் 22 காலப் பகுதியில் (அதாவது கைது செய்யப்படும் வரை) சக்திவாய்ந்த நீரடி யுத்தம், மற்றும் கடற்படை சம்பந்தமான விளக்க நூல்களை கையிருப்பில் வைத்திருந் தமையும், பதுங்கு குழிகள் கிண்டுவதற்கு பாவிக்கும் சவள்கள் 6, திசையறிகருவிகள் 9, உடல் காப்பு அங்கி ஒன்று போன்றவற்றை வைத்திருந்தமை. இவை பயங்கரவாதச் செயல்களுக்கு பாவிப்பதற்காக வைத்திருந் தமைக்கான நியாயபூர்வமான சந்தேகம் உள்ளது.

5) 2005 ஜனவரி 23 - 2007 ஜுன் 22 காலப் பகுதியில் (அதாவதுகைதுசெய்யப்படும்வரை) தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கததைசேர்ந்தவராகஇருந்தமை அல்லது அதற்கு ஆதரவாகச் செயற்பட்டமை.

திரு. கோல்டமன் லம்பேட்டுக்கு எதிரான ஒரே குற்றச்சாட்டு:

1) 2006 ஜுன் 1ம் திகதியிலிருந்து 2006 யூலை 26ம் திகதி வரையிலான காலப் பகுதியில் லண்டன் பிராந்தியத்தில் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செயவதற்கு, அக்கூட்டம் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்குத்துக்கு ஆதரவானது எனத் தெரிந்திருந்தும் உதவி செய்தமை.

மேற்படி குற்றச் சாட்டுக்கள் 2000 ஆண்டு பிரித்தானியாவில் கொண்டு வரப்பட்ட பயங்கர வாதச் சட்டத்தின் அடிப்படையில் பாரிய குற்றச்சாட்டுக்களாகும். இச்சட்டம் கொண்டு வரப்பட்டபோது அது மனிதவுரிமைகளை, கருத்துச் சுதந்திரத்தை பாதிக்கிறது என்ற குற்றச்சாட்டு இருந்தாலும், பொதுவில் இச்சட்டத்தை பிரித்தானிய அரசியற் கட்சிகள் கட்சி பேதமின்றி ஆதரித்தன. மனிதவுரிமை அமைப்புக்கள் கூட இச்சட்டத்தையிட்டு பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. இஸ்லாமிய பயங்கரவாதிகளின் அச்சுறுதல் களிலிருந்து நாட்டை பாதுகாக்க இத்தகைய நடைமுறைகள் அவசியம் என்ற கருத்தே இன்றும் நிலவுகிறது.

இச்சட்டத்தை தொடர்ந்து 2001ம் ஆண்டில் சில வெளிநாட்டு தீவிரவாத இயக்கங்கள் தடை செய்யப்பட்டவையாக பாராளுமன்றத்தின் மூலம் உள்நாட்டு அமைச்சினால் பிரகடனப் படுத்தப்பட்டது. அதில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் சேர்க்கப்பட்து. இருப்பினும் தமிழீழ விடுதலைப்புலிகள் வி?டயத்தில் இச்சட்டத்தை காவல்துறையினர் தீவிரமாக அமுல்படுத்தவில்லை என்றே கூற வேண்டும். விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராகவிருந்த திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கடந்த வருட இறுதியில் அவர் மரணிக்கும் வரை பிரித்தானியாவி லிருந்து வெளிப்படையாகச் செயற்பட்டார். இந்நிலையில் தமிழ் செயற்பாட்டாளர்கள் மீது இச்சட்டம் திடீரென பிரயோகிக்கப்படுவது அரசியல் உள்நோக்கம் கொண்டதாகவே கருத வேண்டியுள்ளது. இலங்கைத்தீவு விவகாரத்தில் பிரித்தானியா சில அரசியல் நகர்வுகளை மேற்கொள்வற்கான முன்னேற்பாடாக இக்கைதுகள் அமைந்திருக்கலாம். அல்லது ஏற்கனவே தமிழ் செயற்பாட்டாளர்கள் அமெரிக்கா, பிரான்ஸ். அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவற்றின் தொடர்ச்சியாக இக்கைது கள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்.

இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறும் என்பதனை, அதுவும் குறிப்பாக் திரு.சாந்தன் அவர்கள் கைது செய்யப்படலாம் என்ற ஊகம் புலத்து தமிழர்கள் மத்தியில் பலவாரங்களாக நிலவிவந்தது. ஆகவே வெளிப்படையாகவும் பிரித்தானிய அரச அதிகாரிகள் தொடர்புகளை மேற்கொள்ளக் கூடிய வகையிலும் செயற்பட்டு வந்த இச்செயற்பாட்டாளர்களின் கைதுகள் அதிர்ச்சியூட்டுவனவாக இருக்கவில்லை. ஆனால் இலங்கை தீவு விவகாரத்தில் பிரித்தானியா நேர்மையான அணுகுமுறையை கடைப்பிடிக்கும் என்ற நம்பிக்கை இப்போது சிதறடிக்கப்பட்டுள்ளது:

பிரித்தானிய அரசின் அடுத்த கட்ட நடவடிக்கை எப்படியிருக்கும் என்ற குழப்பத் தில் இருக்கும் தமிழ் மக்களை மேலும் குழப்பி குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க சில தனிமனிதர்களும் அமைப்புகளும் புறப் பட்டிருக்கின்றன. தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்களும் அதுசார்ந்த ஊடகங்களும் செய்திகளை திரித்து வெளியிட்டு வருகின்றன. அது போலவே தமிழ் தேசியத்துக்கு ஆதரவா னவர்கள் என தங்களை காட்டிக் கொண்டவர் களும் தங்கள் முகமூடிகளை கழற்றிவிட்டு தமது பச்சோந்தித்தனத்தை காட்ட முற்பட்டு ள்ளனர். சில ஊடகங்களோ திரு. சாந்தன் ஏதோ இரகசியமாக செயற்பட்ட பயங்கரவாதி போன்று அவர் பற்றிய கதைகளை எழுது கின்றன. பதினேழு வருட காலமாக முழு நேரமாக பொதுப் பணியாற்றி வரும் திரு சாந்தன் பற்றி இந்த ஊடகங்களிலிருந்து தமிழ் மக்கள் தெரிந்து கொள்வதற்கு புதினம் ஒன்றும் இருக்கப் போவதில்லை.

இதிலிருந்து இவர்கள் ரெலிபதி மூலம் தமது எண்ணங்களை பரிமாறிக்கொள்ளலாம் என்கின்ற ஊகம் மட்டுமே உண்டு. இவை ஆதாரபூர்வமாக நிருபிக்கப்படவில்லை. அடுத்து வேற்றுக்கிரக மனிதர்களினால் எம் மனிதர்களுக்கு ஏற்பட்ட திடுக்கிடும் படியான அனுபவங்களைப் பார்க்கும் முன்பு வரலாற்றுக் காலங்களில் விமானங்கள் பற்றி கூறப்பட்டனவற்றை நோக்குதல் மிகவும் பொருந்தும் என்று நான் கருதுகின்றேன்.

இது பறக்கும் தட்டுக்கள் உண்மையிலேயே உள்ளன என்ற எனது கருத்திற்கும் வலுச்சேர்க்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இராமாயணகாலதில் இராவணன் புஷ்பக விமானத்தில் பறந்ததாகவும் மயன் என்பவன் இவ்விமானத்தை ஓட்டியதாகவும் இராமாயணம் கூறுகின்றது. இது வால்மீகியின் கற்பனையாகக்கூட இருக்கலாம். ஆனால் இவற்றை ஆதாரப்படுத்துவது போல் இலங்கையிலே நுவரேலியா எனும் மாவட்டத்தில் இாவணன் சீதையைச் சிறை வைத்ததாகக் கூறப்படும் சீதாஎலிய என்று ஒரு இடம் உண்டு.

இந்த இடத்திலிருந்து உலகத்தின் முடிவு (World End) என்று அழைக்கப்படும் இடம் நோக்கி 8 மைல் தூரம் வரை சென்றால் குவன்பொல என்ற இடத்தை அடையலாம் இச் சிங்களப் பெயரினுடைய தமிழ் வடிவம் விமானச்சந்தை என்பதே. இந்த இடத்தில் விமானத்தின் இரு பாரிய ஓடுபாதைகள் இருந்ததற்கான அடையாளங்களாக மலையில் நீண்ட மலைச் சமவெளிகளைக் கொண்ட இரு பிரதேசங்கள் உண்டு. இது இராவணன் பயன் படுத்தியதாக கூறப்படும் புஷ்பக விமானத்தின் ஓடுபாதை என்பது பலரது கூற்று.

இதை உறுதிப்படுத்துவது போல் 1971ல் இப் பிரதேசத்தினை ஆய்வுசெய்த ஐரோப்பிய புவி இயலாளர் ஒருவர் இது இராமாயணத்தில் வரும் இராவணன் பயன்படுத்திய புஷ்பக விமானத்தின் ஓடபாதையாக முன்னர் இருந்து இருக்கலாம் எனவும் அதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன என்று தனது நூலில் கூறியுள்ளார். இதுவும் அவர் களின் கற்பனை என்றுகூட கூறலாம்.

அடுத்து புராணஇதிகாசங்களில் மிகவும் சக்தி வாய்ந்த கண்டம் விட்டுக் கண்டம் பாயக் கூடிய அஸ்திரங்களைப் பாவித்ததாகவும் கூறப் பட்டிருக்கிறது. விஞ்ஞானஅறிவோ விஞ்ஞான கருவிகளோ இல்லாத அந்தக்காலத்தில் எப்படி அவர்களால் இப்படி கற்பனை செய்யமுடிகிறது. இதனால் இவை வெறும் கர்ண பரம்பரைக் கதைதானா? என நாம் சற்று சிந்திக்கத் தோன்று கின்றது அல்லவா!. ரிக்வேதம். இராமாயணம். மகாபாரதம் சமரங்கன சூத்திரா. வைமானிகா சாஸ்திரம் என பழைய நூல்களில் பூமியில் உள்ளவர்களோடு விண்வெளி மனிதர்களின் தொடர்பு. விமானப்பறப்பு. விண்வெளிப்போர். பயங்கர அஸ்திரங்களின் பாவனை. என நிறையத் தகவல்கள் காணப்படுகின்றன.

**இந்த இடத்தில் விமானத்தின் இரு பாரிய ஓடுபாதைகள் இருந்ததற்கான அடையாளங்களாக மலையில் நீண்ட மலைச் சமவெளிகளைக் கொண்ட இரு பிரதேசங்கள் உண்டு.**

ரிக்வேதமானது 10ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்கின்றனர் ஆய்வாளர்கள். இதில் போர்க் கடவுளான வர்ணனின் ஆகாயரதத்தை மாருதி ஓட்டியதாகவும். அத்துடன் புஷன் என்பவன் மிகச்சிறந்த விமான ஓட்டியாக விளங்கினான் எனவும் குறிப்புக்கள் பல உண்டு. இவைகளனைத்தையும் கற்பனைகள் எனக்கூறினாலும் வானில் பறப்பது சாத்தியமே என அவர்கள் எண்ணியிருந்தனர் என லாம்.

அடுத்து சமரங்கன சூத்திரா 11ம் நூற்றாண்டில் இராமச்சந்திர தீட்சிதர் என்பவரால் எழுதப்பட்டது என்பார்கள் இதில் வானவெளிக்கப்பல்கள் எப்படிச் செலுத்தப்பட்டன. அதன் அமைப்பு முறை. என்பன பற்றி விரிவாகக் கூறுகின்றன. அதனை அடுத்த இதழில் பார்ப்போம்.

*அடங்காப்பற்று அ.மயூரன்*

# கேள்வி பதில்

**அஞ்சலா ஜெகநாதன்**
***(மூலிகை மருத்துவர்)***

*கேள்வி : எனக்கு 55 வயதாகிறது. (ஆண்). நல்ல உத்தியோகம் பார்க்கிறேன். திருப்தியானதொரு வாழ்விற்கு வேண்டியன யாவும் போதியளவு இருக்கிறது ஆனாலும் கடந்த 7-8 மாதங்களில் எனது உடலுறவு வேட்கை முன்னர் போலில்லாதிருப்பதை அவதானிக்கிறேன். ஆணுறுப்பு விறைப்படைய கூடியளவு நேரம் எடுப்பதோடு விறைப்படைவைத் தக்க வைக்க முடியாமலிருக்கிறது. இந்நிலையானது எனக்கும் மனைவிக்குமிடையே மனஸ்தாபத்தை உருவாக்கிவிட்டது. வீட்டில் சந்தோசமாக இல்லாத மனநிலை இதனால் வேலையிலும் போதியளவு கவனம் செலுத்த முடியவில்லை. இந்நிலைக்கு ஏதாவது இயற்கையான மருந்துகள் இருந்தால் சொல்வீர்களா? - திரு. ரமேஸ் இலண்டன்*

பதில்: ஆம் இயற்கையான மருந்துகள் குறைநிரப்பிகள் இருக்கின்றன. இவற்றை நீங்கள் எடுத்துப் பார்க்கலாம். எனது அனுபவத்தில் இந்நிலை கண்ட பல ஆண்களை சிகிச்சைக்கூடத்தில் சந்தித்திருக்கிறேன். இவர்களுக்கு இரு குறை நிரப்பிகளை சிபார்சு செய்வேன். முதலில் Macca எனப்படும் ஒரு மூலிகைத் தயாரிப்பை பயன்படுத்தலாம் இத்தயாரிப்பானது ஒருவரின் இயற்கையான ஓமோன் சுரப்பைத் தூண்டுவதாக செயற்படுவதனால் காம வேட்கையை அதிகரிக்கிறது.

இரண்டவதாக Precox எனப்படும் தயாரிப்பைக் குறிப்பிடுவேன். இத் தயாரிப்பு L-Arginine, Pycnogenol ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இவையிரண்டுமே ஆரோக்கியமான குருதிக்கலங்களைப் பேணுவதற்கும் ஆண்குறியின் விறைப்பைப் பேணுவதற்கு வேண்டிய குருதியை விரைவாக அனுப்பி நீண்டநேரம் தங்க வைப்பதற்கும் முக்கியமாக வேண்டியவையாகும்.

மேற்குறிப்பிட்ட மூலிகை குறைநிரப்பிகளுடன் கூட உங்களின் உணவிலும் கவனஞ் செலுத்த வேண்டும். உணவில் போதியளவு விதைகள் கொட்டைகளையும் நல்ல பச்சை நிற இலைக்கறிவகைகள் போதியளவு புரதம் தரக்கூடிய (உ+ம் மீன் கோழி இறைச்சி போன்றன) கிரமமாக சேர்த்துக் கொள்ளவேண்டும். நீங்கள் GP உங்களின் தரும் மருந்துக்களை எடுப்பதாக இருந்தால் என்னைத் தொடர்பு கொண்டால் இம்மருந்துக்களை/குறைநிரப்பிகளை அவற்றுடன் சேர்த்து எடுக்க முடியுமா எனக் கூறுவேன். இம் மருந்து/குறைநிரப்பிளை 2-3 மாதங்களுக்கு தொடர்ச்சியாக எடுக்கும் பொழுதுதான் மிகுந்த நன்மை பெறலாம்.

# A.R.ரஹ்மானின் புதிய திட்டம்

திரைப்படம் தயாரிக்கும் போது அதில் நடிக்கும் நட்சத்திரங்கள் பாடல் எழுதுவோர் பாடகர்கள் இசையமைப்பாளர்கள் ஆகியோரின் உடலுழைப்பு எல்லாவற்றையும் கணக்கில் கொண்டுதான் சம்பளம் தீர்மானிக்கப்படுகிறது. ஆகவே படத்தில் இடம் பெறும் அனைத்து விஷயங்களும் தயாரிப்பாளரால் விலைக்கு வாங்கப்பட்டபின் அதன் முழு உரிமையும் அவருக்கே அதன் அடிப்படையில் தான் படங்களை விறக முடிகிறது. படத்தின் பாடல் காட்சிகள் தொலைக்காட்சி மற்றும் வானொலிகளில் ஒளிபரப்பப்படும் போது கிடைக்கும் தொகையும் தயாரிப்பாளருக்கே 75 ஆண்டுகளாக கிடைத்துவருகிறது.

இந்த உரிமைக்கு வேட்டு வைக்கும் விதமாக A.R.ரஹ்மான். புதுமுடிவை எடுத்துள்ளார். நான் இசையமைத்துக் கொடுப்பது திரைப்படத்தில் பயன்படுத்து வதற்கு மட்டுமே தான். அதைத் தவிர வேறு மீடியாக்களில் (மொபைல் இன்டர்நெட். சவுண்ரக். றெங்ரோன்) இவற்றை வியாபாரரீதியில் பயன்படுத்தக் கூடாது. இதன் மூலம் வரும் வருமானம் எனக்கே சொந்தம் என்று A.R.ரஹ்மான். முடிவெடுத்துள்ளாராம்.

'இவை எப்படி என்றால் கட்டிடத்தை பணம் வாங்கிக் கொண்டு கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்கும் என்ஜினியர். நீ குடியிருக்கத்தான் வீடு கட்டிக் கொடுத்தேன் பிற கமர்ஷியல் விஷயங்களுக்கு உபயோகப்படுத்தினால் அதன் வருமானம் எனக்கே சொந்தம் என்பதைப் போல உள்ளது.

A.R.ரஹ்மானைப் போல பிற இசையமைப்பாளர்களும். கதை வசன கர்த்தாக் களும். நடிகர்களும் முடிவெடுத்தால் தயாரிப்பாளர்களின் உரிமைகள் அனைத்தும் பறிபோகும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. எனப் புலம்புகிறார் ஒரு முன்னணி தயாரிப்பாளர் ஒருவர். இது A.R.ரஹ்மானனுக்கு கொஞ்சம் ஓவராகத்தான் உள்ளது. என்கிறது தகவல் அறிந்த வட்டாரம்.

*அடங்காப்பற்று மயூரன்*

HERBA NATURELLE



★ Hair Dye, அழகு சாதனப் பொருட்கள்
★ Vitamins & Minerals
★ உடற்பயிற்சிக்கான போசாக்கு வகைகள்
★ உடல் எடை குறைப்புக்கான மருந்துகள்
★ மூலிகை மருந்துகள்




வெளிவந்துவிட்டது
இலவச மருத்துவ இதழ்
"ஆரோக்கிய வாழ்வு"
பெற்றுக்கொள்ள தமிழ் கடைகள்
ஆலயங்களை நாடலாம்

மருத்துவ ஆலோசனைகளுக்கு, மூலிகை மருத்துவர் அஞ்சலா ஜெகநாதன் - 020 8765 9015

HERBA NATURELLE Natural Health Centre, 1410, London Road, Norbury SW17 4BZ
Tel: +44 (0) 20 8765 9015 / Email: sales@herbanaturelle.com / Web: www.herbanaturelle.com

# எடின்பரோ கோழி வறுவல்



## இளவஞ்சி

*( டைரியில் )*

இது என் முதல் சமையல் குறிப்பு பதிவு !

இது நாடு கடத்தப்பட்டு (அ) நாடு கடத்திக் கொண்டு, தானே சமைத்து தானே உண்டு வாழும் பாவப்பட்ட பேச்சிலர்களுக்கான எளியவகை சமையல் குறிப்பு (கடினவகை தெரிஞ்சா சொல்ல மாட்டமா?! )

தேவையான பொருள்கள்:

- அடுப்பு மற்றும் பற்றவைக்க தீப்பெட்டி (அ) காஸ் லைட்டர்
- வாயகன்ற வாணலி ( வாயகன்றாலே அது வாணலிதாம்ல!) மற்றும் ஒரு கரண்டி /கத்தி
- கொட்டிக்கொண்டுவக்கணையாய்சாப்பிட ஒரு பெரிய மற்றும் சிறிய தட்டு

நிஜமாகவே தேவையான பொருள்கள்:

- கோழிக்கறி - 1/2 கிலோ (தலை மற்றும் இறக்கைகள் நீக்கி தோலுரித்தது )
- பெரிய வெங்காயம் - 3 (சாலட் வெங்காயம் இருந்தால் சிறப்பு )
- தக்காளி - 3
- இஞ்சி - ஒரு துண்டு
- பூண்டு - 10 பற்கள்
- பட்டை, கிராம்பு - சிறிதளவு
- சோம்பு - ஒரு தேக்கரண்டி
- கறிவேப்பிலை - ஒரு கொத்து
- கொத்தமல்லி தழை - ஒரு கொத்து
- பச்சை மிளகாய் - 6
- கொத்தமல்லித்தூள் - 2 தேக்கரண்டி
- மிளகுத்தூள் - 1 தேக்கரண்டி
- மஞ்சள் தூள் - 1 தேக்கரண்டி
- நல்லெண்ணெய் - 2 குழிக்கரண்டி

செய்முறை:

1. அடுப்பை பற்றவைத்து அதன்மீது வாணலியை வைக்கவும் ( இந்த முக்கியமான குறிப்பை பலபேர் சொல்வதே இல்லை! )

2. வாணலி ஈரம் காய்ந்தவுடன் நல்லெண்ணையை அதில் விடவும். (நல்லெண்ணை சூரியகாந்தி எண்ணையெய் விட உடம்புக்கு மிக நல்லது. சுவையை கூட்டுவது. நம் முன்னோர் உபயோகித்தது' - இதயம் நல்லெண்ணை சித்ரா. 'எனவேதான் இது 'நல்ல' எண்ணெய் என அழைக்கப் பெறுகிறது. குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் திடவுருவமாக மாறாது என்பதன் மூலம் நல்லெண்ணெய்யில் கொழுப்பு கிடையாது என அறியலாம்' - தோழி ஷீலா )

3. எண்ணெய் காய்ந்தவுடன் ( காய்ந்ததா என்பதை கையால் தொட்டுப் பார்க்காமலேயே அறிய முயற்சிக்கவும்!) அதில் சோம்பு, பட்டை, கிராம்பு, கறிவேப்பிலை, தோல் நீக்கி கையால் நசுக்கி வைத்துள்ள பூண்டு, இஞ்சி மற்றும் இரண்டாகக் கீறிய பச்சைமிளகாய் போன்றவற்றை போட்டு பொன்னிறமாகும் வரை வதக்கவும். கவனம்! அடுப்பு குறை தழலில் எரியட்டும்.

4. சிறிதாக வெட்டி வைத்துள்ள வெங்காயத்தில் பாதியை வாணலியில் போட்டு வதக்கவும்.

5. வெங்காயம் வதங்கியவுடன், சிறிய துண்டுகளாக வெட்டி அதில் மஞ்சள் மற்றும் உப்பு போட்டு பிரட்டி அரைமணி நேரமாக ஒரத்தில் வைத்திருக்கும் கோழித்துண்டுகளை வாணாலியில் இட்டு இரண்டு நிமிடம் வதக்கவும். இது இறைச்சியில் உள்ள ஈரத்தை உறிஞ்சி கறி சிறிது கெட்டியாகவும் கடித்துச்சாப்பிட ஏதுவாகவும் இருக்க உதவும். (இல்லையெனில், ப்ராய்லர் கறி தேங்காபன்னு திங்கற மாதிரிதான் இருக்கும்! )

6. கறி வதங்கியதும் அரை லிட்டர் தண்ணீர் ஊற்றி கொத்தமல்லி பொடி போட்டு கிளறி மூடி வைக்கவும். அடுப்பின் தழலை கூட்டி வைக்கவும்.

7. பாதி வெந்தவுடன் மூடியை திறந்து வெட்டி வைத்துள்ள தக்காளியை சேர்த்து, பின்பு மிளகுத்தூள் சேர்த்து கிளறி சிறிதளவே திறந்திருக்கும்படி மீண்டும் மூடி வைக்கவும். கவனிக்கவும்! இதயத்துக்கு எதிரி என்பதால நான் தேங்காயை உபயோகப்படுத்தவில்லை. 'உனக்கு கொழுப்புன்னா எங்களுக்கு என்னா கேடு?' மற்றும் 'தேங்காய் இல்லாமல் என்னத் தடா குருமா வைக்கற?' என குமுறுகிற வர்கள் இந்த நிலையையிலே நன்கு துருவிய தேக்காயையோ அல்லது சிறிது தேங்காய்ப் பாலையோ சேர்க்கலாம்.

8. இந்நேரத்தில் சுவையை சோதனை செய்வது புத்திசாலித்தனமான காரியம். காரம் போதவில்லையெனில் மேலும் மிளகுத்தூள் சேர்க்கவும். உப்பு போதவில்லையெனில் உப்பு சேர்க்கவும். கொதிக்க தண்ணீர் போதவில்லையெனில் சிறிது தண்ணீர் சேர்க்கவும். (அடேய்ய்ய்ய்ய்ய்ய்ய்ய்......!!! )

9. 15 நிமிடங்கள் கழித்து கறி நன்கு வெந்தவுடன் மூடியை திறந்து மீதமுள்ள வெங்காயத்தை போட்டு கிளறவும். இது வறுவலுக்கு ஒரு மொறுமொறு சுவையைக் கொடுக்கும். கொதி நிலையில் தண்ணீர் ஆவியாகி கெட்டியான குழம்பு பதம் வரும் வரைக்கும் கிளறி வதக்கவும்.

10. அடுப்பை அணைத்து வாணலியை இறக்கி வைக்கும் முன்பாக சிறுதுண்டுகளாக ஆய்ந்து வைத்திருக்கும் கொத்தமல்லித் தழையைப் போட்டு பிரட்டவும்.

அவ்வளவுதான் மேட்டர். நீங்கள் இறக்கி வைக்கும் முன்பாகவே வாசனை ஒரு தூக்கு தூக்கி உங்க பக்கத்து வீட்டு வெள்ளைக்கார ஃபிகரு கதவைத் தட்டி "May I join you for Lunch?"ன்னு கேக்கலைன்னா என்னை என்னான்னு கேளுங்க! மேலும் இது சாதத் துடனோ அல்லது சாப்பாத்திகளுடனோ சாப்பிட சுவையாக இருக்கும். குழந்தைகளும் இதை விரும்பி சாப்பிடுவார்கள். (சமையல் குறிப்பை இப்படித்தான் முடிக்கனுமாம்ல! )

படத்தில் இருக்கும் 3 பரோட்டாக்களும் தட்டி லிருக்கும் வறுவலும் இன்றைக்கு. கண்ணாடிப் பாத்திரத்தில் இருக்கும் மிச்ச வறுவல் நாளை மதியத்துக்கு :)

இதே செய்முறையை கையாண்டு நீங்கள் இருக்குமிடத்தைப் பொறுத்து டோரண்டோ, துபை, எல்லே, சிங்கை, டெல்லி, சென்னை கோழி வறுவல்களாகவும் செய்து சாப்பிடலாம்! ஹி... ஹி...

*http://ilavanji.blogspot.com*

## இது கவிதையல்ல

'அம்மா...' உள்ளத்திலிருந்து உதடு கத்தியது, அன்று அம்மியில் கை நசுங்கிய போது

பின்பு 'ஆ' என்றது, பென்சில் சீவ கையறுத்த போது


நேற்று 'Uhhhfff' ஆனது, பேருந்தில் அடுத்தவன் தவறி இடித்த போது


இன்று 'Oh shit!' ஆகிவிட்டது, தலையில் இலையுதிர் இலை விழுந்தாலே...

- *சிவகுமார்*


**Kerala Ayurvedic Health Clinic** (Near Wembley)

1 Odean Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex UB6 0NA
5 mins walk from Sudbury Town - Piccadly Line





▲ Massage Therapies by experienced and highly skilled therapists
▲ Treatment is designed around your individual health needs
▲ Safe and effective Ayurveda supplements/ medicines for your needs
▲ Only natural medicines are used
▲ No side effects at all
▲ Wide range of therapies


▲ Arthritis
▲ Frozen Shoulder
▲ High Blood Pressure
▲ Pulled Muscles
▲ High Cholesterol
▲ Trapped Nerve
▲ Paralytic Conditions
▲ Certain Skin Conditions
▲ Stress and Strain
▲ Back Pain
▲ Whiplash
▲ Obesity
▲ Joint Pain
▲ Digestive Disorders
▲ Diabetes
▲ Sleeplessness
▲ Stiffness
▲ Migraine

**FREE Consultation**

Authentic and Effective Kerala Ayurvedic Treatments
Qualified and Registered Ayurvedic Physicians
Affordable Prices

* Providing Free Steam Bath, Shower, Towels, Shampoo etc.,
* Male and Female therapists available
* Can speak in Hindi Tamil or English & Malayalam
* Free Parking

உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும், மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுர்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்.........



www.kahc.co.uk

**20%** Discount as Summer Special

**Call 020 8902 1104 / 020 8902 1707**

சிறுகதை

# தேர் நாள்



இரவு 8 மணி போல மாமா டெலிபோன் அடிச்சார். 'என்ன மாதிரி நாளைக்கு கோயில் வாற பிளான் ஏதும்?' எண்டு கேட்க நானும் உடனே 'ஓமோம்..வாறம் வாறம்' எண்டு துள்ளினன். எங்க, எத்தினை மணிக்கு சந்திக்கிறதெண்டு கதைச்சு வைச்சதும் தான் எனக்கு கவலை வந்திச்சு. 'இப்ப எந்த உடுப்பு போடுறது?' முதலே தெரிஞ்சிருந்தா 4,5 நாளுக்கு முதலே ரெடியா எடுத்து வைச்சிருக்கலாம் இப்ப என்னத்த போட எண்டு இரவிரவா ஒரே யோசனையோடை நித்திரையாப் போனன்

விடிஞ்சதும் அண்ணரோட கிளம்பிட்டன். ஹை வே ஆல இறங்கினதுமே ட்ரஃபிக்! இந்த ட்ரஃபிக்கில விசேசம் என்னவெண்டால் எல்லாம் நம்ம தமிழ் ஆக்களோட வாகனங்கள் எண்டது தான். யன்னலை இறக்கி விட்டுட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டு பொலீஸ்காரன் கையை காட்டின பாதையில போய் காரையும் பார்க் பண்ணிட்டு நடக்கத்தொடங்கினன். கோயில் வர 5 நிமிச நடை. சரியான கூட்டம். கூட்டத்துக்க நுழைய முதலேயே அண்ணா 'கையை விடப்படாது!' எண்டு அறிக்கை விட்டார். சரி எண்டு தலையை ஆட்டிப்போட்டு மாமாவையை தேட தொடங்கினம்.

ஒரு மாதிரி மாமாவை கண்டு பிடிச்சுட்டு கோயிலுக்க போய் அரிச்சனையும் பண்ணி அம்பாளை எனக்கு நல்ல புத்தி தரும்படி கும்பிட்டு வர அம்பாள் அழகா அலங்கரிச்சு தேரில ஏறி இருந்தா. எவ்ளோ நாளைக்கப்புறம் அம்பாள் தரிசனம் எண்டு நினைக்கவும் தேர் நகர அடிச்ச மேளம், நாதஸ்வர ஒலிகளிலும் ஒரு நிமிஷம் மெய் சிலிர்த்தது உண்மை தான்!

என் உயரத்துக்கு தெரியாவிட்டாலும் கொஞ்சம் எட்டி எட்டி காவடி ஆடுபவர்களை பார்த்துக்கொண்டு அம்பாள் என்னை கடந்து போக நம்மூர் அம்மன் நினைவோட கும்பிட்டன்.

'தேரோட போறேல்லையா' எண்டு கேட்க

'நீ நடப்பியா அவ்ளோ தூரம் அதுவும் உந்த ஹீலோட?' எண்டு பதில் கேள்வி வந்திச்சு.

அதோட மச்சான், மச்சாளும் அவ்ளோ தூரம் நடக்க மாட்டினம் எண்டிட்டு போய் கோயிலின் வலது பக்கத்துல ஒரு புல்வெளியில இருந்தன். வீட்டில இருக்கேக்குள்ள சாப்பாடு இருந்தாலும் பசிக்காது ஆனா இப்பிடி எங்காச்சும் வெளிக்கிட்டா ஏதோ 10 நாள் பட்டினி போல பசி வயித்தை கிள்ளும். சரி மாமாஆக்கள் தானே சாப்பாடு எடுக்க போயிருக்கினம் எண்டு அதில இருந்த புல்லுகளிண்ட தலையை கிள்ளி அதுகளை காயப் படுத்திக்கொண்டு இருந்தன். பசியெண்டு மட்டுமில்லை போகும் போது அண்ணா

'எண்ட தங்கச்சியை கவனமா பாருங்கோ' எண்டு 12 வயசு மச்சான்கிட்ட சொல்லிட்டு போனதும் இதுதான் நேரமெண்டு மச்சான் அதால பெடியங்கள் சும்மா போனாலும் அவையையும் என்னையும் ஒருக்கால் பார்ப்பதும் எரிச்சலா இருந்திச்சு. சரி மனசை வேறு எங்கையும் விடுவம் எண்டா அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்த அறிவித்தல்கள் காதில விழுந்திச்சு. பிள்ளைகளை பெற்றோர் தேடும் காலம் போய் பெற்றோரை பிள்ளைகள் அழுதபடி தேடும் காலம் வந்துட்டுது.

காரியாலயத்தில சின்னப்பிள்ளை ஒண்டு பெயர் கூட சரியாக சொல்லத்தெரியாமல் பெற்றோரை தேடி அழுதுகொண்டு நிற்பதாக ஒரு 4,5 தடவை அறிவிச்சாங்க. பிள்ளையின் உடையின் விவரம், கையில் கட்டியிருந்த கடிகாரத்தின் விவரம் சொல்லியே அறிவித்தார்கள். இப்படி அந்த முக்கால் மணி நேரத்துக்குள்ள பல குழந்தைகளின் அறிவித்தல்கள்.

மரவெள்ளிக்கிழங்கு, பூசனிக்காய், உருளைக்கிழங்கு குழம்பு, அப்பளம், பொரிச்ச மோர் மிளகாய் அத்தோட ஊறுகாயில் ஒரு சட்னி போல ஒன்று (சரியாக தெரியவில்லை) எல்லாம் சேர்த்து குழைத்த அம்பாள் அன்ன தான சோற்றை சொந்தத்தோட வட்டமாக இருந்து சாப்பிடுவதில எத்தனை சந்தோசம்.

யாரும் மூச்சு விடல. எல்லாரும் சாப்பாட்டில பிசி. அவ்வளவு பசி. அங்க ஒரு பைப்பில கன பேர் கை கழுவிக்கொண்டு நிண்டாங்க. நாங்களும் கை கழுவ போக அடுத்த ரண்டாவது ஆளா நான் கழுவ லைனில நிக்க உபயகாரர் ஒருவர் அரக்க பரக்க ஓடி வந்து

'இதில கை கழுவுறேல்லை. பாருங்கோ இவ்வளவு தண்ணி ஓடி சேறா இருக்கு. உங்கட வீடெண்டா இப்பிடி செய்வியளோ?'

எண்டு கோவத்தோட கேட்டதுமில்லாமல் ஒரு கையில பிள்ளையோட கையை கழுவிக்கொண்டிருந்த ஒரு அண்ணாவை பாதி கை கழுவியதோட பைப்பை திருப்பி மூடியும் விட்டார்.

'இதில் கை கழுவ கூடாது!'

எண்டொரு போர்ட்டை போட்டிருக்கலாம் தானே அப்படியெண்டு நான் சத்தமா சொல்லாம மெல்லமா மாமா காதில சொல்லிட்டு அங்கால போய் கையையும் கழுவிட்டு கடையளை பார்ப்பமெண்டு போனன்.

எனக்கு எங்காவது இப்பிடி போனால் அங்க ஒரு பொருள் வாங்கிடணும். அப்பத்தான் பிறகு 'அட இது அங்க வாங்கினது, இது இங்க வாங்கினது' எண்டு சொல்லிக்கலாம். அப்பிடி முதல் முதல் கோயிலுக்கு வந்திருக்கேன் ஏதும் வாங்குவம் எண்டா முடியலயே எண்டு நெனைச்சன். மச்சாள் கையை பிடிச்சு இழுத்துக்கிட்டே நிண்டா என்னெண்டு பார்த்தா பச்சைக் கலர் காப்பு பிடிச்சிருக்காம். சரியெண்டு உள்ள போய் காப்பை அவாவோட கையுக்கு அளவு பார்த்துக்கொண்டு நிக்க பக்கத்தில ஒரு ஆண்டி ' ஆஆ...' எண்டு கத்தினா. பார்த்தா பின்னால வந்த ஆண்டி பிள்ளையை வைச்சு தள்ளிக்கொண்டு வந்த வண்டி முன் சில்லு இவாவோட காலுக்கு மேல. ஆனால் அந்த ஆண்டி வண்டியை லொக்கில விட்டுட்டு என்னவோ சீரியசா பார்த்துண்டு நிக்குறா. அந்த ஆண்டிக்கிட்ட விசயத்தை சொல்ல ஆண்டியும் லொக்கை தட்ட தட்ட அது எடுபடுதில்லை. என்ன செய்ய எண்டு நானும் பார்த்துக்கொண்டு நிண்டன். அப்பத்தான் கடைக்கார அண்ணா வந்து வண்டில் முன் பக்கத்தை தூக்கி அங்கால வைச்சார். ' அட இந்த யோசனை எனக்கு வரலயே ' எண்டு நெச்சன். சரி கவனம் கடையில இல்லாம அங்கால எங்கையோ போகுது எண்டு கவலைப்பட்டால் இப்பிடி நல்ல யோசனைகள் வருமோ என்னவோ..!

காப்பு அளவில்லை எண்டு கவலைப்பட்ட மச்சாளுக்கு இன்னொரு கடையில வாங்கலாம் எண்டு ஆறுதல் சொல்லிக்கொண்டு வந்தா உடுப்பு கடை ஒண்டு. எங்கையோ பார்த்த பெயரா இருக்கே எண்டு மாமியோட ஒரு நோட்டம் விட்டா உள்ளுக்க பிடிச்ச சாறி, பிடிச்ச கலரில என்னை பார்த்து சிரிச்சுது.

## கொஞ்சம் எட்டி எட்டி காவடி ஆடுபவர்களை பார்த்துக் கொண்டு அம்பாள் என்னை கடந்து போக நம்மூர் அம்மன் நினைவோட கும்பிட்டன்.

அவ்ளோ தான். அந்த கடை ஆண்டிக்கிட்ட சாறியை வாங்கி பார்த்தா அந்த ஆண்டியையும் எங்கையோ பார்த்த ஞாபகம்.

கவனம் சாறில இருந்ததால யோசனையை விட்டுட்டு எல்லாருக்கும் சாறியை காட்டி கெட் பீஸ், போடர், நீளம் கூடவா இல்லை அப்புறம் கட்டிட்டு ரோட்டெல்லாம் கூட்டணுமா எண்டு செக் பண்ணிட்டு இருக்க அந்த ஆண்டி

'தங்கச்சி, சாறி எடுக்க போறியளோ? எடுக்கல எண்ட இங்க தாங்கோ'

எண்டா கடுகடுப்பான குரலில். அந்த கடுகடுப்பான குரலை கேட்டதும் தான் எனக்கு ஞாபகம் வந்திச்சு அவா யாரெண்டு. உடனே என்னை அறியாமலே என் முகம் மாறிச்சு பாருங்கோ. நானும் விடாமல்

'ஓம் எடுக்கப்போறன். அப்போ வடிவா பார்க்கலாம் தானே?'

எண்டு அதே தொனியில் சொல்லிவிட்டு பிறகு சாறியையும் வாங்கிகொண்டு வர மாமா நிண்டார். ஓடி வந்து மாமாகிட்ட

'மாமா அந்த ஆண்டி ஞாபகம் இருக்கா, அவேண்ட கடையில சாறி எடுக்கும் போது ரண்டு பேரும் கொஞ்சம் முறுகுப்பட்டம். சரியான டென்சன் பார்ட்டி! எப்பிடி மாமா எனக்கு எப்பவும் இவா வந்து வாய்க்குறா?'

எண்டு கேட்க மாமா முகத்தில ஒரு ரியாக்சனும் இல்லை. மாமி பின்னால நிண்டு கையில நுள்ளினா. திரும்பினா அங்க மச்சானுக்கு குர்தார் காட்டிக்கொண்டு நிண்டது அந்த ஆண்டியோட ஹஸ்பண்ட்.

'ஐயோ கடவுளே!!'

மாமாக்கு அவர் நல்ல பழக்கம் எண்டதால

'தான் சொல்ல முடியாததை நீ சொல்லிட்டா எண்டு சந்தோசப்படுறார்!'

எண்டு மாமா நக்கலா சொல்ல அந்த அங்கிளும் கோவிக்காம சிரிச்சது ஆச்சர்யமா இருந்திச்சு. ஆனாலும் அப்பாடி நான் தப்பினதே பெரிய விசயம் எண்டு நடந்தன்.

அதுக்கு மேல என்னால நடக்க முடியல. கால் அவ்ளோ நோவு. நடக்க நடக்க குதி காலில இருந்து முழங்கால் வரை நரம்பு நோகுமெண்டாலும் ஸ்டைலா ஹில் போடோணும். நோகும் எண்டதுக்காக அதை விடவும் முடியுமா?

வெயில் வேற, நாக்கெல்லாம் காஞ்சு போச்சு. அப்ப பாத்து மோர் குடுத்தாங்க. தயிருக்குள்ள சின்னதா வெங்காயம், மிளகாய் வெட்டிப்போட்டு, ஊறுகாயும் போட்டு பாதி புளிப்பு பாதி உறைப்பா நல்ல டேஸ்ட்டா இருந்திச்சு.

மத்த ஒருத்தரும் வேண்டாம் எண்டு பயந்திச்சினம். எனக்கொரு கப்பும் மாமாக்கு ஒரு கப்பும் போய் அந்த கூட்டத்துக்கால கஷ்டப்பட்டு வாங்கி வந்து குடிச்சன்.

பக்கத்தில இருந்த றோட்டில எல்லாரும் இருந்து களைப்பாறினம். அப்பாடா எண்டு ஹிலை கழட்டி வைச்சுட்டு காலுக்கு கொஞ்ச நேரம் விடுதலை குடுத்துட்டு நானும் இருந்து போற வாற ஆக்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தன்.

பக்கத்தில ஒரு வெள்ளைக்காரி சாறி கட்டி இருந்தா. இல்லை..இல்லை கட்டப் பழகி இருக்கா. அவவோட அந்த வெள்ளைக்கலருக்கு குங்கும கலர் சாறி நல்ல வடிவா இருந்திச்சு என்று உள் மனம் சொன்னாலும் வெளியில அதை ஒத்துக்க முடியாம அவா சாறி கஷ்டப்பட்டு கட்டியிருப்பதை நக்கல் அடிச்சுக்கொண்டு இருந்தன்.

அப்போ மாமா பெடியள் கூடுறாங்கள் ஏதும் வெட்டுக்குத்து ஐடியாவோ தெரியா. வெளிக்கிடுவம்'

எண்டு சொன்னார்.


ஆக்கள் குறைவான இடம் எண்டதாலை கொஞ்சம் கெந்தி கெந்தி நடந்து கொண்டு காரை தேடி பிடிச்சு வெளிக்கிட்டம்.

காரிலை பாட்டையும் கூட்டி விட்டுட்டு வெளியில நான் போக போக தூரமா போற வானத்தையும், என் கூடவே வாற மேகங்களையும் பார்த்தபடி காரில் போய்க் கொண்டிருந்த போது நம்மூர் தேர் ஞாபகங்களை ஒருக்கால் மீட்டுப் பார்த்தன்...

அம்மன் தேர் எண்டால் நண்பியோடு கதைச்சுப்பேசி கலர் காட்டவெண்றே ஒரே கலர் சட்டை போடுவது, கை நோக நோக தேர் இழுப்பது, கச்சானோடு அரச மர நிழலில இருந்து கதை அளப்பது என்று பல ஞாபகங்கள் வந்திச்சு....


அப்போ தான் 'நினைவுகள் நெஞ்சினில் திரும்பிட திரும்பிட ஏக்கங்கள்' எண்ட ஏதோ ஒரு பாட்டின் வரி எவ்ளோ உண்மை என்றும் விளங்கிச்சு...


- *பிரியசகி*



# ஸ்ரீ கணபதி ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் **அர்ஜுனா ராஜு குருஜி ஜெங்கம்மா**





கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒரு முறை சந்தித்துப் பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சனை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். ஆயுர் வேத மருந்துகள் சகல விதமான வியாதிகளுக்கும் நாடி பார்த்து மருந்து தரப்படும்.

60 வருட அனுபவம்

**07951 631 883 / 020 8470 5209**

1st Floor, Sai Hair Dressers, 345 A High Street North, Manor Park, London E12 Open Seven days a Week

# சாய்ந்த கோபுரங்கள்...

## பொதுவுடமைவாதிகளின் தமிழ்ப் பற்று

**இளங்கோ**
*(ஒரு பேப்பருக்காக)*

சில ஆண்டுகளுக்கு முன் பாரிஸ் நகரில் நடந்த கூட்டம் ஒன்றிற்குச் சென்றிருந்தேன். அங்கிருந்த நம் தமிழ் உறவுகளுடன் உரையாடத் தொடங்கியபோது அவர்கள் அனைவரிடமும் ஒரு பொதுத் தன்மை இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. ஆம்! அனைவருமே மார்க்சிய லெனினய தத்துவங்களில் ஊறித் திளைத்திருந்தார்கள்.

எனக்கும் பொதுவுடைமைத் தத்துவங்களில் ஈடுபாடு வரத்தொடங்கிய காலம் அது. நான் எண்ணிப் பார்க்கிறேன், பொதுவுடைமைக் கருத்துக்கள் மீதான எனது ஈடுபாடு கவிஞர் பட்டுக் கோட்டை கலியாணசுந்தரம் அவர்களின் பாடல்கள் வழியாகத்தான் முதன் முதலாக ஏற்பட்டது.

உழைப்பின் மேன்மை பற்றியும் தொழிலாளர்களின் வாழ்வியல் அவலங்களையும் அந்தத் தொழிலாளி வர்க்கத்தை சுரண்டி வாழும் முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தையும் அவரது பாடல்கள் மிக அழகாக வெளிக்காட்டியிருக்கின்றன.

குறிப்பாக நாடோடி மன்னன் திரைப்படத்தில் வரும் 'காடு விளைஞ்சென்ன மச்சான் நமக்கு கையும் காலுந்தானே மிச்சம்' என்ற பாடல் எனக்கு மிகவும் பிடித்த பாடல்களில் ஒன்று. அதைப் போன்று காலுக்குச் செருப்புமில்லை கால் வயிற்றுக் கூழுமில்லை பாழுக்கு உழைத்தோமடா என் தோழனே பசையற்றுப் போனோமடா என்ற தோழர் ஜீவாவின் வரிகளும் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தின.

அதன் பின்னர்தான் மார்க்ஸ், ஏங்கல்ஸ், ட்ரொட்ஸ்கி போன்றவர்களின் கருத்துக்களை படிக்கத் தொடங்கியிருந்தேன்

இப்படி ஒரு கால கட்டத்தில் அந்தக் கூடத்திற்குச் சென்றதால் அவர்களின் பேச்சுக்கள் வழியாக மேலும் பல பயனுள்ள விடயங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. நல்லதொரு கூட்டத்திற்கு வந்திருக்கிறேன் என என் மனம் மகிழ்ந்தது. ஆனால் அந்த மகிழ்ச்சி தொடர்ந்து நீடிக்கவில்லை.

### மார்க்சோ அல்லது லெனினோ தேசியத்தின் இருப்பை என்றும் மறுத்தது கிடையாது.

தமிழ்த் தேசியம் தொடர்பாகவும் ஈழப் போராட்டம் தொடர்பாகவும் அவர்கள் முன் வைத்த கருத்துக்களை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

தேசியம் கற்பிதம் என்றும் சிங்கள வெறி பிழை என்றால் தமிழ் வெறி மட்டும் சரியா என்றும் கேள்வி எழுப்பினார்கள். இன அழிப்பை மேற்கொள்ளும் சிங்களப் பெருந் தேசியத்தையும் அந்த அழிப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக போராடும் தமிழ்த் தேசியத்தையும் அந்தத் தோழர்கள் ஒன்றாக ஒப்பிட்டது எனக்கு ஒரு வித சினத்தையும் ஏற்படுத்தியது.

அவர்கள் மட்டுமல்ல அன்றிலிருந்து இன்றுவரை நான் அறிந்து கொண்டிருக்கும் பெரும்பாலான பொதுவுடைமைவாதிகளும் பொதுவுடைமைக் கட்சிகளும் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை கொண்டிருப் பதையே கண்டுவருகிறேன். (தோழர் மணியரசன், தோழர் தியாகு, தோழர் நல்லக் கண்ணு போன்றவர்களை விதிவிலக்குகள் என்றே எண்ணத்தோன்றுகிறது)

ஈழப் போராட்டத்திற்கு பாசிசப் பட்டம் கட்டும் இவர்கள் ரஷ்யாவின் சர்வாதிகாரியாக இருந்த ஸ்டாலினைப் போற்றுகிறார்கள். தோழர் லெனின் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒப்பற்ற தலைவர். ஆனால் ஸ்டாலின் அப்படி அல்ல அவரது நோக்கம் உயர்ந்ததாக இருக்கலாம் ஆனால் சகிப்புத் தன்மையற்று அவர் நடத்திய மனித வேட்டைகள் உலக வரலாற்றின் கறுப்பு அத்தியாயங்கள். ஆனால் நமது பொதுவுடைமை தோழர்களுக்கு அது தவறாகப் படுவதில்லை.

தமிழ்த் தேசியத்தை மதவாதிகள், இந்தியத் தேசியவாதிகள், சிங்கள இனவாதிகள், ஏகாதிபத்திய அடிவருடிகள் எதிர்க்கலாம், பொதுவுடைமைவாதிகள் ஏன் எதிர்க்க வேண்டும். மார்க்சோ லெனினோ தேசியத்தின் இருப்பை என்றைக்கும் மறுக்கவில்லை

'தேசிய இனங்களின் தன்னுரிமை அவர்களின் பிறப்புரிமை' என்ற புரட்சியாளர் லெனின் கோட்பாடு பொதுவுடைமைவாதிகளாலேயே கல்லறைக்கு அனுப்பப் படுகிறது.

வரலாற்றை சற்று பின்னோக்கிப் பார்க்கும் போது பொதுவுடைமைவாதிகளின் பல தவறுகளை புலப்படுகின்றன.

பேராசான் கார்ல் மார்க்சின் மறைவுக்குப் பின் அவரது தத்துவார்த்த வாரிசாக விளங்கி தேசியங்களின் சுய நிர்ணைய உரிமைக்காக குரல் கொடுத்த கார்ல் கவுட்ஸ்கி பின்னர் நிறம் மாறி முதலாவது உலகப் போரில் தனது சொந்த நாடான ஜேர்மனியின் நில ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் செயலைச் செய்தார்.

இலங்கையில் இரு மொழி ஒரு நாடு அல்லது ஒரு மொழி இரு நாடுகள் என்று தேசியத் தன்மைக்கு சரியான விளக்கம் கொடுத்த கொல்வின் ஆர்.டி.சில்வா பின்னர் அந்தக் கொள்கையில் இருந்து விலகி தமிழர்களின் உரிமையை மறுக்கும் விதமாக 1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பை எழுதினார்.

1965 ஆம் ஆண்டு டட்லி - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடத்திய இனவாத ஊர்வலத்தில் சமசமாஜக் கட்சியும் சோவியத் சார்பு கொம்யுனிஸ்ட் கட்சியும் கலந்து கொண்டன. இடதுசாரி இயக்க வரலாற்றிலே வெட்கக் கேடான நிகழ்வாக இது கருதப் படுகிறது.

இவர்கள் எல்லாரையும் விட இந்தியக் கொம்யுனிஸ்டுகளின் தேசியம் தொடர்பான கருத்து மற்றும் செயற்பாடுகள் அசல் கேலிக் கூத்தாக இருக்கிறது.

### பெரும்பாலான பொதுவுடைமை வாதிகளும் பொதுவுடைமைக் கட்சிகளும் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை கொண்டிருக்கிறார்கள்.

மக்களின் நலனை அவர்களின் உரிமைகளை புறந்தள்ளி வெறும் மண்ணுக்கு மட்டும் தெய்வீகப் பட்டம் கட்டி அதை பாரத மாதாவாக வழிபாடு செய்யும் இந்தியத் தேசியத்தை ஏற்றுக் கொள்ளும் இவர்கள் ஒடுக்கப் பட்ட இனத்தின் குரலாக ஒலிக்கும் தமிழ்த் தேசியத்தை மறுக்கிறார்கள்.

அந்தக் கேலிக் கூத்தின் மற்றொரு வெளிப்பாடுதான் பஞ்சாப் தலைநகர் சண்டிகாரில் நடைபெற்ற தங்களது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜே.வி.பி. தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தது.

ஈழப் பிரச்சினையில் மட்டுமல்ல கஷ்மீர், அஸ்ஸாம், பஞ்சாப், நாகலாந்து பிரச்சனைகளில் எல்லாம் இந்தியத் தேசியத்தைக் காப்பாற்றுவதற்காக இவர்கள் செய்யும் மார்க்சியத் துரோகம் கொஞ்ச நஞ்சமல்ல.

மேற்கு வங்கத்திலும் கேரளாவிலும் கொம்யுனிஸ்ட்டுகள் அவரவர்களுடைய மொழி வட்டத்திற்குள் இருக்கும் போது தமிழ் நாட்டில் உள்ள இந்தியக் கொம்யுனிஸ்டுகள் மாநிலப் பார்வை தவறு அகில இந்தியப் பார்வைதான் சரியானது என்கிறார்கள்.

*(தொடர்ச்சி 39ம் பக்கத்தில்)*

**Thinking of selling, buying or letting your property?**
**An efficient property sales, letting and management service**

man & co


3 Fryent Way, Kingsbury, London NW9 9ER

உங்கள் வீடுகளை தரமான விலையில் விற்கவோ அல்லது வாங்கவோ வாடகைக்கு விடவோ தரமான முறையில் ஒழுங்கு செய்து தரப்படும்.

Mortgage எடுக்க கடினமாக உள்ளதா எதுவித தடங்கலும் இல்லாமல் செய்து தரப்படும்.
பகுதி நேரம் வேலை பார்ப்பவர்களுக்கும் வேறு நாடுகளில் இருந்த வண்ணம் இங்கு வீடுகள் கடைகள் வாங்க விரும்புபவர்களுக்கும் குறைந்த Deposit உடன் செய்து தரப்படும்.





**Buying**
Adverts on web and local papers
Computerised Mailing System
Accompanied viewings
Open 6 days a week



**Rentals**
Property Management Services
Guaranteed Rental Scheme
Maximum Rent Achieved
Rent your property immediately
All viewing accompanied
Maximum exposure through wide range of adverts
In-housing property maintenance

**Sales**
Adverts on web and local papers
Computerised Mailing System
Accompanied viewings
Open 6 days a week




Estate Agents

Tel: 020 8206 9930 Fax: 020 8206 9931
Email: info@manandco.co.uk / Web: www.manandco.co.uk

மட்டைக் கிளப்பானின்....

# அலசுவாரம் -36

தன்னைப்பற்றி மற்றவர்கள் என்ன கணிப்பிட்டு வைத்திருக்கிறார்கள், என்ன விமர்சனங்கசைச் செய்கிறார்கள் என்பதை விமர்சிக்கப்படுபவர் சொல்வதில் சங்கடங்கள் அதிகமில்லை. நாம் மற்றவர்களைப் பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறோம் என்பதை வெளிப்படையாகச் சொல்வதில்தான் பலருக்கு மன உளைச்சல் வர வாய்ப்பிருக்கிறது.

பிரதேசங்களைப் பற்றிய ஆய்விலும் இது பொருந்தும். இந்தத் தொடரை விரும்பி வாசிக்கும் ஒரு நண்பர் கேட்டார் என்ன! நீங்கள் ஒரு மாதிரியாக எழுதுகிறீர்கள். உங்கள் பிரதே சத்தைப் பற்றி மற்றவர்கள் சொல்வதையெல்லாம் ஏன் எழுதுகிறீர்கள் வீணாக நீங்களே ஏன் உங்களைத் தாழ்த்திக்கொள்கிறீர்கள் என்று. இதில் தாழ்த்துவதற்கு என்ன இருக்கிறது? தாழ்த்தவோ உயர்த்தவோ இத் தொடர் எழுதப்படவில்லை. என்னால் முடிந்தவரை யதார்த்தம் என்ன என்பதைச் சொல்லிக் கொண்டு போகிறேன். உண்மையை விட மிகவும் இலகுவான வழி சொல்வதற்கு வேறில்லை.

இங்கே எனக்குத் தெரிந்த, நான் கேட்டுக் கண்டு அனுபவித்தவற்றையே எழுதுகிறேன். அவ்வளவுதான். எனக்கு மாந்திரீகத்தில் நம்பிக்கையில்லை. ஆனால் மட்டக்களப்பார் மாந்திரீகத்தில் கைதேர்ந்தவர்கள் என்ற கருத்து பிற பிரதேசத்தவர்களிடையே நெடுங்காலமாக நிலவி வருகிறது. நான் சிறுவயதில் வெளிப்பிரதேசத்தில் படித்தபோது எனக்கு மந்திரவாதியென்ற பட்டம். பெரும்பாலும் என்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவதைவிட நண்பர்கள் டேய் மந்திரமென்றே கூப்பிடுவார்கள். நானும் அந்தப்பட்டத்தை எனக்குச் சகஜமான பெயராக எடுத்துக்கொண்டேன். மேலும் அந்தக்காலத்து எனது அறியாப்பருவத்து சகபாடிகளை மிரட்டிவைக்கவும் அதைப் பயன்படுத்திக் கொண்டேன்.

## மட்டக்களப்பான். இவனுக்குக் கிட்டப்படுத்தால் - பாயோடு ஒட்ட வைத்திடுவான்

என்று பாடுவார்கள். நானும் ஆமாம்மென்று தலையாட்டிக் கொள்வேன். யாருமற்ற தனிமையான சூழ்நிலையில் உள்ளூர் மாணவர்களின் அட்டகாசத்தில் இருந்து என்னைப் பாதுகாத்துக்கொள்ள நானொரு பெரிய மந்திரவாதியென்ற நினைப்பு எனக்குப் பெரிதும் உதவியிருக்கிறது. நான் ஓர் மந்திரவாதியென்று என்னை நினைத்ததற்கு அந்த அறியாப் பருவத்தில் சக மாணவர்கள் தாங் களாகவே என்னை அந்த நிலையில் வைத்துப் பாாத்தது மட்டும் காரணமில்லை.

எனக்குச் சில மந்திரங்களும் தெரிந்திருந்தன. எங்களூரில் எங்கள் குடிமரபினரின் குலதெய்வமான வீரபத்திரர் ஆலயமொன்றுண்டு அங்கு பூசாரிகளாயிருந்த பலபேர் - கிட்டத்தட்ட எல்லோருமே மாந்திரீகர்கள். முன்பு அங்கே கோழிப்பலியிடுவார்கள். ஆடுவெட்டி நான் பர்த்ததில்லை. முன்பு அந்தப் பழக்கமும் இருந்தது. பின்னர் அது நிறுத்தப்பட்டு ஆட்டின் ஒருகாதை மட்டும் சிறிதாக அறுத்து விடுவார்கள். கோழி பலியிடுவதையும், ஆட்டின் காதை அறுப் பதையும் நான் பார்த்திருக்கிறேன்.

அப்போது பல மந்திரங்கள் ஓதப்படும். கோயிற் கதவு திறந்திருக்கும். உள்ளே இருக்கும் ஆதிவீரபத்திரர் சிலைக்கு முன்னால் வெளியில் நின்று ஆவேசமாக மந்திரங்களை முணு முணுத்துத் தலைமைப் பூசாரி உருவேறி ஆடுவார். அவரை திடகாத்திரமான ஒருவர் அவர் கோயிலுக்குள் ஓடிவிடாமலிருக்க பின்னால் கட்டிப்பிடித்துக் கொள்ளுவார். வேப்பிலை கொண்டு அவருக்குப் பூசாரிமார் மந்திரஞ்சொல்லி அடிப்பார்கள். அந்த நேரத்தில் பார்த்திருக்கும் பக்தர்களில் பலருக்கும் சாமி வந்துவிடும்.சாமி வந்ததா பேய் வந்ததா என்று சொல்ல முடியாது. ஏனென்றால் பேயாடுதல் என்றும் அதற்குச் சொல்வதுண்டு. சிலருக்கு அனுமார் வாலாயம். சிலருக்கு காளி வாலாயம். இவைகளெல்லாம் தெய்வங்கள். ஆனால் சிலருக்கோ காட்டேறி வந்து விடும். அது பேய். இதையெல்லாம் தீர்மானிப்பது பார்த்திருக்கும் ஆட்கள்தான். உரு வந்தவரின் சமூகத் தராதரத்திற்கேற்ப கொஞ்சம் தரம் கூடியவருக்கு சாமி அல்லது தெய்வமும் தரம் குறைந்தவருக்கு பேயும் வந்ததாக ஞாபகம்.

உருவேறிய பேயோ சாமியோ சாட்டை கேட்கும். முறுக்கிய கயிற்றினால சாட்டையடியைக் கையை உயர்த்தி வாங்கும். குடும்பத்தில் கணவனின் இடைவிடாத அடக்கு முறையினாலும், பிள்ளைகளின் கொடுமைகளாலும் நெஞ்சினுள்ளே வேதனைகளைச் சுமந்துகொண்டு அடங்கியொடுங்கிக் கிடக்கும் ஏழைப் பெண்களின் உணர்ச்சிப் பீறல்கள் சாமியாய்த் தெய்வமாய் அல்லது பேயாய் வெளிப்பட்டு ஏதோவாரு வகை ஆத்மத் திருப்தியையும் மனச்சாந்தியையும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய அக்காலத்திய உணர்வு வடிகால்கள் இப்போதெல்லாம் இல்லாது போய்விட்டன.

புதிதாக கௌன்சிலிங் முறைகள் வந்துவிட்டன. சைக்கியாடரிக் சிகிச்சைமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. நவீன யோகா, தியான முறைகள் தற்போது பிரபலம். கிடடத்தட்ட யோகா ஒரு பாஷனாகவே மாறி வருகின்றது. நம் நாட்டில் சுனாமியில் செத்துப்போனதால் சொந்தங்களை இழந்து தவிக்கும் அனேகருக்கு கௌன்சிலிங் இலவசமாகச் செய்கிறார்கள்.

அதனால் பேயாட வேண்டிய அவசியம் கிட்டத்தட்ட இல்லாமலே போய்விட்டது. ஆனாலும் செல்ப் ஹிப் நாட்டிச மென்கிற சுய மனோதத்துவச் சிகிச்சைகளாக உருவந்து ஆடுதல் போன்ற வழி முறைகள் இருக்கும் போது, அந்தச் சிகிச்சையை ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் தம்மையறியாமல் தமக்குத்தாமே செய்துகொள்கிற பல பாதிக்கப்பட்ட அப்பாவிகள் தம் முள் நிறைவடைவது மட்டுமல்லாமல், பிறரால் தமக்கு ஏற் படுத்தப்படும் தீங்குகளிலிருந்தும் கூட ஓரளவு தப்பிக்கை கொள்கிறார்கள். ஓல்ட் இஸ் கோல்ட் என்று சொல்வார்கள்.

எவ்வளவுதான் மூடத்தனங்களென்று நாம் சிலவிடயங்களைக் கருதினாலும் அதிலே நல்ல அம்சங்களும் இல்லமலில்லையென்பதை வலியுத்துவதற்காகவே நான் மேற்சொன்ன சிலவற்றை எழுதினேன். சரி விடயத்துக்கு வருவோம். இப்போது எங்களூர் வீரபத்திரர் கோயிலில் பலிகள் நிறுத்தப்பட்டு பழைய மந்திர பூசையை மாற்றி பூசாரிகளுக்குப் பதில் அர்ச்சகர்கள் அதாவது குருக்கள்மார் வேத சுலோகங்களால் பூசை செய்கிறார்களாம். ஆக சட்டியிலிருந்து அடுப்பினுள் விழுந்திருக்கிறோம்.

மட்டக்களப்புப் பிரதேச மக்களின் சமூகப் பின்னணியில் தந்தை வழிக்கு முன்னுரிமை கொடுக்காத தாய் வழிமுறைமை காணப்படுவதையும், அவர்களின் உணவுப் பழக்கங்கள் பேச்சு முறை உட்படப் பல விடயங்களையும் கருத்திற்கொண்டு நோக்குகையில் அவர்களுக்கு மலையாள தேசத்தவர்களுடன் தொடர்கள் இருந்திருப்பது முன்பே கூறப்பட்டது.

மலையாள நம்பூதிரிகள் வைக்கும் கன்னத்துக் கொண்டையை எனது தந்தையார் மாமன்மார் அத்தான் மார் உட்படப் பலரும் வைத்திருந்ததை நோக்கும்போது இது மேலும் ஊர்ஜிதமாகின்றது. இதற்கும் மேலாக மட்டக்களப்பில் காணப்படும் மாந்திரீகமும் மலையாள மாந்திரீகத்திலிருந்தே வந்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகின்றது.

*தொடரும்*

# இல்லந்தோறும் இனிய வாழ்வு

## தூக்கம் அவசியமா

**Dr. பாலேந்திரன்**
*(ஒரு பேப்பருக்காக)*

தூக்கம் மனிதருக்கும், விலங்குகட்கும் மிக அவசியம். இரண்டு நாட்கள் நீரருந்தாமல் இருக்கலாம், ஐந்து நாட்கள் உணவு உண்ணாமல் இருக்கலாம். ஆனால் உணவும் நீரும் கிடைத்தும் ஒருவர் ஐந்து நாட்கள் தூங்காமல் இருப்பாராயின் அவரின் உடல் மூளையாகியன செயற்பாடு மங்கிப்போகும். தூக்கத்தின் போதுதான் உடல் உள் உறுப்புக்கள் ஓய்வு பெறுகின்றன. தினசரி செயற்பாட்டால் அழிந்து போன உடல் கலங்கள் புதுசாக உருவாகின்றன. உடல் வளர்ச்சிக்கான Growth Hormone நல்ல தூக்கம் ஆட்கொண்ட நேரத்தில் தான் நன்கு சுரந்து செயற்படுகின்றது.

தூங்கும் போது பொதுவாக இரவுக்கும் காலைக்கும் இடையில் 2 முதல் 4 தடவை விளிப்பு ஏற்படுவது வழமை. ஒவ்வொரு முறை விழித்த பின்னர், மறு முறை தூக்கம் முழுமையாக ஆட்கொள்வது Sleep Cycle எனப்படும். ஒவ்வொரு Sleep Cycleம் இரண்டு பாகங்களாக பிரிக்கப்படலாம்.

முதல் பாகம் Rem எனப்படும். இதன்போது கண்பந்து வலம் இடமாகவோ, மேல் கீழாகவோ அசைந்த வண்ணம் இருக்கும். இது Rapid Eye Movement எனப்படும். இது சற்று ஆழ்ந்த உறக்க நிலையாகும். இதன்போது கனவுகள் வரலாம். இதன் போது முதலில் உடல் ஓய்வு அடைகிறது. அடுத்து படிப்படியாக மூளை ஓய்வடைகிறது. படிப்படியாக ஆழ்ந்த உறக்க நிலையை அடைகின்றது. இவ்வாறு முழுமையான தூக்க நிலையை சுமார் எட்டு மணித்தியாலங்கள் அனுபவிக்கும் போது உடலும் மனமும் புத்துணர்வு பெறுகின்றன.

தூக்கத்தை மனவுழைச்சல், உடல்நோய், மனநோய், புதிய சூழல், வசதிக்குறைவான படுக்கை, அதிக வெப்பம், அதிக குளிர், அதிக சப்தம், பசி, துக்கம் போன்றவை பாதிக்கின்றன, அடுத்ததாக தூக்கம் சம்பந்தமான நோய்களைப் பார்ப்போம்:

1.Insomnia - தூக்கம் குறைவான நிலையாகும். பாதிக்கப்பட்டவருக்கு படுக்கைக்கு சென்று அதிக நேரத்தின் பின்னரே தூக்கம் வரலாம், அல்லது விரைவாக தூக்கம் வந்தாலும் குறுகிய காலத்திற்குள் விழிப்பு ஏற்பட்டுவிடும் அல்லது விடிவதற்கு சில மணிக்கு முன்னரே தூக்கம் முழுமையாக தடைப்பட்டுவிடும்.

2.Sleep Apnea - இவர்களுக்கு தூக்கம் விரைவில் வந்துவிடும். ஆனால் ஆழ்ந்த தூக்க நிலையை அணுகும் போது சுவாசிக்கும் வேகம் குறைவடையும். இதனால் மூச்சு திணறலுடன் விழிப்பு ஏற்பட்டுவிடும். விழித்தவுடன் சுவாச வேகம் சீரடையும். இதற்கான காரணங்களாவன மூளை நரம்பு மண்டலத்தில் உள்ள குறைபாடு, அல்லது சுவாசகுழாய்களில் ஏற்படும் அடைப்புகளாகும்.

3.Periodic Leg Movement Syndrome - இவ்வாறானவாகள் தூங்கும்போது கால்களை அசைத்துக்கொண்டிருப்பார்கள் அல்லது மடக்குவதும் நீட்டுவதுமாக இருப்பார்கள். இதனால் தூக்கம் தடைப்படும்.

4.Narcolepsy - இவ்வாறு பாதிக்கப்பட்டவர் மிக நீண்டநேரம் தூக்கத்தில் இருப்பர். பகலில் இவ்வாறு தூக்கம் ஏற்பட்டால் விழித்தவுடன் கோபப்படுவார்கள் அல்லது சிரிப்பார்கள். இவர்கள் இரவில் தூங்கி விழிக்கும்போது கை, கால் போன்றன இயங்கமுடியாது இருப்பது போன்று உணர்ந்து மிகவும் சங்கடப்படுவார்கள். அடுத்து தூக்கமின்மைக்கான சில சிகிச்சைகள்

முதலாவதாக போசாக்கானதும், அளவாகவும் உண்ண வேண்டும். மது அருந்துபவர்கள் அளவைக் குறைக்க வேண்டும். இரவில் தேநீர், காப்பி அருந்துவதை தவிர்க்க வேண்டும். Vitamin B3 மாத்திரை இரவில் சாப்பிட வேண்டும். மேலும் "Multivitamin with Minerals" என்ற மாத்திரையை தினமும் உண்பதன் மூலம் உடலுக்குத் தேவையான Vitamin மற்றும் Minerals முழுமையாக கிடைப்பதால் தூக்கம் சீராக வரும். தினமும் உடற்பயிற்சி செய்வது இரவில் குளித்து பின் தியானம் செய்வது மன நிம்மதியை தருவித்து அதனால் தூக்கத்திற்கு உதவும். தூக்கம் தரவல்ல பக்கவிளைவுகள் அற்ற பல மூலிகை மருந்துகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தலாம். இறுதியாக சீரான தூக்கம் உடல் ஆரோக்கியத்துக்கு மிக அவசியம் என்பதையும் தூக்கமின்மை நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் முறையான சிகிச்சை பெறுவது மிக அவசியம் என உணரவேண்டும்.

"வாயப்பாத்துக் கொண்டு நிக்காதையுங்கோ
வாருங்கோ வந்து சேருங்கோ"

புதிதாக யாரும் இணையலாம்

www.orudirectory.com

# அந்தக் கருமத்தை நானும் பார்த்தேன்...

**சுகுணா திவாகர்**
*( மிதக்கும் வெளியில் )*

பத்து வருடங்களுக்கு முன்புவரை ரஜினி என்றால் மெண்டல் என்றும் பரட்டை என்றும் ஒரு இமேஜ் இருந்தது. ஆனால் அது திடீரென்று ஆன்மீகவாதியாக அரசியல் தீர்மானிப்பாளராக என்று பலவிதத் தோற்றங்களுக்கு மாறிவிட்டது. மேலும் ரஜினி ரசிகர்கள்தான் ரஜினி படம் பார்ப்பார்கள் என்கிற நிலை மாறி எல்லோருமே ரஜினி படத்தைப் பார்த்தாக வேண்டும் என்கிற ஒரு 'நிர்ப்பந்தம்' எப்படியோ உருவாகிவிட்டது. ஒருவேளை ரஜினியின் படம் 'எப்போதோ ஒருமுறை' வெளியாகாமல் மூன்றுமாதத்திற்கு ஒருமுறை வெளியானால் அதை யாரும் சீந்தமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

ரஜினியின் குறும்பும் ஸ்டைலும் பைத்தியக்காரத்தனமான சேட்டைகளும் நகைச்சுவைகளும் எனக்கும் பிடித்தமான ஒன்று. சமயங்களில் கமலின் படங்களில் உறுத்தும் நடுத்தரவர்க்கத்து புத்திசாலித்தனப் பாவனையும் போலி முற்போக்கும் எரிச்சலூட்டுபவை. இதனாலேயே ரஜினியை ரசிக்க வேண்டியிருக்கிறதோ என்ற எண்ணமும் எழுகிறது.

ஆனால் ரஜினி தத்துவஞானி ரேஞ்சிற்குப் பெண்களைப் பற்றி உதிர்க்கும் கருத்துக்கள் எப்போதும் எரிச்சலூட்டுபவை. இதோடு ஷங்கர் என்கிற விஷக் கிருமியும் சேர்ந்து விட்டதால் எப்படியும் படம் மோசமாகத்தானிருக்கும் என்ற அரசியல் ரீதியான முன் தீர்மானத்தோடு சிவாஜி படத்திற்குச் சென்றால்.. ஏதோ தெலுங்குப் படத்திற்கு வந்து விட்டோமோ என்று தோன்றியது. 'சிவாஜி - த லூசு' குழந்தைகள் பார்க்க வேண்டிய அனிமேஷன் படம். இனிச், சில அபத்தங்கள்.

● அமெரிக்காவில் மென்பொருள் பொறியாளராக இருந்தால் 200 கோடி சம்பாதிக்க முடியுமா என்பதை அமெரிக்க வாழ் நண்பர்கள்தான் சொல்ல வேண்டும். அப்படியே 200 கோடி சம்பாதித்தாலும் அத்தனையயும் இலவசச் சேவைக்கு ஒருவன் வழங்க முடியுமா என்ன? திட்டமிட்டு ஆதி (சுமன்) சிவாஜியை நடுத்தெருவிற்குக் கொண்டுவருகிறார் என்கிறது கதை. ஆனால் சுமன் அப்படியே விட்டுவிட்டால் கூட சிவாஜி இருக்கிற பணத்தையெல்லாம் இலவசச் சேவை செய்து விட்டு நடுத்தெருவிற்குத்தான் வந்திருப்பார்.

● இந்தியாவில் அனைத்துத் துறைகளிலும் ஊழலும் லஞ்சமும் ஊடுருவியிருக்கிறது. ஆனால் இன்கம்டாக்ஸ் அலுவலகத்தில் மட்டும் நேர்மையான அதிகாரிகளே வேலை செய்கின்றனர். ரஜினி தகவல்? கொடுத்தவுடனே கருப்புப்பணம் வைத்திருப்பவர்களைப் பிடித்துச் சென்று விடுகின்றனர். புல்லரிக்கிறது. அதேபோல அமெரிக்கா செல்லும் ரஜினி வெள்ளையாக மாற்றிய பணத்தை தன் அறக்கட்டளைக்கு அனுப்பச்சொன்னதும் அனைவரும் ஒரு பைசா கூட 'ஆட்டை' போடாமல் அனுப்பி வைக்கின்றனர். ஏ.வி.எம் செலவழித்த நூற்றுக்கணக்கான கோடிகளில் கால்வாசி சாக்கு வாங்குவதற்கே செலவாகியிருக்கும்.

● தமிழ்ப் பண்பாடுப்படி பெண் வேண்டும் என்கிறார் ரஜினி. உடனே தமிழ்ப் பண்பாட்டின் படி நயன் தாரா மாராப்பைக் கழற்றியெறிந்து விட்டு 'பல்லேலக்கா'என்று ஆட்டம் போடுகிறார். ஸ்ரேயாவும் பாடல் காட்சிகளிலும் ரயிலை நிறுத்தும் காட்சிகளிலும் (இந்த ரயில் நிறுத்தும் காட்சி அனேகமாக 327வது தமிழ்ப் படத்தில் இடம் பெறுகிறது) 'மேற்படிப் பாணியில் 'தமிழ்ப் பண்பாட்டைக்' காப்பாற்றுகிறார்.

● சாலமன்பாப்பையா 'சிவாஜியில் உங்களுக்கு நல்லவேடம் என்றவுடன் நடிக்க வந்துவிட்டார்' போலும். கடைசியில்தான் தெரிகிறது, தமிழ் இலக்கியம், கலாச்சாரம் எல்லாம்பேசித் தன் இரண்டு பெண்களையும் கூட்டிகொடுக்க அலைகிறார். பாப்பையா மட்டுமில்லை, ரஜினியும் தன் புரொஜொக்ட் நிறைவேற அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் கூட்டிக் கொடுக்கிறார். இதுவரை ரஜினி ஏற்காத 'வித்தியாசமான' வேடம்.

● அந்த ஜோசியக்காரன் போன்ற கொடூரமான வில்லனை எந்தப் படத்திலும் பார்த்ததேயில்லை. ரஜினி ஸ்ரேயா ஜாதகத்தைப் பார்த்தவுடனே 'திருமணம் நடந்தால் ரஜினி உயிருக்கு ஆபத்து' என்கிறார். அத்தோடு விட்டாரா? திருமணத்திற்கும் வந்து 'சீக்கிரம் தாலியறுப்பாய்' என்று ஸ்ரேயாவை 'வாழ்த்து கிறார்'. பொருத்தம் பார்க்கும் ஜோசியக்காரனைத் திருமணத்திற்கு அழைக்கும் முதல் வீட்டுக்காரர்கள் இவர்களாகத்தானிருக்கும்.

● ரஜினி ஒரு 15 அடியாள்களை வைத்து தமிழ்நாட்டிலிருக்கும் தொழிலதிபர்களிலிருந்து அதிகாரிகள், அமைச்சர் வரை மிரட்டுகிறார். பாவம் அவர்கள் அனைவரும் அடியாட்கள் வைத்துக் கொள்ளாத, வன்முறையில் நம்பிக்கையில்லாத காந்தியவாதிகள்.

● ரகுவரன் என்னும் திறமையான கலைஞரை இந்தப் படம் போல எந்தப் படத்திலும் வீணடித்ததில்லை.

● ரஜினியின் சண்டைக்காட்சிகள் போகோ சேனலையும் ஜெட்டிக்ஸ் சேனலையும் ஒரு சேரப் பார்த்ததைப் போல இருக்கிறது.

● படத்தில் விவேக் காமெடி என்ற பெயரில் எரிச்சல் ஏற்படுத்துகிறார் என்றாலும் மேலே சொன்னபடி பெரும்பான்மையான காட்சிகள் காமெடியாகத்தானிருக்கின்றன. அதில் உட்சபட்சம் கருப்புப் பணமெல்லாம் ஒழிந்து ரேஷன் கார்டு போல மணிகார்டு வந்து 2015ல் இந்தியா வல்லரசாவது. விழுந்து விழுந்து சிரிக்கலாம்.

● இந்தக் கதையைத்தான் லீக் ஆகிவிட்டது, லீக் ஆகிவிட்டது என்று பில்டப் கொடுத்தீர்களா, அடப்பாவிகளா, ராணிகாமிக்ஸ், முத்துகாமிக்ஸ் வாங்கி நாலு 'இரும்புக்கை மாயாவி' யைப் படித்து மிக்ஸ் செய்தால் அதுதானே சிவாஜி கதை!

● ஆனாலும் படத்தில் இரண்டு பெரிய வித்தியாசங்கள் இருப்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். வழக்கமாக ஷங்கர் படத்தில் கிளைமாக்ஸ் காட்சியில் சட்ட விரோதமாக 'சமூகச்சேவை' செய்யும் கதாநாயகன் 'மாட்டிக்' கொண்டவுடன் மக்கள் அவனை விடுதலை செய்யச் சொல்லி போராடோ போராடென்று போராடுவார்கள். அதே போல ரஜினி படங்களின் கிளைமாக்சில் ரஜினியின் தங்கை, அம்மா, மனைவி என்று யாரையாவதோ அல்லது ஒட்டு மொத்தமாகவோ வில்லன் கடத்திக் கொண்டு போய்க் கயிற்றில் கட்டித் தொங்க விட்டிருப்பான். ஆனால் இந்த இரண்டு கருமாந்திரங்களும் இந்தப் படத்தில் இல்லை.

● அதே போல சென்ற படத்தில் மலைகள், லாரி என்றெல்லாம் ஷங்கர் 'வித்தியாசமாக' பெயிண்ட் அடித்திருந்தார். ஆனால் இதில் மாறுதலாக தொப்பையுள்ள 50 பேரை அழைத்துவந்து அவர்களின் தொந்தியில் ரஜியின் முகத்தை பெயிண்ட் அடித்துக் குலுங்க விட்டிருக்கிறார். ஒரே கதையை வைத்து பலபடங்களை எடுத்து இம்சைப்படுத்துவதை விட பேசாமல் ஷங்கர் பெயிண்ட் அடிக்கப் போகலாம்.

● இந்த அபத்தங்களையும் தாண்டி நிழலாடும் சில அரசியல் உறுத்தல்கள்:

● பராசக்தி படத்தின் தொடக்கக் காட்சியில் சிவாஜி ரங்கூனிலிருந்து சென்னையில் காலடி வைக்கும்போது ஒரு பிச்சைக்காரர் 'அய்யா தர்மம் போடுங்க' என்பார். 'தமிழ்நாட்டின் முதல்குரலே இப்படி இருக்கே' என்பார் சிவாஜி. அதில் ஒரு கூர்மையான அரசியல் விமர்சனமும் சமூகநிலை குறித்த எள்ளலும் இருக்கும். ஆனால் அதே காட்சியை சிவாஜியில் பார்க்கும்போது காறித்துப்பலாமென்றுதான் தோன்றுகிறது.

● ரஜினி மருத்துவமனை கட்டும்போது 'ஷாக்' அடித்து ஒரு சிறுவன் துடிக்கும் காட்சியில் 'சிவாஜி பார்ட்டி'யில் இறந்து போன அந்த தொழில்நுட்பக் கலைஞன் ஞாபகத்திற்கு வந்து போவது தவிர்க்க முடியவில்லை.

கர்நாடகத்து ரஜினி 'காவேரி ஆறும் கைக்குத்தல் அரிசியும் மறந்து போகுமா?' என்று பாடும்போது 'சும்மா எரியுதில்ல'.


MARKANDAN & CO
SOLICITORS & ESTATE AGENTS

*We also Specialise in....*

- ஒப்பந்த தகராறுகள்
- நுகர்வோர் பிரச்சினைகள்
- மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- Bankruptcy Problems
- மதுபான அனுமதிகள்
- கட்டட அனுமதிகள்
- Cafe அனுமதிகள்
- House / Flat Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation

**No Win – No Fee**

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
விவாக விண்ணப்பங்கள் | அகதி விண்ணப்பங்கள்
14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்
பிரித்தானிய பிரஜாவுரிமை | வீதிப் போக்குவரத்து | சம்பந்தமான வழக்குகள்

**கடன் சுமையில் இருக்கிறீர்களா?**

உங்கள் வங்கிகளுடன் / நிதி நிறுவனத்துடன் உரையாடி உங்கள் கடன் தொகையைக் குறைப்பதுடன் முடிந்தால் வட்டியையும் நீக்கிவிட முயல்வோம். No Win – No Fee (Subject to assessment)

நீங்கள் உரிய காலத்திற்கு முன்னரே கடன் தொகையை மீளச் செலுத்தியதற்காக உங்கள் வங்கி / நிதி நிறுவனம் மேலதிக கட்டணத்தை அறவிட்டுள்ளதா?
உங்களிடமிருந்து மேலதிகமாக கட்டணம் அறவிடப்பட்டதாக நீங்கள் கருதினால் FSAயின் விதிப்படி அதனை வங்கியிடமிருந்து மீளப் பெற்றுத் தர முயல்வோம்.
No Win – No Fee (Subject to assessment)

அண்மைக் காலத்தில் விநியோகிக்கப்பட்ட மாசுபடுத்தப்பட்ட எரிபொருளால் உங்கள் வாகனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதா? அப்படியானால் எரிபொருள் நிலையத்திலிருந்து நஷ்ட ஈடு பெற்றுத் தருவோம். No Win – No Fee (Subject to assessment)

வரிச்சுமைகளை குறைப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படும்
No Win – No Fee (Subject to assessment)



845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: 020 8514 8188 Fax: 020 8514 8303
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்...

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

# சூப் வித் சுபாரு - அரட்டை



ஒரு அந்தி மாலை பொழுதில் சுப்பு ஆர்வ கோளாரில் disabled bay யில் காரை பார்க் பண்ணி விட்டு பாருவின் வீட்டுக்குள் நுழைகிறாள்)

பாரு: சுப்பு! செப்பு

சுப்பு: என்னது செப்பு சப்பு?

பாரு: நீ ஒண்டையும் செப்பவும் வேண்டாம் சப்பவும் வேண்டாம்.. நான் சொல்றதை கேளு.

சுப்பு: நீ சொல்றதை கேட்க எனக்கென்ன கேடா? (பாரு கையில் தக்காளி சூப்புடன் வருகிறார்)

பாரு: நீ கூட கதைக்குறாய்.

சுப்பு: சரி சும்மா சும்மா...

பாரு: oh ஒருரேடியோல programme கேட்டிருக்கியா? (பாரு சுப்புவுக்கு சூப் குடுக்கிறார்)

சுப்பு: ஓம் கேட்டிருக்கன். அதெல்லாம் வேற விஷயம் நீ மேட்டருக்கு வா.

பாரு: எங்கட பவித்ரா இருக்குறாலாளல்லா?

சுப்பு: ஓம் அவளுகென்ன?

பாரு: அவள் யாரோடாயோ ஓடி போய்டாளாம்!!

சுப்பு: ம்ம்ம்... நீ போய் பார்த்தனியா?

பாரு: இல்ல.. ஆனா நான்தான் டிக்கெட் எடுத்து குடுத்தன் :-)

சுப்பு: என்ன one day travelcard? (பின்னால் ஒரு ரேடியோவில் கல்யாணம் தான் கட்டிக்கிட்டு ஓடி போலாமா பாடல் ஒலிக்கிறது)

பாரு: சுப்பு! வர வர உன்ட காமெடி தாங்க முடியல!

சுப்பு: ம்ம்... அதுவும் ஒரு ரேடியோ programme தான்

பாரு: ம்ம்ம்... கத்தரிக்காய்..

சுப்பு: சரி சரி பவித்ராவை பத்தி நானும் கேள்விப் பட்டன்தான். அவன் ஒரு கூடாத பொடியனாம்.

பாரு: (விவேக் ஸ்டைலில்) அப்படியா?

சுப்பு: என்ன நொப்படியா?

பாரு: சரி எதை வச்சு சொல்லுறாய்?

சுப்பு: அது என்னன்டா.. அது எல்லாம் பேப்பர்ல சொல்ல ஏலாது. பேந்து நான் உனக்கு ஈமெயில் அனுப்புறன். ஆனா படிச்சிட்டு உடன delete பண்ணு.

பாரு: ம்ம்ம்... விளங்குது விளங்குது.

சுப்பு: சரி இந்த கதையை கேளு

பாரு: செப்பு

சுப்பு: இந்த குமாரன் மாஸ்டர் இருக்குறாரல்லா?

பாரு: இல்ல, இப்ப அவர் நிப்பர்

சுப்பு: உண்ட கடியை நிப்பாட்டு.

## வெட்டிக் கதை கதைக்காம உங்கட வேலையைப் பார்க்காவிட்டால் இப்படித்தான் ஆப்பு வந்து விழும்!

பாரு: சரி எந்த குமாரன் மாஸ்டர்?

சுப்பு: அது தான் அந்த தமிழ் ஸ்கூல்ல தமிழ் படிப்பிக்கிறாரல்லா?

பாரு: (அமைதியாக) தமிழ் ஸ்கூல தமிழ் படிப்பிக்காம தெலுங்கா படிப்பிப்பாங்க?

சுப்பு: ம்ம்..தொடங்கிட்டாள்.

பாரு: Anyway எனக்கு அந்த கதை தெரியும்

சுப்பு: அப்ப அந்த கதையை விடு

பாரு: வேற என்ன கதை இருக்கு?

சுப்பு: ஆயா வடை சுட்ட கதை இருக்கு.. கேட்குறியா?

பாரு: ம்ம்.. ரொம்ப முக்கியம்... நீ ஒண்டு செய் வசந்தா வீட்ட போய் புதுசா ஏதாவது கதையை வாங்கி கொண்டு நாளைக்கு வா.

சுப்பு: Bagகை மாட்டிக்கொண்டு) சரி அப்ப நான் போய்ட்டு வர்ரன்.

பாரு: (கதவை திறந்து வச்சு கொண்டு) ok bye! (tension னா ஒரு background music ) காருக்கு penalty charge துண்டு இருந்தது.

வாசகர்களே! இந்த கதையே இல்லாத கதை என்ன சொல்ல வருதென்றால்.. வெட்டிக் கதை கதைக்காம உங்க வேலையைப் பார்க்காவிட்டால் இப்படித்தான் ( பவுண்ட்ஸ், யூரோஸ், டொலர்ஸ் ) கணக்கில் ஆப்பு வந்து விழும்!

Money is not everything.
*There are Master and Visa Cards.*
One should love animals. *They are so tasty.*
Save water. *Drink wine.*
Love your neighbour. *But dont get caught.*
Every man should marry.
*Because, happiness is not the only thing in life.*

# ஆச்சியிடம்... அட்வைஸ்!

aachi@orupaper.com

*கேள்வி:*

எனது பெயர் சந்திரா. நான் லண்டனுக்கு வந்து கணிசமான ஆண்டுகள் கழிந்து விட்டன. முன்பு ஒரு கோயில் இருந்த இடத்தில் இப்போ பல கோயில்கள், பிள்ளைகள் படிக்க ஒரு தமிழ் பாடசாலை இல்லையே என்று ஏங்கிய நிலைபோய் இப்போ ஸ்கொட்லாந்தில் கூட தமிழ் பாடசாலை நடக்கும் அளவிற்கு எமது தமிழர்கள் கலைகளிலும், தமிழருக்குரிய அடையாளத்தை பேணுவதிலும் முன்னேறியிருக்கும் இந்த காலகட்டத்தில் சில சம்பவங்களை நினைக்க நினைக்க கவலையாக உள்ளது.

முன்பு அரசல் புரசலாக இரு ஊர்களுக்கிடையே அவர்கள் அந்த ஊர், நாங்கள் இந்த ஊர் என்று வெளிநாட்டில் முறுகிக்கொண்டிருந்த காலம் மலையேறி இப்போ இளைய தலை முறை, இங்குள்ள ஊர்களின் (ஏதோ தங்களின் பாட்டனாரின் ஊர் போல) பெயரில் ஒரு குழுக்களைத் தொடங்கி வைத்துக்கொண்டு பரமார்த்த குருவும் சீடர்களும் போல அவர் களுக்குள்ளும் ஒரு லீடரை வைத்துக்கொண்டு குருவி சுடுவது போல ஆட்களைச் சுட்டுக்கொண்டும், கசாப்பு கடையில் ரெயினிங் முடித்து வந்தோர்கள் போல வெட்டிக்கொண்டு அநியாயமாகச் சாகிறார்கள்.

என்ன இருந்தாலும் யாரோ ஒரு தாய் பெத்த பிள்ளைதானே என்று சொல்ல, என்ர மனிசனோ, மண்ணிற்கு ஒருபாரம் குறைந்து விட்டது. இதுகள் இருந்து யாருக்கு என்ன லாபம். செத்து தொலையட்டுக்கும் என்கிறார்.

சும்மா விட இயலாது ஆச்சி இவர்கள் தானே எமது வருங்காலங்கள். வாரிசுகள். பெண்ணுக்கு சண்டை, போதைவஸ்து கொடுக்கல் வாங்கல் பிரச்சனை, கிரடிக்காட் பிரச்சைனை என்று ஒன்று இல்லாவிட்டால் இன்னொரு பிரச்சனை என்று உயிரை விடுகிறார்கள். எங்கட சமூகத்தில் மட்டும் என்றில்லாமல் எல்லாச்சமூத்திலும் இரு ஒரு வகை நோய் போல பரவிவுள்ளது. மற்ற சமூகத்திற்குத்தான் சமூகம் என்று ஒன்று இல்லை என்று ஒரு பேச்சுக்கு வைத்துக்கொண்டாலும், இப்பிடி ஒரு வகை தொகையாக சமூக அமைப்புக்களும், சங்கங்களும் உள்ள எமது தமிழ் சமுதாயத்திற்குள்ளேயே ஒருவரை ஒருவர் கலைத்துக் கலைத்து கொல்வது என்றால் என்ன மாதிரி? இதற்கு முடிவே இல்லையா?

## ஆச்சியின்... அட்வைஸ்!

ஓம் பிள்ளை உந்த இளசுகள் அடிபட்டு சாவதை பூதக்கண்ணாடி போட்டு பாத்து உது தாயகத்தின் போரின் ஆயத கலாச்சாரத்தின் பாதிப்பு என்று சில ஆங்கில ஊடகங்கள் சொல்கின்றன.

உந்த இளசுகளை கூப்பிட்டு மண்மீட்பு போர் என்றால், அப்பிடியா? கிலோ என்ன விலை என்று கேட்டாலும் கேட்பார்கள். உந்த இளசுகளின் பிரச்சனை பெரிய பிரச்சனை ஆனால் எங்கட சமூகத்திலும் ஒருவரும் உதை ஆராய்ந்து தீர்வைப்பற்றி கதைக்காது யாப்பு கவிதை நல்லதா? கூடாதா? பத்திரிகைத்துறையின் வளர்ச்சியில் எமது பங்கு.. என்று ஏட்டு சுரைக்காயை வைத்து அரைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் தங்கள் படலைக்கு பிரச்சனை வருமட்டும் எமக்கேன் பொல்லாப்பு இறந்த காலத்தையும், இல்லாததையும், கொஞ்சபேருக்கு மட்டும் விளங்கும் அறிவுசார் விடயங்களையும் கதைத்து காலத்தை போக்கினால் எல்லோருக்கும் சுகம் என்று உள்ளார்கள். வீட்டுக்குள் குப்பை சேராமல் பார்க்க வேணும். அல்லது சேர்ந்த வெளியே கொட்ட வழிபார்க்க வேணும் குப்பைக்கு மேல் காப்பெற்றை போட்டு மறைத்து விட்டு இருப்பது எமது சமுதாயத்திற்கு அழகில்லை.

எத்தனை தமிழ் இளைஞர் குழுக்கள் உள்ளன? ஏன் அதில் சேருகிறார்கள்? எப்படிப்பட்டவர்கள் சேருகிறார்கள்? என்ன நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்? அதில் இருந்து விலக விரும்புவர்கள் உள்ளார்களா? விலகுபவர்களுக்கு பாதுகாப்பு உண்டா? தமிழ் சமூகம் இதை எப்படி முகம் கொடுக்கப்போகிறது. அல்லது ஈரையும் பேனையும் வைத்துக் கொண்டு ஒய்யார கொண்டை போட்டுக்கொண்டு போய்கொண்டே இருக்க போகிறதா?

எனக்கு வயது போய்விட்டது. நல்ல பென்சனும் வருகிறது. பிள்ளை நீ பென்சன் எடுக்க வரும் போது உனக்கு எவ்வளவு பென்சன் வருமோ தெரியாது. இளைஞர் சமூதாயம் வேலை செய்து வரிப்பணம் கட்டினால் தானே உனக்கு பென்சன் தர அரசாங்கத்திட்ட காசு இருக்கும்.

Criminal Defence Service

Community Legal Service

**S .Satha & Co Solicitors**

*We are always at your service*

PRINCIPAL PARTNER
**S .SATHANANTHAN**

- *Injunction*
- *Family Law*
- *Immigration*
- *Criminal Law*
- *Conveyancing*
- *Legal Aid Work*

Tel: 020 8471 9484 Fax: 0208471 9485
Emergency No: 07956 288 671 Property Department Fax: 020 8471 1887






**376-378 High Stret North, Manor Park, London E12 6PH.**
**DX:133012 Upton Park2**

# மகாவம்சம் என்ன சொல்கிறது?

## (இறுதிப் பாகம்)



மகாவம்சத்தின்படி புத்தர் இரண்டாம் முறையும், இலங்கைக்கு வருகின்றார். இம்முறை இரண்டு நாக மன்னர்கள் தமக்குள்ளே போர் புரிவதைத் தடுப்பதற்காக வருகின்றார். முன்பு சூறைக்காற்றை உருவாக்கி ஆதிக் குடிகளைப் பயப்படுத்திய புத்தர், இம்முறை பயங்கர இருளைப் பரவச்செய்து, நாக மன்னர்களையும், அவரது வீரர்களையும் பயங்கொள்ள வைக்கின்றார். பின்னர் அங்கு வாழ்ந்த எட்டுக் கோடி நாகர்களுக்கு, 'புத்தம்- தர்மம் -சங்கம்' என்ற போதனைகளை அளிக்கின்றார்.

இது நடைபெற்று மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், மகாவம்சத்தின்படி, புத்தர் மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்கின்றார். கல்யாணி என்ற தேசத்தின், நாக மன்னனின் வேண்டுதலை ஏற்று அங்கே செல்வதோடு, பல இடங்களுக்கும் சென்று, அந்த இடங்களை ஆசிர்வதித்துத் திரும்புகின்றார்.

இந்தச் செய்திகளில் மறைந்துள்ள சில உண்மைகளை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இலங்கையின் ஆதிக்குடிவாசிகளாக இயக்கர்களும், நாகர்களும் உள்ளார்கள். மகாவம்சத்தின்படி, இயக்கர்களை அகற்றியது போல், புத்தரால் நாகர்களை அகற்ற முடியவில்லை. நாக வழிபாடும், 'நாக' என்ற சொல் வரும் பெயர்களும், ( நாகநாதன், நாகலிங்கம், நாகமுத்து, நாகபூசணி), மற்றும் இலங்கையின் வடபெரும் பகுதி நாகதீபம் என அழைக்கப்பட்டதும், பல வரலாற்று உண்மைகளை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகின்றன.

மகாவம்சத்தின் இரண்டாவது அத்தியாயம், புத்தரின் மூதாதைகள் குறித்தும், மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது அத்தியாயங்கள் புத்த மத மகாநாடுகள் குறித்தும், ஆறாவது அத்தியாயம் விஜயனின் கதை குறித்தும், ஏழாவது அத்தியாயம் இலங்கைத்தீவில் விஜயன் கரை இறங்குவது குறித்தும் விபரிக்கின்றன. மிகுதி அத்தியாயங்கள் யாவும், சிங்கள மன்னர்கள் பற்றியும், அவர்களது ஆட்சி முறைகள் பற்றியும், தமிழ் மன்னர்களுக்கும் சிங்கள மன்னர்களுக்கும் இடையில் ஏற்பட்ட போர்கள் குறித்தும் விபரிக்கின்றன.

விஜயனின் கதை என்பது ஒரு கட்டுக் கதையாகவும், நாடோடிக் கதைகளின் திரிபாகவும் உள்ளது என்பதை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள். விஜயனின் முதல் மனைவியான குவேனி பற்றிய குறிப்புக்கள் எதுவும், மகாவம்சத்திற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பாடப்பட்ட தீபவம்சத்தில் இல்லை. தவிரவும், பின்னாளில் அரசகுலப் பெண்ணைத் தேர்ந்தெடுத்து மணப்பதற்காக, மதுரையில் அரசாண்ட பாண்டிய மன்னனின் மகளையும், பாண்டிய மன்னனின் அரசப் பிரதானிகளின் பெண் மக்களான எழுநூறு பேரையும் தேர்ந்தெடுத்து, விஜயனும் அவனது எழுநூறு தோழர்களும் மணம் புரிந்தார்கள் என்று மகாவம்சம் சொல்கின்றது.

இது வேறு ஒரு சிக்கலையும் உருவாக்குகின்றது. விஜயனும் அவனது தோழர்களும் மணந்த பெண்கள், பாண்டிய மகளிர்கள் என்பதனால், சிங்கள இரத்தத்துடன் பாண்டிய நாட்டுத் திராவிட இரத்தமும் சேர்ந்து, சிங்கள வம்சம் ஒரு கலப்பு வம்சமாக உருவாகி விட்டது என்ற தர்க்கமும் எழுகிறது அல்லவா?

**எல்லாளனைச் சோழஇளவரசனாகவும், தென்னிந்தியாவில் இருந்து படையெடுத்து வந்தவனுமாகவும், பாளி இலக்கியங்கள் கூறுவதில் உண்மையில்லை.**

மகாவம்சம் குறிப்பிடுகின்ற மற்றைய முக்கிய அம்சங்களில், காமினி அபயன் என்கின்ற துட்ட காமினியும், எல்லாளன் என்கின்ற தமிழ் மன்னனும் அடங்குவர். துட்ட காமினியைத் தனது பாட்டுடைத் தலைவனாகத்தான் மகாவம்சம் விபரிக்கின்றது. அவனது வரலாற்றை விபரிக்கும்போது, இரண்டு அம்சங்களை மகாவம்சம் வலியுறுத்துகின்றது. ஒன்று தமிழர்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்கள். மற்றது பௌத்த மதத்திற்கு அவன் ஆற்றிய சேவை.

கிறிஸ்துவுக்கு முன்னர் 145ம் ஆண்டு தொடக்கம் கிறிஸ்துவுக்கு முன்னர் 101ம் ஆண்டு வரையிலான 44 ஆண்டுகள், தமிழ் மன்னனான எல்லாளன் ஆட்சி செய்த காலமாகும். எல்லாளனைச் சோழ இளவரசனாகவும், தென்னிந்தியாவில் இருந்து படையெடுத்து வந்தவனுமாகவும், பாளி இலக்கியங்கள் கூறுவதில் உண்மையில்லை.

இப்படியொரு சோழன் இந்தியாவில் இருந்ததாக, தமிழ் நாட்டு வரலாற்றில் எந்த ஆதாரமுமில்லை. எல்லாளன் என்பவன் இலங்கையைச் சேர்ந்த தமிழ் மன்னனே யாவான். அவனது நீதி தவறாத ஆட்சி குறித்துப் பல இடங்களில் மகாவம்சமும் கூறுகின்றது. இளைஞனான துட்டகாமினியுடன், 72 ஆண்டுகள் நிரம்பிய எல்லாளன் தனிச் சமர் செய்து இறந்ததன் காரணமாக எல்லாளனின் தோல்வி, தமிழீழ மக்களின் தோல்வியாயிற்று என்று திருச்செல்வம் குறிப்பிடுவார்.

மகாவம்சத்தின் ஊடாக மேலும் சில விடயங்கள் தெரிய வருகின்றன. அனுராதபுர சிம்மாசனத்தில் அமர்ந்து சிங்களவரும், தமிழரும் மாறி மாறி இலங்கையை ஆட்சி புரிந்துள்ளார்கள்.

மகாவம்சத்தின்படி, இந்த நாட்டைத் தமிழ் மன்னர்களும், சிங்கள மன்னர்களும் மாறி மாறி ஆளும் உரிமையைப் பெற்றிருந்தார்கள். இயக்கர்கள், ஆரியர்கள், தமிழர்கள் என்போரின் கலப்பு மக்களாகச் சிங்கள மக்கள் உள்ளார்கள். எல்லாள தமிழ் மன்னன் இறந்த 57 ஆண்டுகளுக்குப் பின்னர், அனுராதபுரத்தை ஐந்து தமிழ் மன்னர்கள் ஆண்டுள்ளார்கள்.

மகாவம்சத்தின்படி, சிங்கள மன்னர்களால் பல சைவக்கோவில்களும், சைவச் சின்னங்களும் அழிக்கப்பட்டு, அவ்விடங்களில் பௌத்த தூபிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னரேயே அங்கே ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் என்போர் வாழ்ந்து வந்துள்ளார்கள். இவை மகாவம்சம் தந்துள்ள செய்திகளாகும்.

கருணையே வடிவான புத்தனை, சமநீதிக்காகப் போராடிய புத்தனை, மொழிக் கொள்கையில் தெளிவான புத்தனை, ஆரியர்களை எதிர்த்துத் திராவிடர்களுக்காக குரல் கொடுத்த புத்தனை, ஒரு புரட்சிக்கார புத்தனை, மகாவம்சமும், இன்றைய சிங்கள சிறிலங்கா அரசுகளும், பௌத்த மட பீடங்களும், பிக்குகளும் எவ்வளவு திரிபுபடுத்தியுள்ளனர் என்பதை இயன்றவரை இந்தக் கட்டுரைத் தொடர் வாயிலாகச் சுட்டிக் காட்ட முனைந்துள்ளோம்.

*- சபேசன் (அவுஸ்திரேலியா)*

முரசறைந்து சொல்லும் சேதி எட்டுத்திக்கும் நிற்கும்
முரசு தாங்கும் விளம்பரங்கள் மனதில் நிலைக்கும்...




முரசம் 2008ல்
உங்கள் விளம்பரங்கள் இடம்பெற உடனே தொடர்பு கொள்ளுங்கள்
விண்ணப்ப முடிவுத் திகதி ஜூலை 15

BRITISH TAMIL INFORMATION DIRECTORY
www.murasam.com
020 8519 5003 / 0845 869 3530

# பொதுவுடமைவாதிகளின் தமிழ்ப் பற்று

**34ம் பக்கத் தொடர்ச்சி**

தமிழர்களை ஏமாளிகள் என நினைக்கும் தரங்கெட்ட தன்மைதான் இவர்களிடமிருந்து வெளிப்படுகிறது.

இவை எல்லாம் மார்க்சியம் பேசும் நம் தமிழ்த் தோழர்களுக்கு தெரிய மறுக்கிறது.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்

என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப ஒரு சமுகத்தைப் பிடித்திருக்கும் நோயின் தன்மை அறிந்து அதற்கு ஏற்ற வாறு எங்களின் செயற்பாடுகள் இருக்க வேண்டும். நமது தமிழ்ப் பொதுவுடைமைவாதிகள் சறுக்கும் இடமும் இதுதான்.

இன்றைய காலத்தில் ஈழத் தமிழர்களின் தலையாய பிரச்சனை தேசிய இன விடுதலையேயன்றி வர்க்க விடுதலை அல்ல. வர்க்க வேறுபாடுகள் களையப்பட வேண்டும் என்பது முற்றிலும் நியாயமானதுதான்.

அதன் வட்டம் தமிழ்த் தேசியத்திற்குள்தான் நிற்கவேண்டுமே தவிர சிங்களத் தொழிலாளர்களையும் சேர்த்துக் கொண்டு உலக பாட்டாளி வர்க்கக் கனவுடன் மிதப்பதல்ல. சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்துபோரிடும் தமிழ்த் தேசியத்தை சிங்கள பொதுவுடைமைவாதிகளே ஆதரித்திருக்க வேண்டும். அதுதான் உண்மையான மார்க்சியம்.

ஆனால் இந்திய தேசியத்தில் கரைந்த இந்தியப் பொதுவுடைமைவாதிகள் போல் சிங்களப் பேரின வாதத்தில் இவர்களும் ஐக்கியமாகி விட்டார்கள். எதார்த்தம்? இவ்வாறு இருக்கும் போது நாம் தமிழ்த் தேசியத்தை பலப் படுத்தினால்தானே எமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

மார்க்சியம் எனப்படும் பொதுவுடைமைச் சித்தாந்தம் ஒரே தன்மையுடன் எல்லா இடங்களிலும் நடை முறைப் படுத்தப் படவில்லை, அதனை உலக முதலாளியத்திற்கு எதிரான கருத்துப் போராகவே மார்க்சியத்தின் மூலவர்களான கார்ல் மார்க்சும் ஏங்கல்சும் கண்டார்கள். லெனின் அதனை நிலவுடமையாளர்களுக்கு எதிராகவே நடைமுறைப் படுத்தி வெற்றி கண்டார். ஹோசிமின், பிடல் கஸ்ட்ரோ போன்றவர்கள் அமரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ஏதிராக பயன் படுத்தி வெற்றி கண்டார்கள்.

இதனை விளங்கிக் கொள்ளமால் மார்க்சியத்தை எந்த மாற்றத்திற்குள்ளும் உட்படுத்த விரும்பாமல் அப்படியே பின் பற்ற விளைகிறார்கள். ரஷ்ய மண்ணும் இந்திய மண்ணும் தமிழ் மண்ணும் அடிப்படையில் பல வேறுபாடுகளை உள்ளடக்கியது என்பதை உணரத் தவறி விடுகிறார்கள்.

இதன் விளைவால்தான் வேறு சில பொதுவுடைமைவாதிகள் தமிழ்த் தேசியத்தை எதிர்ப்பதுபோல் தலித்தியத்தையும் எதிர்க்கிறார்கள். சாதியம் பற்றி எரியும் இந்திய துாணைக் கண்டத்தில் சாதியை ஒழிக்காமல் பிராமணத் தொழிலாளியையும் தாழ்த்தப் பட்ட தொழிலாளியையும் ஒன்றாக இணைக்க முடியுமா?

இந்த இடத்தில் சாதி ஒழிப்புப் போராட்டம் வர்க்கப் போராட்டத்தைக் காட்டிலும் முக்கியமானது. பிறவி ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்காமல் வர்க்க ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்க நினைப்பது பிறவி ஆதிக்க சாதிகளை நிரந்தர ஆதிக்கவாதிகளாக இருப்பதற்குத்தான் வழிவகுக்கும்.

சாதி வேறுபாட்டை ஒழித்து சமூக நீதியைக் காப்பாற்றுவதற்காக ஏற்படுத்தப் பட்ட மண்டல் குழு அமுலக்கத்தின்போது இந்தியக் கொம்யுனிஸ்டுகள் காட்டிய இரட்டை நிலைப் பாடு நாடறிந்த ஒன்றாகும்.

பெரியார், அம்பேத்கர் போன்றவர்கள் பொதுவுடைமைவாதிகளோடு முரண்பட்டதிற்கும் இதுதான் காரணம்

மார்க்சியத்திற்கும் தமிழித் தேசியத்திற்கும் தலித்தியத்திற்கும் களங்கள் வெவ்வேறாக இருக்கலாம் ஆனால் பொதுத் தன்மை ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆம் மூன்றுமே ஒடுக்கப் பட்ட மக்களின் போர்வாள்கள்தான்.

பொதுவுடைமைவாதிகளிடம் நான் கண்ட மற்றுமொரு தன்மை தமிழின் தொன்மை தொடர்பாக அவர்கள் காட்டும் அலட்சியம். உலகத்திலே தமிழ் மொழிதான் மிகச் சிறந்த மொழி அதைவிடச் சிறந்த மொழி இல்லை என நாங்கள் மார் தட்டத் தேவையில்லை அது அழகுமாகாது.

**மார்க்சியத்திற்கும் தமிழித் தேசியத்திற்கும் தலித்தியத்திற்கும் களங்கள் வெவ்வேறாக இருக்கலாம் ஆனால் பொதுத் தன்மை ஒன்றாகத்தான் இருக்கிறது.**

ஆனால் தமிழ் மொழி ஒரு தொன்மையான மொழி என்பதுடன் மிகச் சிறந்த இலக்கியங்களையும் இலக்கண வளமும் கொண்ட மொழி. பிற மொழிகள் கலப்பின்றி இயங்கக் கூடிய தனித்தன்மை வாய்ந்த மொழி. சங்க காலம் தொடங்கி இன்று வரை பார்த்தால் ஔவையார், கபிலர், வள்ளுவர், இளங்கோவடிகள், அப்பர், ஆண்டாள், திருமூலர், பாரதி, பாரதிதாசன் என பல ஆயிரக்கணக்கான புலவர் பட்டாளத்தைக் கொண்டுள்ள மொழி, கால்டுவேல் ஜி.யு.போப் போன்ற மேலை நாட்டு அறிஞர்களையும் கவர்ந்திழுத்த மொழி.

எத்தனையோ பண்பாட்டுப் படை எடுப்புக்களை எதிர்கொண்டும் அழிந்து அடையாளம் தெரியாமல் போகாமல் தலை நிமிர்ந்து நின்று நாளை முடிசூடப் போகும் நன்னாளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மொழி.

இவைகள் எல்லாம் வெறும் பெருமைகள் அல்ல வரலாறுகள். எங்களுக்கு வரலாறு பெருமையாக இருக்கிறது. ஒரு மொழி குறித்த பெருமித உணர்வு வருவது தவறல்ல. பொதுவுடைமைவாதிகள் அதை மறுப்பதுதான் தவறு. மார்க்சியம் பேசுவது உயர்வானது வள்ளுவம் பேசுவது அப்படி அல்ல என்று கருதுகிறார்கள் போலும்.

மார்க்சியம் என்பது உலகை உயிர்பிக்க வந்த உயரிய தத்துவம் என்பதில் எங்களைப் போன்றவர்களுக்கு மாற்றுக் கருத்தில்லை. இன்று தேசிய இன மக்களின் வாழ்வியல் நலங்களை அச்சுறுத்தும் அமரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் உலகமயமாக்கல் தாரளமயமாக்கல் போன்றவற்றின் பாதிப்புகள் இன்றைய காலத்திலும் மார்க்சியத்தின் வரலாற்றுத் தேவையை உணர்த்திக் கொண்டுதான் இருக்கின்றன.

தமிழர்களாகிய நாம் எமது வரலாற்று வேர்களை கண்டறிந்து அதிலுள்ள சிக்கல்களை தீர்ப்பதற்கு மார்க்சியத்தை துணை கொள்ளவதுதான் சிறந்ததேயன்றி மார்க்சியத்தின் பரிசோதனைக் களமாக தமிழ்த் தேசத்தை மாற்றுவதல்ல.

## திருமணம் செய்து கொள்ள இருப்பவர்கள் படிப்பதற்காக...

நபர் 1 : ஏன் திருமணத்தின் போது மணமகனும் மணமகளும் கரங்களைக் கோர்த்தபடி நிற்கிறார்கள்?

நபர் 2: உனக்குத் தெரியாதா? குத்துச் சண்டைப்போட்டி ஆரம்பிப்பதற்கு முன்பதாக இப்படியொரு வழமை காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

❖ ❖ ❖

நபர் 1 காதல் திருமணம் சிறந்ததா பேச்சுத் திருமணம் சிறந்ததா என்று பட்டிமன்றத்திற்குப் பெயர் வைப்பதற்குப் பதிலாக இப்படியும் வைக்கலாம்.

நபர் 2: எப்படி?

நபர் 1 :தற்கொலை செய்வது சிறந்ததா? கொலை செய்யப்படுவது சிறந்ததா?

❖ ❖ ❖

நபர் 1 : ஒரே தடவையில் இரண்டு திருமணங்களைச் செய்வது ஏன் சட்டப்படி தடை செய்யப்பட்டிருக்கிறது?

நபர்2 : ஒரே குற்றத்திற்கு 2 முறை தண்டனை வழங்குவதற்கு சட்டத்தில் இடமில்லாதபடியால்

❖ ❖ ❖

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

ஜுலை 14 சனி:

மாலை 4- 6 மணி வரை Britain's Brainiest Pillai – Final round மாலை 6 - 10 மணி வரை கலைச்சிற்பங்கள் பல்சுவை கலைநிகழ்ச்சி. இடம்: Community School, Cecil Avenue, Wembley, Middlesex HA9 7DU தொடர்புகளுக்கு: TYO –UK 079 8337 7027, 079 3627 3583, UKTSU 079 5165 0110, 0797 027 2554

ஜுலை 14 சனி

காலை 9.00 மணியிலிருந்து பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் நடாத்தும் பத்தாவது சைவ மாநாடு. இடம்: 125 -133, Effra Road, Wimbledon, London, SW19 8PU.

ஜுலை 15 ஞாயிறு

காலை 9.00 மணியிலிருந்து பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் நடாத்தும் பத்தாவது சைவ மாநாடு. இடம்: 4A, Clarendon Rise, Lewisham, London, SE13 5ES

ஜுலை 15 ஞாயிறு

மாலை 5.30 மணி: ஹரோ தமிழ்ப்பாடசாலையின் 20வது ஆண்டு நிறைவனைக் கொண்டாடு முகமாக கலாச்சார விழா. இடம்: Watersmeet Theatre, High Street, Rickmansworth, Herts, WD3 1EH.

ஜுலை 21 சனி:

மாலை 5 மணி - இரவு 10 மணி வரை: ஹென்டன் தமிழ்ப்பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா. கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். இடம்: Canons High School. Shaldon Road, Edgware, Middlesex HA8 6AN


BIRAVENAAS

South Indian & Sri Lankan Restaurant and Bar

சிறிய வைபவங்களுக்கு ஏற்ற 40 இருக்கைகள் கொண்ட வசதிகளுடன் கூடிய உணவகம்... குடும்பத்துடன் வந்து சுடச்சுட உணவுகளைச் சுவைத்து மகிழுங்கள்.....

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு
Buffet on Saturday & Sunday for £5.50
10% Discount for all Take Away
25 பவுண்க்கு மேல் வாங்கினால் 1 Wine Bottle Free

Open Daily:
Monday-Thursday
12pm to 11.30pm

Friday to Sunday
12pm to 12pm

Free Delivery*



Tel: 020 8695 8625
* Orders over £12 within 3 miles 6-10pm
1 Sandhurst Market, Sandhurst Road, Catford, London SE6 1DL


1st time in the UK
Logan Hall
Russell Square, London.
20, Bedford Way, Bloomsbury,
London, WC1H 0AL
29th July 2007 !
5.30 P.M. Onwards
Free Refreshments
Tickets £ 30/-
(£ 10/- refund at gate for Children under 10)
for reservations Call
Shanthi - 07717874024
Ravi - 07904669589
GOLDEN OLDIES OF
GYPSIES
LIVE IN CONCERT
Media Sponsor
LankaTribune
LION BEER
PAPAYA RESTAURANTS
SEYLAN BANK PLC
CEYLINCO FASTCASH
Tickets Available from
Papaya Restaurants, Trico Shipping, Kandy Traders, Lihiniya Restaurant, Prince of Ceylon, Colombo Mini Mart, Best Foods (Hounslow), Maruthi Cash & Carry, New Kannan Store (Edmonton), A Lanka Travels, Royal Food & Wine, Galle Café, Chicken & Pizza Restaurant - Hopper Hut (Wembley), Ayngaran Food & Wine (New Malden), Angel Food & Wine (Ilford), Prime Food & Wine (Tooting), Jaffna House (Tooting)

# ஊரின் வாசம் பனங்கள்ளுப் பருவம்

**ப.வை. ஜெயபாலன்**
*(ஒரு பேப்பருக்காக)*



ஆனிமாதம் ஆரம்பமானால் ஊரின் கோயில்கள் மட்டுமா கொடியேறும்?

கல்யாணம், தாலிகட்டு என்றும் களைகட்டும். கள்ளுப் பிரியர்களுக்கு பனை கொடியேறி சுவையான கள்ளைப் பொழிவதும் இந்த மாதங்களில்த் தான். பனை பாளை தள்ளுவதை கொடியேறுவது என்று கூறிக் கொள்வார்கள்.

'கீரிமலைக் கேணியை
நீந்துவார் – நீந்தாதார்
கூவிலடி சேராதார்'

என்பது அந்தக் காலத் தெருக்குறள். கூவில் என்பது இளவாலை சேந்தாங்குளத்தை அண்டிய ஒரு கிராமம். பனங்கூடல் நிறைந்தது. உப்புக் கடலோரம் அமைந்த அந்தக் கிராமத்து பனைகளில் ஊறிய கள்ளின் சுவை அற்புதமானது என்பது கள்ளுப்பிரியர் கருத்து.

இதேபோல் உப்புக்கரிக்கும் கடலை எல்லை அணையாகக் கொண்ட கீரிமலைக் கேணியில், பளிங்குப் படிவமான நன்நீர் பொழியும் நீர்ச்சுனைகள், நீச்சலுக்கு கேணியை அன்றாடம் நன்நீரால் நிரப்பித்தருவதும் அற்புதம் தான். அந்தக்கேணியை உற்சாகமாக நீந்த ஆற்றல் தருவது கூவில் கள்ளு என்று கூறுகிறது தெருக்குறள். ஈழத்தின் வடக்குக் கிராமங்கள் பனங்கள்ளுக்கும் கிழக்கு கிராமங்கள் தென்னங்கள்ளுக்கும் பெயர் போனவை. தெற்கே கித்துள் கள்ளு.

அன்றைய சந்ததிகளுக்கு அங்கே அப்போ கோடைகாலத்தில் கள்ளு, வேள்வி இறைச்சி கொண்டாட்டம்.

இங்கே புலம் பெயர் நாட்டில் எம்மவர்க்கு 'பியர்' 'பாபிக்கியுக்' கொண்டாட்டம். அங்கே கீரிமலை பாசிக்குடாக் கடற்கரைகள் இங்கே 'போன்மவுத்' முதலான கடற்கரைகள் 'சமர்' வந்தாலே எப்போ 'பாபிக்கியு' கொண்டாட்டம் என திட்டமிட ஆரம்பித்து விடுவார்கள். பியரை சுவைத்தபடி வீட்டுத் தோட்டத்தில் அல்லது கடற்கரை, பாக் வெளியில் கொழுத்தும் வெயிலில் இருந்தபடி கோழிக்கால் அல்லது ஆட்டு இறைச்சி துண்டு தணலில் சுட்டு சுட்டு சாப்பிடுவதும் ஒரு சுவை தான்.

யாழ்ப்பாணத்தை நினைவூட்டும் 'ஒடியல் கூழ்' இதில் இணைந்தால் குடும்பமாக ஒன்றுகூடி குடித்து மகிழ்வது இங்கு வழமையாகிவிட்டது. ஒரு வித்தியாசம். அங்கே பொடியள் ஒன்றுகூடி தாய் தகப்பன் தாய்மாமனுக்கு தெரியாமல் ஒளித்து ஒளித்து குடிக்க வேண்டும். இங்கே இந்த உறவுகளுக்கு முன்னால் இருந்து ஒன்றாக குடிக்கலாம்.

கோடைகாலம் ஆரம்பமானால் வசந்தத்தின் வாளிப்பு பனைகளில் பாளைகளை பீற வைக்கும். பனைகளில் ஏறி, வட்டுக்குள் முட்டி போட்டு இருந்து, பாளைகளை பதமாகத் தட்டி, பாளை முனைகளை கூரிய கத்தியால் சீவி, பாளையில் இருந்து சொட்டுச் சொட்டாக, முத்து முத்தாக வடியும் கள்ளை பக்குவமாக சேகரிக்க முட்டிகளை பாளையோடு கட்டித் தொங்கவிட்டு, காலை மாலை என்ற பானையில் ஏறி, நுரைத்து வழியும் கள்ளுமுட்டிகளை தன்பின்புறமாக கொழுவியபடி உயரிப் பனைகளில் இருந்து உயிரைக் கையில் பிடித்தபடி இறங்கி வருவதும் ஒரு தொழில் நுட்பம் தான்.

கோடைப்பனங்கள்ளு அந்த நாட்களில் கொழும்பு உத்தியோகஸ்த்தர்களை வீட்டுக்கு லீவில் வரவழைத்துவிடும். கள்ளுச் சேகரித்துக் கொண்டு போகும் வழியில் நயினாரின் பனை வளவில் குடியிருக்கும் வைரவனோ, வன்னியனோ நயினார் வளவுக்குள் வந்து நயினாருக்கு போத்தலில் கள்ளு ஊற்றி வைத்துவிட்டு போவான். இரவு இரவாக மெயில் ரயில் வண்டியில் வந்த களைதீர உத்தியோக நயினார் பகல் பத்து மணிக்கே கள்ளுக் குடிக்க ஆரம்பித்து விடுவார்.

ஊரில் உழைத்து களைத்த அப்புமாருக்கு கள்ளுக் கொட்டிலுக்குப்போய் நாலு பேரோடு நாலு கதை கதைத்து குடித்தால்த் தான் மகிழ்ச்சி.

**கோடைப்பனங்கள்ளின் சுவை அந்த நாட்களில் கொழும்பு உத்தியோகஸ்தர்களை வீட்டுக்கு லீவில் வரவழைத்துவிடும்.**

கள்ளுச் சேர்க்கும் வைரவன் அல்லது வன்னியன் குடிசைப் பக்கம் பனங்குத்திகள் வாங்குகளாக போடப்பட்டிருக்கும். காலைவேளை பதினொரு, பன்னிரண்டு மணிக்கு கள்ளுக் கொட்டில் களை கட்ட ஆரம்பிக்கும்.

பனங்குத்தியில் குத்தியபடி வடலி ஓலையால் கோலிய பிளாவுக்குள் நுரை தள்ளும் கள்ளை இருகைகளாலும் ஏந்தி, நுரையை ஊதி ஊதி கள்ளை உறிஞ்சும் கள்ளுக் கொட்டில்காரர்களில் 'கிட்டப்பாக்கள்', 'சௌந்தரராஜன்களும்' இருப்பார்கள். பழைய சினிமாப் பாடல்கள், வைரமுத்துவின் மயானகாண்டப் பாடல்கள் கள்ளுக் கொட்டில்களில் இருந்து வசந்த கானமாக ஒலிக்கும்.

ஈழத்தின் வடக்குக் கிராமங்கள் பனங்கள்ளுக்கும் கிழக்கு கிராமங்கள் தென்னங்கள்ளுக்கும் பெயர் போனவை.

கள்ளுச் சேகரிக்கும் தொழிலுக்கு உத்தியோக அந்தஸ்து தந்த பெருமை முன்னால் நிதி அமைச்சரும் சமசமாஜக்கட்சி தலைவருமான என்.எம் பெரேராவைச் சாரும். 1970 இல் நிதி அமைச்சரான அவர் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு சங்கங்களை ஆரம்பித்தார். கள்ளு விற்பனை கூட்டுறவு கடைகளுக்கு உரித்தானது. நயினார் பரம்பரையின் எச்சசொச்ச ஆதிக்கமும் முடிவுக்கு வந்தது.

ஆனிபிறந்தால் சுரக்கும் கள்ளுக்கு அரிபனைக் கள்ளு என்று பெயர். நொங்குப் பருவத்தில் உள்ள பனைக்கள்ளு. ஆனிக்கள்ளை அருந்திச் சுவைத்தவர் நாக்கு இன்றும் ஆனி பிறந்தால் தாயக பனையின் நினைவில் தவிக்கும்.

பங்குனியில் சுரக்கும் கள் பரவுகள்ளு என்றும், சித்திரை, வைகாசி கள்ளுக்கு சிதறுகள்ளு என்றும் பெயர். ஆடிமாதக்கள்ளு காய் வெட்டிக்கள்ளு. பனங்காயை சீவிவரும் கள்ளு. கசப்பானது. வெறி பிறப்பதும் அதிகம்.

கள்ளு குடிப்பது கெட்ட பழக்கம் என்போர்கூட 'கருப்பநீர்' என்ற வெறிக்காத இனியபானத்தைத் தேடி ஆனி மாதத்தில் அலைவர். பனை என்ற 'கற்பகதரு' ஈழதேசத்துக்கு இயற்கை தந்த சீதனம் அல்லவோ.

# வெந்தயத்தின் மருத்துவ மகிமை

வெந்தயத்தில் தாவரவியல் பெயர் trigonella foerum graecum என்பதாகும். foerum graecum என்றால் கிரேக்க நாட்டு வைக்கோல் என்றும் trigonella என்றால் முக்கோணம் என்றும் பொருள்.

காய்ந்த வைக்கோலைப் போன்ற வாசனையும் கால்நடைகளுக்கும் உணவாகப் போட கிரேக்க நாட்டிலிருந்து தருவித்துக் கொண்டிருந்தார்கள். ரோம் நாட்டவர்கள், இதன் வெண்ணிறப் பூக்கள் முக்கோண வடிவமுடையதாக இருக்கும். இதுவே இதன் பெயர்க்காரணமாக அமைந்திருக்கலாம்.

### மருத்துவ குணங்கள்

வெந்தயத்தை அப்படியே உபயோகிப்பதால் கசப்பாகவும்இ விநோத வாசனையும் உடையதாக இருப்பதால் தான் இதனை வறுத்துப் பொடியாக்கிப் பயன்படுத்துகிறோம். இதன் கசப்பு ருசியும்இ பாகற்காய் கசப்பைப் போல் ஒருவித ருசியாக நாவுக்குப் பழகிவிடுகிறது. இந்தக் கசப்பு ருசிக்குக் காரணமான clycosides வெந்தயத்தில் தூக்கலாக இருக்கிறது.

நல்ல பசிகிளப்பியாக இந்த கசப்பு ருசி இருப்பதோடு உணவு ஜீரணத்துக்கு அத்தியாவசியமாக பித்த நீரை தாராளமாக சுரக்கத் தூண்டிவிடுகிறது. அசைவ உணவுக்காரர்களுக்கு இது நன்மை கூட்டுகிறது.

வெந்தயத்தில் பொஸ்பேற்றுகளும் அல்புமின்களும் நிறைந்து இருப்பதால் உடல் வளர்ச்சிக்கு உதவுவதோடு பசியின்மையைப் போக்குகிறது. அனிமியா என்னும் இரத்தசோகை அண்டாது. இது நீரிழிவுக் காரர்களுக்கும் நல்லது.

தினமும் இரு தேக்கரண்டியளவு வெந்தயத்தை தூளாகவோ முழுசாகவோ கொடுத்து வந்தால் ரத்தத்திலுள்ள கூடுதல் சர்க்கரை கட்டுப்படும். அல்லது வெந்தயத்தை ஒரு டம்ளர் தண்ணீரில் ஊறவைத்து தண்ணீரை மட்டும் வடிகட்டிக் குடிக்கலாம்.

பாலூட்டும் தாய்மார்களுக்கு பால் நன்றாக சுரக்க வெந்தயத்தை வறுத்து இடித்துக் கொடுக்கலாம்.

மாதவிடாய் சமயத்தில் அதிக அளவு ரத்தப் போக்குடையவர்களுக்கும் பிரசவித்த பெண்களுக்கும் வெந்தயத்தை வறுத்து இடித்து நெய், சீனி சேர்த்து ஹல்வா செய்து கொடுப்பது இழக்கும் தெம்பை மீட்க உதவும்.

நல்ல ருசியான உணவு தயாரிப்புகளின் வாசனை வந்தும்கூடி பசி கிளம்பாமலே நாவில் ருசி மரத்துப் போயிருந்தாலே கூட இதுவே மருந்து.

கணையம், கல்லீரல், வீக்கம், வயிற்றுப் போக்கு, அஜீரணம், நெஞ்சு எரிச்சல்... போன்ற பல்வேறு உடல் உபாதைகளுக்கும் வெந்தயம் ஒரு மாமருந்து. வயிற்றுக் கோளாறுக்கு மட்டுமல்லாது, வெந்தயநீர் காய்ச்சலையும் கட்டுப்படுத்தும். சிறுநீர்ப்போக்கை சீராக்கும்.

இயற்கை முறையில் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு வெந்தயம் உதவுவதாக சமீபத்தில் கண்டுபிடித்துள்ளனர். தொடர்ந்து வெந்தயம் சாப்பிட்டு வருபவர்களுக்கு சுலபத்தில் கருத்தரிக்காதாம்.

### அழகுக் கலையில்

பெண்களுக்கு முடியழகுதான் முதன்மையானது. முடி கொட்டாமல் செழித்து வளரவும், தலைக்கு குளுமையளிக்கவும் வெந்தயத்தை சீயாக்காயோடு சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு தலைக்குக் குளித்து வருவது கைமேல் பலந்தரும்.

அளவுக்கு மிஞ்சி நிறைய முடி உதிர்ந்து என்ன செய்வது என்று கவலைப் படுபவர்களுக்கு உதவுவதும் வெந்தயம்தான். வெந்தயத்தைத் தண்ணீரில் ஊற வைத்து வெண்ணெய் போன்று அரைத்து தலையில் தேய்த்து வைத்து அரைமணிநேரம் ஊறியதும் குளிக்க வேண்டும். ஓரிரு முறையிலேயே உடனடி பலனை எதிர்பாராமல் தொடர்ந்து சில மாதங்களுக்கு வாரம் ஓரிரு முறை வீதம் பின்பற்றவேண்டும்.

பருவ வயதில் முகத்தில் நிறைய பருக்கள் வந்து தாங்கமுடியாத எரிச்சலிருந்தால் வெந்தயத்தை அரைத்து அப்பேஸ்ட்டை அப்பி வைத்து வந்தால் எரிச்சல் அடங்குவதோடு பருக்களும் காணாமல் போய்விடும். பருவ வயது தாண்டிய பிறகு, உடல் உஷ்ணத்தால் பருக்கள் வந்தால் ஒரு தேக்கரண்டி வெந்தயத்தை ஒரு கப் தயிரில் ஊறவைத்து குறைந்தது மூன்று நான்கு நாட்களுக்காவது அதிகாலையில் எழுந்ததும் குடித்து வரவேண்டும்.

- பா. சித்தீக்

24 வருட அனுபவம் நிறைந்த இந்தியாவிலிருந்து முதன் முறையாக வருகை தந்துள்ள பண்டித் ராமராஜ் சாஸ்திரி அவர்கள் உங்கள் கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, கைரேகை, திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லட்சுமீகர விடயம், குடும்பப்பிரச்சினை, கண் திருஷ்டி, கோட் வழக்குகள், அதிஸ்டக்கற்கள், திருமணப்பொருத்தம், வாகனப் பொருத்தம், பிறந்த பிள்ளைகளின் ஜாதகம் கணித்துக் கொடுக்கப்படும். சாந்தி பூசை, லக்சுமி பூசை, சக்கரம் நடாத்திக் கொடுக்கப்படும்.

தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும்.

## ஸ்ரீ ஆஞ்சநேய ஜோதிடம் நிலையம்



## SRI ANJANEYA JOTHIDAM


Indian Famous Astrologer, Newly arrived to London. Know your future and adjust your way of life. An expert panit at service, past, present and future of your life, will be read over to you from your numerology, face reading, palm reading & horoscope reading prediction in business, education, job, love, marriage, family problem, children, divorse, court problems, visa requirements, sickness, promotion, abroad money, removal all types of black magic and evil things by performing prayers, devi upasanda, luxmi pooja and also protecting from enemies

Contact: **Pandit Ramraj Sastry**
**Tooting Super Market,** 66 Tooting High Street, Tooting, London SW17 0RL
Opening Hours: 9.30am - 8.00pm. Seven days a week.



**Mob: 07852 103 733**

# WESSEX SOLICITORS



297, High Street, Eastham, London E12 6RH
Tel/Fax: **020 8552 3508** / Mob: **07852 149 672**
**Branch Office:** 4 Upper Mount Street, Dublin 2
Email: **lawergabman@aol.com**



**Specialist in**

## Legal Advisors & Commissioners for Oath

**UK Law**
- Asylum | Citizenship
- Civil litigation
- Company formation
- Family (divorce)
- Judicial Review
- Wills Probate | Work Permit

**European Union Law**
- Employment
- Immigration
- Family Re-Union
- Residence Permit

**Irish Law**
- Crime (defence)
- Housing
- Immigration
- Matrimonial (divorce)
- Nationality

**International Law**
- Human Rights
- International Arbitration
- War Crimes (defence)

# GABMAN SOLICITORS

## Specialist in Legal Advisors & Commissioners for Oath

**INTERNATIONAL LAW**
- Human Rights
- International Arbitration
- War Crimes (defence)

**EUROPEAN UNION LAW**
- Employment
- Immigration
- Family Re-Union
- Residence Permit

**IRISH LAW**
- Crime (defence)
- Housing
- Immigration
- Matrimonial (divorce)
- Nationality



**UK LAW**
- Asylum
- Citizenship
- Civil litigation
- Company formation
- Family (divorce)
- Judicial Review
- Wills Probate
- Work Permit

434, High Street, Eastham, London E12 6RH
Tel: 087 0850 3347
Fax: 020 8821 9444
Mob: 07852 149 672
Branch Office
4 Upper Mount Street, Dublin 2
Email: gabmansolicitor@aol.com

# படம் காட்டுறம் வாங்கோ!

சிறி
( ஒரு பேப்பர் )



இதுவும் 80களின்ரை ஆரம்ப காலகட்ட கதைதான் இந்த காலகட்டம்தான் தொலைகாட்சி பெட்டியும் இலங்கையிலை பரவலா அறிமுகமாக தொடங்கின கால கட்டம். அந்த கால கட்டத்திலை கோயில் திருவிழா. கலியாண வீடு. சாமத்திய வீடு எண்டு எல்லா மங்கல விழாவிலையும் ரிவியிலை விடிய விடிய அஞ்சு. ஆறு படம் ஓடுறகாலம்.

ஆரம்பத்தில் இந்த ரிவி டெக் ஆகியவற்றை சில வீடியொ கடையளும் வாடைகைக்கு விடுவினம் அவையளிட்டை போய் சொன்னா சரி. ரிவி டெக் ஆகியவற்றை ஒரு வானில் கொண்டு வந்து இறக்கி படத்தை போட்டு செற் பண்ணி விட்டிட்டு படங்களை மாத்துறதுக்காகவே ஒருத்தர் விடிய விடிய காவல் நிப்பார்.

பிறகு காலப்போக்கிலை வெளிநாடு மற்றும் கப்பல்களில் வேலைக்கு போறவை எல்லாருமே லீவிலை வரும்போது கட்டாயம் கையோடை கொண்டு வாற சாமான் இந்த ரிவி தான் அதுவும் 99 வீதம் பேரும் கொண்டுவாறது(ஞுழுலேு) ரிவிதான். அதாலை சைக்கிள் கரியரிலை கட்டி கொண்டு போற அளவுக்கு இந்த ரிவியின்ரை பெருமை குறைஞ்சு போச்சுது.

இப்பிடித்தான் பாடசாலை தவணை விடுமுறை விட்ட ஒருநாள் என்னுயிர்த் தோழன் இருள் அழகன் எங்கடை கோயில் மடத்திலை இருந்து அதுகின்ரை முகட்டை பாத்தபடி என்னிடம் 'டேய் இந்த உலகத்திலை பிறந்து இதவரை என்னத்தை சாதிச்சிருக்கிறம்' எண்டான். இதென்னடா இவனுக்கு திடீரெண்டு மடத்து முகட்டிலை இருந்து ஏதும் ஞானம் கிடைச்சிட்டுதா எண்டு நினைச்சபடி... அவனையும் முகட்டையும் மாறி மாறி பாக்க. இல்லையடா இந்த ஊருக்காவது ஏதாவது செய்யவேணும் போலை இருக்கு அததான் இந்த லீவிலையாவது ஏதாவது பிரயோசனமா இந்த ஊர் மக்களுக்கு செய்வம் எண்டு யோசிச்சு இருக்கிறன்எண்டான். நல்ல சிந்தனைதான் ஆனால் அது உனக்கு வந்திருக்கு அதுதான் யோசிக்கிறன் சரி என்ன செய்யபோறாய்?

ஒரு ரிவி டெக் வடைகைக்கு எடுத்து எங்கடை ஊர் மக்களுக்கு படம் காட்ட போறன் என்றான். அப்பதான் எனக்கு நிம்மதி ஒரு நிமிசம் இவனுக்கு ஏதும் ஞானம் பிறந்திட்டுதாக்கும் என்று பயந்து போயிட்டன். அப்பிடியே பிள்ளையாரை எட்டிப்பார்த்து மனதுக்குள் நன்றி சொல்லிவிட்டு சரி ஏதோ பொழுது போகதானே வேணும் அது படம் பாத்ததா போகட்டும் என்று நினைத்து அதற்கான பட்ஜெட்டை போட்டு பார்தோம். ரிவி.டெக்மற்றும் 5 படக்கொப்பி ல்லாவற்றிக்குமாக வாடைகை 1500 ரூபாவை தாண்டியது. வீட்டிலை கைசெலவுக்கு தருகின்ற 5 ரூபாவுக்கே எத்திணை குட்டிகரணம் அடிக்க வேண்டியிருக்கு இதுக்கை 1500 ரூபாக்கு எங்கை போறது? செலவை குறைக்க ஒரு யோசனை தோன்றியது. படம் ஓட ஒரு இடம் வேணும் அதுவும் ஆமி ரோந்து பிரச்சனை இருக்கிறபடியா பிரதான வீதியை அண்டாமல் ஒதுக்கு புறமா மின்சார வசதியோடை ஒரு வீடு வேணும் யோசிச்சு பாத்ததிலை அதே வசதிகளோடை இருக்கிற எனது சித்தப்பா ஒருதர் ஞாபகத்திற்கு வந்தார் அதைவிட அவரிட்டை ரிவியும் இருந்தது அதோடை அவரும் சித்தியும் சரியான படைபைத்தியம் அவரோதைச்சு அவர் இடமும் ரிவியும் தந்தாரெண்டால் பாதி பிரச்சனை முடிஞ்ச மாதிரி என்று நினைத்து அவரிடம் போய் கதைச்சன் அவரும் முதலாவது படம் தன்னுடைய அபிமான நடிகர் எம்.ஜி. ஆர் நடிச்ச படம் போடவேணும் சரியெண்டா தான் இடமும் ரிவியும் தாறதா சொன்னார்.

இடம் ரிவி பிரச்னை முடிஞ்சுது மிச்சமா டெக் மற்றும் பட கொப்பி எடுக்க வாடகை ஒரு 700 ரூபாயளவில் தேவை இருள் அழகனின்ரை சேமிப்பு உண்டியலை உடைச்சதிலை ஒரு 150 ரூபாய் தேறியது. என்னிடம் உண்டியல் சேமிப்பு பழக்கம் இல்லை ஏனெண்டால் நான் எப்பவுமே நாளையை பற்றி கவலை படாத ஆள். (இன்று வரை அதே நிலைமைதான்) அதாலை நான் வழமை போல எனக்கு பணம் தேவைப்படும் போதெல்லாம் எனக்கு கை கொடுப்பது எங்கள் தென்னங்காணி இது எங்கள் வீட்டிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் இருந்தது அதனால் அங்கு கைவைத்தால் வீட்டிற்கு தெரிய வராது. அதுமட்டுமில்லை ஆள் வைத்து தேங்காய் பிடுங்கினால் வீட்டில் பிடிபட்டு விடுவேன் என்றதால் நானே கஸ்ரபட்டு தென்னை மரமேற கற்று கொண்டேன்.

தென்னை மாமேறினால் நெஞ்சு பகுதியில் மரம் உரஞ்சி கீறல் காயங்கள் வரும் அது மாறும்வரை வீட்டுகாரருக்கு முன்னால் சேட்டை கழற்றாமல் திரிய வேண்டும். அடுத்தாய் அந்த காணிக்கை பாக்கு மரங்களும் நிண்டது கொட்டை பாக்கும் பொறுக்கி விக்கலாம். வீட்டுக்கு தெரியாமல் வழமை போல நானும் நண்பனும் தென்னையில் கை வைக்க முடிவு செய்தோம். நான் தேங்காய்களை புடுங்கி போட இருள் அழகன் ஓடியோடி பொறுக்கி உரித்தான் அதோடு கொட்டை பாக்கும் கொஞ்சம் பொறுக்கி சாக்கில் போட்டு கட்டியாகிவிட்டது. ஊர்சந்தையில் கொண்டுபோய் விக்கமுடியாது வீட்டுக்காரர் யாராவது கண்டால் பிரச்சனையாகிவிடும் என்பதால் மருதனார் மடம் சந்தையில் கொண்டு போய் வித்து ஒரு 200 ரூபாயளவில் தேறியது.

சந்தையை விட்டு வெளியே வந்ததும் முன்னாலிருந்த கூல்பார் கண்ணில் பட நண்பனிடம் டேய் இவ்வளவு கஸ்ரப் பட்டு மரமேறி தேங்காயெல்லாம் புடுங்கி வித்தாச்சு நெஞ்செல்லாம் மரம் உரஞ்சி எரியிது வா கூலா ஒரு பலூடா குடிப்பம் என்றேன். அதுக்கு அவனோ டேய் எங்கடை இலட்சியம் எல்லாம் படம் ஓடுவது அது நிறைவேறும் வரை காசு செலவு பண்ணக் கூடாது இடையில் எந்த ஆசா பாசத்திற்கும் இடம் இல்லை பேசாமல் வா என்று கை நீட்டி சத்திய பிரமாணம் எடுக்காத குறையாக சொன்னான்.

அட விழங்காத பயலே படம் ஓடுறதெல்லாம் ஒரு இலட்சியம் அதுக்கு இடையிலை ஒரு பலூடா கூட குடிக்க முடியாதா என்று புறுபுறுத்தாலும் அப்போ அவனுடன் கோபமாக கதைத்தால் அவனே அப்புறாவராக மாறி என் வீட்டில் தேங்காய் கதையை போட்டுடைத்து விடுவான் பிறகு வீட்டில் என் தலைதான் தேங்காயாக உருளும் எனவே பொத்திக் கொண்டு நடந்தேன்.

எங்களிடம் இருந்த பணம் நண்பர்களிடம் கடனுதவி பெற்றது எண்டு எல்லாம் திரட்டியும் ஒரு 200 ரூபாய் பட்ஜெட்டில் துண்டு விழுந்தது. அதனால் ஆளுக்கு 3 ரூபாய் கட்டணம் அறவிடுவது என்று எங்கள் பொதுநலத் தொண்டில் சிறிய மாற்றம் கொண்டு வந்தோம்.

அதே நேரம் படம் ஓடுகின்ற செய்தியை ஊருக்கு ஒரு ஸ்பீக்கர் மூலமாக அறிவிக்கலாமென நினைத்து எங்கள் ஊரில் ஸ்பீக்கர் வாடைகைக்கு விடுகிறவர் ஒருவரிடம் போய் கேட்கவும் அவர் தம்பி வீட்டிலை பெரியாக்கள் யாரும் இருந்தா கூட்டிகொண்டு வாங்கோ உங்களை நம்பி தர ஏலாது என்றார். எனக்கு வந்த கோபத்திற்கு சற்று தூரத்தில் போய் நின்று ஒய் உன்ரை மகளைகலியாணம் கட்டிதர சொல்லியா கேட்டனான் ஸ்பீக்கர்தானே கேட்டனான் என்று கத்தி விட்டு ஓடிவிட்டேன்.

அப்பாடியே பண்டத்தரிப்பு வரை ஓடிப் போய் அங்கு எனக்கு தெரிந்த செல்வா சவுண்ட் சேவீஸ் காரரிடம் தலையை சொறிந்தேன் அவரும் ஓசியிலை குடுக்கிறதுதானே என்று நினைத்து ஒரு பழைய மைக் 2 சிறிய ஸ்பீக்கர் அம்பிலி தந்துதவினார்.

அதை கொண்டு வந்து சித்தப்பாவிடம் நின்ற ஒற்றை திருக்கல் (ஒரு மாடு மட்டும் இழுக்கும் வண்டில்) வண்டிலில் மாட்டையும் கட்டி இரண்டு ஸ்பீக்கரையும் கட்டி எல்லாம் பொருத்தி முடிய இருள் அழகன் நான் தான் அறிவிப்பாளர் என்று அடம் பிடித்தான் சரி இதென்ன இலங்கை வானொலியா அவனின் ஆசையை ஏன் கெடுப்பான் அறிவிக்கட்டும் நான் வண்டிலை ஓடுவம் என்று நினைத்து மாட்டின் கயிற்றை பிடிக்கு முன்னர் இருள் அளகன் அவசரப்பட்டு வண். ரூ. திறீ மைக் ரெஸ்ரிங் எண்றவும் ஸ்பீக்கர் கீகீகீ........... என்று கீச்சிட மாடு வெருண்டு ஓடதொங்கி விட்டது.

கொஞ்சத் தூரம் ஓடிய பின்னர் மாடும் வண்டிலும் கஸ்ரப்பட்டு என்னுடைய கட்டுப் பாட்டில் கொண்டு வரப்பட்டது. ஆனாலும் இதையெல்லாம் பாத்துகொண்டு நின்ற சித்தப் பாவோ டேய் உங்கடை ஒரு நாள் கூத்துக்கு என்ரை மாட்டையும் வண்டிலையும் நாசமாக்க வேண்டாம் பேசாமல் ஸ்பீக்கரை மரத்திலை கட்டி அறிவியுங்கோ என்று மாட்டு வண்டிலை புடுங்கி கொண்டார்.

ஒரு மாதிரி மாலையானதும் எங்கடை அறிவிப்பிற்கு சனமும் வர தொடங்கியது ரிவியில் பாட்டுகள் ஓடிக் கொண்டிருந்தது. சித்தப்பா என்னிடம் தம்பி நான் டக்கெண்டு ஓடிப் போய் ஒரு போத்தல் அடிச்சிட்டு வாறன் அத வரைக்கும் பாட்டை ஓடவிடு என்று விட்டு கள்ளடிக்க போய்விட்டார்.

நான் வாசலில் நின்று வசூலை கவனித்து கொண்டு இருள் அழகனிடம் டேய் யாராவது காசு தராமல் களவாய் வேலி பாஞ்சு வருவாங்கள் அதாலை நீ வீட்டை சுத்தி கவனி என்று அவனை அனுப்பி விட அவனும் ஏதோ நாட்டின் எல்லையை கவனிக்க அனுப்பின மாதிரி கையிலை ஒரு பொல்லை எடுத்த கொண்டு வீட்டின் பின்பக்கமாக போனான்.

சிறிது நேரத்தில் அய்யோ என்றொரு சத்தம் கேட்டது இருள்அழகன் பொல்லு இல்லாமல் வேகமாய் ஓடிவந்து என்னிடம் நடுங்கியபடி டேய் ஒரு பிரச்சனை நடந்து போச்சு என்றவும் பின்னால் சித்தப்பா மண்டையை பொத்திப் பிடித்தபடி டேய் என்ரை வீட்டிலை என்ரை ரிவியிலை படமோடிக் கொண்டு என்னையே அடிக்கிறியளா?? இண்டைக்கு எப்பிடி படம் ஓடறியள் எண்டு பாப்பம் என்றபடி ஆவேசமாய் வந்து ரி வி வயர் எல்லாத்தையும் கழற்றி எறிய தொடங்கினார்.


ஒரு மாதிரி நான் சித்தி எல்லாருமாக அவரை சமாதானப்படுத்தி விட்டு இருள் அளகனிடம் விபரத்தை கேட்டேன். கள்ளடிச்சிட்டு வந்த சித்தப்பா வீட்டின் பின்பக்கம் இருந்த பொட்டுக் குள்ளாலை உள்ளை வர தலையை விட்டிருக் கிறார் அதை யாரோ களவாய் படம்பாக்க வருகினம் என்று நினைத்து இருள்அளகன் இருட்டுக்குள்ளை ஆளை அடையாளம் தெரியாமல் கையிலை இருந்த கட்டையாலை மண்டையிலை போட்டிட்டான். பிறகு சித்தப்பாவிடம் மன்னிப்பு கேட்டு கெஞ்சி கூத்தாடி அவருக்கு பிடித்த எம்.ஜி. ஆரின் நினைத்ததை முடிப்பவன் படத்துடன் எங்கள் படம் காட்டல் இனிதே ஆரம்பமானது

அடுத்த பேப்பரில் இன்னொரு கதையுடன் சந்திக்கிறேன்.

RADIUS SERVICES LIMITED

**Contact our services for :**

**Shelving**
**Chillers, Freezers**
**Air Conditioning systems**
**Shop Fitting**
**Cold Rooms etc.**



உங்களின் அனைத்து குளிர்சாதன உபகரணங்களின் தேவை மற்றும் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்கு நாடவேண்டிய ஒரே இடம்






*Unit: 23 - 24 Resolution Way*
*London SE8 4NT*
*Tel: 020 8692 0257 / 020 8694 2786*


"இன்ரர்நெட்டில்
இடியப்பம் ஓடர் பண்ண
இந்தியாவுக்கு போயிட்டு வர
இங்கிலாந்தில் சுற்றித் திரிய
இறைச்சி மீன் வாங்க
இறைவன் இருக்குமிடம் தேட"

இன்னும் இல்லாதது என்ன?
இந்த நெட்டில் தேடலாம்!

**oru directory**

www.orudirectory.com

# Vedic Therapy: What is Ayurveda?



Dr. Roy Kochuparampil
KERALA AYURVEDIC HEALTH CLINIC

Ayurveda or ayurvedic medicine is a more than 2,000-year-old comprehensive system of medicine based on a holistic approach rooted in Vedic culture. The word ayurveda means knowledge (Veda) of life (ayur). This form of health treatment began in ancient India.

Today, there are several universities and institutions that specialise in qualifications in ayurveda all around the world, such as in India and USA. Ayurveda is a well-developed form of health care that treats the individual's needs.

In ayurveda there are three main doshas (medical humours), which are Vata (resembles the classical element air), Pitta (fire), and Kapha (water). All bodily processes are believed to be governed by a balance of the three doshas. Whichever dosha appears to dominate a person's behaviour and physique is called his constitution type. Each constitution type has particular strengths and susceptibilities.

Vata, composed of air, governs all movement in the mind and body and must be kept in good balance. Too much vata leads to worries, insomnia, cramps and constipation. Vata controls blood flow, elimination of wastes, breathing and the movement of thoughts across the mind. Vata activates the nervous system, hearing and speech; and expresses as enthusiasm and creativity. Another word for Vata is Vayu - it is the more traditional Sanskrit word for air.

Pitta is said to be composed of fire and water; it governs all heat, metabolism and transformation in the mind and body. It controls how we digest food, how we metabolize our sensory perceptions, and how we discriminate between right and wrong. Pitta must be kept in balance, too. Too much Pitta can lead to anger, criticism, ulcers, rashes and thinning hair. A balanced Pitta mind makes one a good leader with a warm personality.

Kapha is the watery humour. Kapha cements the elements in the body, providing the material for physical structure. This dosha maintains body resistance. Kapha lubricates the joints; provides moisture to the skin; helps to heal wounds; fills the spaces in the body; gives biological strength, vigour and stability; supports memory retention; gives energy to the heart and lungs and maintains immunity. Kapha is responsible for emotions of attachment, greed and long-standing envy; it is also expressed in tendencies toward calmness, forgiveness and love. Too much Kapha leads to lethargy and weight gain, as well as congestion and allergies.

Often a person is a dual dosha (e.g. Vata/Pitta) or even Tridosha (all three doshas).

In summary, Ayurveda represents a system that considers both the states of mind and body in its diagnosis and treatment. Ayurveda took into consideration the fact that many illnesses are caused by foreign agents and small organisms that may require intervention. Patients are classified by body types, or prakriti, which are determined by proportions of the three doshas. Illness and disease are considered to be a matter of imbalance in the doshas. Treatment is aimed at restoring harmony or balance to the mind-body system.

You should first consult with a qualified ayurvedic physician. In the UK, a qualified physician should have the initials BRCP (British Register of Complementary Practitioners), and must have BAMS (Bachelor of Ayurvedic Medicine and Surgery) or a suitable equivalent. Ayurveda can be used as a part of a rejuvenation therapy. Ayurveda is a really useful way to improve or maintain an individual's health balance.

*Web: www.kahc.co.uk*

## வந்ததும் பேசுவேன் என்றாளே!

வெகு நேரமாகியும்
என்னவளைக் காணவில்லை

இன்னும் வரவில்லையோ?
வந்தும் பேசவில்லையோ?

வந்ததும் பேசுவேன் என்றாளே

வேலை அதிகமோ? வேனிற்
அதிகமோ?

தலை வலியோ? "தலை"யின்
வலியோ?

வந்ததும் பேசுவேன் என்றாளே

என்னை மறந்தாளோ? எங்கும்
விழுந்தாளோ?

என்னை நீங்கினாளோ?
என்னுடன் நீங்கினாளோ?

வந்ததும் பேசுவேன் என்றாளே

என்னுயிர் என்றாளே என்னில்
பாதி என்றாளே

பாதி தவிக்கிறதே
அலைப்பாய்கிறதே அறிவாளோ?

வந்ததும் பேசுவேன் என்றாளே

நான் உன் கண்மணி என்றாளே
கண்ணின் வலி அறிவாளோ?

அறிந்தும் அமைதி காப்பாளோ?
என்ன ஆனது அவளுக்கு?

வந்ததும் பேசுவேன் என்றாளே

அவள் மனம் வேதனைப்
படுகிறதோ? ஏன் என் மனம்
வலிக்கிறது?

நான் வீணாய் கவலைப்
படுகிறேனோ? கற்பனை
செய்கிறேனோ?

வந்ததும் பேசுவேன் என்றாளே

என்னைப் பைத்தியமாக்குவதில்
சுகமோ?

அறியாமல் செய்கிறாளா?
அறிந்து தான் செய்கிறாளா?

வந்ததும் பேசுவேன் என்றாளே

புலம்புகிறேனோ? இது தான்
காதலோ?

அவள் பேசியதும் என் புலம்பல்
நின்று விடுமோ?

வந்ததும் பேசுவேன் என்றாளே

பேசியதும் கோபம் வருமோ?
சந்தோசம் வருமோ?

கண்ணில் நீர் வழியுமோ?
ஆனந்தத்தில் அமைதியாவேனோ?

வந்ததும் பேசுவேன் என்றாளே

- காட்டாறு

# ஒரு ஷங்கர் ரசிகையின் ஆதங்கம்

'என்ன கொடுமை சரவணா இது?' - இது சந்திரமுகி படத்தோட டயலாக்'னு எல்லாருக்குமே தெரியும். ஆனா இது இப்ப சிவாஜி படம் பார்த்துட்டு வர்ற வங்க சொல்ற டயலாக் ஆய்டிசுங்க.

சிவாஜி படத்துல கொடுமைங்கற விஷயத்தை எவ்வளவு வித விதமா சொல்லிருகாங்கங்கறததுதான் புதுமையான விஷயம். பொதுவாவே ஒரு படம் வர்றதுக்கு முன்னாடி அந்த படத்தோட டைரக்டருலருந்து லைட்ஸ்மேன் வரைக்கும் இது ரொம்ப வித்தியாசமான படம்ன்னு எல்லார்க்கும் காது குத்துவாங்க. கிட்டதட்ட அந்த அளவுக்கு (கொடுமைங்கற விஷயத்துல) வித்தியாசமா இருந்தாலும் டைரக்டர் ஷங்கர் விசிறியான எனக்கு படம் திருப்தியாவே இல்லைங்க. படம் பார்த்துட்டு வரும்போது நிறைய காட்சிகள் ஒழுங்கு படுத்தாம அவசரத்துல படத்தை ரிலீஸ் பண்ண மாதிரி இருக்கு. தயிர் சாதத்துல ஊறுகாய் மிஸ் ஆனா அதிருப்தி! (ஒடனே என்ன அய்யராத்து மாமின்னு நினச்சுடாதேள்!) ரஜினி ரஜினின்னு படம் முழுக்க ரஜினி தாங்க இருக்காரு. பாடல் காட்சிகளுக்கு மட்டும் ஷங்கர் வந்து எட்டிப் பார்த்துட்டு போறாரு.

படத்தோட கதை என்னன்னு கேட்குறீங்களா? அதை நான் சொல்லாம விடுவேனா? ரொம்ப வித்தியாசமான கதை தாங்க. நம்ம சிவாஜி அமெரிக்காலருந்து நிறைய பணத்தோட இந்தியாவில வந்து வாலிப வயசோட இறங்கறாருங்க. இலவசமா பல்கலைக்கழகம் (அதாங்க யுனிவெர்சிட்டி) கட்டி எல்லாரையும் இலவசமா படிக்க வைக்கணும்ங்கற ததுதான் சிவாஜியோட லட்சியம். அதை தடுக்கறத்துக்கு வர்றவர்தான் வில்லன் சுமன். இருந்தாலும் லட்ச லட்சமா லஞ்சம் குடுத்து வர்ற தடைகளை எல்லாம் தாண்டி போக முயற்சி பண்றார் சிவாஜி. கடைசியா ஒரு வழியா எல்லா பணமும் போய் வீடு வாசல் எல்லாம் இழந்துட்டு நடு தெருவில நிக்கிறார். அந்த நேரத்துல சுமன் வந்து சிவாஜிக்கிட்ட ஒரு ரூபாய் குடுத்து பிச்சை எடுத்து பொழச்சுக்கோன்னு சொல்லி சிவாஜியை சூடேத்துறாறு. தூங்கிட்டிருக்க சிங்கத்தை தட்டி எழுப்பினா அது சும்மா இருக்குமா? அந்த ஒரு ரூபாயை வச்சுட்டு சிவாஜி எப்படி முன்னேறார்ங்கறதுதான் கதைங்க. ஷங்கர் அவரோட முந்திய படங்கள் எல்லாத்தையும் போட்டு மிக்ஸ் பண்ணி புத்தம் புதுசா தந்திருக்காரு இந்த சிவாஜியை.

படம் பார்த்துட்டு கடவுளேன்னு இருக்கும் போது எப்படா பாட்டு வரும்ன்னு இருந்திச்சுங்க. பாடல் காட்சிகள் எல்லாம் ரொம்ப அழகா இயக்கி இருக்காரு ஷங்கர். அதுவும் 'சகானா' பாட்டுல வர்ற அந்த கிரீன் ஹவுஸ்சை ரொம்ப அழகா அமைச்சிருக்காங்க. பாட்டெல்லாம் பார்க்கும்போதுதான் மொத்த சிவாஜி டீமும் எவ்வளவு கஷ்டபட்டிருக்காங்கன்னு தெரியுது. அதோட மட்டுமில்லாம ரஜினி அங்கிளோட (ஹி ஹி...) மேக் அப் எதிர்பார்த்ததை விட ரொம்ப நல்லாவே பண்ணி இருக்காங்க. அதுவும் அந்த மொட்டை சிவாஜியை பத்தி சொல்ல வார்த்தையே இல்லை. மொட்டையை பார்த்தாலே சும்மா ஜொலிக்குதுல!

நம்ம சிவாஜி தாத்தாவோட பேத்தி பத்தி நான் சொல்லியே ஆகணும். அதாங்க நம்ம ஷ்ரேயா. பொண்ணு சும்மா மொழு மொழுனு பொம்மை மாதிரி நிக்குது பாடுது ஆடுது. நம்ம பசங்களுக்கு ஒரே குஷிதான் போங்க. ஷ்ரேயா போடுற காஷ்டியூம்கள் எல்லாமே கலர் கலரா கண்ணுலயே நிக்குது. நடிப்புன்னு சொல்ல போன ஷ்ரேயாவுக்கு நடிக்க வாய்ப்பே குடுக்கல ஷங்கர்ன்னு தான் சொல்லனும்.

நம்ம விவேக் காமெடிங்கற பேர்ல அவர் பாட்டுக்கு பன்ச் டயலாக்லாம் பேசிட்டு போறாரு. விவேக் காமெடி பண்றாரோ இல்லையோ சாலமன் பாப்பைய்யா உண்மையாவே காமெடி நல்லா பண்றாருங்க. அவரோட பொண்ணுங்களையும் அவரோட கலருகேத்த மாதிரி கருப்பு மேக்-அப் போட்டு விட்டது ஷங்கரோட சூப்பர் டச்!?.

மொத்தத்துல சிவாஜி படம் ரஜினி ரசிகர்களுக்குத்தான் விருந்து. கதையை எதிர்பார்த்து போறவங்களுக்கு ஏமாற்றம் தான் மிச்சம். மாஜி ரஜினி ரசிகையான நான் அங்கிளுக்கு சொல்றது என்னன்னா.. 'நீங்க நினைச்ச மாதிரி சந்திரமுகி வெற்றி படம் ஆய்டிச்சு. ஷங்கர் ஆசைக்கு அவரோட ஒரு படமும் பண்ணியாச்சு. இனியாவது உங்க பேத்தி கூடெல்லாம் டூயட் பாடுறதை விட்டுட்டு நம்ம அமிதாப் பச்சான் மாதிரி கௌரவ வேடத்தில நடிச்சா நாங்கெல்லாம் ரொம்ப சந்தோஷப்படுவோம். அதுமட்டுமில்லாம ஒரு பிரஸ் மீட் வச்சு உங்க ரசிகர்களையெல்லாம் உங்க கட் அவுட்டுக்கு பால் அபிஷேகம் பண்ணாம போய் ஒழுங்கா வேலை வெட்டியை பார்க்க சொல்லுங்க'

ஆகா மொத்ததுல சிவாஜி 'சே'வாஜி!

- சுவேதிகா



Sri Hare Rama Hare Krishna Astrology Centre

## ஜோதிடர் விஜய் வர்மா

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நக்ஷத்திரம் திரு விஜய் வர்மா அவர்கள் கைரேகை, சாமுத்திரிகா இலக்ஷணம், ஜாதகம், பிறப்பியல், நாமநஷத்திரம், வருங்காலம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகியவற்றை மிகத் துல்லியமாகக் கணித்து வழங்குவார்.

திருமணப் பொருத்தங்கள் பார்க்கப்படும். திருமணத்தடைகள் நீங்க, குடும்பத்தில் நிலவுகின்ற கணவன், மனைவி பிரச்சினைகள் தீர, காதல், வேலை மற்றும் வியாபாரம் ஆகியவற்றில் ஏற்படும் தடைகள் மற்றும் எதிர்பாராத சரிவுகளுக்குப் பரிகாரம் வழங்கப்படும். வாகனப் பொருத்தங்கள் பார்க்கப்படும். பில்லிசூனியம், ஏவல், செய்வினை ஆகியவற்றால் பாதிப்படைந்தவர்களுக்குப் பரிகார பூஜைகள் மற்றும் குழந்தை பாக்கியம், தேவி உபாசனைகள் மூலம் தீர்வுகள் வழங்கப்படும். அனைத்துவிதமான தோஷங்களுக்கும் கண்திருஷ்டிகளுக்கும் பரிகாரம் வழங்கப்படும்.

**Specialist in all kinds of Astrology**

You will come to know about your past, present & future by hand predicition, horoscope, face reading, intending persons mat contact. for job family matters, husband & wife relationship, love, education, business, choice of stones, marriage, sickness, promotion, family problems, children problems, Immigration, abroad, money, sexual problems, etc. Witch craft will be cleared by performing Poojas and Devi Upasanas. Lakshmy Pooja, prayers and protection from enemy.

*Contact Mob:* **07957 547 255**
1st Floor, 14A Ealing Road, Wembley, Middx, HA0 4TL
(Upstairs of Oviya Entertainment)
(Opposite Saghana Jewellers)

**Opening Hours:** 9.00 a.m – 9.00 p.m Seven days a week.

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக *ஒரு பேப்பர்* நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orupaper.com




## மணமகள் தேவை

1) Graduate from Middlesex Uni. 32 years , 5'2", 9 years in the Uk, looking for a suitable bride, at least A/L qualified. Ref : 1113

2) Employed in Doha- Qatar, 28 years, 5'8", A/L qualified looking for a bride, an E.U citizen. Ref : 1112

3) In the U.K, with PR, 41 years, 5'7", working as assistant financial controlar, looking for a suitable bride. Ref : 1111

4) லண்டனில் வசிக்கும், 26 வயது, 5'6", O/L படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாட்டில் தேடுகின்றார். Ref: 1110

5) British citizen, a professional, 41 years, 5'8", a divorcee, looking for asuitable bride. Ref: 1109

6) Qualified plumber, 7 years in the U.K, 28 years, 5'7", looking for a suitable bride with E.U citizenship. Ref:1108

7) Canadian citizen, 45 years, 5'10", O/L qualified, looking for a suitable bride. Ref: 1107

8)Top professional 28 years, 5'9", In Europe since childhood, presently in the UK, seeks an educated bride. Ref : 1106

9) Jaffna born 37 years , 5' 6" presently working in Pondicherry, India as a Computer specialist, looking for a suitable bride. Ref: 1105

10) Hotel employee, 31 years, 5'7", in the UK for the last 8 years, looking for a suitable bride with citizenship abroad . Ref : 1104

11) Canadian citizen, 31 years, 5'11", A top professional Phd, a Divorcee, looking for a suitable bride. Ref: 1103

12) வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'3" உயரமுள்ள A/L படித்த தற்போது மலேசியாவில் வேலை செய்யும் மணமகனிற்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref: 1102

13) Canadian citizen, 44 years, 5'11", educated and well employee, a Divorcee, looking for a suitable bride. Ref: 1101

14) Professional 35 years, 5'9", a British citizen,seeks a suitable bride. Preferably from Sri Lanka. Ref: 1100

15) Network Engineer, 7yrs. in the U.K, 29 years, 5'11", seeks a suitable bride.Ref: 998

16) வவுனியாவில், A/L படித்த,36 வயது, 5'6",மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref: 997

17) யாழ்ப்பாணத்தில் தொழில் புரியும் பட்டதாரி மணமகன், 30வயது, 5'7",தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref: 996

18) லண்டனில் வசிக்கும்,25 வயது, 5'8", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref: 995

19) லண்டனில் வசிக்கும், 37 வயது, 5'7", தாரமிழந்த மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனில் தேடுகின்றார். Ref: 994

20) இலங்கையில் வசிக்கும் B.A பட்டதாரி, 31 வயது, 5'4", தகுந்த மணமகளை வெளிநாடுகளில்/இலங்கையில் தேடுகின்றார். Ref: 993

21) லண்டன் பிரஜாவுரிமை, 46 வயது, '6', சகோதரி தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref: 992

22) லண்டனில் வசிக்கும், 40 வயது, 5'10", பட்டதாரிக்கு ஜேர்மனியில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref: 989

23) லண்டனில் வசிக்கும், 34 வயது, 5'6", A/L படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாட்டில் தேடுகின்றார். Ref: 988

24) இலங்கையில் வசிக்கும் B.A பட்டதாரி, 27 வயது, 5'7", தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref: 984

25) Canadian Citizen, 38 வயது, 5'7", தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 983

26) நுவரெலியாவில் Dr, 31 வயது, 5'7", தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 982

27) லண்டனில் வசிக்கும், 31 வயது, 5'9", தகுந்த மணமகளை ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றார். Ref: 981

28) லண்டனில் வசிக்கும், 30 வயது, 5'5", A/L படித்த, தகுந்த மணமகளை UK/Canada இல் தேடுகின்றார். Ref: 980

29) லண்டனில் வசிக்கும், 32 வயது, 5'10", தகுந்த மணமகளை ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றார். Ref: 979

30) கொழும்பில் Project Specialist, BSc, 34 வயது, 5'10", தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 975

31) முல்லைத்தீவில் வசிக்கும், 35 வயது, 5'7", தகுந்த மணமகளை Europe/Canada/Australia இல் தேடுகின்றார். Ref: 974

32) பிரித்தானியப் பிரஜாவுரிமை, 46 வயது 5'10", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை U.K யில் தேடுகின்றார். Ref: 973

33) கனடா பிரஜாவுரிமை, 27 வயது, 5'4", U.K இல் மணமகளைத் தேடுகின்றார். Ref: 972

34) லண்டனில் வசிக்கும், 32 வயது, 5'8", தகுந்த மணமகளை ஐரோப்பாவில் தேடுகின்றார். Ref: 969

35) சுவிஸ் பிரஜாவுரிமை, 39 வயது, 5'9", A/L படித்த, தகுந்த மணமகளை இலங்கை/ ஐரோப்பாவில் தேடுகின்றார். Ref: 968

36) லண்டனில் டாக்டர், 43 வயது, 5'4", தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 964

37) Consultant on Working Visa, 33 years, 6' tall, M.Sc qualified, seeking a professional bride. Ref: 962

38) Top professional 28 years, 5'11" tall,in the U.K since childhood, seeking a professional bride. Ref: 961

39) Canadian Citizen, 34 years, 5'8" tall, A/L qualified seeking a suitable bride. Ref: 959

40) British Citizen, 34 years, 5'8" tall, software engineer working in Cambridge, seeks a professional bride in U.K. Ref: 958

## மணமகன் தேவை

1) கொழும்பில் வேலை செய்யும், 25 வயது, 5'2", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1455

2) Swiss citizen, for 12 years, 29 years, 5'3", with diploma in dancing, playschool teacher, seeks a suitable groom. Ref:1454

3) Educated bride, working in Colombo, 24 years, 5'2", seeks a suitable groom in the U.K. Ref:1453

4) கொழும்பில் வேலை செய்யும், பட்டதாரி மணமகள், 32 வயது, 4'10", தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1452

5) Professional bride, 34 years, 5'8", a U.K citizen, looking for a suitable groom. Ref:1451

6) Working in Colombo, 36 years, 5'1", A/L quarlified, seeks a suitable groom in the E.U or Canada . Ref:1450

7) In the U.K, on student visa, doing Ph.D, 34 years, 5'1", looking for a qualified groom in Europe with PR Ref:1449

8) லண்டனில் வசிக்கும், விவாகரத்துப் பெற்ற, 34 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1448

9) Teacher in Jaffna, 34 years, 5'2", looking for a suitable groom. Ref:1447

10) கனடாவில் வசிக்கும், 30 வயது, 5'2", விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1446

11) கனடா பிரஜாவுரிமையுள்ள, 46 வயது, 5'5",Hotel Management படித்த மணமகளுக்க, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1445

12) Govt. servant in Jaffna, 29 years, 5'3", a graduate, seeks a groom in Sri Lanka or abroad. Ref:1444

13) Jaffna born, in the U.K on student visa, 35years, 5'4", A/L qualified seeks a suitable groom. Ref:1443

14) மட்டக்களப்பில் பிறந்து A/L படித்து ஆசிரியையாக கடமை புரியும் 26 வயது 5'1" தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1442

15) கனடாவில் வசிக்கும் பட்டதாரியும் Accountants and Advisors company-யில் வேலை பார்க்கும் 26 வயது 5'5" மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1441

16) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'2" கொழும்பில் வேலை செய்யும் மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1440

17) வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'3" மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref: 1439

18) Uni. student, 24 years, 5'4", a British citizen, in the UK since her teenage seeks a suitable groom. Ref:1438

19) Professional 27 years, 5'5",Ten years in the UK, looking for a Professional groom.Ref:1437

20) பிரான்ஸில் வசிக்கும், 35 years, 5'7", A/L படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1436

21) பிரான்ஸில் வசிக்கும், 33 years, 5'5", A/L படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1435

22) கொழும்பில் தொழில் புரியும், 36 வயது, 5', படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1434

23) கொழும்பில் தொழில் புரியும் பட்டதாரி, 38 வயது, 5'4", தகுந்த மண மணமகனை Canadaவில்/ இலங்கையில் தேடுகின்றார். Ref: 1433

24) பல்கலைக்கழக மாணவன், 21 வயது, 5'4", மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1432

25)இந்தியாவில் Docterஆக பணிபுரியும், 38 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை India/ Sri Lankaவில் தேடுகின்றார். Ref:1430

26) Professional bride, 29 years, 5'4", a German Citizen, in UK for 6 years, a Divorcee, looking for a suitable groom. Ref:1429

27) பிரான்ஸ் பிரஜாவுரிமை, 25 வயது, 5'5', International Affairs Degree Final year, தகுந்த மணமகனை UK/ Canada/Colombo இல் தேடுகின்றார். Ref:1428

28) Professional bride, a Canadian citizen 31 years,5'3',with traditional values seeking a suitable groom Ref: 1427

29) இந்திய மருத்துவ கல்லூரியில் பட்டம் பெற்ற 29 வயது, 5'8', கொழும்பில் வசிக்கும், மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1426

30) Professional bride, born in France, 24 years, 5'4', seeking a suitable groom. Ref:1425

31) டென்மார்க்கில் வசிக்கும், 24 வயது, 5'5', இறுதியாண்டு பல்கலைக்கழக மணமகளுக்கு தகுந்த மணமகனை ஐரோப்பாவில்/ இலங்கையில் தேடுகின்றார்.Ref: 1424

32) பிரித்தானிய பிரஜாவுரிமை, 39 வயது 5'2', படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1423

33) Canadian Citizen, 35 வயது, 5',விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை லண்டனில் தேடுகின்றார். Ref. 1422

34) இலங்கையில் வசிக்கும் B.A பட்டதாரி ஆசிரியை, 33 வயது, 5'3", தகுந்த மணமகனை UK/ Australia/Europe/Canada/swiss இல் தேடுகின்றார். Ref:1421

35) கொழும்பில் வசிக்கும், B.A பட்டதாரி ஆசிரியை, 39 வயது, '5', தகுந்த மணமகனை UK/Europe இல் தேடுகின்றார். Ref:1420

36) வடமராட்சியில் வசிக்கும், பட்டதாரி ஆசிரியை, 27 வயது, 5'4', தகுந்த மணமகனை லண்டனில் / இலங்கையில் தேடுகின்றார். Ref: 1419

37) வடமராட்சியில் வசிக்கும்,39 வயது, 5'5', தகுந்த மணமகனை UK/ Europe/Canada இல் தேடுகின்றார். Ref: 1418

38) இலங்கையில் வசிக்கும்,ஆசிரியை, 26வயது, 5'3', தகுந்த மணமகனை UK/ Europe/swiss இல் தேடுகின்றார். Ref: 1417

39) Brother living in UK seeks in a suitable groom for his sister 28 years, 5'5', A Graguate, well employed Ref: 1416

40) Graguate, 27 years, 5'3' tall,in Britain since childhood,a Bank employee, seeks a suitable groom. Ref: 1415

41) Bride in colombo, 23 years, 5'6' Elocution teacher, looking for a groom in Canada, able to sponcer her. Ref: 1414

42) ஜேர்மனி பிரஜாவுரிமை,26 வயது, 5'7', படித்த மணமகளுககு ஜேர்மனி U.K இல் தேடுகின்றார்.Ref: 1413

43) வடமராட்சியில் வசிக்கும், 28 வயது 5'4', A/L படித்த மண்மகளுக்கு தகுந்த மணமகனை c/Canada/ Australia இல் தேடுகின்றார். Ref: 1412

44) இலங்கையில் வசிக்கும் 23 வயது 5'2',A/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை Europeஇல் தேடுகின்றார். Ref: 1411

45)கொழும்பில் வசிக்கும், 35 வயது, 5'4',Teacher, Vegetarian மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref: 1410

46)தற்போது இந்தியாவில் வசிக்கும், 23 வயது, '5', BA பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref: 1409

47) Jaffna parents, living in France looking for their daughter ( French citizen) 29 years, 5 '5' , MSc finance Graguate, suitable groom from U.K/ Canada/France .Ref: 1407

48) இலங்கையில் வசிக்கும், 28 வயது 5'3', BA பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref: 1406

49) UK Certified Accountant, 28 வயது, 5'8", தகுந்த மணமகனை UK இல் தேடுகின்றார்.Ref: 1405

50) UK இல் Dr, 41 வயது, 5'2", தகுந்த மணமகனை UK/Europe/Australia/ Canada இல் தேடுகின்றார். Ref: 1404

51) இலங்கையில் வசிக்கும், 37 வயது, 5'3", தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1403

52) UK இல் வசிக்கும், MBA, 34 வயது, 5'1", தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1402

53) கொழும்பில் ஆசிரியர், 39 வயது, 5'3", தகுந்த மணமகனை இலங்கை/ பிரித்தானியாவில் தேடுகின்றார். Ref: 1401

54) இலங்கையில் வசிக்கும், HNDA, Financial Asst, 27 வயது, 5'2", தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref:1400

55) கொழும்பில் ஆசிரியர், Diploma in Music, 29 வயது, 5'2", தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref: 1299

# கவிதை

## எம் கடமை

புலம்பெயர்ந் தெங்குநாம் வாழ்ந்தாலும் – அங்கு
புதுப்புது மொழிகளிற் தேர்ந்தாலும்
உலகினிற் தாய்சேய் உறவறுமோ – இங்கு
ஒவ்வொரு தமிழரும் அதைமறவோம்

எங்களின் கலைபண் பாடுகளை – எங்கள்
இளையவர்க் குணர்த்தும் பணியேற்போம்
சங்கத் தமிழரின் வாழ்வியல்போல் – எங்கள்
சரித்திரம் மலர்ந்திட நாமுழைப்போம்

வீட்டிலும் வெளியிலும் தமிழ்கதைப்போம் – அதை
விரும்பிடும் மொழியாய் நாம்கொள்வோம்
நாட்டிலும் நகரிலும் தமிழ்வளர்ப்போம் – இதை
நாளைய சந்ததிக் குணர்த்திடுவோம்

வாய்நிறைந் திடவே வணக்கமென்று– என்றும்
வரவேற் றிடநாம் பழகிடுவோம்
தாய்மொழி தன்னிற் பெயர்சூட்டி – நாம்
தமிழர் களென்று காட்டிடுவோம்

எடுக்கும் முயற்சிகள் எம்தமிழை – இங்கு
என்றும் வாழ்ந்திட வைக்குமையா
அடுத்த தலைமுறை யும்தமிழை – இங்கு
அழகாய்ப் பேசிடச் செய்திடுவோம்

வாழும் நாட்டிலெம் தமிழ்மொழியை – நன்கு
வளர்க்க வேண்டிய தெம்கடமை
ஆளும் தகுதி பெற்றொருநாள் – இந்த
அவனியிற் தமிழ்மொழி ஓங்குமையா.

*- சபா. அருள்சுப்பிரமணியம்*

## மௌனமாய்

படகிலே தத்தளித்து
பயத்தோடு பயணம் செய்து
இந்தியக் கரைதனை
இரவிலே சென்றடைந்தேன்
முகாமிலே தங்கிவிட்டு
அகதியாய்ப் பதிவு செய்து
ஊருக்குள் வீடெடுத்து
உயிருக்காய் உணவெடுத்தேன்
கல்விக்காய் களமிறங்கி
கல்லூரி தேடி முடித்து
முதல் நாளில் நுழைகையிலே
முதல்வர் வந்தார் அருகினிலே
வெள்ளை முகம் கறுத்திடவே
"கள்ளத் தோணியா? என்றார்
மூத்தோர் செயல் உணர்ந்து
முகம் கவிழ்ந்தேன் மௌனமாய்

*- திருமதி, மகிழினி காந்தன்*

## ஏனோ

எத்தனையோ தவறுகள்
அவனிளமைப் பருவத்தில்
அடித்தும் உதைத்தும்
கும்பிட்டும் கூத்தாடியும்
ஏறவில்லைப் புத்தியிலும்
திருந்தவில்லை அத்தனைக்கும்
பிறநாடு பிரிந்து வந்தும்
குறைந்ததில்லைக் கும்மாளம்
எல்லோரும் கைவிட்டும்
முடியவில்லைப் பெற்றோரால்
கலியாணம் கட்டிவைத்தால்
குறைந்துவிடும் குழப்படி
எல்லாம் தெரிந்திருந்தும்
கட்டவந்த மகராசி
பொறுமைகாகத்தான் எல்லைதாண்டி
நண்பனை அறுத்தெடுத்து
நல்லபடி நடந்து
நினைத்ததை முடித்துவைத்து
திருத்திட்டாள் இன்றவனை
தெரிந்தும் நாடவில்லைச்
சமுதாயம் அவனிடம்
இறங்கிப் போனாலும்
இருப்பாரில்லை அவனருகில்

*- வ.கணேஷ்.*

## பச் தமிழா?

உன் இருப்புக்கு இயங்கிகளுக்கும்
உனக்கு தேவை
சிங்க கொடி துடுபாட்டமும்
சிவாஜியின் நாயகன் ரஜனியும்
சின்ன திரை மெகாசீரியலும்
சிங்க கொடி பகிஷ்கரிக்க கோரின்
சீ—விளையாட்டு வேறு அரசியல் வேறு என
சித்தாந்தம் பேசுகிறாய்
சிவாஜி பகிஷ்கரிக்க கோரின்
சினிமா வேறு அரசியல் வேறு என
சீற்றம் கொள்கிறாய்.......
சின்ன திரை வேண்டாம் எனின்
சீரியல் இல்லை எனின்
சீவியம் இல்லை என்கிறாய்
முடியவில்லையா உன்னால்
உறவுகளின் இருப்புக்காய்
உதிரத்தையல்ல உதிரிப்
பொழுதுபோக்கையாவது இழக்க

*- புத்தன்*

## அம்மாவுக்காக

அம்மா உன்னைப் பற்றி
எழுதும் போது மட்டுமே
நான் தோற்றுவிடுகிறேன்.

கடலை எடுத்து வந்து கைகளுக்குள்ளே
அடக்க முடியுமா?

அஜந்தா ஓவியம் எனை
அசத்தவில்லையே அம்மா
நீ கீறித் தந்த கிளி ஓவியத்தினை மேவி !

ஈபிள் கோபுரத்தை விட நீ தானே
உயரமானவள் அம்மா
பின்னேஉனைப் போல அது
பட்டினி கிடக்குமா பிள்ளைக்காக

சாஜகான் மீது இன்னும் எனக்கு கோபமே
காதலிக்காக மட்டுமே தாஜ்மகாலைக்
கட்டியவன்
பெத்தவளுக்காகவும்
கட்டினானா ஒத்தக் கல்லிலாவது
ஒரு தாய் மகாலை

சாமிக்கும் மேலானவள் நீ
பக்தன் பசித்திருக்கவும்
பால்க் குழியல் செய்யுமே சாமி
ஆனால் எனது பசி தீர்க்க
உன் குட்லையே உனக்கு உணவாக்கினாயே

புல் கொடுத்தாலே பசுகூட
பால் தரும் போது
நீ மட்டும் பச்சைத்தண்ணியை
குடித்து விட்டு
எப்படி எனக்குப் பால் ஊட்டினாய்

உன்னிடம் ஒரு கேள்வி அம்மா
என் பிஞ்சு விரலைப் பிடித்துக் கொண்டு
கோயிலுக்குப் போனாயே
சாமி கும்பிடவென்று
ஒரு சாமி இன்னொரு சாமியை
கும்பிடுமா அம்மா?

*-மட்டுவில் ஞானக்குமாரன் (யேர்மனி)*




Strand Motor Co.

156 - 158 Handcroft Road, West Croydon CR0 3LE

Service
MOT
Parts
Bodywork





Italian Specialists | French Specialists | Japanese Specialists

தமிழில் பேசி உங்கள் காரின்
எந்தத் திருத்த வேலைகளையும்
முழுமையாகச் செய்ய வசதி

Tamil Specialist Service Centre Croydon
Monday to Friday 8.00am - 6.30pm Saturday 9.00am - 2.00pm
Tel: 0208 686 0868 Fax: 0208 686 0667

# அறுவைப் பக்கம்

## சங்கர் எடுக்கும் அடுத்த படம்!



இயக்குநர் ஷங்கர் சிவாஜிக்கு அடுத்ததாக எடுக்கப் போகும் படத்தின் கதை இப்போதே லீக் ஆகிவிட்டது. வன் லைனர்: தேவைக்கதிகமாக காசு போட்டு சினிமா எடுக்கும் சினிமாக்காரர்களை ஒரு 'பாதிக்கப்பட்ட' உதவி இயக்குநர் தட்டிக்கேட்டால் எப்படி இருக்கும்.

திரக்கதை: எடுத்த உடனே புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் திரையில் தோன்றுகிறார். 'நான் ஆணையிட்டால்' பாட்டுக்கு சாட்டையை சுழற்றுகிறார். அதே செட், கொஞ்சம் பழையதாயிருக்கிறது. தூணில் ஒருவரை சங்கிலியில் கட்டிவைத்திருக்கிறார்கள். அவரை சரமாரியாக சாட்டையால் அடிக்கிறார். பாடல் பாதியிலேயே நிற்க. புரட்சித் தலைவர் வசனம் பேச ஆரம்பிக்கிறார்.

டேய் மூதேவி. இதுவரைக்கும் எத்தன படம் எடுத்திருக்க? கட்டிவைக்கப்பட்டிருப்பவர் வலியால் முனகுகிறார்.

சொல்லமாட்ட? எம்.ஜி.ஆர் முகம் சிவக்கிறது. சிவப்பு வெளிச்சம் முகத்தில் அடிக்கிறது. சாட்டை சுழல்கிறது.

நாலு. நாலு படம் எடுத்திருக்கேன்

ம். ஒவ்வொண்ணும் எவ்வளவு செலவு?

முதல் படம் 10 கோடி, ரெண்டாவது 25, மூணாவது 40 4வது 60 கோடி.

சாட்டை சுழல்கிறது.

இல்ல 70. 70

எத்தன கோடி லாபம் பாத்த?

நூறு கோடிக்கும் மேல.

2எத்தன கோடி கணக்குல காமிச்ச

25

அடப்பாவி.

ஊர்ல ஒலகத்துல இல்லாதநயா நான் செஞ்சுட்டேன். ஒவ்வொரு எம் எல் ஏவும் எவ்வளவு சம்பாதிக் கிறான், மந்திரி, எதிர்கட்சி, வட்டம், மாவட்டம்னு அரசியல்ல என்னவெல்லாமோ நடக்குது.'

'டேய் அதெல்லாம் தட்டிக்கேக்க அன்னியன், இந்தியன் தாத்தா, முதல்வன் எல்லாம் இருக்காங்கடா ஆனா உன்னப்போல அநியாயம் செய்யுற சினிமாக்காரங்கள தண்டிக்கத்தாண்டா நான் இருக்கேன்.'

நீ யாரு

இயக்குனன் ஹா ஹா ஹா சிரிப்போடு சீன் மறையுது. பெயர் போட ஆரம்பிக்கிறாங்க.

படம் பேரு "இயக்குனர்" இயக்குனரோட ஸ்டைல் என்னண்ணா அளவுக்கதிகமா காசப்போட்டு படம் எடுக்கிற இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், அவங்களுக்கு பணம் குடுக்கிற கந்துவட்டிக்காரர்கள் எல்லோரையும் போட்டுத்தள்ளி ஒரு 'மெசேஜ்' சொல்ல வர்றாரு. ஒவ்வொரு கொலைக்கும் ஒவ்வொரு வேஷத்துல வருவாரு. அதாவது முதல்ல எங்க வீட்டுப்பிள்ளை எம்ஜிஆர் மாதிரி வந்தார்ல அதுபோல 16வயதினிலே கமல், பாட்சா ரஜினி, கடலோரக் கவிதைகள் சின்னப்பதாஸ், கட்டபொம்மன் சிவாஜின்னு பல வேஷங்களில் வந்து கொலை செய்வார்.

ஏன் இயக்குனனுக்கு இந்தக் கொல வெறி?

வழக்கம்போல ஒரு கிராமத்துப் பின்னணி ஃப்ளாஷ் பேக்.. எடுத்துக்காட்டு.

கிராமத்துல சினிமாக் கொட்டக முன்னால இட்லிக் கட வச்சிருக்கிறாங்க இயக்குனனோட அம்மா. அவங்க எவ்வளவு சினிமா பைத்தியம்ணா, ஊர்ல இருக்கிற அவங்க பண்ணை வீட்ட வித்துட்டு சினிமா தியேட்டர் முன்னால கடை வச்சிருக்காங்க. பாட்டுக்குள்ளாக அவங்க இட்லிக்கடையில எப்படி சந்தோஷமா இருக்காங்கண்ணு காமிக்கிறாங்க. பிரமாண்டத்துக்காக தங்க இட்லித் தட்டுல அவங்க இட்லி அவிக்கிறதா காமிக்கிறாங்க. பண்ணை வீட்ட வித்த காசையெல்லாம் வச்சி கலக்குறாங்க. ரெண்டு ரூபா வடையிலேந்து எண்ணைய பிழிஞ்சு எடுக்கிறதுக்கு 100 ரூபா நோட்ட குடுப்பாங்க. அம்மாவோட சினிமா பைத்தியத்துல சொத்தெல்லாம் கரைஞ்சுடுது. அப்பா குடிக்கிறதுக்குண்ணு வச்சிருந்த காச எடுத்து சினிமாவுக்குப் போறாங்க. அப்பா துக்கம் தாங்காம சினிமா கட் அவுட்ல தூக்குல தொங்கி எறந்து போறாரு. ஒரு கட்டத்துல அம்மாவுக்கு சினிமா பைத்தியம் முத்திப் போயி பசங்களோட பாடப் புத்தகங்கள கிழிச்சி ஹீரோ அறிமுகக் காட்சியில பேப்பர் தூவுறதுக்கு எடுத்துட்டுப் போறாங்க. இதுனால பசங்க படிப்பு கெடுது. இயக் குனன் குறைஞ்ச படிப்ப வச்சிட்டு நிறைய சம்பாதிக்க என்ன வழின்னு யோசிக்கிறான்.

அவன் அம்மா தலைவர் படத்துக்கு வச்சிருந்த முதல் ஷோ டிக்கெட்ட ப்ளாக்ல வித்து 'சென்னைக்குப் போய் ஒரு பெரிய இயக்குநர் ஆயிடுப்பான்னு அனுப்பி வைக்கிறாங்க'. மிகவும் சோகமான காட்சி. 'அம்மா ஒன்னோட டிக்கெட்ட வித்து...?' உருகுகிறார் ஹீரோ. அம்மா ஒரு சி.டிய எடுத்துக் காமிக்கிறாங்க. 'திருட்டு வி.சி.டில நேத்தே பாத்துட்டேன்பா.'

சினிமாவால பாழான தன் வாழ்க்கைய சினிமாவாலயே மீட்டெடுக்க கனவோடு சென்னைக்கு வர்றான்.

சினிமா உலகத்துல இவனோட சிம்பிள் கிராமத்து கதைகளை படமா எடுக்க யாரும் முன்வரல. எல்லாரும் ஹீரோவ பச்சையா காமிக்க முடியுமா?, இந்துமா சமுத்திரத்த செட்டிங் போட்டு பாட்டு செய்ய முடியுமா? நிலாவுல லொக்கேஷன் பண்ணலாமாண்ணு இவன டொர்ச்சர் பண்ணுறாங்க.

ஒரு கட்டத்துல இயக்குனன் இது வேலைக்காகாது ஏதாவது பிசினஸ் பண்ணலாமாண்ணு பேங்க்ல போய் லோன் கேக்கிறான். பேங் மேனேஜர் இவனத் திட்டி வெளிய விடுறார். இவன் ஜன்னல் வழியா பாக்கும்போதே ஒரு புரொட்யூசருக்கு கோடிக்கணக்குல காசு அள்ளிக்குடுக்கிறாரு மேனேஜர். இதேபோல ஒரு கந்து வட்டிக்காரரும் சினிமாவுக்கு காசு குடுக்கிறாரு ஆனா இவனுக்கு மறுக்கிறாரு. அதுலேந்து சூடாகிறான் இயக்குனன்.

சுஜாதா டையலாக் சூடு பறக்குது. 'இன்னைக்கு இந்தியாவுல ஒரு வருஷத்துக்கு இத்தன படம் எடுக்கி றாங்க. தமிழ்ல எடுக்கிற படங்கள் இத்தன, அதுக்கு ஆகிற செலவு இத்தன, இதுல பேங்க் லோன் இவ்வளவு, சேட்டு இவ்வளவு, கந்து வட்டி இவ்வளவு, புரொட்யூசர் சொத்த வித்தது இவ்வளவு. படத்துக்கு A செண்டர்ல 10% வருமானம், Bல 10% மீதி 80% C,D செண்டர்லேந்து வருது. ஏண்ணா திருட்டு சிடி அவங்களுக்கு கிடைக்கிறதில்ல. இந்த C,D செண்டர்ல உள்ளவனுக்கு மாத வருமானம் இவ்வளவு, அவனுக்காக அரசாங்கம் செலவு செய்யுறது இவ்வளவு கோடி, அங்க நடக்குற தொழில் முதலீடு இத்தனகோடி... அப்படி பாக்கும்போது கிராமங்கள்ல நடக்கிற தொழில் முதலீட்ட விட அவங்க பாக்குற சினிமாவ்ல முதலீடு அதிகமாயிருக்குது..' அப்படியே புள்ளிவிபரங்கள அடுக்குறார் சுஜாதா.

சினிமாவுல முதலீடு குறஞ்சா வங்கிகள் என்ன மாதிரி தொழில் செய்யுறவங்களுக்கு கடன் தரலாம்ல, தொழில் முதலீட்டுக்கு கந்துவட்டிக் காரன் குறஞ்ச வட்டியில கடன் தருவான்ல?' இதுதான் படத்தின் மையமா இருக்குது.

கிளைமக்ஸ்ல 'இயக்குனன்' சீர்திருத்தத்த கொண்டு வர்றான். மக்களெல்லாம் சினிமாவுக்கு ஒருதரம் போய் பாத்துட்டு அவங்கவங்க வேலையப் பாக்குறாங்க. ரசிகர் மன்றங்கள் ஒவ்வொண்ணா குறையுது, எல்லாரும் வங்கி, தனியார்கிட்ட கடன் வாங்கி சிறப்பா தொழில் செய்யுறாங்க. அதோட படம் முடியல..


கடைசியா ஒரு டுவிஸ்ட் பண்ணுறார் டைரக்டர். டி.வி.யில வரக்கூடிய செல்வி, செல்வி, செல்வி பாட்டு கேக்குது. திரையில செல்வியா ராதிகா வர்றாங்க. 'நீதானேடா சீரியல் டைரக்டர்? சீரியல எப்ப முடிப்ப?' கத்திய ஓங்க. 'சினிமா கில்லர சீரியல் கில்லராக்கிட்டீங்களே'. படம் முடியுது.

*- சிறில்*

## எப்படித்தான் முடிகிறது?



மேக்கப் போடுறதுக்கு முன்



மேக்கப் போட்டதுக்குப் பின்

என்னைக் கேட்டால் கமலஹாசன் செய்ததெல்லாம் இதற்கு முன்னால் ஒன்றுமில்லை என்றுதான் தோன்றுகிறது. உள்குத்து ஒன்றுமில்லை ரஜினி ரசிகர்களே. மனதறிஞ்சு சொல்கிறேன். இன்றைக்கு எங்கள் அலுவலகத்தில் இந்த படங்கள் பற்றித்தான் பெரிய பேச்சு.

*கோ.இராகவன்*

## பிகரை கரெக்ட் செய்ய 3 வழிகள்

பொதுவாகவே பிகரை கரெக்ட் செய்வது எளிதான் காரியம் அல்ல மிக நேர்த்தியோடு லாவகமா செய்ய வேண்டும் கொஞ்சம் பிசகினாலும் பெரிய பிரச்சனை ஆகிவிடும். நான் +1 +2 படிக்கும் போது எங்கள் வகுப்பில் ஐந்து பெண்கள் தான். பிகரை கரெக்ட் செய்ய முடிவெடுத்து விட்டால் அதை என்னால் மட்டும் அல்ல யாராலும் மாற்ற முடியாது. நான் பள்ளியில் பிகரை கரெக்ட் செய்ததோடு சரி பின்னர் கல்லூரியில் அதற்கு வாய்ப்பு இல்லாமல் போனது. சரி பிகரை கரெக்ட் செய்ய நான் பயண்படுத்திய மூன்று வழிகள்.

1. இது மிகவும் ரிஸ்க்கான விஷயம் கொஞ்சம் மிஸ் ஆனாலும் நம்ம உழைப்பு எல்லாமே காலி. அதனால் கேர்புல்லாக செயல் படுத்தனும்.

2. இது கொஞ்சம் பாதுகாப்பானது ஆனால் கொஞ்சம் செலவு பிடிக்கும்

3. இதுவும் கொஞ்சம் பாதுகாப்பானது தான் ஆனால் அளவுக்கு அதிக மானால் இதுவும் பிகரை காலி செய்துவிடும்.

அந்த மூன்றும் என்னென்ன வழிகள் என்று கீழே கொடுக்கப் பட்டுள்ளது...

1. பிளேட் 2. இரப்பர் 3. இங்க் ரிமூவர்

இப்படிதான் ரெக்கோர்ட் நோட்ல இருக்கற ரிசல்ட் பிகரை கரெக்ட் செய்வம். எங்க கிளாஸ்ல 5 பொண்ணுங்க இருந்தாங்கன்னு சொன்னேன்ல அவங் களும் இப்படி தான் பிகரை கரெக்ட் பண்ணுவாங்க. நான் ஒரு நல்ல நல்லவன் என்று இத படிச்சோன்னயே உங்களுக்கு புரிஞ்சிருக்குமே... !?

*- சிபி*

## கைப்புள்ளயை (வடிவேல்) ஏமாத்திய பார்த்திபன்

பார்த்திபனுக்கும் நம்ம கைப்புள்ளைக்கும் துபாயில் கிளீனர் வேலை பார்த்த விஷயமாக கடுமையான வாக்குவாதம் நடந்தது. கைப்பு எவ்வளவோ மாற்றிச் சொல்லியும் வேலை பார்த்த இடத்தை போட்டு வாங்கி விட்டார் பார்த்தி!

வேணாம்... என்ன விட்டிடு... அப்றம் நான் அடிச்சா ஒரே அடில சுருண்டுருவே மகனே! எச்சரித்தார் கைப்புள்ள.

நான் ஒரு குத்து விட்டேன்னா நீ அப்பிட்டு தெரியுமா?' பார்த்தியும் கொஞ்சம் கூட சளைக்கவில்லை!

இருவரும் அப்படியே விவாதம் செய்தபடி நடந்து போனபோது தெருவில் லொட்டரி டிக்கெட் ஒன்று கிடந்தது! அது யாருக்கு என்பதில் மறுபடியும் சண்டை சூடு பிடித்தது!

கடைசியில் இருவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். இருவரும் பலப்பரீட்சை நடத்தி வெற்றி பெறுபவர் அந்த லொட்டரி சீட்டை எடுத்துக் கொள்வது என்று! கைப்புள்ள மனசுக்குள் கணக்கு போட்டார். 'முதலில் இவனை அடிக்க விட்டு இவன் பலம் அறிந்து கொண்டு பிறகு செமையா போட்டு தாக்கிட வேண்டியதுதான்!'

கைப்புள்ள முந்திக்கொண்டு பார்த்தியிடம் சொன்னார், 'முதலில் நீ என்னைத் தாக்கு. பின்னர் நான் உன்னைத் தாக்குகிறேன். யாருக்கு அடி பலமோ அவரே தோற்றவர்! என்ன சொல்கிறாய்?

பார்த்தியும் ஒப்புக்கொண்டு, பத்து அடி பின்னால் போய், பாய்ந்து வந்து கைப்புள்ளையின் காலருக்கருகில் ஓங்கி உதைத்தார். அடி ரொம்ப கனம்தான். பறந்து மல்லாக்க விழுந்த கைப்புள்ளை 10 நிமிடம் கழித்து மெல்ல எழுந்து பார்த்தார்.

நூறு மீட்டர் தூரம் ஓடிப்போய் நின்றுகொண்டு பார்த்தி சொன்னார்: அடேய்... முட்டாள். அந்த டிக்கெட்டை நீயே வச்சுக்கோ.! அது குலுக்கல் முடிஞ்ச பழைய லொட்டரி டிக்கெட்டு!' பார்த்தி அடிச்சது கூடப் பரவாயில்லை, ஆனா டிக்கெட்டும் பழசா? கைப்புள்ள மயங்கி விழுந்தார்!

*- கலாய்ப்பவயன்*


# சினித்துளி

## கறுப்பு



சிவாஜியில் கறுப்பு பணத்தை வெள்ளையாக மாற்றுவது போல் இடம் பெற்றுள்ள காட்சிக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. கறுப்பு பணத்தை முஸ்லிம்களிடம் கொடுத்து வெளிநாட்டில் அமெரிக்க டாலர்களாக மாற்றுகின்றனர். பிறகு அது வெள்ளைப் பணமாக தமிழ்நாட்டில் இருக்கும் சிவாஜி பவுண்டேஷனுக்கு அனுப்பு கின்றனர். இந்த காட்சியில் கறுப்பு பணத்தை வெள்ளையாக மாற்றித் தரும் புரோக்கர்களாக இஸ்லாமியர்களை காட்டியுள்ளனர். இந்த காட்சியை தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் எதிர்த்துள்ளது. தம்மை சங்கர் அவமதித்துள்ளார் என்று சொல்லி சில தியேட்டர்களுக்கு முன்னே புறக்கணிப்புப் பிரசுரங்களை வினியோகித் வருகிறது. ம்...

## பன்ச்



இன்றைய இளம் ஹிரோக்கள் தங்கள் படங்களில் பன்ச் டயலாக் அடிப்பதை கிண்டல் அடித்த விவேக்கை, கிண்டி கிழங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் அதே இளம் ஹீரோக்கள். சிவாஜி படத்தில் ரஜினி பன்ச் வசனம் பேச ஆரம்பிக்கும்போது அவரது வாயை பொத்தும் விவேக், "இப்பல்லாம் சின்ன சின்ன பசங்க கூட பன்ச் டயலாக் பேசுறாங்க. அதனால் பன்ச் டயலாக்குக்கு மரியாதையே இல்லாம போச்சு" விவேக் கிண்டல் செய்தது யாரை என்று பட்டி மன்றம் வைக்காத குறையாக விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள் ரசிகர்கள். விஜய், அஜீத், விக்ரம், போன்ற ஹீரோக்கள் இனிமேல் தங்கள் படத்தில் விவேக் வேண்டாம் என்று முடிவெடுத்துள்ளனராம்.

## 08கமல்



தசாவதாரம் படத்தின் பட்ஜெட் நாளொரு கோடியும், பொழுதொரு லட்சமுமாக ஏறிக் கொண்டிருக்கிறது. எதற்கும் கவலைப் படாமல் எல்லைகளை தொட்டுவிடுவது என்ற நோக்கத்தில் அள்ளி இறைத்துக் கொண்டிருக்கிற தயாரிப்பாளர் தரப்பு. பத்து வேடங்களில் கமல் நடிக்கிறார் என்பது விசேஷம்தான்! என்றாலும் கமல் செய்யாத வேடங்களா என்ற கேள்வியும் எழுவதால் இதில் என்னென்ன செய்தால் பிரமிக்க வைக்கலாம் என்று மண்டையை குடைந்து யோசித்துக் கொண்டிருக்கிறார் இயக்குனர் கே.எஸ்.ரவிக்குமார். அதன் ஒரு கட்டமாகதான் பத்து கமல்களில் எட்டு கமல்கள் ஒரே காட்சியில் பேசுவது போல காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. வரட்டும் பாப்பம்!!!

## பத்மசிறி

ஆயிரம் படங்களுக்கு மேல் நடித்த நகைச்சுவை நடிகர் நாகேசுக்கு சென்னையில் பாராட்டு விழா நடந்தது. விழாவுக்கு இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன் தலைமை தாங்கினார். நடிகர் கமல்ஹாசன், இயக்குனர் பாலசந்தர், துக்ளக் ஆசிரியர் சோ உள்ளிட்ட பல்வேறு பிரபலங்கள் கலந்து கொண்டார்கள். தமிழ் சினிமாவில் நாகேஷ் போன்று நகைச்சுவை நடிகர்கள் யாரும் வரவில்லை. அது அவருக்கு பெருமையா? அல்லது தமிழ் சினிமாவுக்கு பின்னடைவா? என எனக்கு தெரியவில்லை என்று சொன்னார் கமல்ஹாசன். மிக சிறந்த நடிகராக விளங்கும் நாகேசுக்கு பத்மஸ்ரீ விருது கொடுக்காதது ஏன் என தெரியவில்லை என்று வருந்தினார் பாலசந்தர். எந்த தலைகனமும் இல்லாதவர் நாகேஷ் என பாராட்டினார் துக்ளக் ஆசிரியர் சோ!

## சிறுதுளி!

ரஜினி அடுத்த படத்துக்கு தயாராகிறார். சந்திரமுகி, சிவாஜியை விட அழுத்தமா கதையம்சம் படத்தில் இருக்குமாம். இயக்குனர் பட்டியலில் கே.எஸ். ரவிக் குமார், ஏ.ஆர். முருகதாஸ் பெயர்கள் அடிபடுகின்றன. ஆனால் இருவருமே தற்போது பிசியாக இருக்கிறார்கள். கே.எஸ்.ரவிக்குமார் தசாவதாரத்துக்கு பிறகு இன்னொரு படம் பண்ண ஒப்பந்த மாகியுள்ளார். ஏ.ஆர்.முருகதாஸ் இந்தி யில் படம் எடுக்கிறார். இருவரும் படங் களை முடித்த பிறகு ரஜினி படத்தை யார் இயக்குவார் என்பது முடிவாகுமாம்.

❖ ❖ ❖

நடிகை நமீதா முன்னணி ஹீரோக்களுடன் நான்கு படங்கள் பண்ணுகிறார். பில்லாவில் புதுசாக மார்க்கெட்டுக்கு வந்துள்ள நாகரீக ஆடைகளை உடுத்தி படுகவர்ச்சி காட்டியுள்ளாராம். விஜய்யுடன் அழகிய தமிழ் மகனிலும் மொடர்ன் பெண்ணாக வருகிறார். சுந்தர்.சி.யின் பெருமாள் படத்தில் அரிவாளுடன் திரியும் பெண் ரவுடியாக வருகிறார். மல்லிகை மலரேயில் இன்னொரு வித்தியாசமான கெட்டப்பும் செய்கிறாராம்.

❖ ❖ ❖

சித்திரம் பேசுதடி மூலம் தமிழில் அறி முகமானவர் பாவனா. ஜெயம் ரவியுடன் தீபாவளி படத்தில் நடித்தார். தற்போது ஜீவாவுடன் ராமேஸ்வரம் படத்திலும், மாதவனுடன் வாழ்த்துக்கள் படத்திலும் நடித்து வருகிறார். இருபடங்களின் பட பிடிப்பும் விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

❖ ❖ ❖

நினைத்தாலே இனிக்கும் படம் மூலம் தமிழில் அறிமுக மானவர் ஜெயப்பிரதா. அதில் கமல் ஜோடியாக நடித்தார். அதன் பிறகு ஹிட்படமான சலங்கை ஒலியிலும் கமலுடன் நடித்தார். இருபடங்களும் ஜெய பிரதாவை தமிழ் ரசிகர்கள் மத்தியில் பிர பலம் ஆக்கியது. நிறைய இந்தி, தெலுங்கு படங்களிலும் நடித்தார். இப்போது தமிழில் நீண்ட இடைவெளிக்கு பிறகு மீண்டும் தசாவதாரம் படத்தில் நடித்து வருகிறார்.

❖ ❖ ❖

ஷாம், குத்துரம்யா ஜோடியாக நடிக்கும் படம் தூண்டில், கே.எஸ். அதியமான் இயக்குகிறார். இதன் படப்பிடிப்பு நடந்த போது ரம்யா ரகளை செய்ததாகவும் தொலைந்து போன லப்-டொப் கம்ப்யூட் டருக்காக ரூ.1 லட்சத்து 30 ஆயிரத்தை மிரட்டி வாங்கியதாகவும், தயாரிப்பாளர்கள் குற்றம் சுமத்தினர். குத்து ரம்யா இதை மறுத்தாராம். பணம் தரவில்லை என்றும் தயாரிப்பாளர்கள் பொய் சொல்வதாகவும் கூறினாராம். இவரில் அவர்கள் பழிபோட அவர்களில் இவர் பழி போட ஐயோ...



# விக்ரம் சொல்கிறார்

பீமா படத்தில் ஒரு அசத்தலான வேடத்தில் மிரட்டலான தோற்றத்தில் நடித்த திருப்தியில் இருக்கிறார் விக்ரம். அந்த படத்தின் வெளியீட்டை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் விக்ரம் அளித்த பேட்டி வருமாறு:-

பீமா படம் அட்டகாசமாக உருவாகியிருக்கிறது. இது ரவுடியிசத்தை பற்றிய ஒரு சீரியசான கதை. படம் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும். ஏற்கனவே ஜெமினி படத்தில் ரவுடியாக நடித்திருந்தாலும் அதிலிருந்து இது மாறுபட்டு இருக்கும். இதே போல போலீஸ் அதிகாரியாக இன்னொரு படத்தில் நடித்தாலும் அது சாமி படத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும்.

இந்திய சினிமாவில் இந்தித் திரையுலகின் ஆதிக்கம் அதிகம் இருக்கும் நிலையில் நம்மைப் போன்றவர்கள் தேசிய விருது வாங்குவது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

தேசிய விருது என்பது நம் சினிமா வாழ்க்கை ஒரு ஐ.எஸ்.ஐ முத்திரை போன்றது. தற்போது 4 பிலிம்பேர் விருதுகளை வாங்கியிருக்கிறேன். 15 பிலிம்பேர் வாங்க வேண்டும் என்பதே என்னுள் இருக்கும் ரகசிய லட்சியம். முன்பு சினிமாவில் போட்டிகள் அதிகம் கிடையாது. ஆனால் தற்போது அது தீவிரமடைந்து உள்ளது. விருதுகள் என்பது பெருமைக்குரிய விஷயம்தான் என்றாலும் விருதுகளை மனதில் நினைத்துக் கொண்டே நான் நடிப்பதில்லை.

சமீப காலத்தில் நான் அதிகம் ரசித்தது மொழி படத்தில் ஜோதிகாவின் நடிப்பை. அந்த படத்தில் ஜோதிகாவின் உடல் மொழியை மிகவும் ரசித்தேன். அந்த படத்திற்காக அவர் வீட்டில் நிறைய ஹோம்வேர்க் செய்திருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டேன்.

திருவிளையாடல் ஆரம்பம் படத்தில் தனுஷின் நடிப்பையும் வெகுவாக ரசித்தேன். சினிமா வாய்ப்புக்காக போராடிய காலங்கள் எல்லாம் மறக்க முடியாதவை. அப்போதெல்லாம் டான்ஸ் மாஸ்டர் கலாவினுடைய நடன பள்ளிக்கு அதிகாலையிலேயே சென்று விடுவேன். அங்கு என்னைப் போல வாய்ப்பு தேடி போராடிக் கொண்டிருக்கும் மற்றவர்களுடன் கலந்து விடுவேன். எங்கள் கனவுகள் பற்றி இடைவிடாது அரட்டையடித்துக் கொண்டிருப்போம்.

ஒவ்வொரு நாளும் கிளாசை விட்டு வெளியே வரும் போது எந்த தயாரிப் பாளராவது அல்லது இயக்குனராவது நம்மை வாசலில் பார்த்து புக் செய்து விட மாட்டார்களாப என்று ஏங்குவோம். சில நேரம் ஒருவருக்கொருவர் இரவல் உடைகளை வாங்கிப் போட்டுக் கொண்டு டிப்-டாப்பாக இயக்குன ர்களிடம் வாய்ப்புத் தேடிச் செல்வோம். இதுவரை இந்திப் படங்களில் நடிக்க 18 அழைப்புகள் வந்தது. ஆனால் எதையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. நாம் ஏன் இந்திப் படங்களை பார்த்து ஏங்கிக் கொண்டிருக்க வேண்டும். நம்மிடமிருந்து அவர்கள் கற்றுக் கொள்ள ஏராளம் இருக்கிறது என்கிறார் விக்ரம்.

- *மாலைமலர்*

SAM
SOLICITORS & COMMISSIONERS FOR OATHS

உங்களது அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கபட்டு நீண்டகாலம் வேலை செய்திருப்பீர்களாயின் விசா எடுப்பதற்கு appeals and representation on all Tribunal Hearing சம்பந்தமான சேவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

உங்களது வியாபார ஸ்தாபனங்கள் வீடுகள்

- விற்றல், வாங்குதல் சம்பந்தமான சட்ட சேவைக்கும் எங்களை நாடவும்!!

IMMIGRATION & ASYLUM
JUDICIAL REVIEW
CIVIL LITIGATION
CRIME
DIVORCE & FAMILY MATTERS
EMPLOYMENT
HOUSING / LANDLORD & TENANT
COMMERCIAL CONVEYANCING
RESIDENTIAL CONVEYANCING
LIQUOR LICENSING


Tel: 0208 770 7143
Fax: 0208 643 9245

www.samsolicitors.com
info@samsolicitors.com

288, High Street, Sutton, Surrey, SM1 1PQ

# சினிமா

## ரசனை!



நான் ரஜினி படம் பாத்துட்டு வந்தாலோ, இல்ல என் அப்பா கமல் படம் பாத்தாலோ (அவர் பெரும்பாலும் படமே பாக்கிறதில்லை.. ஆனா எப்பவாவது அப்படிப் பாத்தா அது கமல் படமாத் தான் இருக்கணும்), வீட்ல ஒரு சின்ன கலவரமே நடக்கும்.. அதை பத்தி சும்மா கதைக்கிறேன்..

சினிமா உலகத்துல, நிறைய நடிகர்கள் இருந்தாலும் எப்பவும் ஒரு ரெண்டு நடிகரை வைத்து தான் ரசிகர் சண்டைகளே இருக்கும்.அந்த காலத்துல பி.யூ.சின்னப்பா, எம்.கே.டி, தியாகராஜா பாகவதர் தான் எதிரும் புதிருமா இருந்த நடிகர்கள்.. எம்.கே.டியை அந்தகால சூப்பர் ஸ்டார்னு தான் எல்லோரும் அழைப்பார்கள் என்று கேள்வி பட்டிருக்கிறேன்.

அதன் பிறகு எம்.ஜி.ஆர், சிவாஜி.. இந்த இருவரை பற்றி சொல்லவேண்டாம்.. எல்லோருக்கும் தெரிந்திரிக்கும்.. எப்பவும் இப்படி இருக்கிற இரண்டு பேருக்கும் இடையில் அவர்கள் பயன்படுத்தும் போர்முலா, வேறு வேறாகத் தான் இருக்கும். எம்.கே.டியும், எம்.ஜி.யாரும் நடிப்பை ஊறுகாயாக்கி, மக்களை கவர்கின்ற அம்சத்தை நிறைய வைத்திருப்பார்கள். எம்.கே.டி படங்கள் அவ்வளவா பார்த்ததில்லை.. ஆனால் எம்.ஜி.ஆர் படங்கள் அப்படித்தான்.

ஆனால், இதற்கு நேர்மாறாக இருக்கும் சிவாஜியின் படங்கள்.. மனித வாழ்க்கையும் அதில் உணர்ச்சிகளும் அழகாக சித்தரிக்கப்பட்டிருக்கும்..இவர்கள் இருவருக்கிடையில் யாரும் மற்றவருடையும் பார்முலாவை அதிகம் பயன்படுத்தியதில்லை..

எம்.ஜி.யார் ஒருபோதும் சிவாஜியின் குடும்ப சித்திர பார்முலாவை பயன்படுத்தியதில்லை.. ஒரு வேளை தனக்கு அழுது வடிந்து நடிப்பது வரவில்லை என்பதால் அப்படி ஒரு பார்முலாவை எடுத்தாரா என்பதும் தெரிய வில்லை. அதன் பிறகு வந்தது தான், ரஜினி-கமல் யுகம்.. ஆரம்பத்தில் இவர்களுக்கு இடையில், தேர்ந்தெடுத்து நடித்த படங்களில் அப்படி ஒரு வித்தியாசம் இருந்ததில்லை.

ரஜினியும் கமல் பாணி படங்களான, ஆறிலிருந்து அறுபது வரை, முள்ளும் மலரும் படங்களில் நடிக்கவே செய்தார். கமலும் ரஜினி பாணி படங்களான, சகலகலா வல்லவன், காக்கி சட்டை போன்ற படங்களிலும் நடித்து வெற்றியை தவறாமல் குவித்தார். ஆனால், இவர்களின் சமீப கால படங்கள் எல்லாமே ஏதோ ஒரு பிரிவுக்குள் அடங்கி போனவையாகத் தான் இருக்கும்.

கமல் வித்தியாசங்களை காட்டவேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு படங்களிலும் வெவ்வேறு கருக்களையே எடுத்துக் கொண்டார்.. ஹேராம், தேவர் மகன், அன்பே சிவம், குணா, மகாநதி, விருமாண்டி என்று அந்த பட்டியல் சற்றே நீளமானது.. இந்தப் பக்கம் அண்ணாமலையில் தொடங்கி இன்றைய சிவாஜி வரை, சராசரிக்கும் அதிகமான விஷயங்கள் கொண்ட ஒரு மனிதனின் (larger-than-life image?) வாழ்கையை சுற்றியே தானிருக்கிறது... கதைகளை விட, ரஜினியை நம்பியே படங்கள் எடுக்கப்படுகின்றன..

ரஜினி-கமலுக்கு பிறகு விஜய்-அஜித் வந்து விட்டாலும் இந்த மாதிரி ஒரு ஒப்புமை செய்யும் அளவிற்கு அவர்கள் படங்கள் நடிக்கவில்லை என்பதால் அதை விட்டுவிடலாம். ஆனால், ஒரே மாதிரி, ரஜினி எம்.ஜி.ஆர் பாணி தான், விஜயின் பாணி என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என்பது வேறு விஷயம்.

என் அப்பா, அவரது இளமை காலங்கள் தொட்டு எம்.ஜி.ஆர் ரசிகனாய் இருப்பவர். நீண்ட வரிசைகளில் நின்றெல்லாம் படம் பார்த்தவர்...அந்த இளவயது துள்ளல் எப்போது முறுக்கேறி கிடந்த காலங்களில், அதே சுறு சுறு படங்கள் தான் பிடித்திருந்தது.. ஆனால் இப்போது இத்தனை கால வாழ்க்கைக்கு பிறகு அன்று பிடிக்காமல் இருந்த சிவாஜி படங்கள் இன்று கமல் போர்வையில் பிடிக்கிறது. நான் இது போல பல பேரை கண்டதுண்டு.. எம்.ஜி.ஆர் பிடித்தவர்களுக்கு கமல் பிடிப்பதும், ரஜினியை பிடித்தவர்களுக்கு அஜித்தை பிடிப்பதும்..

நான் ஒவ்வொரு முறையும் ரஜினி படம் பார்த்துவிட்டு வரும் போது, ஏன்டா... கதையே இருக்காது... சும்மா ஸ்டைலுக்காக ஏன் போய் ரஜினி படமெல்லாம் பாக்குறன்னு கேட்பார்... கமல் படமெல்லாம் எப்படி இருக்கு... நடிப்பும் அதில் சொல்ற விஷயங்களும் அருமையா இருக்குன்னு என்னை கான்-வாஷ் பண்ணுவார்.... நான் மறுபடியும், அன்றைக்கு உங்களுக்கு ஏன் சிவாஜி படங்கள் பிடிக்கலையோ அதே மாதிரி தான் இதுவும்... என்று சொல்லி நான் பேச என் அப்பா பேசன்னு ஒரு சின்ன ரசிகர் சண்டையே நடக்கும். ஆனா, அந்த நொடிகள் எல்லாம் நான் என் வாழ்க்கையில் ரொம்ப ரசிச்சது.. சரி, உங்களுக்கு இது மாதிரி ஏதாவது அனுபவம் இருக்கா'?

*- கார்த்தியேன்*




## விமர்சனம்
# சிவாஜி

நகைச்சுவையாக படம் எடுக்க வேணும் என்னா அதுக்கு நம்ம சங்கர் அண்ணாச்சியை வுட்டா ஆளே கிடையாது. சமூகத்தைப் பொரட்டிப் போடுற மாதிரிதான் அவரு படம் எடுப்பாரு. அதாவது அப்படி நெனச்சுக்கிட்டு எடுப்பாரு. படம் பாக்குற நமக்கு சிரிப்பாணியைக் கட்டுப்படுத்தவே முடியாது.

உதாரணமா, அந்நியன்ல சாலை விபத்துல சாவக்கெடப்பான் ஒருத்தன். எவனுமே வண்டி நிறுத்தாம போயிடுவான். கொச்சின் ஹனீபா மட்டும் நிறுத்தி 'என்ன ஏது' என்று கேட்டுட்டு போயிடுவாரு. அப்படிக் கேட்டவனைத்தான் போட்டுத் தள்ளுவாரு நம்ம அம்பி. இது மாதிரி நெறய சொல்லலாம். எதுக்கு அதெல்லாம்? நாம சிவாஜிக்கு வருவோம். அவரு நம்ம சுப்பர் இசுட்டாரோட சேர்ந்தா அதிராதா என்ன? அதிருது படம் முழுக்க சிரிக்க சிரிக்க..

இவ்வளவு வெண்ணெய் வெட்டியா, ஒரு மண்ணும் தெரியாதவனாத்தான் அமெரிக்க என்.ஆர்.ஐ எல்லாம் இருக்காங்கன்னு நெனைக்கும்போது அவங்க மேல பரிதாபம்தான் வருது. பாவம் அவ்வளவு சம்பாதிச்சும் அறிவை சம்பாதிக்காம இருக்காங்களோ என்று தொலையட்டும்.

இருபது வருஷ உழைப்புல 250 கோடி. அடங்கொக்கா மக்கா! வருசத்துக்கு 12.5 கோடி. மாசத்துக்கு ஒரு கோடி. சரியா டாலருக்கு 50 ரூபாய்ன்னே வச்சாலும் மாசம் ரெண்டு லட்சம் டொலர் சம்பாதிக்கணும். தமிழ்நாட்டுல 2000 ரூவா கொடுத்து இந்தப் படம் பாக்குற கிறுக்கனுவளைத் தவிர எவன் நம்புவான் இந்தக் கதையை? இல்லை என்னா சிவாஜி அமெரிக்கால ஏதாவது 'பிராத்தல் பிசினஸ்' பண்ணினாருன்னாவது பளிச்னு சொல்லியிருக்கணும். ஆனா, அது கூட உதைக்குது. இவ்வளவு கேணையனா 'பழகுறதுக்கு அலையுறவர்' அதுக்குக் கூட உதவ மாட்டார். 'அண்ணன் வந்தா தமிழ்நாடு அமெரிக்கா'ன்னு பாடுனதுல இருக்குற உள்குத்து இப்பதான்வே புரியுது.

விஜய் படத்துல எடுபிடியா விவேக் கூடவே வருவாரு. இங்கே விவேக் கூட எடுபிடியா?? தேவுடா தேவுடா இந்தப்பக்கம் சூடுடா.. கொஞ்சம் வில்லத்தனம் கலந்த ஆவேசம் வரும்போதெல்லாம் ரஜனி பளிச்சிடுவது வழக்கம். இங்கே மொட்டை பாஸாக நடக்கும் போதும், டீக்கடையில் பேசும்போதும் மட்டும் ரஜனி பளிச்.

ஸ்ரேயாவின் தொப்புளோத்சவம் மற்றும் தொடையோத்சவம் தமிழ் கலாசாரம் தேடும் நாயகனுக்கும் அதைத்தேடாத நமக்கும் வெயிலுக்கு இதம். இதே தொப்புளோத்சவத்தை பல ஆண்களின் தொப்பைகளில் நிறைத்திருப்பதும் அதில் ரஜனி படம் போட்டிருப்பதும் பெண்கள் ரசிப்பதற்கான 33% இட ஒதுக்கீடாம். சங்கர் பெண்ணியவாதிதான் போல :-)

தோட்டாதரணியின் அரங்குகள் நேர்த்தி. தேர்ந்த கட்டிடக்கலைஞனின் பார்வையோடு, உள்ளரங்க வடிவமைப்புகளிலும் கன கச்சிதமான வண்ணக் கலவை. நாயகனையும் நாயகியையும் தவிர்த்து கண்கள் விரிய பார்த்தது அந்த அரங்குகளைத்தான். சபாஷ் தோட்டா தரணி.

ரஹ்மானின் தமிழ்க்கொலைக்கு இன்னும் ஒரு வாய்ப்பு. ரஜனி வெள்ளையாகிப் போய் பாடும் பாடல் எல்லாம் சகிக்கலை. உதித் தமிழை உடைத்துப் போட்டு சித்திரவதை செய்யும் சஹானாவும், சாதனா, ஹரிஹரனின் குரலில் வாஜியும் கலக்கலாக இருக்கிறது.

படத்தில் ஒரு காட்சியில் டேய் நான் ஆதிடா என்பார் சுமன் போடாங்... என்று விவேக் தொடங்கும்போது ரஜனி அவர் வாயைப் பொத்துவார். ரஜனி கையை எடுத்ததும் சுபோதின்னு சொல்ல வந்தேன் என்பார். வசனம் சுஜாதாவாமே?! பளிச்சென்று இருக்கிறார். ஏற்கெனவே அந்நியனில் குண்டா மகனே என்று வசனம் எழுதியவர் தானே?!

ஆக மொத்தத்தில். சிவாஜி ஆம்பல் இல்லை. அடவாயெல்லாம் பொத்தாதீங்கய்யா..சாம்பல் என்னு சொல்ல வந்தேன்.

*-ஆசிப் மீரான்*

http://asifmeeran.blogspot.com/2007/07/blog-post.html

Quotation / cover provided over the phone
No more proposal forms to complete
No more immediate payment
No more Direct Debit Mandate to complete
No more claim form to fill - All the details are taken over the phone.
But Immediate Quotation at a competitive Premium from leading Insurer and Instant Cover
Please ring us for a friendly service 020 8763 2221
P.SRINIVASAN 32 Abbots Lane, Kenley, Surrey CR8 5JH
PENSION * LIFE * SAVINGS * MORTGAGES * COMMERCIAL LOANS
Fax: 020 8763 2220
E-Mail: sri@armassociates.co.uk www.srinivasan.co.uk

Home Insurance
Building and Contents Insurance including Let Properties
Term Assurance / Critical Illness
Level Term, Mortgage Assurance and Family Income Benefits
Retailer, Shopkeepers & Liabilities
All types of Shops Including Jewellery Shops, Self-Employed Business.
Mortgages / Re-Mortgages -
Decision in Principle/Virtual offer over the phone
All types of mortgages including Self-cert and buy-to-let.
All circumstances will be considered
ARM Associates
FSA Financial Services Authority
Authorised and Regulated by the Financial Services Authority

LEARNA
because every child is unique

Computer-Based
**Maths & English Tutoring**
for KS1 to KS3

- Individualised.
- Interactive.
- Inspiring.

info@learna.com



We Focus on You

- Challenging individualised learning path
- Focus on problem solving, reading and writing
- Improve child's concentration and confidence
- Thousands of computer activities and quizzes
- Thousands of printed worksheets and tests
- Monthly progress tests and instant reports
- Exclusive Learna Plus program for gifted children



www.learna.com 0845 094 0061



பெத்தானியா தேவாலயத்தின்
12 வது ஆண்டு விழாவினையொட்டி


தென்னிந்தியாவிலிருந்து வருகை தரும்
பிரபல பாடகரும் போதகருமான

தந்தை S. J.
**பெர்க்மான்ஸ்** அவர்களும்
அப்போஸ்தலர்
**ஜோசப் பாலச்சந்திரன்** அவர்களும்
கலந்துகொள்ளும் சிறப்பு நிகழ்ச்சிகள்

2007 ஜூலை 19,20,21 தேதிகளில்
மாலை 6.30 மணிக்கு

St John's Church
Church Avenue, Southall UB2 4DH

ஜெபியுங்கள்!
ஆயத்தப்படுங்கள்!!
கலந்துகொள்ளுங்கள்!!!



12th Anniversary
Bethany
CHURCH OF GOD
SOUTHALL • KENTON • SLOUGH

அனுமதி இலவசம்

தொடர்புகளுக்கு
Church office Tel; 0208 571 2156, 079 8345 1419, 079 5073 5417
Room No. 9 11 South Road, Southall, UB1 1RB
P.O Box 294, Southall, Middlesex UB2 5EE
e.mail: bethanychurchuk@yahoo.com
web:www.bethanychurches.org





Specialist in
Residential Mortgages
100%

Commercial Mortgages
Leasehold + Freehold

# Looking to Invest in Sri Lanka

"Good Time to Buy"
New + Old Properties | Finance arranged

ANGELS
+ Mortgages + Loans
+ Letting Management
+ Insurance + Building Insurance

**Properties and Financial Services Ltd.**

தொடர்புகளுக்கு: சரசுவதி ராமையா
74 Lee High Road, Lewisham SE13 5PT
Tel: 020 8852 1683 / Fax: 020 8852 1621
Email:info@angelsproperties.co.uk / Web: www.angelsproperties.co.uk





# NURSING RESIDENTIAL & EMI CARE AT ITS VERY BEST

Committed to individual care, choice, race, religion and dignity for older people. Southway home is purpose-built to luxury hotel standards, situated in leafy Totteridge, off the world famous Totteridge Lane in North London, near Totteridge and Whetstone Northern line tube station and features spacious en-suite bed rooms, a wide range of activities, a first class menu and landscaped garden.

Part of the independent and family owned business, our home aims to be just that - home to every resident a welcoming place for familiarity, comfort and companionship.

- Nurse, registered with the Royal College of Nursing will see you and assess your particular needs free of charge.
- One month trial period is allowed without any commitment.
- Assistance will be provided to make claim from Social Services free of charge.

*To find out more about Nursing, Residential & EMI Care, please phone:*
**020 84456056 or 07711941470**
Email: **southwaycarehome@yahoo.co.uk**

*"Living well and beautifully and justly are all one thing"*
- Socrates

EELAM
CASH & CARRY

# WHOLESALERS & DISTRIBUTORS




**Complete Range of**
**Off Licence Items & Soft drinks**

# OPENING OFFERS

**Competitive / Discounted Price Everyday**
**Incentive Schemes, Free Delivery**

Many More Offers in Store!!!
For Full Details Please Contact

**OPENING HOURS :**
**MONDAY - FRIDAY : 8.00am - 5.00pm**
**SATURDAY : 8.00am - 2.00pm**
**SUNDAY : CLOSED**




**FIND US**




Unit - 4, 681 Mitcham Road
Croydon CR0 3YH

**Tel: 020 8394 4560**
**Fax : 020 8394 4565**

info@eelamcashandcarry.co.uk

